ஊழியம் மற்றும் தலைமைக்கான பயிற்சி

நிலை: Group Leader

பாடப் புத்தகம் எண்: 5

நிலைகள்:



5. ஊழியர்
4. தலைவர்
3. புத்தகம் எண்
2. சீடர்
1. Beginner

ஊழியம் மற்றும் தலைமைக்கான பயிற்சி

நோக்கம்

- **உண்மையான ஒரே கர்த்தரை அறிந்து கொள்ள**
  (வளருதல் / பக்குவம் அடைதல்)

  - யோசுவா 1:8, "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய்."

  - 2 பேதுரு 3:18 "நம்முடைய **கர்த்தரும்** இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்."

  - 2 தீமோத்தேயு 2:15, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."

  - கொலோசெயர் 1:27-28, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.

- மற்றவர்களும் அவரை அறியச் செய்தல்
  (பெருகுதல் / உருவாக்குதல்)

  - 2 தீமோத்தேயு 2:2, "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி."

  - 2 தீமோத்தேயு 3:16-17, "வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளயிருக்கிறது."

  - எபேசியர் 2:10, "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்."

  - 2 பேதுரு 1:8, இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது.

(அறிவிலே பெருகுதல்; நடத்தையிலே பக்குவமடைதல்; ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துதல்)

பொருளடக்கம் பாடப்புத்தகம் எண்:5

- அடிப்படை வகுப்பு - சுருக்கமான ஆய்வு (21 அதிகாரங்கள்)

- பரிசுத்த ஆவியானவரின் தன்மை மேலும் விளக்கப் பட்டுள்ளது

- பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் மற்றும் வெளிப்படுத்துதல் (7 அதிகாரங்கள்)
  (1) பரிசுத்த ஆவியானவர் யார்?
  (2) ஆவியானவரின் முழுமை தீர்க்கதரிசனம் உரைக்கப் பட்டது,
  (3) பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்,
  (4) பரிசுத்த ஆவியானவரும் விசுவாசியும்,
  (5) பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுதல்,
  (6) அன்னிய பாஷையில் பேசுவது ஏன்?
  (7) ஆவியானவரின் வரங்கள்

- இந்த அடையாங்கள் தொடரும் (வேதாகமத்திலிருந்து அடையாளம் அற்புதங்களும் ஆகியவற்றைக் குறித்த ஒரு ஆய்வு)

- வேதாகம குறிப்பு: நற்செய்தி புத்தகங்கள், அப்போஸ்தல நடபடிகள், நிருபங்கள் ஆகியவற்றில் காணப் படும் அடையாளங்களும் அற்புதங்களும்

- ஆவிக்குரிய போர்

- பிசாசின் கோட்டைகளை வெல்லுதல்

- சாத்தான்: உங்கள் பகைவனை புரிந்து கொள்ளுதல்

- கர்த்தருடைய சுகமாக்கும் வல்லமை (5 அதிகாரங்கள்)
  (1) நோய் எங்கிருந்து உருவாகிற்று?
  (2) மக்கள் நோய்வாய் பட்டது எப்படி,
  (3) சுகமாக்குவதற்கான கர்த்தருடைய அருள்,
  (4) சுகமாக்குவதற்கான வழிமுறைகள்,
  (5) புதிய ஏற்பாட்டின் நற்செய்தி அறிவித்தலும் சுகமாக்குதலும்

வேதாகம அடிப்படையிலான விசுவாசம் மற்றும் நடைமுறை வாழ்வில் மூல ஆதாரங்கள் - ஒரு குறுகிய மறுவாழ்வு

அத்தியாயம் 1 வேதாகமம் தேவனின் வார்த்தை

A. தேவனின் விசேஷித்த புத்தகம்

தேவனின் வார்த்தை – பரிசுத்தம வேதாகம் - தேவனின் விசேஷித்த புத்தகம் ஆகும். இது மற்ற புத்தகங்களைப் போல் அல்ல, ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்று. இது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அநேகரால் எழுதப்பட்டது. (பார்க்க : 2 தீமோ. 3:16).

உலகிலேயே அதிகமாக விற்பனையாகியுள்ள ஒரே புத்தகம் வேதாகமம். இது தொடர்ந்து விற்பனையில் முன்னிரையிலுள்ளது. இது உலகிலுள்ள எந்த புத்தகங்களைக் காட்டிலும் அநேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் மூல பாஷைகள் - எபிரெயு, அரமேயம், கிரேக்கம் போன்றவை ஆகும். தேவனின் வார்த்தைகள், எண்ணங்கள், திட்டங்கள் அனைத்தும் நீங்கள் புரிந்து கொள்ளும் மொழியிலேயே நீங்கள் பெற்றுக்கொள்ளும்படி அர்ப்பணமுள்ள தேவ தாசர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

வேதாகமம், உலகிலேயே மிகவும் பழமை வாய்ந்த புத்தகங்களின் ஒன்றும் ஆகும். வேதாகமத்தின் பழமை வாய்ந்த பகுதிகள், பெரும்பாலும் 4,000 ஆண்டுகளுக்கு முந்தியவை. ஆனால் இது இன்றைய உலகின் நவீன புத்தகமாக இன்னும் காணப்படுகிறது. ஏனென்றால் வாழ்வின் மிகப்பெரிய கேள்விகளுக்கு பதிலை இதில் காண்கிறோம்.

1. "நான் எங்கிருந்து வந்தேன்?"
2. நான் எதற்காக இங்கு இருக்கிறேன்?"
3. "நான் எங்கே போவேன்?"

வேதாகமம் 66 சிறிய புத்தகங்களைக் கொண்டிருந்தும், அதன் மையக் கருத்து ஒன்றே : **மனுகுலத்தை மீட்கும் தேவ அன்பின் திட்டம்.**

வேதாகமத்தில் காணப்படும் 66 புத்தகங்களின் அட்டவணையை வேதாகமத்தின் முற்பகுதியில் காணலாம்.

வேதாகமம் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது :

I. பழைய ஏற்பாடு
II. புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாடு, இயேசுவின் பிறப்பிற்கு முன்னர் தேவன் தமது மக்களிடம் (குறிப்பாக யூத மக்கள்) நடப்பித்த கிரியைகளைப் பற்றி கூறுகிறது.

புதிய ஏற்பாடு, இயேசுவின் பிறப்பு, அவரது வாழ்க்கை, வியாதியிலும் பாவத்திலும் வாழும் மக்களுக்கு சுகத்தையும், விடுதலையையும், மன்னிப்பையும் அளித்த அவரது சிறந்த ஊழியம், அவரது சிலுவை மரணம், அவரது உயிர்த்தெழுதல், மற்றும் அவரது பரமேறுதல் (பரலோகத்திற்கு மீண்டும் செல்லுதல்) ஆகியவற்றைப் பற்றி கூறுகிறது.

மேலும் இது, அவரது உயர்தெழுதலுக்கும் பின் அவரை தரிசித்தவர்கள் மூலம் தொடர்ந்து நடைபெற்ற அவரது சுகமளிக்கும், விடுதலை செய்யும், மன்னிப்பளிக்கும் ஊழியத்தைப் பற்றியும் கூறுகிறது. இயேசுவானவர் கூறியது போலவே அவரது உபதேசத்தைப் பின்பற்றுபவர்களும் அநேக அற்புதங்களை செய்கின்றனர். (பார்க்க : யோவான் 14:12).

அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவரை தரிசித்தவர்களுடைய போதனைகள் நிருபங்களில் (கடிதங்கள்) அடங்கியிருக்கிறது. அவைகள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வந்த ஐம்பது ஆண்டுகளில் எழுதப்பட்டது. அவைகள் புதிய ஏற்பாட்டின் பாதி பகுதியை உள்ளடக்கியுள்ளது.

B. வேதாகமத்தை படிப்பது

நீங்கள் இந்த வாழ்வில் ஆண்டவருடன் வைத்துக் கொள்ளும் உறவே மிக முக்கியமான உறவாகும். வேதாகமத்தை வாசிப்பதன் மூலம் தேவன் எப்படிப்பட்டவர் - உங்களைக் குறித்த அவரது நினைவுகள், அவரது திட்டங்கள், அவரது நோக்கங்கள், அவரது வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றை புரிந்து கொள்ள முடியும்.

அதின் முற்பகுதியிலுள்ள அட்டவணை, நீங்கள் படிக்க விரும்பும் வேதபகுதியின் பக்க எண்ணை அறிந்து கொள்ள உதவுகிறது. வேதாகமத்தின் குறிப்பிட்ட பகுதிகளை நீங்கள் அறிந்து கொள்ள, அதின் மொழிபெயர்ப்பாளர்கள் கீழ்கண்ட மூன்று விதங்களில் அமைத்துள்ளனர் : (1) புத்தகங்கள் (2) புத்தகங்களுக்குள் அதிகாரங்கள் (3) அதிகாரங்களுக்குள் வசனங்கள்.

C. உலகின் மிகப்பெரிய வாக்குத்தத்தம்.

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." (யோவான் 3:16).

D. தேவனுடைய வார்த்தையின் நோக்கம்

"கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்கள் ..... வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (2தீமோ. 3:15-17) "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்துக்கும் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்களும்அவைகளினாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது." (2 பேதுரு 1:3,4)

E. தேவனுடைய வார்த்தை ஜீவனை உண்டாக்குகிறது

"... நான், உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது (யோ.6:63). தேவனுடைய வார்த்தை சிருஷ்டிக்கிறது. ("**கர்த்தருடைய வார்த்தையினால்**) வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது... அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33:6,9). மேலும் எபி.11:3 பார்க்கவும்.

F. தேவனுடைய வார்த்தை தண்ணீரைப் போன்றது

1. அது சுத்திகரிக்கிறது. நாம் தேவனுடைய இராஜ்யத்தில், தேவனுடைய வார்த்தையினால் முழுவதும் "சுத்திகரிக்கப்பட்ட" வாழ்வை ஆரம்பிக்கிறோம். "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்." (யோ. 15:3) மேலும் எபே. 5:25-27 பார்க்கவும்.
2. அது நம்மை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளுகிறது: "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே.... நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்." (சங். 119:9-11)

G. தேவனுடைய வார்த்தை நமது வாழ்வின் விளக்காயிருக்கிறது.

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் பொன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்". (2 பேதுரு 1:19) இருண்ட உலகத்தில், புரிந்துக் கொள்ளும் ஆற்றலை அது நமக்கு அளிக்கிறது. "... கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது." (சங். 19:8) "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது... உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்". (சங். 119:105, 130)

H. தேவனுடைய வார்த்தை ஆவிக்குரிய ஆகாரமாய் இருக்கிறது.

"அவர் பிரதியுத்தரமாக மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்." (மத். 4.4) அது ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக் கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்கு போஜனங் கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன்...." (1 கொரி.3: 1-2)

"நீங்கள் வளரும்படிப் புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். " (1பேதுரு 2:3) நம் ஒவ்வொன்றையும் குறித்த தேவனுடைய நோக்கம் எபேசியர் 4:11-15 வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும், ...கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்.

I. தேவனுடைய வார்த்தை வித்தாயிருக்கிறது.

லூக்கா 8:14-15 வசனங்களில் இயேசு அவரது சீடர்களுக்கு விதைக்கிறவனுடைய உவமையைப் பற்றி சொன்னார் வசனம் 11-ல் அவர், "விதை தேவனுடைய வசனம்" என்றார். நமது வாழ்வு கனிநிறைந்து காணப்படவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம் (சங். 1:3) "விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்." (2 கொரி. 9:10)

J. தேவனுடைய வார்த்தை பட்டயத்தைப் போன்றது

"...தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்." (எபே. 6:17) மேலும் எபிரெயர் 4:12 பார்க்கவும். வனாந்திரத்தில் இயேசு சோதிக்கப்பட்டபொழுது, அவர் எப்படி "பட்டயத்தை" பயன்படுத்தினார் என்பதை கவனிக்கவும். (லூக்கா 4:1-14).

K. தேவனுடைய வார்த்தை நாம் ஜெபிக்க உதவுகிறது.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ' (யோவான் 15:7) என்பதன் பொருள் அதிகாரத்துடன் கூடிய உரிமையுள்ள ஒருவர் கேட்பது(கட்டளையிடுவது) என்பதாகும். இப்போது சிருஷ்டிக்கும் வார்த்தை நமது நாவிலுள்ளது.

L. தேவனுடைய வார்த்தை நம்மில் வல்லமையாய் இருக்கிறது.

"ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது." (மத். 7:24,25) மேலும் வசனங்கள் 26,27 பார்க்க. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்கு கீழ்படிகிறவர்கள் கன்மலையின் மேல் தன் வீட்டை கட்டிய புத்தியுள்ள மனிதனை போன்றவர்கள் உறுதியாய் நிற்பதற்கு தேவனுடைய வார்த்தை நமக்குள் உள்ளான வலிமையை தருகிறது.

அத்தியாயம் 2 தேவன்

தேவன் நாம் முழுவதும் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு மிகவும் பெரியவர். அவருக்கு ஆரம்பமுமில்லை, முடிவுமில்லை. அவருடைய பிரசன்னத்தை உணர முடியாத இடமுமில்லை. யோபு 11:7ல் ''தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ?'' என்று வேதாகம் வினவுகிறது தேவன் பரலோகத்தில் இருக்கும் அதே வேளையில், முழு உலகையும் ஆட்சி செய்கிறார். வேதாகம் நமக்கு சொல்லுகிறது: ''கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் : வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி'' (ஏசாயா 66:6) ''தேவன் ஜாதிகள் மேல் அரசாளுகிறார் தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்''. (சங். 47:8) இந்த வேத ஆராய்ச்சி பாடத்திட்டத்தில் தேவனைக்குறித்த அநேக உண்மைகளை நாம் பார்க்கப் போகிறோம். அவைகள் தேவனின் மாறாத இயல்பைக் குறித்த உண்மைகள். அவைகளின் மூலம் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும் நீங்கள் தேவனைப் பற்றியும் அவர் உங்கள் மீது வைத்துள்ள தனிப்பட்ட கரிசனையையும் புரிந்து கொள்ள முடியும்.

A. தேவன் எப்படிப்பட்டவர்?

1. தேவன் அனைத்தையும் சிருஷ்டித்தவர்

''நீர் ஒருவரே கர்த்தர், நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவர்களுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர், அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர், வான சேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறது.'' (நெகேமியா 9:6) ''நீர் என் உள்ளந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர், என் தாயின் கர்ப்பதில் என்னைக் காப்பாற்றினீர்.'' (சங். 139:13).

2. தேவன் சர்வ வல்லமையுள்ளவர்

''....அவர் சித்தத்திற்கு எதிர்த்து நிற்பவன் யார்? .... குயவனுக்கு மண்ணின் மேல் அதிகாரம் இல்லையோ?'' (ரோமர் 9"19-21). ''கர்த்தாவே, மாட்சிமையும், வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள், வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள், கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது, தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்'' (1நாளா. 29:11) ''நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு'' (எபே. 3:20).

3. தேவன் சர்வத்தையும் அறிந்தவர்.

''அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (எபி. 4:13) ''....தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியராயிருந்து, சகலத்தையும் அறிந்திருக்கிறார்'' (1 யோ.3:20).

4. தேவன் பரிசுத்தமுள்ளவர்

''கர்த்தரைப் போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை, உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை, எங்கள் தேவனைப் போல ஒரு கன்மலையும் இல்லை'' (1சாமு.2:2)

5. தேவன் ஆவியானவர்

''தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்'' (யோ. 4:24).

6. தேவன் நீங்கள் அறிந்து கொள்ள இயலும் ஆள்தத்துவமுள்ளவர்

''தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் .....'' (யாக். 4:8) ''தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார்'' (சங். 145:18).

7. தேவன் அன்புள்ள தகப்பன்

"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கபடுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள் (1 யோவான் 3:1)

B. தேவன் ஆலயங்கள் கொள்ள முடியாத மிகப் பெரியவர்

"உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும், ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை..... ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம், அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்." (அப். 17: 24-25, 28).

C. நாம்:

1. தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்:

"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது." (சங். 139:14-16).

2. தேவனால் சொந்தமாக்கப்பட்டவர்கள்.

" உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர் களெல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்". (1. கொரி. 6:19 -20).

3. தேவனை ஆராதிக்க அழைக்கப்பட்டவர்கள்

"கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிதற்குப் பாத்திராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்ததினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்ட்டவைகளுமாயிருக்கிறது." (வெளி. 4:11)

D. தீர்மானம் செய்

இயேசு சொன்னார் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக, (மத். 22:37) வேதாகமம் யோசுவா என்ற ஒரு மனிதனைக் குறித்து சொல்லுகிறது. அவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மிகப் பெரிய தலைவனாய் இருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கென சொந்த நிலமின்றி வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகள் அலைந்து திரிந்தார்கள். யோசுவா தேவனின் வழிநடத்துதலின்படி, கானான் தேசத்தில் வாழ்ந்து வந்த அந்நிய ஜாதிகளின் மீது வெற்றி கொள்ளச் செய்து, சொந்த இடமில்லாது இஸ்ரவேல் ஜனங்கள் அத்தேசத்தை சுதந்திரிக்கச் செய்தான். பின்னர் யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை "...யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துக்கொள்ளுங்கள், நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக்குக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.." (யோசுவா 24:15) என்றதொரு தீர்மானத்தை எடுக்கச் செய்தான். இந்த சவால் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளது. யோசுவா எடுத்த அதே தீர்மானத்தை இன்று நீ எடுப்பாயா?.

எனது தீர்மானம்

இன்றைய நாளில், வானத்தையும் பூமியையும் படைத்த ஒன்றான மெய் தேவனை நான் ஆராதிக்கிறேன். எனது சித்தம், எனது வாழ்வு, எனக்குண்டான அனைத்தையும் அவருக்கே அர்ப்பணிக்கிறேன். இந்த நாளிலிருந்து எந்த ஒரு அந்நிய தெய்வத்தையும் வழிபடமாட்டேன் என்று நான் தீர்மானிக்கிறேன். அவர் ஒருவருக்கே நான் ஆராதனை செய்து, தேவனைப் பற்றிய உண்மைகளை மற்றவர்களுக்கு போதிப்பேன்.

அத்தியாயம் 3 மனிதனும் சாத்தானும்

A. மனிதன்

தேவ சாயலில் - ஆளுகை செய்ய படைக்கப்பட்டவன்

மனிதனை (ஆண் / பெண்) படைக்க தேவனுக்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அவர்களைக் குறித்து ஒரு விசேஷித்த திட்டமும் நோக்கமும் அவருக்கு இருந்தது. ஏனெனில், தேவன் அன்பாகவே இருக்கிறார், அவரோடுகூட வானத்தையும் பூமியையும் அரசாட்சி செய்வதற்கு பிள்ளைகளைப் போல, அவரைக் குறித்தும் அவரது வாழ்வு குறித்தும், அவர் சம்பந்தப்பட்டுள்ள காரியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொள்வதற்கு, அவரைப் போலவே மனமும் இருதயமுள்ள ஒரு சிருஷ்டிப்பை அவர் விரும்பினார். எனவே தான் மனிதனை தன்னுடைய சாயலின்படி சிருஷ்டித்தார்.

"பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக, அவர்கள் சமுத்திரத்தின் பச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதி. 1:26-27).

B. லூசிபர்

வானத்தையும் பூமியையும் தேவன் சிருஷ்டிப்பதற்கு முன்பு, அநேக ஆச்சரியமான காரியங்களை சிருஷ்டித்தார். அவைகளுள், அவரது சித்தத்தை நிறைவேற்ற சிருஷ்டிக்கப்பட்ட தேவதூதர்களும் அடங்குவர். தேவ தூதர்கள் சதா காலமும் தேவனை துதித்து அவருக்கு பணிவிடை செய்கின்றனர். (வெளி. 5: 11-14). அவர்களுக்குத் தலைவனாயிருந்த லூசிபர், மனுக்குலத்திற்கென்று வைத்திருந்த இடத்தையும் அதிகாரத்தையும் தானே கவர்ந்துகொள்ள விரும்பினான். அவன் வானத்தில் தேவனுடைய சிங்காசனத்தின் மேலிருந்து அனைத்து சிருஷ்டிப்பையும் ஆளுகை செய்ய விரும்பினான்.

லூசிபர் கலகம் செய்த அதே வேளையில் தானே தேவன் அவனை வானத்திலிருந்து கீழே விழத் தள்ளினார். அவனோடு கூட கலகம் செய்த, மூன்றில் ஒரு பங்கு தேவ தூதர்களையும் கீழே விழத் தள்ளினார். (வெளி. 12:4) "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன, வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. (ஏசாயா 14:12-14) பூமியில் விழத் தள்ளப்பட்ட லூசியர் இப்பொழுது 'சாத்தான்' என்றும் 'பிசாசு' என்றும் அழைக்கப்படுகிறான். சிருஷ்டி கர்த்தாவின் மகிமையிலிருந்து விலக்கப்பட்ட அவன், முன்பு தனக்கு இருந்த அழகையும், ஒளியையும் இழந்து (எசே.28: 11-17) தீமையும் அந்தகாரமும் நிறைந்தவனானான். அவனோடு விழுந்த தேவ தூதர்களும் தேவ மகிமையை இழந்து அசுத்த ஆவிகளாக, தேவனால் புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தில் அலைந்து திரிந்தனர். ஆனால் சாத்தானுடைய தீய எண்ணம் மாறவில்லை, மாறாக அவன் தேவனுடைய சிங்காசனத்தை கைப்பற்றும் வேறொரு திட்டத்தோடு, தேவனால் படைக்கப்பட்ட மனிதனை பின்தொடர்ந்தான்.

C. சோதனை

தேவன் தாம் சிருஷ்டித்த முதல் ஆணுக்கும் பெண்ணுக்கும் (ஆதாம், ஏவாள்) பூமியின் மேல் அதிகாரம் கொடுத்து அனைத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தும்படி கூறினார். சாத்தானிடமிருந்தும், அவனுடைய அசுத்த ஆவிகளிடமிருந்தும் அவர்களை பாதுகாக்க, அவர்கள் தங்கியிருந்த தோட்டத்தில் இரண்டு விசேஷித்த மரங்களை நட்டார். தேவன் அவைகளை 'ஜீவ விருட்சமென்றும்' 'நன்மை தீமை அறியத்தக்க விருட்சமென்றும்' அழைத்தார். (பார்க்க : ஆதி. 2:9, 17) அம்மரத்தின் கனியைப் புசிக்கும் வேளையில் ஆதாமும் ஏவாளும், தேவ பெலம், தேவ அன்பு, தேவ மகிமை ஆகியவற்றால் மேன்மேலும் நிரப்பப்படுவார்கள். நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் சாத்தானுடைய ஜீவனையும் அதிகாரத்தையும் குறிக்கிறது. இம்மரத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் புசிக்காத வரையில், பூமியை நிரப்பியுள்ள அசுத்த ஆவிகளிடமிருந்து பாதுகாப்பாயிருந்தார்கள். ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய அன்பின் சிருஷ்டிகராகிய தேவனுக்கு கீழ்படிந்திருந்தால் பூமியின் மீதுள்ள ஆளுகை எப்பொழுதும் அவர்களுடையனவையாய் இருந்திருக்கும் (எபி. 2:8) ''தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.'' (ஆதி. 2:15-17).

இருப்பினும் சாத்தான் ஏவாளை வஞ்சித்துவிட்டான். அவன் ஏவாளிடம், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி கெட்டதல்லவென்றும், அதை புசிக்கும்போது தேவர்களைப் போல மாறிவிடலாம் என்றும் கூறினான். ஏவாள் அந்த பொய்யை நம்பி, அதின் கனியைப் புசித்துவிட்டான். ஆதாமும் அது பொய்யென்று தெரிந்தும், அம்மரத்தின் கனியைப் புசித்து விட்டான். (1.தீமோ. 2:14). ''அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான் (ஆதி.3:6).

D. விளைவு

அந்த ஒரு பாவச் செயலின் மூலம் மனிதன் தேவ மகிமையையும், தேவ சாயலையும், சிருஷ்டிப்பின் மீதுள்ள ஆளுகையையும் இழந்தான் சாத்தான், ஆதாம் ஏவாளின் சிங்காசனத்தை தனதாக்கிக்கொண்டு பூமியின் மீது ஆளுகை செய்யத் தொடங்கினான். மரணம் உலகத்தை நிரப்பிற்று. (எபி. 2:14-15) ''... ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்துபோலவும், எல்லா மனுஷரும் (ஆதாமுக்குள்) பாவஞ்செய்தபடியால்,...'' (ரோ. 5:12) ஆதாம் ஏவாளைத் தொடர்ந்து வந்த எல்லா சந்ததிகளும்சாத்தானின் வல்லமைக்கும் ஆளுகைக்கும் கீழ் வந்தார்கள்.

''அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார் அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.'' (எபே. 2: 1-3).

எங்குமுள்ள ஜனங்களின் இருதயங்களை நிரப்பியவைகள்:

1. **விக்கிரக ஆராதனை**

   அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.'' பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.'' (ரோமர் 1:21-23).

2. வேசித்தனம்

"இதினிமித்தும் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென். இதினிடமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார், அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அனுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அனுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைப் சுபாவப்படி அனுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்த் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்." (ரோமர் 1: 24 -27).

3. எல்லா விதமான துன்மார்க்கம்

"தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய் சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்." (ரோமர் 1:28-32)

E. தேவனின் உன்னத மீட்பின் திட்டம்

தேவன் மனுக்குலத்தின் பாவத்தினிமித்தம் அவர்களை அப்படியே விட்டுவிடவில்லை. மாறாக, வேறொரு சிறந்த திட்டத்தை செயல்படுத்தினார். அது சாத்தானின் அதிகாரத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டு, தேவனுடைய பிள்ளைகளாயிருந்த முந்தைய நிலைக்கு அவர்களை திரும்பவும் கொண்டு வந்து, அவருடைய சிங்காசனத்தை பகிர்ந்து கொள்ள வைக்கும் மாபெரும் திட்டமாகும். ஆகவே, தேவன் இரட்கராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு உலகை ஆயத்தப்படுத்த தொடங்கினார். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1 கொரி.15:22) புதிய ஏற்பாடு நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்டுக்கொள்ள வந்த இயேசு கிறிஸ்துவின் சரித்திரத்தை விவரிக்கிறது.

அத்தியாயம் 4 இயேசு

A. இயேசு தேவ குமாரன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சரித்திரத்தில் ஒரு மனிதன் தோன்றினார். அவர் மற்றவர்களைப் போலவே, இந்த உலகில் குழந்தையாய் பிறந்து, மனிதனாக வளர்ந்தார். ஆனால் அவர் மற்றவர்களை விட வித்தியாசமானவர் அவர் சாதாரண மனிதரல்ல. ஒரு கன்னிகை பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்து அவரைப் பெற்றெடுத்தாள். அவரே மனித உருவில் இந்த உலகிற்கு வந்த தேவன் அவர் "தேவ குமாரனாக" இருந்தார். (லூக்கா 1:26-35) "ஆதியிலே வார்த்தை (இயேசு) இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம்: அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." (யோ.1:1,14).

B. இயேசு ஒரு விஷேசித்த நோக்கத்தோடு இந்த உலகிற்கு வந்தார்.

1. **சாத்தானின் அதிகாரத்திலிருந்து மனுக்குலத்தை மீட்க**
   "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்." (லூ. 19:10) பார்க்க : கொலோ.1:13.

2. **தன்னுடைய ஜீவனை கொடுத்து நம்மை விலைக்கிரயமாய் கொள்ள**
   ".....மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்..." (மத்.20:28).

3. **நமது வாழ்வில் சாத்தானின் கிரியைகளை அழிக்க**
   "பாவஞ் செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்: ஏனெனில் பிசாசானவன் ஆதி முதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்." (1 யோ.3:8).

4. **நமக்கு நித்திய ஜீவனை கொடுக்க**
   "தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம் குமாரனை உடையவன் ஜீவன உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் (1 யோவான் 5,11,12) பார்க்க யோவான் 3:16-17, யோவான் 10:10.

5. **தேவனுடைய குடும்பத்தில் நமக்கு "மறு பிறப்பு" கொடுக்க**
   "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்." (யோ.1:12,13) பார்க்க: 1 யோ.3:12.

6. **பிதாவாகிய தேவனோடு இருந்த ஐக்கியத்தை மீண்டும் உயிர்பிக்க**
   "நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம், எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது." (1 யோ. 1:3).

C. இயேசு, தேவன் எப்படிப்பட்டவர் என்பதை காண்பிக்க வந்தார்

"என்னை (இயேசு) அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்தீர்ப்பீர்கள், இது முதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்... என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை, என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள், ..." (யோ.14: 7-11) பார்க்க யோ.1:18.

1. **அவர் தேவனுடைய அன்பை நமக்கு காண்பித்தார்**
   "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுபினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." (யோ. 4 :9-10) பார்க்க : ரோமர் 5:8.

2. **அவர் தேவனுடைய வல்லமையை நமக்கு காண்பித்தார்**
   அவர் வியாதியஸ்தரையும், சப்பாணிகளையும், குருடரையும் சுகப்படுத்தினார். "அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும், வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்." (மத். 4:24) பார்க்க: யோ. 9:1-7.

அவர் அசுத்த ஆவிகளைத் துரத்தினார். ''பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளைத் துரத்தி விட்டார், அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.'' (மாற்கு 1:34) பார்க்க : மாற்கு 5:1-17.

அவர் அதிசயங்களை செய்தார்: ''அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று... (இயேசு) எழுந்து, காற்றை அதட்டி, கடலை பார்த்து : இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று... (அவருடைய சீஷர்கள்) மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழுப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.'' (மாற்கு 4: 37-41). பார்க்க யோவான் 6:1-21.

அவர் மரித்தவர்களை எழுப்பினார்: ''...லாசருவே , வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும், கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது: அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி : இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்.'' (யோ.11:43-44).

D. இயேசு நம்முடைய பாடுகளை தமது சரீரத்தில் ஏற்றுக்கொண்டார்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், நாம் எதிர்கொள்ளும் எல்லா பாடுகளையும் அனுபவித்ததால், நம் உணர்வுகளை புரிந்து கொள்கிறார். ''நம்முடைய பலவீனங்களை குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.'' (எபி.4:15) பார்க்க : மத்.8:17.

E. இயேசு நமக்காக சிலுவையில் மரித்தார்

கொடியவர்கள் இயேசு கிறிஸ்துவை, ஒரு சாதாரண குற்றவாளியைப் போல மர சிலுவையில் ஆணியடித்து கொன்றார்கள். அவர் தம்மைத்தாமே காப்பாற்றியிருக்கக்கூடும். ஆனால் அவர் அதை செய்யவில்லை. ஏனெனில், அவரது சிலுவை மரணத்தின் மூலமே தேவன் உலகத்தை மீட்க வேண்டியதிருந்தது.

இயேசு நமக்காகவே மரித்தார் (வாசிக்கவும் : மாற்கு 15: 16-39). ''நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்கும் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்'' (1 பேதுரு 2:24) பார்க்க: ஏசாயா 53:5-6.

F. இயேசு நமக்காக பரலோக வாசலைத் திறந்தார்

இவ்வுலகில் அவர் தமது பணியை செய்து முடித்த பின்பு பிதாவாகிய தேவனுடன் இருப்பதற்காக மீண்டும் பரலோகம் சென்றார். ஆனால் இதுவும் நமக்காகத் தான். ஏனெனில், நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், ... உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.'' (எபி. 10:19-22) பார்க்க: யோ. 14:1-3.

எனது தீர்மானம்

இன்று நான் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், எனக்கு ஒரு இரட்சகர் வேண்டும் என்ற தேவையை சந்திக்கும்படியாக இந்த உலகத்தில் வந்தார் என்றும் ஒப்புக்கொள்கிறேன். அவர் மற்றவர்களுக்காகவும் வந்தார் என்பதை நான் அவர்களிடம் அறிவிப்பேன்.

அத்தியாயம் 5 சிலுவை

மரச்சிலுவையில் அறைந்து இயேசு கிறிஸ்து கொல்லப்பட்டபோது கொடியவர்கள் தங்கள் வாழ்க்கையில் இடையூறு ஏற்படுத்திய ஒரு மனிதனைக் கொன்றதாகவே நினைத்தார்கள். சிலுவை, உலக தோற்றத்திலிருந்தே தேவனால் ஏற்படுத்தப்பட்ட திட்டம் என்பதை அவர்கள் அறியவில்லை.

A. தேவன் எல்லா பாவத்தின் மீதும் நடவடிக்கை மேற்கொள்கிறார்

சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன், அவரது குமாரனின் சிலுவை மரணத்தின் மூலம் ஒவ்வொருவரின் பாவம், பாடு, துக்கம் ஆகியவற்றின் மீது நடவடிக்கை மேற்கொண்டார். இந்த உலகத்தின் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பதிலாக இயேசு சிலுவையில் மரித்தார். அவர் சிலுவையில் செய்ததை நாம் தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்வது, நமது அனைத்து தேவைகளுக்கும் பதிலை கொண்டு வருகிறது.

1. **தேவன் தமது வல்லமையை சிலுவையின் மூலம் வெளிப்படுத்துகிறார்.**
   "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது." (1 கொரி.1:18) பார்க்க: ரோமர்1:16.

2. **தேவன் தமது அன்பை சிலுவையின் மேல் காண்பித்தார்**
   "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8).

3. **தேவன் நமது துக்கங்களை சிலுவையின் மேல் நீக்கினார்**
   "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார், நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்." (ஏசாயா 53:4).

4. **இயேசு நமது பாவங்களின் தண்டனையை சிலுவையின் மீது சுமந்தார்.**
   "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் தரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப் பண்ணினார்."(ஏசாயா 53: 5,6) பார்க்க 1 பேதுரு 2:24.

B. சிலுவையின் மூலம் தேவனுடன் ஒரு புதிய உறவு

தேவன் மகா பரிசுத்தமும், நீதியும் உள்ளவராய் இருக்கிறபடியால், பாவம் அவரிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறது. இருதயத்தில் பாவமுள்ள எவருமே தேவனுடைய பிரசன்னத்தில் இருக்க முடியாது. ஆகவே தான் இயேசு நமக்கு பதிலாக சிலுவையில் பாடுபட்டு மரித்தாள், மேலும் நாம் தேவனை தனிப்பட்ட விதத்தில் அறியவும், அவருடன் ஐக்கியம் கொள்ளும்போது கிடைக்கும் அன்பு,சமாதானம், சந்தோஷம் ஆகியவற்றை அனுபவிக்கவும் வகை செய்தார்.

1. **சிலுவையின் மூலம் நாம் தேவனுக்கு உகந்தவர்கள் ஆகிறோம்.**
   "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." (2 கொரி. 5:21)

2. **சிலுவையின் மூலம் நாம் மன்னிப்பை பெற்றுக் கொள்கிறோம்**
   "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது." (கொலோ.1:13,14) பார்க்க: 1யோவான் 2:1-2.

3. சிலுவையின் மூலம் தேவனுடைய குடும்பத்தில் நாம் அங்கத்தினர் ஆகிறோம்
"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள், இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல், உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்று.... சொல்லியிருக்கிறார்." (எபி. 2:11-13) பார்க்க யோவான் 1:12.

4. சிலுவையின் மூலம் இன வேறுபாடுகள் உடைகிறது
"முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருநிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருநிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்." (எபே. 2:13-16).

C. சிலுவையின் மூலம் விடுதலை

இயேசுவின் சிலுவை மரணம் நமக்கு ஒரு மாபெரும் வெற்றியாகும். ஏனெனில் தேவன் சிலுவையில் நமது பாவத்தின் மீது நடவடிக்கை எடுத்ததின் மூலம் பாவத்தின் விளைவாகிய எல்லா அவல நிலைகள், மற்றும் பாடுகள் மீதும் நடவடிக்கை மேற்கொண்டார் என்பது புலனாகிறது. சிலுவை நமக்கு ஒரு பெரிய விடுதலையை தந்துள்ளது.

1. சாத்தானிடமிருந்து விடுதலை
"துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்" (கொலோ. 2:15) பார்க்க: கொலோ. 1:13

2. பழைய பாவங்களிலிருந்து விடுதலை
"ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." (யோவான் 8:36) பார்க்க: கொலோ. 2:13.

3. தற்போதைய பாவங்களிலிருந்து விடுதலை
"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது." (ரோமர் 6:14).

4. வியாதிகளிலிருந்து விடுதலை
"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (மத். 8-17).

5. சாபத்திலிருந்து விடுதலை
"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்." (கலா.3:13) பார்க்க: உபா.28: 15-68.

6. நியாயதிர்ப்பிலிருந்து விடுதலை
"அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபட வேண்டியதாயிருக்குமே, அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே..." (எபி. 9:26-27).

7. நித்திய மரணத்திலிருந்து விடுதலை
"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." (யோ. 3:16).

D. சிலுவையில் அன்பும் நீதியும் சந்திக்கிறது

தேவனுடைய அன்பும், தேவனின் நீதியான நியாயத்தீர்ப்பும் சந்திக்கும் இடம் சிலுவையே ஆகும். பாவத்தின் மீதான அவரது நீதியான நியாயத்தீர்ப்பு மரண – தண்டனை அதாவது, இரத்தம் சிந்துதல் ஆகும். தேவகுமாரன் இயேசு நமக்காக மரித்ததன் மூலம், தேவனுடைய அன்பே அவருடைய கோரிக்கையை நிறைவேற்றிவிட்டது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்ததினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்." (ரோமர் 5:8-11).

E. சிலுவை சரித்திரத்தின் மையம்

பூமியில் மனுக்குலத்தின் வாழ்தலின் மையப் பகுதி இயேசு கிறிஸ்துவின் சிலுவை ஆகும் முதல் மனிதனும் மனுஷியும் பாவம் செய்த (பார்க்க: ஆதி. 3) அதே வேளையில் தானே இயேசுவின் சிலுவை மரணம் தேவனால் திட்டமிடப்பட்டது. அந்நேரத்திலிருந்தே, மனுக்குலம், தேவன் வாக்குத்தத்தம் பண்ணியதை சிலுவையில் செய்ததை விசுவாசித்து மன்னிப்பையும் புதுவாழ்வையும் பெற்றுக் கொள்கிறோம்.

அத்தியாயம் 6 கிறிஸ்துவின் இரத்தம்

இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தம் நமக்கு பாவமன்னிப்பையும், தேவ பிரசன்னத்திற்குள் செல்லும் அனுமதியையும் பெற்றுத் தந்துள்ளது. "....இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." (எபி. 9:22)

A. இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது

"மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது, நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன், ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே." (வேலி. 17:11) நாம் பாவம் செய்யும்பொழுது, மரணத்தை சம்பாதிக்கிறோம். "பாவத்தின் சம்பளம் மரணம்...." (ரோமர் 6:23) இயேசு தமது இரத்தத்தை சிந்தி இப்படி அபராதத்தை செலுத்தித் தீர்த்தார் (நமக்காக-நம்முடைய இடத்தில்) பிராயச்சித்தம் என்பது தேவனோடு இணைதல் என்பதாகும். இயேசு தமது ஜீவனை சிலுவையில் தந்து (தமது இரத்தத்தை சிந்தி) நமக்கு பரிகாரத்தை ஏற்படுத்தினார். அது நாம் தேவனோடு இணைவதற்கு வழி வகுத்தது. இயேசுவின் இரத்தம், இனிமேலும் நாம் அவரது விரோதிகளல்ல, மாறாக அவரது நண்பரும், குமாரரும், குமாரத்திகளும் என்பதை குறிக்கிறது. இயேசு நமக்கு செய்ததை விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்கிறோம்.

B. பாவம் நம்முடைய வாழ்வில் என்ன செய்கிறது.

1. **தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறது.**
   "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது, உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது." (ஏசாயா 59:2).

2. **குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது.**
   "என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகுகிறது, அவைகள் பாரச்சுமையைப் போல என்னால் தாங்கக் கூடாத பாரமாயிற்று." (சங். 38:4).

3. **சாத்தான் நம்மீது குற்றம் சுமத்த அனுமதிக்கிறது**
"... இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன்..." (வெளி. 12:10).

4. **மரண தண்டனையை கோருகிறது**
"...பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்." (எசே. 18:4)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நமது எல்லா தேவைகளையும் சந்திக்கிறது

C. இரத்தம் தேவனுக்காக

தேவனுடைய பிரமாணத்தை மீறியதன் விளைவாக செலுத்த வேண்டிய அபராதத்தை (மரணம்) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் முழுவதுமாக செலுத்துகிறது. "...நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" என்று 1.யோ. 3:4 சொல்லுகிறது. அவருடைய பிரமாணத்தை மீறியதன் விளைவாக செலுத்த வேண்டிய அபராதத்திலிருந்து (மரணம்) இயேசுவின் இரத்தம் நம்மை பாதுக்காக்கிறது. யாத்திராகமம் 12ல், தேவன் இஸ்ரவேல் மக்களிடம், தலைப்பிள்ளைகளை அழிக்கும் சங்கார தூதனிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது. "... அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்து போவேன் (பாதுகாப்பேன்)..." (வசனம்13) என்று தேவன் சொன்னார்.

1. **ஐக்கியம் மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது**
"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." (ரோ.5: 8-9).

2. **நாம் மீட்கப்படுகிறோம் (அடிமைத்தனத்திலிருந்து விலைக்கு கொள்ளப்பட்டோம்)**
"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது." (எபே.-1:7).

D. இரத்தம் மனிதனுக்காக

இரத்தம் தேவனை திருப்திபடுத்தியது. இப்பொழுது அது நம்முடைய மனசாட்சியை குற்ற உணர்விலிருந்து கழுவி நம்மை திருப்திபடுத்துகிறது.

1. **இரத்தம் குற்ற உணர்விலிருந்து சுத்திகரிக்கிறது.**
"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளைச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்" (எபி-9:14).

2. **இரத்தம் நம்மை பரிசுத்தப்படுத்துகிறது**
"அந்தபடியே, இயேசுவும் நம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்." (எபி.13:12).

3. **இரத்தம் நம்மை தேவனண்டையில் சேர்க்கிறது**
"அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும்.... முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினாலே மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும்.... இப்பொழுது ஒப்புரவாக்கினார். (கொலோ.1:20-21).

4. **இரத்தம் தேவபிரசன்னத்தில் நுழையும் தைரியத்தைத் தருகிறது**
"ஆகையால் சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால்,.... துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த

ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.'' (எபி.10:19-22)

5. **இரத்தம் தேவனுடைய பார்வையில் நம்மை பூரணராக்குகிறது**
''..ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்.'' (எபி.10:14).

E. இரத்தம் பிசாசுக்கு எதிராயிருக்கிறது

தற்காலத்தில் சகோதரரை குற்றப்படுத்துவதே சாத்தானின் முக்கியமான சூழ்ச்சித் திட்டமாக இருக்கிறது. (வெளி.2:10). ஆனால் இயேசு கிறிஸ்துவோ பிரதான ஆசாரியராயிருந்து தமது இரத்தத்தின் மூலம் சாத்தானை எதிர்கொள்கிறார். (எபி.9:11-14)

1. **இரத்தம், தேவனை மனிதனுடைய பக்கத்தில் பிசாசுக்கு எதிராக நிறுத்துகிறது.**
''....தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.'' (ரோமர் 8:31,33-34). தங்களுக்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தின் கிரியை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு விரோதமாக குற்றம் சுமத்த பிசாசுக்கு எந்தவித முகாந்தரமுமில்லை.

2. **இரத்தம் சாத்தானுடைய சட்டரீதியான உரிமையை ஒன்றுமில்லாமல் செய்கிறது.**
''...அவருக்குள், பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.'' (கொலோ.1:14) ''மீட்பு'' என்பது ''திரும்ப வழங்குவது'' என்று பொருள்படும். நாம் ஒரு புதிய உரிமையாளருக்கு சொந்தமாகிறோம். அதற்கு செலுத்தப்பட்ட விலைக்கிரயமோ, இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தம். ''...தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை...'' (அப்-20:28) பார்க்க 1 கொரி.6:19-20, 1தீமோ.2:6.

F. இரத்தம் நமக்கு என்ன கொண்டுவருகிறது.

1. **இருதயத்தில் சுத்தம்**
''அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்'' (1யோ.1:7).

2. **நித்திய ஜீவன்**
''அதற்கு இயேசு அவர்களை நோக்கி : நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.'' (யோ.6:53-54).

3. **தேவனை அணுகுதல்**
''முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்'' (எபே.2:13)

எனது தீர்மானம்

நான் இப்பொழுது, இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தம், தேவனுக்கும், சாத்தானுக்கும், எனக்கும் எதைக் குறிக்கிறது என்பதை புரிந்து கொள்கிறேன். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை குறித்த உண்மையை பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தீர்மானிக்கிறேன். என்னுடைய பாவத்திலிருந்து என்னை மன்னிக்க, சுத்திகரிக்க, சாத்தானுடைய தொல்லைகளிலிருந்து என்னை பாதுகாக்க, தேவன் என்னுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை நான் அடிக்கடி நினைவுகூறுவேன்.

அத்தியாயம் 7 உயிர்த்தெழுதல்

இயேசு தமது சிலுவை மரணத்திற்குப் பின், மூன்று நாட்கள் கல்லறையில் இருந்தார். (மத்.12:40). பின்னர் -தேவன் தம்முடைய குமாரனை மரணத்தினின்று உயிரோடு எழுப்பினார். (வாசிக்க:மத்.28). "... கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், ...பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். (ரோமர் 1:4,5).

A. தேவன் கிறிஸ்துவுடன் உங்களையும் எழும்பச் செய்தார்

இயேசுவின் மரணம் உங்களுக்காகவே, அவரது உயிர்த்தெழுதலும் அப்படியே "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்காளாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றப்படியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள். ...தேவனே ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில், மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். ....கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்." (எபே.2:1-7, பார்க்க: கொலோ.3:1-3)

1. **உங்களுக்குப் புது வாழ்வு கொடுக்க**
   "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து. இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்த கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது, அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்." (2.தீமோ.1:9-10).

2. **உங்களுக்குப் புது பிறப்பு கொடுக்க**
   "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக, அவர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே,... ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிபித்தார். (1. பேதுரு1:3,4).

3. **உங்களுக்குப் புது ஆரம்பம் கொடுக்க**
   "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்ததால் புதுச்சிருஷ்யாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." (2.கொரி. 5:17).

4. **உங்களுக்கு**
   ....சாத்தான் மீது வெற்றி கொடுக்க
   "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள், ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.... தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?" (1யோ.4:4, 5:4-5).

   ....சாத்தான் மீது அதிகாரம் கொடுக்க
   அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, "....அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பரிசத்தில் இருக்கிறார், தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது." (1.பேதுரு 3:22) பார்க்க : லூக்கா 10: 17-19.

   ....சாத்தான் மீது வல்லமை கொடுக்க
   "....தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின்

மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன். எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்." (எபே.1:18-23) பார்க்க: மாற்கு 16:15-18, அப்.1:8, 4:33.

5. உங்களை தேவனுடைய ராஜ்யத்தில் குமாரனும் சுதந்திரவாளியுமாய் மாற்ற

"அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே சட்டச் சாட்சியை கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்த்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே..." (ரோமர் 8:15-17)

B. உயித்தெழுதல் வாழ்வின் தேவையை சந்திக்கிறது

1. இது கடந்த காலத்திலிருந்து உங்களுக்கு விடுதலை

உங்களுடைய பழைய பாவ வாழ்க்கை இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டு, அவரோடுகூட கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டது. பின்னர் இயேசு மீண்டும் உயிரோடு எழுந்தபோது, இயேசுவின் கல்லறையில் உங்களது பழைய வாழ்வை விட்டு விட்டு, புது சிருஷ்டியாக, நீங்களும் அவரோடுகூட எழுப்பப்பட்டீர்கள்!. மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்... அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார், அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாயும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்." (ரோமர்6:4-11) பார்க்க எபே.2:1-7, கொலோ.2:12-15.

2. இது நிகழ்காலத்தில் உங்களுக்கு வல்லமை

இயேசு உயிரோடு இருப்பதால், பாவத்தின் மீதும், நமக்கு விரோதமான சாத்தானின் எல்லா தாக்குதலின் மீதும், வெற்றியுள்ள வாழ்க்கை வாழ, அவருடைய ஆவியின் வல்லமையை இப்பொழுது நாம் பெற்றுள்ளோம். "இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே... கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே..." (ரோமர் 8:31-39).

3. இது எதிர்காலத்தில் உங்களது நம்பிக்கை

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எதிர்காலத்துக்கான பெரிய நம்பிக்கையை நமக்கு தருகிறது. அவர் "மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறு" (கொலோ.1:18) என்று அழைக்கப்படுகிறார். அவரை நம்பி, அவரை பின்தொடரும் அனைவரும் மரித்தோரிலிருந்து எழுந்திருப்பதற்கு அவருடைய உயிர்த்தெழுதலில் வழியை திறந்தார். வருங்காலத்தில் ஒரு மகிமையான நாளில், இயேசு கிறிஸ்து மீண்டும் பூமிக்கு வருவார் - குழந்தையாக அல்ல,

ஆனால் மகிமையின் தேவனாகவும், எல்லா சிருஷ்டிப்பையும் ஆளுகை செய்கிறவராகவும் உலகத்துக்கு தன்னை வெளிப்படுத்துவார். அந்த வேளையில், அவரை விசுவாசித்து மரித்துப்போன அனைவரும் மீண்டும் உயிரோடு எழும்புவார்கள் "கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே.... கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்தரையடைந்தவர்களில் முதற்பலனானாதலும் உண்டாயிற்று ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1 கொரி.15:17-23) பார்க்க 1கொரி.15:50-57 1தெச.4:13-18.

அத்தியாயம் 8 மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் என்பது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் நமக்குத் தரும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள நாம் எடுக்கும் முதல் படியாகும். "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்... இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்..." (அப்.2:36-38) பார்க்க: அப்.17:30.

A. எது மனந்திரும்புதல் அல்ல?

1. குற்ற உணர்வு மட்டும் அல்ல.

நமது பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு மனந்திரும்புதலுக்கு முன்பு வருகிறது. ஆனால் அது மனந்திரும்புதலாகாது. முதலில் பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு இல்லாத எவரும் மனந்திரும்புவதில்லை. ஆனால் குற்ற உணர்வு உள்ள எல்லாருமே உண்மையில் மனந்திரும்புகிறதில்லை. "அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்." (அப்.24:25) பேலிக்ஸ் குற்ற உணர்வு கொண்டிருந்தும் மனந்திரும்பவில்லை.

2. பாவத்தின் மீது கொள்ளும் மனஸ்தாபம் மட்டும் அல்ல

சிலர், தங்கள் பாவத்தின் விளைவுகளுக்காகவே, அல்லது அவர்கள் பிடிக்கப்பட்டாலோ, பாவத்தின் நிமித்தம் மனஸ்தாபப்படுகிறார்கள். அநேக மக்கள், நாங்கள் செய்த தவறுக்காக வருந்தவில்லை, மாறாக பிடிக்கப்பட்டதன் விளைவாக பெற வேண்டிய தண்டனைக்காக வருந்துகிறார்கள். "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது, லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது." (2 கொரி.7:10).

3. நல்ல மனிதனாக இருக்க முயற்சிப்பது மட்டும் அல்ல

அநேக மக்கள், தாங்கள் நல்லவர்களாக இருப்பதற்கும், தங்கள் வாழ்க்கை முறையை மாற்றுகிறதற்கும் தங்கள் சுய பெலத்தில் முயற்சிக்கிறார்கள். எந்த முயற்சியும், பாவத்திலிருந்து மனந்திரும்புவதின் அவசியத்தை ஒத்துக்கொள்ளாத சுயநீதியை வேராக கொண்டுள்ளது. "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப் போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக் கொண்டு போகிறது." (ஏசாயா 64:6).

4. பக்தியாய் இருப்பது மட்டும் அல்ல

வேதாகமத்திலுள்ள பரிசேயர்கள், தங்கள் நடத்தையிலும் நடைமுறையிலும் மிகுந்த பக்தியுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்கள் உபவாசித்தார்கள், ஜெபித்தார்கள், அநேக மதச்சடங்குகளை கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு போதும் மனந்திரும்பவில்லை. ''பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ள நினையாதிருங்கள், தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது, ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.''(மத்.3: 7-10) பார்க்க :மத்.5:20.

5. சத்தியத்தை அறிந்து கொள்வது மட்டும் அல்ல

சத்தியத்தைக் குறித்து அறிவாற்றலுள்ள முளையறிவை பெற்றிருப்பது ஒருவரது வாழ்வில் சத்தியம், வாழும் உண்மையாக மாறும் என்பதற்கு எவ்வித அச்சாரத்தையும் தராது. முளையில் விசுவாசிப்பதற்கும், இருதயத்தில் விசுவாசிப்பதற்கும் வித்தியாசம் உண்டு. (பார்க்க : ரோமர்10:10) ''தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான், பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன. வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?'' (யாக்.2:19-20).

B. உண்மையான மனந்திரும்புதல் என்றால் என்ன?

1. உங்கள் பாவங்களுக்காக தேவனிடத்தில் மனஸ்தாபப்படுவது

உண்மையான மனந்திரும்புதல், தன்னில் தானோ அல்லது மற்றொருவரிடத்திலோ மனஸ்தாபப்படுவது அல்ல, ஆனால் முதன்முதலில் தேவனிடத்தில் உண்மையாக மனஸ்தாபப்படுவது ஆகும். ''தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைக் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்....'' (சங்.51:1-4) பார்க்க: சங்.38:8.

2. உங்கள் பாவத்தைப் பற்றி உண்மையாக இருப்பது

''நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்: என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன் தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்'' (சங்.32:5) பார்க்க: 1யோ.1:9

3. உங்கள் பாவத்திலிருந்து முற்றிலும் விலகுவது

''தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.'' (நீதி.28:13).

4. உங்கள் பாவத்தை வெறுப்பது

''நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர், ஆதலால்,... தேவன்.. உம்மை... அபிஷேகம்பண்ணினார்..'' (எபி.1:9) ''....நீங்கள் செய்திருந்த உங்களுடைய எல்லாப் பொல்லாப்புகளினிமித்தமும் உங்களை நீங்களே அருவருப்பீர்கள்'' (எசே.20:43-44).

5. நீங்கள் பிறரிடத்தில் கடமைப்பட்டிருப்பதை முடிந்தவரையில் திருப்பி கொடுத்தல்

''சகேயு நின்று, கத்தரை நோக்கி : ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான் (லூக்கா19:8) பார்க்க : வேலி.6:1-7.

C. மனந்திரும்புதல் எவற்றை உள்ளடக்கியது

1. பாவத்திலிருந்து திரும்புவது

"உங்கள் பிதாக்களைப் போலிராதேயுங்கள், முந்தின தீர்க்கதரிசிகள் அவர்களை நோக்கி: உங்கள் பொல்லாத வழிகளையும் உங்கள் பொல்லாத கிரியைகளையும் விட்டுத் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூப்பிட்டார்கள், ஆனாலும் எனக்கும் செவிகொடாமலும் என்னைக் கவனியாமலும் போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா1:4) பார்க்க கலா.5:19-21, எபே.5:5.

2. உலகத்திலிருந்து திரும்புவது

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை." (1. யோ.2:15) பார்க்க: யாக்.4:4.

3. உங்களிடமிருந்து திரும்புவது

"பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்." (2.கொரி.5:15) பார்க்க: லூக்கா 14:26.

4. பிசாசிடமிருந்து திரும்புவது

"அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, ..." (அப்.26:18) பார்க்க கொலோ.1:13.

5. தேவனிடத்துக்கு திரும்புவது

"ஆகையால் நீ அவர்களை நோக்கி, சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: என்னிடத்தில் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் உங்களிடத்துத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா 1:3).

6. நேர்மையான வாழ்வுக்கு திரும்புவது

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்." (ரோமர் 6:13)

அத்தியாயம் 9 விசுவாசம்

விசுவாசம் எப்பொழுதுமே இயேசுவின் சீஷனுக்குரிய ஓர் அடையாளமாக இருந்துள்ளது. ஆதிகால சீஷர்கள் 'விசுவாசிகள்' என்றே அழைக்கப்பட்டனர். "இயேசு அவனை நோக்கி:...விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்." (மாற்கு9:23) விசுவாசம் என்பது, தேவனை முழுவதும் சார்ந்திருத்தலாகும். ஆதாம் பாவம் செய்தபோது, அவன் தேவனை சார்ந்திருப்பதை விட்டுவிட்டு, சுயாதீனமாயிருந்தான். (இதுவே விசுவாசம்). இதன் காரணமாகவே தேவன் விசுவாசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். தேவனுடன் மீண்டும் உறவு கொள்வதற்கு விசுவாசம் ஒரு மார்க்கமாகும். (தேவனை சார்ந்திருத்தல்) இவ்வாறு தேவனை சார்ந்திருத்தல் விசுவாசம் என்று அழைக்கப்படுகிறது. விசுவாசம் ஐம்புலன்களாகிய பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், தொடுதல் ஆகியவற்றை கடந்து செல்ல வைக்கிறது. விசுவாசம் உங்களை, உங்களது வரம்புக்குட்பட்ட திறனிலிருந்து விடுவிக்கிறது. விசுவாசத்தால் நீங்கள் இயலாமையிலிருந்து கடந்து, தேவனால் இயலும் என்ற நிலைமை அடைகிறீர்கள். இந்த "கூடாதது ஒன்றுமில்லை" (மத்.17:20) என்ற விசுவாச நடத்தைக்கு நாம் எல்லாரும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

A. விசுவாசம் என்றால் என்ன?

விசுவாசம் தேவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து செயல்படுவதாகும். உண்மையான விசுவாசம்: 1. கீழ்ப்படிதல், 2. செயல், (தேவனுக்கு மறுமொழியாக) 3. தேவனுடைய வார்த்தைக்கு (சத்தம்) செவிகொடுத்தல் ஆகியவற்றில் வெளிப்படுகிறது. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." (எபி.11:1). விசுவாசம் பிறர் மீதோ, பிறருடைய வார்த்தைகளின் மீதோ நம்பிக்கை, நிச்சயம், நம்பகத்தன்மை கொள்வது என்று பொருள்படும். தேவனிடத்தில் விசுவாசம் கொள்வது சுயநம்பிக்கைக்கு பதிலாக தேவ நம்பிக்கை கொள்வதை உள்ளடக்கியுள்ளது. நம்மை நாமே நம்புவதை தவிர்த்து, அவரை நம்புகிறோம். நம்முடைய குறைந்த அறிவின் மீது சார்வதை விட்டு விட்டு, அவருடைய அளவில்லாத ஞானத்தின் மீது சாருகிறோம்.

B. அறிவின் இரண்டு வகைகள்

"உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்தினாலல்ல, தேவனுடைய பெலத்தில், நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது. அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம், இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்." (1கொரி.2:4-7) பார்க்க: வசனங்கள் 8-16.

1. உணர்வின் அறிவு

இயல்பான மனிதனுக்கு, எல்லா அறிவும், ஐம்புலன்களான - பார்த்தல், கேட்டல், சுவைத்தல், முகர்தல், தொடுதல் ஆகியவற்றின் மூலம் வருகிறது. இந்த குறைவுள்ள அறிவு, 'மனித ஞானம்' என்று விவரிக்கப்படுகிறது.

2. வெளிப்படுத்தலின் அறிவு

இந்த அறிவு ஐம்புலன்களின் அடிப்படையிலோ, அல்லது இயல்பான பகுத்தறிவின் அடிப்படையிலோ அல்லாமல், தேவனுடைய வார்த்தையான சத்தியம்-என்னும் பிறிதொரு ஆதாரத்தின் அடிப்படையில் உள்ளது. மனிதனுடைய ஆவியின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் இது, 'தேவ ஞானம்' என்று அழைக்கப்படுகிறது.

"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" (2கொரி.5:6)

C. விசுவாசத்தின் அடிப்படை

தேவனிடத்தில் விசுவாசம் வைத்தலின் அடிப்படை மூன்று முக்கிய உண்மைகளில் உள்ளது.

1. தேவனின் தன்மை

"ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாபடியினாலே தமது பேரிலே தானே ஆணையிட்டு" (எபி-6:13).

a). அவர் மாறுவதில்லை

"நான் கர்த்தர், நான் மாறாதவர், ..." (மல்கியா 3:6) பார்க்க - யாக். 1:17.

b). அவர் விட்டுவிடுவதில்லை

"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்." (யோபு 42:2).

c). அவர் பொய் சொல்லுவதில்லை

"பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண்.23:19) பார்க்க தீத்து 1:2.

2. தேவகுமாரனின் மீட்பின் கிரியை

"...விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம், அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்." (எபி.12:1,2) தேவனிடத்திலுள்ள நமது விசுவாசத்திற்கு கிறிஸ்துவே ஆதாரம். அவரது மரணமும் உயிர்த்தெழுதலும் நமது நம்பிக்கைக்கு அடித்தளமிடுகிறது."...கிறிஸ்து இயேசு....அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்." (1 கொரி.1:30,31) பார்க்க ரோமர் 5:1-2.

3. தேவனுடைய வார்த்தை

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை." (மத்.24:35) பார்க்க. ஏசாயா 40:8. அப்பொழுது கர்த்தர்: ...என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்." (எரே.1:12) அவருடைய வார்த்தையை சதாகாலமும் உண்மையாய் உள்ளது. அவர் கூறிய எல்லாவற்றிலுமிருந்து தேவன் ஒரு குறிப்பிட்ட வார்த்தையை நம்முடைய சூழ்நிலைகளில் நேரடியாக நமக்கு கொண்டு வரும்போது விசுவாசம் வருகிறது சொல்லப்போனால், நம்முடைய விசுவாசத்தை விடுவித்து, தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளதாய் நம்மிடத்தில் வருகிறது.

D. விசுவாசம் எப்படி கிரியை செய்கிறது

விசுவாசம் பிரமாணம் (ரோமர் 3:27) எந்த சூழ்நிலையாயினும் நம்முடைய வாழ்வில் தொடர்ந்து கிரியை செய்கிறது. (பார்க்க 2 கொரி. 5:7, யாக். 1: 5:6) அது கீழ்கண்ட வழிகளில் கிரியை செய்கிறது:

1. தேவன் நமக்கு விசுவாசத்தை தருகிறார்.

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." (ஒப்பிட்டுப் பார்க்க: ரோ.1:17, ஆபகூக் 2:4) நீதிமான் அவருடைய விசுவாசத்தால் பிழைப்பான். அதாவது, விசுவாசம் அவர் நமக்குத் தரும் பரிசு. "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்,... இது தேவனுடைய ஈவு." (எபே.2:8) ".....அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே...." (ரோ.12:3).

2. தேவனிடத்திலிருந்து வரும் வார்த்தையால் விசுவாசம் வருகிறது

முதலில், நம்முடைய சூழ்நிலைக்கு சாதகமான ஒரு "வார்த்தையை" கூறி தேவன் நம்மை உற்சாகப்படுத்துகிறார். இது, வேதாகமத்தை வாசிப்பதாலோ, அல்லது உங்களுடைய ஆவியில் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்பதாலோ வரக்கூடும் "...விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." (ரோ.10:17) பார்க்க ஆதி.15:3-5, 17:15-21, யோசுவா 1:8.

3. வார்த்தைக்கு கீழ்ப்படிதல்

விசுவாசம் நம்முடைய சூழ்நிலையில் செயல்படுவதற்கு நாம் அந்த வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். விசுவாசம் செயப்பட்டு வினையல்ல, செய்வினை ஆகும். தேவனுடைய பெரும்பாலான வாக்குத்தத்தங்கள் நிபந்தனையுடன் கூடியவைகள் நம்முடைய பங்கை நாம் செய்தால், அவர் தம்முடைய பங்கை செய்வார். "....விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்." (யாக். 2:17) பார்க்க: யாக்.1:22-25, ஆதி. 15:6, மத். 7:24-27.

4. நெருக்கடி அல்லது "நம்முடைய விசுவாச சோதனை"

இது ஒரு சோதனை காலம். நம்மை சுற்றி நடப்பதெல்லாம் தேவன் கூறியதற்கு முரண்பாடாகவே நமக்கு தோன்றுகிறது. நம்முடைய நம்பிக்கைக்கு அங்கு இயல்பான சான்றுகள் இல்லாதது போல் காணப்படுகிறது. இந்நிலையில், நமது விசுவாசம் தேவனுடைய வார்த்தையை (அவர் நமக்கு என்ன சொல்லியிருக்கிறாரோ), முழுமையாய் சார்ந்திருக்கிறது. "...அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற

உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். (1பேதுரு 1:7) பார்க்க: ரோ.4: 16-21, சங்.105: 17-19.

விசுவாசத்தில் நாம் நம்மையே அவருடைய உண்மை தன்மையில் போட்டுவிடுகிறோம். நம்முடைய அவநம்பிக்கையும் போராட்டமுமான நேரங்களில் தேவன் உண்மையுள்ளவராகவும், நம்மை கைவிடாதவராகவும் இருக்கிறார். "நாம் உண்மை இல்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்." (2. தீமோ. 2:13) தோமா மற்றும் பேதுருவுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டபொழுது அவர் அவர்களுக்கு உண்மையுள்ளவராய் இருந்தார். இயேசு அவர்களை கைவிடவில்லை. "... நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னை கைவிடுவதுமில்லை (எபி. 13:5).

5. விளைவு

விளைவு எப்பொழுதும் விசுவாசியைப் பொறுத்தவரையில் தேவனுக்கு மகிமையை கொண்டுவரும் வெற்றியாகவே எப்பொழுதும் இருக்கிறது. (பார்க்க யாக்.1:2-4, 12, ஆதி.21:1-3, சங்.105, 19:22, அப்.3:16, எபி.6:13-15) "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்: நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோ.5:4).

எனது தீர்மானம்

நான் இன்று விசுவாச வாழ்க்கை வாழவும், என்னுடைய வாழ்வில் எல்லா பகுதிகளிலும், தேவனை நம்பவும் தீர்மானிக்கிறேன். விசுவாச கிரியையாகிய தேவனையே முழுவதும் சார்ந்திருப்பதே எனது தேவை எனது தேவை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.பிரச்சனைகளில் போராட்டங்களில், கஷ்டங்களில், அவரது உண்மையை நான் சார்ந்திருப்பேன். தேவனுடைய பதில் அவரது கிருபையும், அவரது அதிகாரமுள்ள வல்லமையும் ஆகும். தேவனுடைய உண்மையில் சார்ந்திருப்பதற்கும், தேவனுடைய விசுவாசத்தில் நடப்பதற்கும் நான் மற்றவர்களுக்கு போதிப்பேன்.

அத்தியாயம் 10 கிருபை

"கர்த்தராகிய இயேசுவின் உயிரித்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள், அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது." (அப்.14:26) ஆதி கிறிஸ்தவர்களுடைய அனுபவத்தில் தேவனுடைய கிருபை ஏன் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது? பவுலும் பர்னபாவும், பின்னர் பவுலும் சீலாவும், மிஷனெரி யாத்திரைகளை ஆரம்பிக்கும்போது, தேவனுடைய கிருபை அவர்கள் மீது இருக்கும்படி அந்தியோகியர் சபை ஏன் ஜெபித்தது?

A. கிருபையின் பொருள்

"கிருபை" என்ற வார்த்தையின் பொதுவான பொருள் என்னவெனில், "தகுதியை பாராது தரப்பட்ட தேவனுடைய தயவு" என்பதாகும். அதாவது, தண்டனைக்கு ஏதுவாக நாம் பாவிகளாய் இருந்தபோதிலும், தேவன் நம்மில் அன்புகூர்ந்து, நம்மை மன்னித்தார்.
(GRACE = **G**od's **R**iches **A**t **C**hrist's **E**xpense).

இருப்பினும், இது பாதி அர்த்தமேயாகும். மேலும், கிருபை "தேவனுடைய சாத்தியமாக்கும் வல்லமை" என்றும் பொருள்படும். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும் உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக." (2 தெச.2:16-17)அவருடைய கிருபை தேவனுடைய குடும்பத்தில் நம்மை ஏற்றுக்கொள்ள வழிவகுப்பது மட்டுமின்றி, கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான வல்லமையையும் அளிக்கிறது. ஒரு விசுவாசியின் வாழ்வில் தேவனுடைய கிருபை, இரண்டு வேத பகுதியில் இரண்டு கோணங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

1. **தகுதியை பாராது தரப்பட்ட தேவனுடைய தயவு**
   "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கபட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." (எபே.2:8-9).

2. **தேவனுடைய சாத்தியமாக்கும் வல்லமை**
   "பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் (சாத்திமாக்கும் வல்லமை) மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" (எபே. 1:4-6) கிருபையினால் (அவருடைய சாத்தியமாகும்வல்லமையால்) நாம் பெற்ற எல்லாவற்றையும் குறித்து விவரிக்கிற இந்த முழு அதிகாரத்தையும் வாசியுங்கள்.

   நம்முடைய இரட்சிப்பில், தகுதியில்லாத நமக்கு தரப்பட்ட தேவனுடைய தயவும், தேவனுடைய சாத்தியமாக்கும் வல்லமையும் வெளிப்படுகிறது. ஏனெனில், தேவனுடைய வல்லமையால் மாத்திரமே நாம் மறுரூபமாகிறோம். (தகுதியில்லாத போதும் நாம் அவருடைய மன்னிப்பையும் அவருடன் புதிய உறவையும் பெறுகிறோம்), "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின." (2கொரி.5:17).

   இந்த கிருபையின் தத்துவம் நாம் தேவனோடு சஞ்சரிக்கும் நாளளவும் தொடர்கிறது. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும், தேவனுடைய கிருபையே, நம்மை வளரவும், பெலப்படவும் செய்கிறது. தேவனுடைய சாத்தியமாக்கும் வல்லமை எவ்வித தகுதியும் இல்லாத நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்." (2பேதுரு 3:18)

B. கிருபை விசுவாச வீரர்களுக்கு அருளப்படுகிறது

இந்த செயலாற்றும் வல்லமையாகிய கிருபை, வேதாகமம் முழுவதிலும், ஆண், பெண், இரு பாலருடைய வாழ்வில் வெளிப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விசுவாச வீரனும் தேவனுடன் சஞ்சரிக்க ஆரம்பிக்கும்போது, தங்களுடைய பெலவீனத்தையும், இயலாமையையும் அறிந்திருக்கிறார்கள். தேவனுடைய கிருபையை அவர் அனுமதித்தால் மாத்திரமே-தேவனுடைய செயலாற்றும் வல்லமையால்-ஒருவர் எப்படி இருக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறாரோ அப்படி மாற, அவருடைய வாழ்வில் கிரியையும் அந்நபரைக் குறித்து தேவனுடைய சித்தம் நிறைவேறவும் செய்கிறது.

C. மோசேயின் வாழ்வில் கிருபை

வாசியுங்கள் யாத்.3:11-13, 4:1-13. தேவன் மோசேக்கு கொடுத்த கட்டளை ஒரு சிறிய வேலை அல்ல. எகிப்து, அந்நாளில் ஆளும் சாம்ராஜ்யம். அது ஒரு கொடிய தேசம். அதன் கொடிய தலைவன் பார்வோன், அவனுடைய அதிகாரம் தெய்வீகம் நிறைந்ததாக கருதப்பட்டது. அன்று எகிப்தைச் சுற்றியிருந்த ஒவ்வொரு தேசமும் பார்வோனுக்கு பயந்திருந்தது. தேவன் மோசேயினிடத்தில், எகிப்துக்குச் சென்று, அவருடைய ஜனங்களாகிய முப்பது லட்சம் பேரை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்குமாறு பார்வோனிடம் சொல்லும்படி கூறியபோது, மோசே-தனது பெலவீனம் மற்றும் இயலாமையிலிருந்து-கூறிய உடனடி பதில் பின்வருமாறு:

3:11 "நான் யார்?"

3:13 "நீர் யார்?"

4:1 "அவர்கள் என்னை நம்ப மாட்டார்கள்"

4:10 "நான் வாக்கு வல்லவன் அல்ல"

4:13 "ஆண்டவரே, வேறு யாரையாவது அனுப்பும்."

ஆனால் மோசே, தேவனுடைய கிருபையுடன் எகிப்துக்குச் சென்று தேவன் கூறியபடியே, இஸ்ரவேல் ஜனங்களை அழைத்து வந்தான்.

D. கிதியோனுடைய வாழ்வில் கிருபை

வாசியுங்கள் நியாயாதிபதிகள் 6:1-24. அவருடைய ஜனங்களை வலிமையுள்ள மீதியானியரின் சேனையிலிருந்து விடுவிக்கும்படி கிதியோனுக்கு தேவனுடைய அழைப்பு வந்தது. அநேக ஆண்டுகளாக இஸ்ரவேல் தோல்வியை சந்தித்தார்கள். வசனம் 13-ல் காண்கிறபடி, தேவனுடைய வார்த்தைக்கு கிதியோனுடைய பதில் அவனுடைய முதல் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது. ''அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்.'' தேவன் அவனை உற்சாகப்படுத்தி, அவனோடு இருப்பதாக வாக்களித்தபோதிலும், கிதியோன் ''நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன், இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது, என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்''. என்று பதிலளித்தான். (பார்க்க: வசனம் 15) ஆனால் கிதியோன் தன்னுடைய பயம், இயலாமைக்கு எதிர் மாறாக தேவனுடைய கிருபையால் (சாத்தியமாக்கும் வல்லமை) இஸ்ரவேலை மீட்டான். அதுவும் குறைந்த அளவு எண்ணிக்கையுள்ள ஒரு குழுவைக் கொண்டு அதை செய்தான். இந்த வித்தியாசத்தைச் செய்தது கிருபையே!.

E. அப்போஸ்தலானாகிய பவுலின் வாழ்க்கையில் கிருபை

வாசியுங்கள் அப்.15:40 பவுலும், சீலாவும் இணைந்து மிஷனெரி யாத்திரை, செல்வதற்கு முன்பு, அந்தியோகியாவிலுள்ள சபை அவர்களுக்காக ஜெபித்து, அவர்களுக்கு முன்பாக இருந்த பணிக்காக ''தேவனுடைய கிருபைக்கு (அவர்களை) ஒப்புக்கொடுத்தது'' 2.கொரி.11:22-33-ல் உள்ள பவுலுடைய அனுபவங்களை குறித்த விவரங்களை படியுங்கள். தேவனுடைய கிருபைக்கு அவர் முதலில் ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்பது புரிந்துகொள்ளக் கூடியதாயிருக்கிறது. அவர் பிழைத்திருப்பதற்கு அது தேவையாயிருந்தது! பவுல் தன்னுடைய பெலவீனத்தை அறிக்கையிடும்போது தேவனுடைய பதிலாகிய அவருடைய வாக்குத்தத்தம், நமக்காகவும் தான். அதாவது, ''...என் கிருபை உனக்கும் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்....'' (2-கொரி.12:9)

F. நம்முடைய வாழ்வில் வெளியான கிருபை

ஒவ்வொரு நாளும் நாம் தேவனோடு நடக்கும்போது – தேவனுடன் உள்ள நமது உறவில் -நம்மால் சமாளிக்க முடியாத சூழ்நிலைகளை நாம் தொடர்ச்சியாக சந்திக்கிறோம். அவருடைய வார்த்தையை நம்புவதே, தேவனுக்கு நம்முடைய பதில் நாம் நம்முடைய நம்பிக்கையை கீழ்ப்படிதல் மூலம் வெளிப்படுத்துகிறோம். இது, சூழ்நிலை எதை காண்பித்தாலும், அதற்கு மாறாக தேவனுடைய வார்த்தை எதை சொல்லுகிறதோ, அதையே நாம் நம்புகிறோம் என்பதை நிருபிக்கிறது. நம்முடைய விசுவாசத்திற்கு தேவனுடைய பதில் அவருடைய கிருபை எல்லா சூழ்நிலையிலும் நம்மை வெற்றிபெறச் செய்யும் அவருடைய சாத்தியமாக்கும் வல்லமை.

G. மிகவும் முக்கியமான இரண்டு வாக்குத்தத்தங்கள்

1. **கிருபாசனத்தண்மைக்கு தைரியமாய் செல்ல நமக்குள்ள வாய்ப்பு** ''ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், (ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை தெய்வீக சாத்தியம்) அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம் (எபி. 4:16).

2. **தேவனால் கூடும்**
   ''மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகல விதக் கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்'' (2கொரி. 9:8).

அத்தியாயம் 11 தண்ணீர் ஞானஸ்நானம்

தம்மை விசுவாசிப்பவர்கள் அனைவரும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறவேண்டுமென இயேசு கட்டளையிட்டார். ''அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து'', (மத்.28:18,19) பார்க்க: அப்.2:38-41. ''ஞானஸ்நானம் ''பெறுவது என்பது முழுவதும் முழ்குவது'' எனப் பொருள்படும் ஒருவர் தனது பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு தனக்காக மரித்தார் என்று விசுவாசிக்கும்பொழுது, அவர் அநேக சாட்சிகளின் முன்னிலையில் தண்ணீர் அருகே அழைத்து செல்லப்பட்டு தண்ணீருக்கடியில் முழ்கசெய்து மறுபடியும் வெளியே கொண்டுவரப்படுகிறார். தனது விசுவாசிகள் இத்தகையதொரு வித்தியாசமான காரியத்தை செய்யும்படி இயேசு ஏன் கட்டளையிட்டார்?

A. தண்ணீர் ஞானஸ்நானத்தை புரிந்துகொள்ளுதல்

வெற்றியுள்ள, விடுவிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு, தண்ணீர் ஞானஸ்நானம் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். தண்ணீருக்குள் முழ்கி மறுபடியும் வெளியே எழும்பும் செயல், ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்கு என்ன நேரிடுகிறது என்பதை சித்தரிக்கிறது.

B. கிறிஸ்துவின் பணிகளின் நான்கு நிலைகள் சித்தரிக்கப்பட்டுள்ளது

1. **அவர் மரித்தார்... நான் அவருக்குள் மரித்தேன்**
   ''நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழையமனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.'' (ரோமர் 6:6-7).

2. **அவர் அடக்கம் பண்ணப்பட்டார் ... நான் அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டேன்.**
   ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? ... அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டடோம்.'' (ரோமர் 6:3-4).

3. **அவர் உயிரோடு எழுப்பப்பட்டார் ... நான் அவருக்குள் புதுவாழ்வு பெற்றிருக்கிறேன்.**
   ''மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, ... ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.

4. **அவர் உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டார் .... நான் அவருக்குள் உயர்த்தப்பட்டேன்**
   ''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.'' (எபே.2:7) பார்க்க கொலோ.3:1.

C. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது...

1. **உங்களது அடக்க ஆராதனை!**
   அடக்க ஆராதனை, ஒரு மனிதனை கொன்று போடுவதற்காக நடத்தப்படுவது அல்ல. ஏற்கனவே மரித்த, ஒரு மனிதனுக்காக தான் அது நடத்தப்படுகிறது. எனவே, நீங்கள் கிறிஸ்துவுக்குள் ''மரித்திருக்கிறபடியால்'' உங்கள் பழைய வாழ்க்கையை தண்ணீர் ஞானஸ்நானம் மூலம் நீங்கள் அடக்கம் செய்கிறீர்கள்.

2. **புதுவாழ்விற்கு உங்களது உயிர்த்தெழுதல்**
   நீங்கள் தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது, நீங்கள் கிறிஸ்துவில் புது சிருஷ்டி என்பதை விளங்கப்பண்ணுகிறீர்கள் ''ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால்,

அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம், மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்., அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார் அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.'' (ரோமர் 6:8-11).

D. இரண்டு இராஜ்யங்கள்

''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்.'' (கொலோ.1:13) இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும், மனுஷியும், அந்தகாரத்தின் இராஜ்யத்திற்குள் பிறக்கிறார்கள், அதன் சர்வாதிகாரியான சாத்தானுக்கு அடிமைகளாக பிறக்கிறார்கள். இந்த இராஜ்யத்திலிருந்து வெளிவர மரணத்தை தவிர வேறு வழியில்லை. தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க பிறப்பைத் தவிர வேறு வழியில்லை. எனவேதான் இயேசு நமது மரணமாகவும், பிறப்பாகவும் மாறினார் இதனை நாம் தண்ணீர் ஞானஸ்நானம் மூலம் தெரிவிக்கிறோம்!.

E. இரண்டு இனங்கள்

இரண்டு இராஜ்யங்கள் இருக்கிறபடியால் ஒவ்வொரு இராஜ்யத்திற்குள்ளும் வெவ்வேறு இனமக்கள் வாழ்கின்றனர். அந்தகார இராஜ்யத்தை ஆதாமிய இனம் குடியேற்றுகிறது, தேவனுடைய இராஜ்யத்தை புது சிருஷ்டி குடியேற்றுகிறது.

1. முதல் ஆதாம்

''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல...'' (1 கொரி.15:22) பார்க்க: ரோமர் 5:12 ஆதாம் நம் அனைவருக்கும், மனித இனம் முழுவதிற்கும் தகப்பன். ஆதாமுடைய பாவம், நம் அனைவரையும் தேவனிடத்திலிருந்து பிரித்தது. அவனுடைய பாவத்தால், நாம் அனைவரும் அவனது முரட்டாட்டமும் அழிவுமுள்ள சுபாவத்தை சுதந்தரித்து, மரணத்திற்குட் படுத்தப்பட்டோம். ஆதாமின் சந்ததியே ''ஆதாமிய இனம்'' என்று அழைக்கப்படுகிறது.

2. கடைசி ஆதாம்

''அன்றியும், நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்'' (ரோமர் 5:6) விழுந்து போன ஆதாமிய இனத்தை தேவனால் மாற்றக்கூடாதிருந்தது. அவர் அந்த இனத்திற்கு ஒரு முடிவை கொண்டு வந்து, ஒரு புதிய மனித இனத்தை துவக்க வேண்டியதிருந்தது. இயேசுவே கடைசி ஆதாம். அவர் ஆதாமிய இனத்தின் கடைசி பிறப்பாகவும், புதிய இனத்தின் முதற் பிறப்பாகவும் வந்தார். அவர் சிலுவையில் தொங்கியபோது, கடைசி ஆதாமாகவும் ஆதாமிய இனத்தின் கடைசி பிறப்பாகவும் தொங்கினார். அவர் சிலுவையில் மரித்தபோது, ஆதாமிய இனமும் ஆதாமின் பாவ சுபாவமும் மரித்தது. தேவன் விழுந்துபோன சிருஷ்டியை அவருக்குள் அழித்தார். ஆதாமிய இனம் கிறிஸ்துவுக்குள் அழிந்தது.

3. இரண்டாம் மனிதன்

''...கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' (1கொரி.15:22) இயேசு தேவனின் புது மனிதனாக வந்தார், இதன் மூலம் ஒரு புதிய இனம் உருவாக்கப்படும். இயேசு கடைசி ஆதாமாக உயிர்த்தெழாமல், இரண்டாம் மனிதனாக, புதிய இனத்தின் தலைவரக உயிர்த்தெழுந்தார். ''அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் (கிறிஸ்து) உயிர்ப்பிக்கிற ஆவியானார்....முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே, வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம்'' (1கொரி.15:45-49).

4. புது சிருஷ்டி

''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின், எல்லாம் புதிதாயின.'' (2 கொரி.5:17) தண்ணீர் ''ஞானஸ்நானத்தின் மூலம் நாம் நம்முடைய எல்லா நண்பர்களுக்கும், நமக்கு அறிமுகமானவருக்கும், நாம் இனி ஆதாமிய இனத்தையும் அந்தகார இராஜ்யத்தையும் சேர்ந்தவர்களல்ல என்று தெரிவிக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகி, தேவனுடைய இராஜ்யத்தை சேர்ந்தவர்களாகிறோம்.

அத்தியாயம் 12 பரிசுத்த ஆவியானவர்

இயேசு உயிர்த்தெழுந்த பின்னர், 40 நாளளவும் அவரது சீஷருக்கு தரிசனமானார். பின்பு, ஓர் உயர்ந்த மலை உச்சியில் அவர்கள் எல்லோரும் அவரோடு கூடியிருந்த சமயத்தில், அவர்களுடைய கண்களுக்கு முன்பாக அவர் உயர பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (வாசிக்க அப்.1:1-11) ஒரு விசேஷமான, அருமையான வாக்குத்தத்தை கொடுத்துச் சென்றார்.

''நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.... நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.'' (யோ.14:16-18, 16:5-7).

இயேசு நம்மை இவ்வுலகில் தனியே விட்டுவிடவில்லை. அவர் பரிசுத்த ஆவியானவரை நமக்கு அனுப்பியுள்ளார்.

A. பரிசுத்த ஆவி தேவனாயிருக்கிறார்

பரிசுத்த ஆவியானவரைப் பற்றி நாம் முதன் முதலாக புரிந்து கொள்ள வேண்டியது, அவர் மெய்யாகவே தேவன் என்பதையே. ''பேதுரு அவனை நோக்கி, அன்னியாவே, ... பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?... நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான்.'' (அப். 5:3-4) பார்க்க: 2கொரி. 3:17. தேவன் தம்மைத்தாமே பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்த விரும்பினார். இவை, மூன்று மாறுபட்ட பண்புகளைக் கொண்ட நபர்களின் (ஆள்தத்துவங்களின்) வெளிப்பாடுகள், என்றாலும் மூவரும் ஒருவரே.

B. பரிசுத்த ஆவியின் வரம்

பரிசுத்த ஆவியானவர், ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் அருளிய வரம் ஒருவர் இயேசுவை விசுவாசித்து, அவர் அருளும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் அந்த விசுவாசிக்குள் தங்கி, ஆவிக்குரிய வாழ்க்கையை அளிக்கிறார். ''பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி.'' (அப்.2:38-39) பார்க்க: யோ.7:37-39.

C. பரிசுத்த ஆவியின் கிரியை

1. விசுவாசியின் தனிப்பட்ட வாழ்வில்:

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள் வாசம் செய்து, தனிப்பட்ட முறையில், சேவை செய்ய வருகிறார்:

a). அவர் தேவனோடுள்ள நமது உறவை குறித்து சாட்சி பகருகிறார்
"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்." (ரோமர் 8:16)

b). அவர் நடத்துகிறார்
"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

c). அவர் தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ நமக்கு உதவுகிறார்
"பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (எபே.5:16) பார்க்க: வசனங்கள் 17-25.

d). அவர் ஜெபத்தில் நமக்கு உதவுகிறார்.
"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்." (ரோமர் 8:26).

e). அவர் நமது சரீரங்களுக்கு ஜீவன் கொடுக்கிறார்.
"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." (ரோமர் 8:11).

2. விசுவாசியின் ஊழியத்தில் :
தேவன், விசுவாசிக்குள்ளாக வாசம் செய்யும்படி பரிசுத்த ஆவியை அருளுவதோடு, இவ்வுலகில் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கும், அவரை மகிமைப்படுத்துவதற்கும் ஏற்ற வல்லமையை கொடுக்கும்படி, தேவன் அந்த விசுவாசியை பரிசுத்த ஆவியால் நிரப்பவும் ஆவிக்குள்ளான ஞானஸ்நானத்தை கொடுக்கவும் விரும்புகிறார்.

a). சாட்சி பகர வல்லமையையும் தைரியத்தையும் பரிசுத்த ஆவியானவர் அருளுகிறார்.
"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்". (அப். 1:8) பார்க்க : அப். 2:14-40.

b). இயற்கைக்கு அப்பாற்பட்ட எல்லைகளை அவர் அறிமுகம் செய்கிறார்
"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே .... எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கத்தரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது." (1கொரி.12: 4, 8-10). பார்க்க: அப்.2:4, 10:46, 19:6.

c). இயேசு ஜீவிக்கிறார் என்று அவர் சாட்சி பகருகிறார்
"...இயேசுவை தம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, ...இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம், தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்" (அப். 5:30-32) பார்க்க: அப். 4:31-33.

d). தேவனுடைய வார்த்தையைக் குறித்த புதிய புரிந்து கொள்ளுதலை அவர் கொண்டு வருகிறார்.
"எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும் தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்." (1கொரி. 2: 9:10) பார்க்க: யோ.16:13.

e). தேவனை உண்மையாய் ஆராதிக்க நமது ஆவியை அவர் நிரப்புகிறார். "...ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி," (எபே.5:13-19). பார்க்க: யோ.4:24.

f). இயேசுவை அவர் மகிமைப்படுத்துகிறார்.
"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள், அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்." (யோ.16:13-15) பார்க்க: யோ.15:26.

D. பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறுவது எப்படி?

நீங்கள் விசுவாசியாயிருப்பதனால் உங்களுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர், தேவனுக்கு நீங்கள் வல்லமையுடன் ஊழியம் செய்ய, உங்களில் நிரம்பி வழிய தேவன் விரும்புகிறார். (எபே. 5:18).

1. **தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஓர் ஈவு: கேட்டுப் பெற்றுக் கொள்.**
"....பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." (லூக்கா 11:13) பார்க்க: வசனங்கள் 9-12.

2. **விசுவாசத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளும்போது தேவனை துதிக்க ஆரம்பியுங்கள்**
"அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள். ஆமென்" (லூக்கா 24:52-53).

3. **இயற்கைக்கு அப்பாற்பட்ட பாஷையால் நீங்கள் பேசமுடியும்**
".....பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார், அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளை பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்" (அப்.19:6) பார்க்க: மாற்கு16:17, அப்.2:4, 10: 45-46, 1கொரி. 4:5, 18.

எனது தீர்மானம்

என் வாழ்வில் உள்ள பரிசுத்த ஆவியின் வரத்திற்காக நான் தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன். பரிசுத்த ஆவியின் தூண்டுதலுக்கும் வழிநடத்துதலுக்கும் செவிகொடுக்க இன்று நான் தீர்மானம் செய்கிறேன். என்னுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியின் சத்தத்தை கவனிப்பதற்கு நான் கற்றுக் கொள்ள உறுதி எடுக்கிறேன். ஆவியால் நிரப்பப்பட விரும்புகிறேன். பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்கு நான் இப்பொழுது என் ஆவியை திறக்கிறேன்.

அத்தியாயம் 13 சோதனை

A. இரண்டு வித இச்சைகள்

சாத்தான் ஒவ்வொரு கிறிஸ்தவரையும் பெரும்பாலும் சோதனையின் மூலம் தாக்குகிறான். இந்த தாக்குதலை அவன் இரண்டு செயல்களில் முழுக் கவனம் செலுத்தி தொடுகிறான்.

1. உலகத்தின் இச்சைகள்.

உலகத்தின் நடவடிக்கைகளில் ஒரு விசுவாசி தன்னை மறந்து ஈடுபடும்படி அவனை சோதிக்க வகை தேடுகிறான்.

a). உலகம் தரக்கூடிய பொருள்சார்ந்த ஆசீர்வாதங்களை முக்கிய விருப்பமாக்க:

b). இந்த உலகத்தின் கனத்தையும் அங்கீகரிப்பையும் முக்கிய குறிக்கோளாக்க,

c). இந்த உலகத்தாருடன் இணைந்து சுகஜீவனம் செய்வதை நமது பாதுகாப்பின் அடிப்படையாக்க. ''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.'' (1யோ.2:15) பார்க்க யாக்.4:4, 1தீமோ.6:6-11.

2. மாம்சத்தின் இச்சைகள்

கிறிஸ்து சிலுவையின் மீது செய்த காரியத்தின் மூலம், உண்மை கிறிஸ்தவன் பாவத்தின் விளைவுகளிலிருந்தும், பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுதலையாகிறான். (ரோ.6:6-14). ஆனால் அவன், பசி, ஆசைகள் ஆகிய இயற்கை விதிகளுக்குட்பட்ட இயற்பியல் சார்ந்த சரீரத்துடன் தான் இன்னும் வாழ்கிறான். அவன் தனக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியின் தூண்டுதலைவிட அவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்படி சாத்தான் அவைகளை பயன்படுத்துவான். (ரோ.8:5-9) பார்க்க யாக்.1:14, எபே.2:3.

B. சாத்தானுடைய முதல் வெற்றி

உலகம், மாம்சத்திற்கடுத்த காரியங்களைக் கொண்டுதான் முதல் மனிதனின், மனுஷியின் சோதனையில் சாத்தான் தன்னுடைய முதல் வெற்றியைப் பெற்றான். இதுவே, அவனுடைய தந்திரங்களாய் இன்றும் இருக்கின்றன. ''ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், (மனதின் பேராசைகள்), ஜீவனத்தின் பெருமையுமாகிய (தனது சொந்த பலத்தின்மேல் உறுதியான நம்பிக்கை அல்லது உலகப் பொருள்களின் திடநிலை மீது நம்பிக்கை) உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.'' (1 யோ.2:16).

ஏவாளின் சோதனை கீழ் கண்டுள்ள வசனத்துடன் ஒப்பிட்டுப் பார் :

ஆதியாகமம் 3:16	**1 யேவான் 2:16**
புசிப்புக்கு நல்லது	''மாம்சத்தின் இச்சை''
கண்களுக்கு இன்பமானது	''கண்களின் இச்சை''
புத்தியை தெளிவிக்க இச்சிக்கப்படத்தக்கது	''ஜீவனத்தின் பெருமை''

ஆதாம் ஏவாளின் வீழ்ச்சியினால் முழு மனுக்குலமும் மாம்சத்தால் ஆளகை செய்யப்படுகிறது. (மேற்குறிப்பிட்டுள்ள மூன்று காரியங்கள்). மாம்சமும் பாவசுபாவத்தினால் சீரழிந்துள்ளது. (கலா.5:19-21).

C. இயேசு பெற்ற வெற்றி

1. அவரது வாழ்வின் மூலம்

இயேசு நம்மைப்போலவே எல்லாவற்றிலும் சோதிக்கப்படும், ''பாவம் இல்லாதவராய்'' இருந்தார். (எபி.4:15).

இயேசுவின் சோதனையை கீழ்க்கண்டுள்ள வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்:

லூக்கா 4:1-13	**1யோவான் 2:16**
கல்லுகள் அப்பத்திற்கு	''மாம்சத்தின் இச்சை''
பூமியின் ராஜ்யங்கள்	''கண்களின் இச்சை''
தேவாலயத்தின் உப்பரிகை	''ஜீவனத்தின் பெருமை''

2. அவரது மரணம், உயிர்த்தெழுதல் மூலம்
கிறிஸ்துவின் கிரியையை தனதாக்கிக் கொள்ளும் விசுவாசம் கிறிஸ்தவனை, அவன் மேலுள்ள பாவத்தின் வல்லமையிலிருந்தும், ஆளகையிலிருந்தும் அவனை விடுவிக்கிறது. (ரோ.8:9) அவன் இப்பொழுது தேவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதை தெரிந்துக்கொள்வதற்கு சுதந்தரமாக இருக்கிறான். (ரோ.6:8-14) ''அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாக.... அனுப்பி....மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.'' (ரோ.8:3,4)

D. கிறிஸ்தவனின் தொடர்ச்சியான வெற்றி

கிறிஸ்து நமக்காக பெற்ற இந்த மகத்தான வெற்றி ஆதாரத்தின் அடிப்படையில், எதிரியிடமிருந்து வரும் எந்த தாக்குதலையும் ஒரு கிறிஸ்தவன் இப்பொழுது தோற்கடிக்க முடியும். தொடர் வெற்றியின் ஏழு அடிப்படை கருத்துகள் இங்கே கொடுக்கப்படுள்ளன.

1. வெற்றி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்
சிலுவையில் பிசாசின் தோல்வியினால் அவனது பலம் தற்போது கிறிஸ்தவனின் அறியாமையில் காணப்படுகிறது. (ஓசியா 4.6) ஆனால் ஒரு கிறிஸ்தவன் தனது வாழ்வில், சிலுவையின் முழு கிரியையும், உயிர்த்தெழுதலையும் அறிகிறபொழுது, அவனுக்கு எதிராக பிசாசு எந்த ஆயுதத்தையும் பயன்படுத்த முடியாமல் நிராயுதபாணியாகிவிடுகிறான்.

2. பரிசுத்த ஆவியுடன் அடியெடுத்து வை
கிறிஸ்தவனுக்குள் ஒரு புது வல்லமை வைக்கப்படுகிறது-அது, பரிசுத்த ஆவியானவரே. ஒவ்வொரு நாளும் அவருடைய உள்தூண்டுதல்களுக்கு கீழ்ப்படிந்து நாம் நடக்க வேண்டியதாயிருக்கிறது. (கலா. 5: 22-25).

3. சோதனை எதற்காக என்பதை தெரிந்துகொள்
சோதனை பாவமல்ல. சோதனைக்கு இணங்குவதே பாவம் (யாக்.1:15) பார்க்க: ஆதி.4:6-7.

4. தப்பித்துக் கொள்ள வழி ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்துகொள்
''மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கக் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.'' (1 கொரி.10:13) யாக்.4:7 தப்பிக்கும் வழியை விவரிக்கிறது: தேவனுக்கு ஒப்புவித்து, ''பிசாசை எதிர்த்து நில், அவன் ஓடிப்போவான்.

5. வாழ்வில் சரியான கண்ணோட்டத்தை வைத்துக்கொள்
''நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.'' (கொலோ.3:1-2) பார்க்க: பிலி. 4:8, 1தீமோ. 6:11-12, 2 பேதுரு3:11-13.

6. சோதனைக்கு சாதகமான பகுதிகளிலிருந்து விலகி நில்
''தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்க மாட்டே....'' (சங். 103:3) பார்க்க 1தீமோ.6:9-7.

7. சாத்தானுடைய திட்டங்களை அறிந்து கொள்.
சாத்தானுடைய சூழ்ச்சியினால் நாம் வெல்லப்படாதபடிக்கு, அவன் நமக்கு எதிராக பயன்படுத்தும் தந்திரங்களை நாம் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாய் இருக்கிறது. (2 கொரி.2:11)

a). அவன் பொய்யன் (யோ. 8:44)
b). அவன் அவதூறு செய்கிறவனும் குற்றம் சுமத்துகிறவனும் (வெளி.12:10)
c). அவன் மோசம் போக்குகிறவன் (வெளி. 12:9)
d). அவன் சோதனைக்காரன் (மத். 4:1-11)
e). அவன் ஒடுக்குகிறவன் (அப். 10:38)

f). அவன் தடை செய்கிறவன் (1தெச.2:18)
g). அவன் கெர்ச்சிக்கிற சிங்கம் (1பேதுரு 5:8)
h). அவன் ஒளியின் தூதனின் ஷேஷத்தை தரிக்கிறவன் (2கொரி. 11:14)

கிறிஸ்தவர்களாக விசுவாசிகளாக, **நாம் வெற்றியுடன் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்**. கிறிஸ்துவின் மூலம் இந்த வெற்றி நமதே:

1. உலகத்தின் மீது (1யோ. 5:4)
2. மாம்சத்தின் மீது (கலா. 5:16)
3. எதிரியின் மீது (எபே. 6:11,13).

அத்தியாயம் 14 ஐக்கியம்

A. ஐக்கியத்தின் நோக்கம்

கிறிஸ்தவர்கள் இணைந்த ஐக்கியம் மிக முக்கியமானது ஏனெனில் நம்முடைய இணைந்த ஒற்றுமையில் தான்.

1. **ஒரு விசுவாசி கிறிஸ்துவில் வளரவும் உற்சாகப்படுத்தவும் படுகிறான்.**
"நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும், உங்களிலும் என்னிலுள்ளமுள்ள விசுவாசத்தினால் உங்களோடேகூட நானும் ஆறுதலடையும்படிக்கும், உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறபடியினாலே" (ரோ.1:10:11).

2. **இயேசு தேவனால் அனுப்பப்பட்டார் என்பதை இந்த உலகம் அறிந்து கொள்கிறது.**
"நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். (யோ.17:22-23).

B. ஐக்கியத்தின் நிபந்தனைகள்

1. **ஒருவருக்கொருவர் அடிப்படை அர்ப்பணிப்பு**
"சகோதரசிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்." (ரோ.12:10) அடிப்படை நம்பிக்கையின்றி ஐக்கியம் கொள்ள முடியாது. ஐக்கியத்தின் ஆழம், அர்ப்பணிப்பின் ஆழத்தைப் பொறுத்து மாறும்.

2. **நம்முடைய அர்ப்பணிப்பு 'தெய்வீக அன்பை' (அகாபே) அடிப்படையாய் கொண்டிருக்க வேண்டும்**
அகாபே என்ற அன்பு என்றாலும் அன்புகூறுவது. 'ஏனென்றால்' அன்பு கூறுவது அல்ல. இவ்விதமான அர்ப்பணிப்பு அடுத்தவரின் நிலையற்ற குணத்தால் பாதிக்கப்படுவதில்லை. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." (யோ.13:34).

3. **உண்மையான ஐக்கியம் கிறிஸ்துவை மையமாய் கொண்டிருக்கிறது**
ஒருவரோடொருவர் உள்ள நமது ஐக்கியம் கிறிஸ்துவில் நாம் வைக்கும் பொதுவான அர்ப்பணிப்பில் காணப்படுகிறது. "...எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது." (1யோ.1:3) பார்க்க: பிலி.2:1-2.

4. வெளிச்சத்தில் நடத்தல்

நமது ஐக்கியம், ஒருவரோடொருவர் வெளிப்படையாகவும், நம்பிக்கைக்குரியவராகவும், உண்மையுள்ளவராகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தை சார்ந்துள்ளது. சில வேளைகளில் அது கீழ் குறிப்பிட்டுள்ளபடி பொருள்படும்:

a). நம்முடைய சொந்த பாவங்களை பிறரிடம் அறிக்கை செய்வது, அல்லது பிறருடைய பாவங்களை அன்போடு மூடுதல். "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோ.1:6-7) பார்க்க: மத்.18:15.

b). வெளிச்சத்துக்கு கீழ்ப்படிதல்-தேவனால் கொடுக்கப்பட்ட பொதுவானதும், குறிப்பிட்டதுமான கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல்.

c). உண்மையல்லாத, மாய்மாலமான எந்த ஒரு நடிப்பையும் நீக்கி விடுதல். "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்." (1 பேதுரு1:22).

5. பிறருடைய நலனில் மெய்யான அக்கரை

சுய ஆதாயத்துக்குரிய எவ்வித மறைவான நோக்கங்களும் இருத்தலாகாது நம்முடைய விருப்பம் ஈகையாக இருக்க வேண்டும், பெற்றுக் கொள்வது அல்ல. "ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்". அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக." (பிலி.2: 3-4).

6. ஒருவருக்காக தனது ஜீவனையும் கொடுக்கும் விருப்பம்

"நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (யோ.15:12-13) வாழ்வு, சரீரப்பிரகாரமான வாழ்க்கையைக் காட்டிலும் அதிக காரியங்களை உள்ளடக்கியுள்ளது. அது நமது பொருளுடைமைகள் நமது தனிப்பட்ட விருப்பங்கள், மற்றும் முன்னுரிமைகளையும் உள்ளடக்கியுள்ளது. (யாக்.2:15-16). ஒருவருடைய சுயத்தை வெளிப்படையாக பிறருடன் பகிர்ந்து கொள்ளும் விருப்பம் என்றும் பொருள்படும். மக்கள் எந்த அளவுக்கு தங்களை வெளிப்படுத்த ஆயத்தமாய் இருக்கிறார்களோ,அந்த அளவுக்குத்தான் அவர்களை புரிந்து கொள்ள முடியும்.

C. சபையில் ஐக்கியம் என்பது :

1. எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளுதல்

அப். 4:32-ல் அவர்கள் ஐக்கியத்தின் முன்னேற்றத்தில் மூன்று நிலைகள் உள்ளது- முதலாவது, அவர் ஒரே இருதயமுடையவர்களாய் (ஆவி) இருந்தார்கள், இரண்டாவது, ஒரே ஆத்துமா (மனம்) உடையவர்களாய் இருந்தவர்கள், மூன்றாவதாக எல்லாவற்றையும் பொதுவாய் அனுபவிக்கும் சரீரப்பிரகாரமான வெளிப்பாடு தொடர்ந்தது. "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள் காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" (அப். 2:44-45).

2. அவர்களின் ஜீவனை கொடுத்தல்

"கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துக்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள், அவர்களைப்பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறீர்கள்." (ரோமர் 16:3-4).

3. **சகோதருக்கு சேவை செய்யும் ஆர்வம்**
"...ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்களென்றும், பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்களென்றும் அறிந்திருக்கிறீர்களே." (1 கொரி.16:15).

4. **பிறருடைய தேவைகளை சந்திக்கும் எண்ணத்தோடு இருத்தல்**
"சமநிலைப்பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு, இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக" (2 கொரி.8:15) பார்க்க: 1கொரி.16:17.

5. **பாடுகளில் பங்கெடுத்தல்**
"ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது." (பிலி.4:14).

6. **தியாகப்பூர்வமான ஈகை**
"அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர் களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள் என்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்." (2கொரி. 8:2-3)

7. **உபசரித்தல்**
"பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய். (யோ.5) பார்க்க எபி. 13:2.

8. **ஒருவரையொருவர் தேற்றி கட்டுதல்**
"நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருந்தோம்." (1தெச.2:8)பார்க்க: 2 தீமோ.3:10-14.

D. ஐக்கியத்தின் விளைவுகள்

ஆதி சபையிலிருந்த ஐக்கியத்தின் பின்விளைவுகள்:

- ⇨ தேவனுக்கு பயப்படும் பயம் (அப்.2:43).
- ⇨ மகிழ்ச்சி (அப்.2:46).
- ⇨ எல்லா ஜனங்களிடத்திலும் தயவு (அப்.2:47).
- ⇨ புதிய விசுவாசிகள் சேர்க்கை (அப்.2:47).
- ⇨ எல்லா தேவைகளும் சந்திக்கப்படுதல் (பிலி.4:19)
- ⇨ தலைமைத்துவத்தின் உருவாக்கம் (1கொரி.16:15-16)

எனது தீர்மானம்

நான் இந்த பாடத்தின் மூலம், பிற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியம் கொள்ளுவதின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்கிறேன். விசுவாசிகளின் கூட்டத்தில் நானும் ஓர் அங்கமாகி அவர்களுக்கு என்று பற்றுறுதி, எனது அன்பு, எனது சேவை போன்றவற்றை கொடுப்பதற்கு என்னை அர்ப்பணிக்கிறேன்.

அத்தியாயம் 15 ஈகை குணம்

"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது." (சங்.19: 1-2) வாசிக்கவும்: வசனங்கள் 3-4.

இந்த சங்கீதத்திலிருந்து தேவனுடைய சிருஷ்டிப்பைக் (வானங்களும், பூமியும்) குறித்து நாம் கற்றுக் கொள்ளும் காரியங்கள்:

1). தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது.
2). அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.
3). வார்த்தைகளைப் பொழிகிறது.
4). அறிவைத் தெரிவிக்கிறது

தேவனுடைய சிருஷ்டிப்பை நாம் கவனமாக ஆராய்ந்தால், அவைகளிலிருந்து நாம் அநேக காரியங்களை கற்றுக்கொள்ள முடியும். இப்பிரபஞ்சத்தின் ஒழுங்கற்ற நிலையிலிருந்து ஒழுங்கான நிலைக்கு கொண்டுவர இயற்பியல் விதிகள் இருப்பது போல, தேவனும் வாழ்வை ஆளும் ஆவிக்குரிய விதிகளை தந்திருக்கிறார். அவைகளில் ஒன்று (ஈகை குணம் என்னும் விதியாகும்.) இது நமக்கு, "பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" (2 கொரி.9:6) என்பதை கற்றுத் தருகிறது.

A. பங்களாத்துவம்

தேவனுடன் பங்காளர்களாக (1 கொரி.3:9, 2 கொரி.5:20, 6:10), நாம் இருப்பதால் பொறுப்பு எங்கே இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

1. தேவனுக்கு சொந்தமானது

'பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிமகனும் கர்த்தருடையது." (சங்.24:1) பார்க்க: சங்.89:11, யோபு 41:11, 1 நாளா.29:10-14. நாம் சொந்தக்காரர்கள் அல்ல, ஆனால் கவனித்துக் கொள்பவர்கள். எல்லாம் தேவனுக்கே சொந்தமானது. சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும், உயிருள்ளதோ உயிரற்றதோ-இவ்வாழ்வில் தனிப்பட்ட முறையில் நமக்கு சொந்தமான உடமைகள், தொழில், குடும்பங்கள், போன்ற உடல் சார்ந்த, உடல்சாராத அனைத்துமே தேவனுக்கே சொந்தம், இவை அனைத்தையும் நாம் அனுபவிப்பதற்கே தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். (1.தீமோ.6:17) ஆனால் அதே வேளையில், தேவனுக்கு இவைகளை குறித்து உயரிய பொறுப்பு இருக்கிறது என்ற நிச்சயத்தை நாம் பெற முடியும்.

2. உக்கிராணத்துவம் நம்முடையது

நாம் சொந்தக்காரர்கள் அல்ல, ஆனால் கவனித்துக் கொள்பவர்கள்.ஒரு உக்கிராணக்காரன் பிறருக்கு சொந்தமானதை நிர்வகித்து, கவனித்துக் கொள்கிறான். எல்லாமே தேவனுக்குச் சொந்தம், ஆனால் உக்கிராணக்காரர்களாக நாம் அவருக்காக அவற்றை நிர்வகிக்கிறோம், கவனித்துக் கொள்கிறோம். இந்த உக்கிராணத்துவத்தில் நாம் உண்மையுள்ளவர்களாக இருப்பது நம்முடைய கடமை பொறுப்பாயிருக்கிறது. அவர் நமக்கு கொடுத்திருக்கிற பொருட்களை நிர்வகிக்கிற, கவனித்துக் கொள்கிற இந்த விசேஷித்த பொறுப்பைக் குறித்து தேவன் நம்மிடத்தில் கணக்குக் கேட்கிறார். (வாசிக்க: மத்.2:14-30) தேவனுடைய சம்பத்துடன் நாம் அனுபவிக்கிற இந்த உரிமையாளர்-உக்கிராணக்காரர் உறவை நாம் புரிந்துக்கொள்ளும்போது, எல்லாவற்றையும் பிறருக்கு கொடுப்பது நமக்கு எளிதாகிறது.

தேவனுக்கு முன்பு, நமக்கு சொந்தமான ஒவ்வொன்றிலும் உக்கிராணத்துவம் அடங்கியிருக்கிறது.

a). **நமது வாழ்வு** (அப்.17:25, 2கொரி.6:19, கலா.2:20, யோபு 33:4)
b). **நமது நேரம்** (சங்.90:12, எபே.5:15, கொலோ.4:5)
c). **நமது தாலந்துகளும், திறமைகளும்** (1 பேதுரு 4:10, 1கொரி.12:4-7,11)
d). **நமது உடமைகள்** (மத்.6, 19:21, கொலோ3:1-2)
e). **நமது பணம்** (1 தீமோ.6:6-10, 17-19, மத்.6:24)
f). **சுவிசேஷத்தின் செய்தி** (1 கொரி.4:1, 9:16-17, தீமோ.6:20)

இருப்பினும், அநேக கிறிஸ்தவர்கள், எவ்வளவு தான் இருந்தாலும், தேவனுக்கு கொடுப்பதற்கு (தசம பாகம், காணிக்கைகள்) இன்னும் தயங்குகிறார்கள். ஆனால் உண்மையான உக்கிராணத்துவத்தின் பூரண ஆசீர்வாதங்களை ஒரு விசுவாசி பெற்றுக் கொள்ள வழி வகுக்கும் செயல் பூரண ஒப்புக்கொடுத்தலே - அதாவது ஒருவருடைய முழு வாழ்க்கை, உடமைகள், திட்டங்கள் அனைத்தையும் தேவனுடைய சித்தத்துக்கும், நோக்கத்துக்கும் எவ்வித நிபந்தனையுமின்றி

ஒப்புக்கொடுத்தல் என்பதாகும். நாம் நம்மையே கொடுக்கும்போது மாத்திரமே, தேவன் நமக்கு கொடுத்திருக்கிற உடமைகளின் சிலவற்றை (அல்லது பணம்) பிறருக்கு கொடுப்பதின் அர்த்தத்தை கற்றுக் கொள்கிறோம்

B. ஆதிகால சபையின் ஈகை

"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்... ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை, சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது" (அப்.2:44-45, 4:32) ஆதி கிறிஸ்தவர்களின் இந்த மனப்பான்மையே பின்னர் வந்த ஈகை குணத்தின் வெளிப்பாட்டிற்கு அடித்தளமாய் அமைந்தது. கிறிஸ்தவர்கள் பெருக, பெருக, வித்தியாசமான முறையிலான கொடுத்தலும் தோன்றின. ஆனால் அவர்களுடைய எல்லா ஈகையும் உக்கிராணத்துவத்தைக் குறித்த அவர்களது புரிந்துக்கொள்ளுதலை வெளிப்படுத்தியது-அதாவது, முடிவில் எல்லாமே தேவனுக்கே சொந்தம் என்பதே.

1. **சபை தேவையில் உள்ளவர்களை தாங்கியது**
   ஆதிகால சபையில், விசேஷித்த மனிதர்கள் "உதவிக்காரர்களாக" (விசாரிப்புகாரர்) தெரிந்தெடுக்கப்பட்டார்கள் - அவர்கள் தேவையில் இருந்தவர்களுக்கும், விதவைகளுக்கும் காணிக்கைகளையும் நன்கொடைகளையும் பகிர்ந்து கொடுக்கும் உதவிக்காரராய் இருந்தார்கள். (பார்க்க: அப். 6:1-3) இம்மனிதர்கள், எங்கெல்லாம் உண்மையான தேவைகள் காணப்பட்டதோ, அங்கெல்லாம் கொடுப்பதை ஒழுங்குபடுத்துவதை ஊழியமாக கொண்டிருந்தார்கள்.

2. **சபைகள் ஒன்றுக்கொன்று தியாகப்பூர்வமாய் கொடுத்தன**
   எருசலேமிலுள்ள யூத கிறிஸ்தவர்கள் பஞ்சத்தால் வாடியபோது, ஏழ்மையும், பாடுகளும் நிறைந்த யூதரல்லாத சபைகள் அவைகளுக்கு உதவின. "அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடைவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்." (2கொரி. 8:2-3) பார்க்க: வசனங்கள் 1,4.

3. **ஊழிய யாத்திரை செலவுகளை சபை தாங்கியது**
   அப்போஸ்தலனாகிய பவுல், புதிய சபைகளை ஸ்தாபிக்க ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணம் செய்தார். சில வேளைகளில் அவர், தன்னுடைய கரத்தினாலே வேலை செய்து தன்னுடைய தேவைகளை சந்தித்தார். (அப்.18:3, 2தெச.3:7-9) பிற வேளைகளில் பிலிப்பிய சபை தேவ கட்டளைபடி, பவுலுடைய யாத்திரை செலவுகளை சந்தித்ததின் மூலம் கொடுத்தலின் உண்மை குணத்தை காண்பித்தது. "எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது, உங்களால் அனுப்பபட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக....வரப்பற்றிக் கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்." (பிலி.4:18). வாசிக்க: வசனங்கள் 15-17.

4. **கிறிஸ்தவர்கள் கொடுப்பதற்கேதுவாக வேலை செய்தார்கள்**
   "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன்." (எபே.4:28).

5. **கொடுத்தல் அவர்களுடைய அன்பிற்கு அத்தாட்சியாய் இருந்தது**
   ....இக்காலத்திலே செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக....ஆதலால் உங்கள் அன்பை (கொடுத்தலின் மூலம்)...திருஷ்டாந்தப்படுத்துங்கள்" (2கொரி.8:14,24) பார்க்க: வசனங்கள் 7-15, 1கொரி. 16:12, 1யோ.3:17-18.

C. கொடுத்தலைக் குறித்து தேவனுடைய நியமங்கள்

1கொரி.10:11-ல் நாம் இஸ்ரவேலருடைய உதாரணத்திலிருந்து கற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். தேவன் அவர்களுக்கு கொடுத்த நியமங்களை நாம் செயல்படுத்த வேண்டியுள்ளது. அதே வேளையில், வனாந்தரத்தில் இஸ்ரவேல் தலைவர்களும் செய்த தவறுகளை நாம் தவிர்க்க வேண்டும். கொடுத்தலைக் குறித்து நமக்கு உதவக் கூடிய அநேக நல்ல வழிமுறைகளை நாம் பார்க்கிறோம்.

1. **நாம் 'சதவிகிதத்துடன்'' ஆரம்பிக்க தேவன் நம்மை எதிர்பார்க்கிறார்**
   ''என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் உங்கள் அனைத்து சம்பாத்தியத்திலும் விளைச்சலிலும் 10 அல்லது பத்தில் ஒரு பகுதி) பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள், அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.'' (மல்.3:10).

2. **நாம் ஒழுங்காகவும், கிரமமாகவும் கொடுக்க வேண்டும்**
   ''அப்பொழுது எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னான். அவர்கள் அவைகளை ஆயத்தப்படுத்தின பின்பு, அவைகளிலே காணிக்கைகளையும், தசம பாகத்தையும், பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்துவைத்தார்கள்...'' (2 நாளா.31:11-12).

3. **நாம் முதன்மையானதும், மிகவும் சிறந்தது மானதை தேவனுக்கு கொடுக்க வேண்டும்.**
   ''உலக பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும், உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்.'' (நீதி.3:9-10).

எனது தீர்மானம்

நான் இந்த பாடத்தின் மூலம், பிறருக்கு கொடுக்கும் இருதயம் கொண்ட குணத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து உணருகிறேன். இன்று நான் தசமபாகம் (வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை என்னுடைய சபையில் நடக்கும் தேவ பணிக்கு, இன்னும் காணிக்கைகளை (எனது சபைக்கும், தேவ பணி செய்வோருக்கும்) கொடுக்க ஆரம்பிக்கும் வாழ்வு வாழ என்னை அர்ப்பணிக்கிறேன். மேலும் நான், பிறரும் இவற்றை கடைபிடிக்க அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்களுக்கு கற்றுக்கொடுப்பேன்.

அத்தியாயம் 16 இராஜ்யத்தின் வாழ்வு

A. அதிகார மாற்றம்

சாத்தானுடைய ஆதிக்கத்திலிருந்து (ஆளுகை அல்லது தலைமைத்துவம்) நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். நாம் இப்பொழுது முழுவதும் இயேசு கிறிஸ்துவினுடைய புதிய வாழ்வு ஆரம்பிக்கும் வேளையில், அவர் தேவனுடைய இராஜ்யத்தின் வாழ்வை அனுபவிப்பதற்கு இருக்கும் ஒரே வழி (இயேசுவுடன் சரியான உறவு) வைத்துக் கொள்வது என்பதை விரைவில் அறிந்துகொள்கிறான். (எபே.1:17, பிலி.3:10) தேவனோடுள்ள நமது புதிய வாழ்வின் ஆரம்பத்தில் இந்த உறவு இரண்டு வடிவங்களை எடுக்கிறது.

1. **இரட்சகர்**
   இதுவே இயேசுவோடு நாம் எப்பொழுதும் வைத்துக்கொள்ளக்கூடிய முதல் உறவு நமக்காக மரித்த, சாத்தானுடைய இராஜ்யத்திலிருந்து நம்மை மீட்ட இயேசுவே இரட்சகர் என்ற வெளிப்பாடு முதலில் நமக்கு கிடைக்காத வரையில், நாம் தேவனை தகப்பனாகவோ, நண்பராகவோ அறிந்து கொள்ள முடியாது.

இயேசு நம்மை:

a). **தேவனுடைய நியாயத்தீர்ப்பு** (1 தெச.1:10, 5:9, ரோ.5:9)

b). **சாத்தானுடைய வல்லமை** (அப்.26:18, கொலோ.1:13, எபி-2:14, 1யோ.1:18)

c). **நம்முடைய சுயம்** (பிலி.3:19, 2கொரி.5:25, தீத்து 3:3-6, 1பேதுரு1:18) ஆகியவற்றிலிருந்து விடுவித்திருக்கிறார்.

"அவர் குமாரனாயிருந்தும்...தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி " (எபி.5:8-9) பார்க்க: எபி.2:10, 2தீமோ.1:10.

2. ஆண்டவர்

இயேசுவை இரட்சகரென்று அறிந்துகொள்வது நம்மை தேவனுடைய இராஜ்யத்தில் கொண்டு வருகிறது. ஆனால் தேவனோடு உள்ள நமது உறவு முடியும் இடம் அது அல்ல. நாம் தேவனுடைய இராஜ்யத்துக்குள் வந்தவுடனே, அவரோடு உள்ள உறவில் ஆச்சயரிமானபல மாற்றங்கள் நிகழ்கின்றன. நாம் இப்பொழுது அவரை இரட்சகராக மாத்திரமல்ல, ஆனால் ஆண்டவராக, அதுவும்-நம்முடைய ஆண்டவராக அறிகிறோம்! அவருடைய இராஜ்யத்தில் அவரே ராஜா. (கொலோ.2:6) "ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லகூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்." (1கொரி.12:3) பார்க்க யோ.13:13, ரோ.1:4, 1கொரி.8:6, 1கொரி.4:5 நாம் ஒளியின் இராஜ்யத்தில் பிரவேசிக்கும்பொழுது, நாம் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கமாகிய-ஆண்டவரோடு கொள்ளும் ஒரு அன்பான உறவை அனுபவிக்க முடிகிறது. ஆகவேதான், இயேசு நமது வாழ்வில் கொண்டுவரும் தேவனுடைய ஆளுகையை அறிந்து கொள்கிறோம். (பார்க்க: கொலோ.2:9-10, 1கொரி.8:6).

B. மாதிரி குடிமகன்

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." (பிலி-2:5) இயேசு, இராஜ்யத்தின் உண்மை குடிமகனாய் இருப்பதற்கு அவரே எடுத்துக்காட்டு. "நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான். ஆண்டவரும் போதகராகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்." (யோ.13:13-15). வாசிக்க: யோ. 13:15-17, மத்.20. 26-28, லூக்கா 22:27. தேவனுடைய இராஜ்யத்தின் அங்கத்தினர்களாக, நாம் அவருடன் எஜமானர்-அடிமை என்ற உறவுக்குள் வருகிறோம். (மத்.6:24)

இயேசு அவருடைய பிதாவின் சித்தத்தை செய்ய வந்தார். (எபி.10:5-9). அவருடைய அனுதின வாழ்க்கையில் இராஜ்யத்தின் வாழ்க்கை முறையாகிய தேவனை பிரியப்படுத்தும் வாழ்வை வெளிகாட்டினார். (எபே.5:8-10). அவருக்கு இருந்ததுபோலவே, இவ்விதமான அடிமையின் இருதயம் நமக்கும் இருக்க வேண்டும். அநேக கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட, அடிமையாயிருப்பதின் தத்துவத்தை விரும்புவதில்லை. ஏனெனில் அது ஒருவரை மற்றொருவரைவிட தாழ்மையானவர் ஆக்குவதுபோல காணப்படுகிறது.

வேதாகமத்தில், முரண்பாடாய் தோன்றுகிற நான்கு காரியங்களை நாம் பார்க்கிறோம்.

1. அடிமைத்தனத்தில் விடுதலை இருக்கிறது.

"இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்" (ரோ.6:22) வாசிக்க: ரோ.6: 6-28, ரோ.12:1, 1கொரி.7:22, 2கொரி.3:17, எபே.6:6-7, 1பேதுரு 2:16.

2. அடிமையாயிருப்பதில் மேன்மை இருக்கிறது.

"உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." (மத்.23: 11-12) பார்க்க: மத்.20: 26-27, மாற்கு 9:35, 10:43, யோ.12:26.

3. தாழ்மையில் உயர்வு இருக்கிறது.

"ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்." (மத்.18:4). பார்க்க: லூக்கா18:14, நீதி.29:23, யாக்.4:10, 1பேதுரு 5:5-6, மத். 19:30.

4. ஒப்புக்கொடுத்தலில் அதிகாரம் இருக்கிறது

இயேசுவினிடத்தில் வந்த ரோம நூற்றுக்கு அதிபதி (நூறு போர் சேவகர்களுக்கு தலைவன்) இந்த தத்துவத்தை புரிந்திருந்தான். "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு, நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய் என்றால் செய்கிறான்." (லூ.7:7-8) நூற்றுக்கு அதிபதி அதிகாரத்திற்கு கீழிருந்தபடியால் பிறர்மீது அதிகாரம் செலுத்த அவனால் முடிந்தது. அதே வேளையில், இயேசுவினுடைய அதிகாரத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கவும் ஆயத்தமாய் இருந்தான். வாசிக்க: லூக்கா 7:1-10, யாக்.4:7.

தேவனுடைய இராஜ்யத்தின் வாழ்க்கைமுறை என்பது தேவனுக்கு ஒப்புக்கொடுத்தலும், தேவனுக்கு கீழ்ப்படிதலும் ஆகும். (பார்க்க: மத்.12:50, எபே.6:6, எபி.13:21, 1யோ.2:17, 1தெச.4:1). நாம் நம்மை தேவனுடைய சித்தத்திற்கு, பயம் அல்லது கடமையினிமித்தம் தயக்கத்துடன் ஒப்புக்கொடாமல்,

a). தேவன் நமக்கு செய்த எல்லாவற்றிற்காகவும் (ரோ.12:1, எபே.4:1, தீத்து 3:4-7)

b). அப்படி செய்வதால் தேவனை பிரியப்படுத்துவதற்காகவும் (சங்.40:8)

c). அன்பின் நிமித்தமாகவும் (யோ.14:15, 1யோ.5:3) ஒப்புக்கொடுக்கிறோம்.

C. ராஜ்யத்தின் கனி

"மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று, தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள். (1தெச.2:11-12) பார்க்க: 2தெச.1:5.

மத்.-21:43-ல் இயேசு, "தேவனுடைய இராஜ்யம் அதற்கேற்ற கனிகொடுப்பவர்களுக்கே சொந்தம்" என்று கூறினார். இன்னும் அநேக வேதபகுதிகளில் இந்த இராஜ்யத்தின் கனியைக் குறித்து விவரிக்கப்பட்டிருக்கிறது.

- அன்பு, சந்தோஷம், சமாதானம் (கலா.5:22,23).
- நற்குணம், நீதி, உண்மை (எபே.5:9, யாக்.3:13-17).
- நீதி, சமாதானம், சந்தோஷம், (ரோமர் 14:17, எபி.12:11).

நாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டபடியால் அவருடைய இராஜ்யத்திற்காகவும், அதன் வாழ்க்கை முறைக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். இராஜ்யத்தின் கனி என்பது, பரிசுத்த ஆவி நம்மிலே கிரியை செய்ததன் விளைவாக ஏற்பட்ட மறுபிறப்பு என்னும் அதிசயத்தின் இயற்கையான வெளிப்பாட்டின் தன்மைகளாகும். (பார்க்க: கலா.5: 22-23) தேவனுடைய இராஜ்யத்தின் குடிமக்களாய் இருக்கும் நம்முடைய பொறுப்பு, நாம் இப்பொழுது இருக்கும் வண்ணமாக வாழ்வதே ஆகும். (1பேதுரு 2:11) "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளவும்.... உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். (கொலோ.1:10,11) பார்க்க: கொலோ.2:6, எபே.4:1, 6:8-10.

அத்தியாயம் 17 ஆராதனை

A. "தேவனை ஸ்தோத்தரித்தல்"

"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி." (சங். 103:1). நம்முடைய சிருஷ்டிகரை ஸ்தோத்தரிக்கும் ஆற்றல் நமக்கு இருக்கிறது என்பதை சிந்திக்கும் போதே, ஒருவித பய உணர்ச்சி நமக்குள் உண்டாகிறது, எனினும், வேதாகம் மீண்டும் மீண்டும் அப்படிச் செய்யும்படி நம்மை வற்புறுத்துகிறது. நாம் நம்முடைய துதியின் மூலமும், ஆராதனை மூலமும் அவரை ஸ்தோத்தரிக்கிறோம். பார்க்க: சங்.34:1-3.

B. துதி

துதி என்பது போற்றுதலையும் பாராட்டுதலையும் தெரிவித்தல் ஆகும். நாம் ஒருவரை புகழும்போது, அவர் எவ்வளவு அதிசயமானவர் என்று நினைக்கிறோம் என்றோ, அல்லது அவருடைய சிறப்புத் திறமைகள் எவ்வளவு உயர்ந்தது என்றோ அவரிடம் நாம் கூறுகிறோம். துதி தேவனுடைய குணாதிசயங்களையும், வல்லமையையும் நாம் ஒப்புக்கொள்வதுடன் தொடர்புடையது. "ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும் என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்." (சங்.63:3-4).

1. நாம் ஏன் தேவனை துதிக்க வேண்டும்?

a. ஏனென்றால், அவர் யாராய் இருக்கிறார் என்பதற்காக. "தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள், நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள் தேவன் பூமியனைத்திற்கும் ராஜா, கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்" சங்.47:6-7.

b. ஏனென்றால், அவர் என்ன செய்கிறார் என்பதற்காக, "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார், கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது." (சங்.103:1-5).

2. யார் தேவனை துதிக்க வேண்டும்

a. தேவனை தேடுகிறவர்கள். "....கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள்." (சங்.22:26).

b. ஜீவனுள்ள அனைவரும் சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா (சங். 150:6).

3. நாம் எங்கே தேவனை துதிக்க வேண்டும்?

a. தேவ ஜனங்கள் சூழ நின்று உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்து பாடுவேன் என்றும்... (இயேசு) சொல்லியிருக்கிறார். (எபி. 2:12,13).

b. ஜாதிகளுக்குள்ளே ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன், ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன் (சங். 57:9).

c. நம்முடைய படுக்கையில் என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து, ..என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்" (சங். 63:4-6)

C. ஆராதனை

துதி என்பது போற்றுதலையும், பாராட்டுதலையும் தெரிவிப்பதைப் போல, ஆராதனை அன்பையும், தொழுது கொள்ளுதலையும் தெரிவிப்பதாகும். நாம் ஒருவர் மீது அன்பு கூறாமலேயே அவரைக்

குறித்து வியந்து, அவர் செய்கிறதை பாராட்ட முடியும். இதைப் போலவே, ஆராதனை, தேவனுக்காக நாம் வைத்திருக்கிற அன்போடு தொடர்புடையது. நமது முழு இருதயத்தையும் வாழ்வையும் அவருக்கு கொடுப்பதன் மூலமே இதனை நாம் வெளிப்படுத்த முடியும். முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப் பலத்தோடும் அவரிடத்தில் அன்பு கூறுகிறதுமே சர்வாங்கதகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது என்றான் (மாற்கு 12:33). இஸ்ரவேல் மக்களுடைய இருதயம் அவருக்குத் தூரமாய் இருந்ததினாலே, பிரியமற்றதாக இருந்தது. (ஏசா 1:10-15, 29:13) இன்றும் கூட, இருதயத்திலிருந்து வருகிற உண்மையும் உத்தமமுமான ஆராதனையிலேயே தேவன் பிரியமாயிருக்கிறார். உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார். (யோ. 4:23-24) வாசிக்க : வசனங்கள் 4-26.

1. ஆவியில்

நம்முடைய ஆவி உள்ளான மனிதன் என்று அழைக்கப்படுகிறது (எபே. 3:16). தேவனுடைய பரிசுத்த ஆவியின் தூண்டுதலின் பேரில் நம்முடைய உள்ளான மனிதன் அன்பையும் தொழுது கொள்ளுதலையும் வெளிப்படுத்துகிற பொழுது, ஆராதனை இடம் பெறுகிறது. இது பேசப்படும் வார்த்தைகளின் மூலமாகவோ, அன்போடு தேவனை பாடும் பாடல்கள் மூலமாகவோ அல்லது அமைதியான பணிந்து கொள்ளுதலின் மூலமாகவோ நடைபெற முடியும். உண்மையான ஆராதனைக்கு நம்முடைய ஆவியில் பரிசுத்த ஆவியின் செயல்பாடு தேவை (பிலி. 3:3) ஆகவே, இயேசு கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மூலம் ஆவியில் மறுபடியும். பிறந்தவர்கள் மாத்திரமே தேவனை உண்மையாய் ஆராதிக்க முடியும் (யோ. 3:5-8).

2. உண்மையில்

நாம் ஆராதிக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறபடி தேவனை நாம் ஆராதிப்பதே, உண்மையில் அவரை ஆராதிப்பதாகும். நாதாபும் அபியூவும் (பிரதான ஆசாரியனுடைய மகன்கள்) தேவனுக்கு முன்பாக அன்னிய அக்கினியைக் கொண்டு வந்ததால் மரித்தார்கள். இந்த அறிவுத் திறனுள்ள எச்சரிக்கை, ஆசாரிய ஊழியத்திற்குரிய தேவனுடைய திட்டத்தை(மோசேயுடைய ஆசரிப்புக் கூடாரம்) குறித்து படிப்பதன் அவசியத்தை விவரிக்கிறது. ஆராதனைக்கு முன்பு, அங்கு பலி, சுத்திகரிப்பு, அபிஷேகம், ஆடை அணியும் விதங்கள் இருந்தது. (யாத். 30:17-38) வெளி. 1:5,6ல் நீங்கள் தேவனுடைய ஆசாரியர்கள் ஆவதற்கு முன்பு அவருடைய சொந்த இரத்தத்தால், நம்முடைய பாவங்களை கழுவப்பட்டோம் என்பதாக வாசிக்கிறோம். தேவனை ஆராதிப்பதற்கு பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பு, ஆசாரியர்கள் அநேக ஆயத்தங்களை செய்ய வேண்டியது இருந்தது. விவரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை தவிர்ப்பது, அழிவுக்கு எத்தனமானது. நாம் உண்மையில் தொழுது கொள்ள வேண்டும் வேதாகம வழியில்.

D. வேதாகமத்தில் துதியையும் ஆராதனையையும் வெளிப்படுத்தும் விதங்கள்

1. வாயால்
   a. பாடுதல் (சங். 9:2,11).
   b. துதித்தல் (சங். 103:1).
2. கரங்களால்
   a. உயர்த்துதல் (சங். 63:4).
   b. கரங்களை தட்டுதல் (சங. 47:1).
   c. இசைக்கருவிகளை மீட்டுதல் (சங். 150)
3. சரீரத்தால்
   a. எழுந்து நிற்குதல் (சங். 134:1).
   b. முழங்காற்படியிடுதல், பணிந்து கொள்ளுதல் (சங். 95:6).
   c. நடனமாடுதல், ஆனந்தத்தால் துள்ளி குதித்தல் (சங். 30:11).

கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? ... கர்த்தரைப் பாடுங்கள் அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்... (யாத். 15:11,21) ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகருமில்லை. தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர். நீர் ஒருவரே தேவன்... என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன். (சங். 86:8,10,12).

எனது தீர்மானம்

இவ்வாழ்விலும் நித்தியத்திலும் நான் எப்பொழுதும் செய்யும் மிகப்பெரிய காரியம் தேவனை ஆராதிப்பதேயாகும். நான் உண்மையிலே ஆராதிக்கிறவனாகவும், இதை என்னுடைய வாழ்வின் உயரிய இலட்சியமாக மாற்றுவேன் என்றும் தீர்மானிக்கிறேன். இந்த முக்கியமான வாழ்வின் வழியை பிறருக்கும் கற்றுக் கொடுப்பேன்.

அத்தியாயம் 18 ஜெபம்

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச் செய்வேன்... என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன். (சங். 91:15-16) நாம் தேவனோடு ஜெபத்தில் செலவழிக்கும் நேரம், இந்த உலகம் எப்பொழுதுமே அறிந்திராத ஆற்றல் வாய்ந்த சரித்திரத்தை மாற்றக்கூடிய வல்லமையை வெளிப்படுத்த முடியும். வேதாகமம், ஜெபத்தைக் குறித்து அநேக, பலதரப்பட்ட செயல்பாடுகளை விவரிக்கிறது. ஆனால் இந்த பாடத்தில், முதலில் தனிநபர் ஜெபத்தைக் குறித்து பார்க்கப் போகிறோம். குழுவாக சேர்ந்து ஜெபிக்கும் ஜெபத்தின் வலிமை, நாம் தேவனோடு தனிப்பட்ட விதத்தில் செலவழிக்கும் நேரத்தைப் பொறுத்தே அமைகிறது.

A. இரகசிய இடம்

நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார் (மத். 6:6) தேவனோடு நெருங்கிய முறையில் ஜெபிக்க, நாம் தேவனால் மாத்திரமே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இவ்வகையான இரகசிய ஜெபம் தரும் அனுமானமும், உறுதியும்

- சரியான நோக்கம் (மத். 6:5).
- தேவனை தகப்பனாக கொண்டிருக்கும் சரியான உறவு (லூ 11:11-13).
- ஆண்டவரில் உண்மையான நம்பிக்கை (சங். 55:16-17).
- மாய்மாலம் இல்லாமை (மாற்கு 7:6-7)

தேவனுடன் உள்ள உரையாடலில் நாம் வெளிப்படுத்துகிற நம்முடைய உணர்வுகளும், பாரங்களும் ஸ்தோத்தரிப்பதாக (சங். 34:1-4), அறிக்கை செய்வதாக (1 யோ 1:9), வேண்டுகோளாக (மத். 7:7) அல்லது நன்றி செலுத்துவதாக (எபே. 5:4-20) அமையலாம்.

B. ஜெபத்தோடு தொடர்புடைய ஐந்து கட்டளைகள்

1. எப்பொழுதும் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷி குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார் (லூ. 21:36) பார்க்க மாற்கு 13:35-37.

2. சோதனையில் விழாதிருக்க ஜெபியுங்கள்

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். (மத். 26:41).

3. வேலையாட்களுக்கு ஜெபியுங்கள்

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் (லூ. 10:2).

4. அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக ஜெபியுங்கள்

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும், நாம் எல்லாம் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும் (1 தீமோ 2:1-2).

5. உங்கள் சத்துருக்களுக்காக ஜெபியுங்கள்

உங்களைச் சபிக்கிரவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள் (லூ. 6:28).

C. எப்பொழுது ஜெபிக்க வேண்டும்?

ஜெபித்த அநேக மக்களைக் குறித்து அநேக உதாரணங்களை வேதாகமம் நமக்குத் தருகிறது (1 நாளா. 4:10). அநேக விசுவாச வீரர்கள் ஜெபத்திற்காகவே ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை வைத்திருந்தார்கள் என்றும், பெரும்பாலும் காலை, மதியம், சாயங்காலம் ஆகிய மூன்று வேளைகளிலும் ஜெபித்தார்கள் என்றும் அறிய முடிகிறது. நானே தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். கர்த்தர் என்னை இரட்சிப்பார். அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன். அவர் என் சத்தத்தைக் கேட்பார். (சங். 55:16-17) பார்க்க தானி. 6-10. அர்த்தமற்ற மதச் சடங்குகளைத் தவிர்த்து, முழு இருதயத்தோடு, ஒழுங்காக ஜெபித்ததற்கு உதாரணம், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிலேயே காண முடிகிறது.

- # அதிகாலையில் (மாற்கு 1:35).
- # இரவு முழுவதும் (லூ. 6:12).
- # ஒவ்வொரு உணவுக்கு முன்பும் (மாற்கு 6:41).

D. எதற்காக ஜெபிக்க வேண்டும்?

1. நமக்காக

யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி : தேவரீர் என்னை ஆசீர்வதித்து,என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்தது, தீங்கு என்னை துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக் கொண்டான், அவன் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார்.(1 நாளா 4:10)

2. ஒருவருக்காக ஒருவர்

..உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்... (யாக். 5:16).

3. கிறிஸ்துவின் ஊழியங்களுக்காக

கடைசியாக சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கு, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்... (2 தெச 3:1,2).

4. வியாதியஸ்தருக்காகவும், மனநிலை பாதிக்கப்பட்டவருக்காகவும்

உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்.... உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே

அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு ஒருருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள் (யாக். 5:13-16).

5. பாவத்தில் சிக்கியவர்களுக்காக

மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக் கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார். (1 யோ. 5:16).

E. ஜெபத்தில் உதவி

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோ. 8:26) நமக்கு கற்பிப்பதும் (லூ. 12:12), ஜெபத்தில் வழி நடத்துவதும் (ரோ. 8:27), நம்முடைய விசுவாசத்தில் நமக்கு உதவி செய்வதும் (எபே. 3:16-17), பரிசுத்த ஆவியின் நோக்கத்தில் ஒரு பகுதியாகும். சில வேளைகளில், பரிசுத்த ஆவியானவர், தனிப்பட்ட விதத்தில் ஒரு விசுவாசியை அபிஷேகத்தால் நிறைத்து ஜெபிக்க வைப்பது, பரிசுத்த ஆவிக்குள் ஜெபிப்பது என்று அழைக்கப்படுகிறது (யூதா 20, எபே. 6:18). ஜெபத்தில் நமக்கு உதவுவதற்கு, பரிசுத்த ஆவியானவர் விசேஷித்த வரங்களை கொடுத்திருக்கிறார். அந்நிய பாஷைகளை பேசும் வரம் - ஜெபத்தில் தேவனோடு வேறொரு மொழியில் பேசுவது. பார்க்க 1 கொரி. 12:4-11. செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்.. நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்'' (நீதி. 15:8,29).

F. சக மனிதன்

இருவர் ஒருமித்து ஜெபிப்பது சில அரிதான நன்மைகளை தருகிறது. ''அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத். 18:19).

G. சபையாக ஜெபித்தல்

இருவர் சேர்ந்து ஜெபிப்பதே மிகவும் வல்லமையுடையதாக இருந்தால், தேவ ஜனமாகிய முழு சபை ஜெபிப்பது எவ்வளவுக்கதிகம்? பார்க்க. அப். 4:24. இன்று தேவன் அவருடைய ஜனங்களை ஜெபிக்க அழைக்கிறார். ஜெபத்தின் மூலம் தனி நபர்களை, குடும்பங்களை, சமுதாயங்களை, நகரங்களை, தேசங்களை மாற்றுவதே சபையின் ஊழியப் பணியாகும்!

எனது தீர்மானம்

இந்த பாடத்தின் மூலம் ஜெபத்திற்கான அற்புதமான வாய்ப்புகளையும், அதாவது, தேவனோடுள்ள என் உறவில் மாத்திரமல்ல, தொடரும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விளைவுகளையும் நான் உணருகிறேன். என் வாழ்வில் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க என்னை நானே அர்ப்பணிக்கிறேன்.

அத்தியாயம் 19 பரலோகம்

''....தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய், ...ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு'' (பிரசங்கி 5:2,7)

பரலோகம் என்பது என்ன?

1. பரலோகம் தேவன் வாசம் செய்யும் இடம்

''தேவன் பரலோகத்தின் உன்னதங்களிலிருக்கிறார் அல்லவோ? நட்சத்திரங்களின் உயரத்தைப் பாரும், அவைகள் எத்தனை உயரமாயிருக்கிறது.'' (யோபு-22:12) பார்க்க: உபா.-26:15.

2. **பரலோகம் தேவனுடைய சிங்காசன அறை**
"கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார், அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது." (சங்.103:19). பார்க்க: ஏசாயா 66:1.

3. **பரலோகம் தேவனுடைய பூரண மகிமையின் இடம்**
"நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது, நீண்ட ஆயசுள்ளவர் வீற்றிருந்தார், அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப் போல துப்புரவாகவும் இருந்தது, அவருடைய சிங்காசனம் அக்கினி ஜீவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அக்கினிநதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது,.." (தானி.7:9-10). பார்க்க: அப்.7:55.

4. **பரலோகம் மரித்த நீதிமான்களின் (விசுவாசித்து) இல்லம்**
"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்." (2கொரி. 5:1).

5. **பரலோகம் எல்லா விசுவாசிகளின் எதிர்கால இல்லம்.**
"இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு : இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும்...உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். (வெளி. 7:9-10).

B. பரலோகத்தின் தன்மை

பரலோகம் நாம் எண்ண முடியாத அளவுக்கு அப்பாற்பட்ட இடம் (1கொரி. 2:9,13:12) பரலோகம் பரிசுத்தமானதும், மகிமையால் நிறைந்ததும், முடிவில்லாததுமான இடம். வேதாகமம் பரலோகத்தைக் குறித்த அனைத்து விவரங்களையும் நமக்கு விவரிக்காவிட்டாலும், சில குறிப்புகளை நமக்கு தருகிறது அவை:

1. **சிறந்த மகிமையின் இடம்**
"அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்..." (மத்.13:43).

2. **தொடர்ச்சியான ஆராதனையின் இடம்.**
"இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலுயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருகே உரியது,... அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழுக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலுயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்.." (வெளி.19:1-6) பார்க்க: வெளி.5:11-2.

3. **முடிவே இல்லாத இடம்**
"...நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2பேதுரு1:11) பார்க்க 1பேதுரு1:4.

4. **தீமையினால் கறைபடாத இடம்**
"தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை, ஆட்டுக் குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்." (வெளி.21:27) பார்க்க: எபே. 5:5.

வெளிப்படுத்தின விசேஷம், பரலோகத்திலிருந்து இறங்கிவரும் புதிய எருசலேமை குறித்து விளக்குகிறது. அங்கே:

a. இரவு இல்லை (22:5).
b. சாபம் இல்லை (22:3).
c. வேதனை இல்லை (21:4).
d. அழுகையும் துக்கமும் இல்லை (21:4).
e. மரணம் இல்லை (21:4).

ஏனெனில், பரலோகத்தின் தன்மை, தேவனுடைய தன்மையின் பிரதிபலிப்பு ஆகும். பரலோகம், தேவனுடைய தன்மை, அவருடைய பிரசன்னத்தின் தெளிவான வெளிப்பாடாயிருக்கிறபடியால், அது பரிசுத்தமும், மகிமையால் நிறைந்ததும், முடிவில்லாததுமாய் இருக்கிறது.

C. பரலோகத்துடன் நமது தொடர்பு

விசுவாசிகளாக, பரலோகத்துடன் விசேஷித்த உறவில் நாம் இப்பொழுது வாழுகிறோம் ஏனெனில்:

1. நாம் அதற்கு சொந்தமானவர்கள்
"நீங்களோ....ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், ...வந்து சேர்ந்தீர்கள்." (எபி.12:22-24) பார்க்க பிலி.3:20.

2. நாம் அங்கே உட்கார வைக்கப்பட்டிருக்கிறோம்.
"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்." (எபே.2:7).

3. நமது வாழ்வின் ஆதாரத்தை அங்கே பெற்றிருக்கிறோம்
"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." (எபே.1:3) பார்க்க (கொலோ.3:1-4).

4. நம்முடைய நாமங்கள் அங்கே எழுதப்பட்டிருக்கிறது
"ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்." (லூ.10:20) பார்க்க: எபி.12:23.

5. அங்கே வாழ்கிற ஒருவரால் நாம் அனுப்பப்பட்டிருக்கிறோம்.
"நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல... நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்." (யோ.17:16,18) பார்க்க: 2கொரி.5:20.

6. நம்முடைய கண்கள் அங்கே நோக்கமாயிருக்கிறது.
"மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் (2கொரி.5:17-18) பார்க்க: எபி.11:9-10, 14-16.

7. நம்முடைய பொக்கிஷம் அங்கே இருக்கிறது.
"அவர் .... அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி,.... நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.... அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது." (1பேதுரு 1:4-5).

8. நாம் அங்கே அழைக்கப்பட்டிருக்கிறோம்.
"...ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." (பிலி.3:13-14).

பரலோகத்திற்கு திரும்ப செல்வதற்கு முன்பு, ஒவ்வொரு விசுவாசிக்கும் மிகவும் விசேஷித்த வாக்குத்தத்தத்தை இயேசு தாமே கொடுத்திருக்கிறார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோ.14:1-3) பார்க்க யோ.17:24.

எனது தீர்மானம்

நான் இன்று, எனது விருப்பத்தை இவ்வுலகத்தின் பொருட்களின் மீது அல்ல, பரலோகத்தின் காரியங்களின் மீது வைக்க தீர்மானிக்கிறேன். இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது என்பதை உணருகிறேன். எனவே நான், இந்த உண்மையின் மூலம் நிலைப்படுத்தபட்டுள்ள முன்னுரிமைகளின்படி வாழ்வேன். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைவருக்கும், அவர் தருகிற இந்த அற்புதமான, நித்திய வீட்டைக் குறித்த நற்செய்தியை பிறருடன் பகிர்ந்து கொள்வேன்.

அத்தியாயம் 20: இயேசு திரும்ப வரும்பொழுது - இரண்டாம் வருகை

"ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்ப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் பெருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." (1கொரி.11:26).

A. அவர் திரும்ப வருவதைக் குறித்த வாக்குத்தத்தம்

இயேசு கிறிஸ்து மீண்டும் இப்புபூமிக்கு வருவது ஒரு கிறிஸ்தவனுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள், 300 தடவைக்கும் அதிகமாக இதைக்குறித்து விவாதித்துள்ளார்கள். மேலும், அவர்கள் பயன்படுத்திய உரைநடை, பெரும்பாலும் கட்டளையாகவே அமைந்துள்ளது. இரண்டாம் வருகையைக் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முதல் காரியம், அவரது வருகை நிச்சயம்.

1. இயேசு, தான் மீண்டும் வருவதைக் குறித்து கூறியுள்ளார்
"அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்." (மத்.24:30) பார்க்க: யோ.14:2-3.

2. தேவதூதர்கள் அதைக்குறித்து முன்னுரைத்துள்ளார்கள்
"அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துப்பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். (அப்.1:10-11).

3. ஆதி கிறிஸ்தவர்கள் அவரது வருகையைக் குறித்து ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தினார்கள்.
"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு

போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.'' (1தெச.4:16-18) பார்க்க: வெளி.1:7.

4. பரிசுத்த ஆவியானவர் அதைக்குறித்து சாட்சி பகருகிறார்.
''இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே: ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே.'' (2கொரி.5:5). ''இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே இருதயங்களை ஸ்திர்படுத்துங்கள், கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே (யாக். 5:7-8).

B. இயேசு எப்படி திரும்ப வருவார்?

1. எதிர்பாராத விதமாக
சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங் குறித்து உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, ... அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும்... (1 தெச. 5:1-3) வாசிக்க : வசனங்கள் 4-11.

2. மின்னலைப் போல
மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். (மத். 24:27) பார்க்க : லூ. 17:24.

3. அவர் சென்றதைப் போலவே
உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். (அப். 1:10-11).

4. மிகுந்த வல்லமையுடனும், மகிமையுடனும்
அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார்கள். (லூ. 21:27).

5. எல்லாரும் பார்க்கும் வகையில்
''இதோ, மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்'' (வெளி. 1:7).

C. அவர் திரும்ப வரும்போது நடக்கும் வியப்பு தருகிற சம்பவங்கள்

1. காலங்களைக் குறித்த இரகசியம் நிறைவேறும்
''இனி காலம் சொல்லாது, ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்..'' (1 கொரி. 10:6) பார்க்க ரோ. 16:25-26.

2. தேவனுடைய ஜனங்கள் பூரண மகிமைக்குள் பிரவேசிப்பார்கள்
நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருந்திறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்'' (பிலி. 3:20-20) பார்க்க 1 கொரி. 15:25-53.

3. **கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள்**
"கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்" (2 கொரி. 4:14) பார்க்க யோ. 6:40, 11:25.

4. **இன்னும் உயிரோடிருக்கிற விசுவாசிகள் அவரைச் சந்திக்க கூட்டப்படுவார்கள்**
"வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார், அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" (மத். 24:31).

5. **சிருஷ்டி அதனுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்படும்**
"மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" (ரோ. 8:19-21) வாசிக்க வசனம் 22, ஏசா. 35:1-7.

6. **ஒவ்வொரு எதிரியும் அழிக்கப்படுவான்**
"அதன்பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்" (1 கொரி. 15:24).

7. **சாத்தான் அழிக்கப்படுவான்**
"ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக் கண்டேன். பிசாசென்றும் கர்த்தரென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டி வைத்து..." (வெளி. 20:1,2) வாசிக்க வசனங்கள் 3,7-10.

8. **நியாயத்தீர்ப்பு வழங்கப்படும்**
உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடே கூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே. தேவனை அறியாதவர்களுக்கும், தம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெச. 1:6-10).

9. **ஒரு பொழுதும் அழிவில்லாத இராஜ்யம் நிர்மானிக்கப்படும்**
அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்,அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை... அந்த ராஜ்யங்களிலெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானே என்றென்றைக்கும் நிற்கும்" (தானி. 2:44) பார்க்க வெளி. 19:15-16.

அத்தியாயம் 21 தேவனுடைய அழைப்பு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையைக் குறித்தும், தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு. அவருடைய அழைப்பு, நித்தியம் முழுவதும் நம்மைக் குறித்த அற்புதமான நோக்கத்தை உள்ளடக்கியது மாத்திரமல்ல, மாறாக இப்பொழுதும், இப்பூமியில் அதைக் குறித்து நமக்குள்ள வெளிப்பாட்டை உள்ளடக்கியுள்ளது. "... தம்முடைய தீர்மானத்தின்படியும்... கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்". (2 தீமோ. 1:9) "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே... அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோ. 8:17,28) பார்க்கவசனங்கள் 29-30.

A. தேவன் நம்மை உலகத்திலிருந்து அழைத்திருக்கிறார்

1. உலகத்தோற்றத்திலிருந்தே

"தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்" (எபே. 1:4-6) பார்க்க எபே. 2:10, மத். 25:34.

2. அவருக்காக பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம்

"நீங்களோ, உங்களை அந்த காரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்டசந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9) பார்க்க ரோ. 9:23-26.

3. அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற

"ஆகையால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, ... நீ வெட்கப்படாமல், ...அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மாத்தின்படியும், ... கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

B. பூமியின் மேல் நம்முடைய அழைப்பு

"இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், (அடிமையும்) அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்" (ரோ. 1:1) அவருடைய ஊழியத்தைக் குறித்து விவரிக்கும்போது, அப்போஸ்தலனாகிய பவுல், ஒவ்வொரு விசுவாசியின் மீதும் உள்ள அழைப்பைக் குறித்த உதாரணத்தை நமக்கு தருகிறார். அது மூன்று கோணங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. பொதுவான அழைப்பு – "கிறிஸ்துவின் அடிமை"

இயேசு நமக்காக ஒரு பெரிய விலையை : அவரது சொந்த உயிரை கொடுத்துள்ளார். "கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான், அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்..." (1 கொரி. 7:22,23) பார்க்க 1 கொரி. 6:19-20. பவுல் தன்னை இயேசு கிறிஸ்துவின் அடிமை என்று அழைக்கும்பொழுது, இன்னும் ஆழமான அர்த்தத்தை குறிக்கிறார். அவர் வாழ்ந்த காலத்தின் வழக்கப்படி, ஒரு அடிமை விடுதலையாக்கப்படும் வேளை வரும்பொழுது, தன்னுடைய எஜமான் மீதுள்ள அன்பின் நிமித்தம் அந்த விடுதலையை அவன் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அப்பொழுது அவன் தன்னுடைய காதில் குத்தப்படுவதால் உண்டாகும் அடையாளத்தை பெற்றுக் கொள்கிறான். இது, அவன் தனது எஜமானுக்கு வாழ்நாள் முழுவதும் "அன்பின் அடிமை" (கிரேக்கம் "டூலோஸ்") என்பதின் அடையாளம். (யாத். 21:5-6, உபா. 15:16-17) அப்போஸ்தலனாகிய பவுல் தன்னைத் தானே ஆண்டவர் இயேசுவின் அன்பின் அடிமை என்று தானே விரும்பி தெரிவித்துள்ளார்.

2. விசேஷித்த அழைப்பு – "அப்போஸ்தலனாக"

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு தனது வாழ்வில் ஒரு விசேஷித்த அழைப்பு இருந்ததைப் போல, ஒவ்வொரு விசுவாசிக்கும் உண்டு. பவுல், அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டார், ஆனால் தேவனுடைய சரீரமாகிய சபையில், அநேக பலதரப்பட்ட அழைப்புகள் உள்ளன. பார்க்க. ரோ. 12:3-5, எபே 4:7-16. நம்மைக் குறித்து தேவனுடைய விசேஷித்த திட்டம், நாம் அவருடைய சித்தத்தை வாஞ்சையோடு நாடும்போது வெளிப்படுத்தப்படும்.

3. குறிப்பிட்ட அழைப்பு – "சுவிசேஷத்திற்கென்று பிரித்தெடுக்கப்பட்ட"

ஒவ்வொரு விசேஷித்த அழைப்பிற்குள்ளும் ஒரு குறிப்பிட்ட அழைப்பு உண்டு. உதாரணமாக, பேதுரு, பவுல் இருவரும் அப்போஸ்தலர்கள்தான். ஆனால், ஒருவர் யூதருக்கு அப்போஸ்தலராகவும், மற்றொருவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலராகவும் இருந்தார்கள். பார்க்க ரோ. 11:13, 1 தீமோ. 2:7, 1 கொரி. 12:4-11, நாம் அவருடைய "அன்பின் அடிமைகள்" என்று நிரூபிக்கும்பொழுதுதான் நம்முடைய விசேஷித்த, குறிப்பிட்ட அழைப்புக்குள் நாம் நகர முடிகிறது. ஏனெனில், அவரால் அனுப்பப்படுவதற்கு முன்பு, நாம் கிறிஸ்துவினுடைய அதிகாரத்திற்கு முழுவதும் அடிபணிய முதலில் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது பார்க்க மத். 28:18-19.

C. அவர் ஏன் நம்மை அழைக்கிறார்?

1. ஏனெனில் இந்த உலகம் அந்தகாரத்தில் உள்ளது

"நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்." (1யோ. 5:19) பார்க்க எபே. 6:12, கொலோ. 1:13.

2. ஏனெனில் ஜனங்கள் பசியிலும், தேவையிலும் உள்ளார்கள்

"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தப்படியால் அவர்கள் மேல் மனதுருகி," (மத். 9:36).

3. ஏனெனில் அவருடைய ஞானத்தை நிருபிக்க

"தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானித்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக," (எபே.3:9-10).

4. ஏனெனில் காலம் குறுகியதாய் உள்ளது

"அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைத்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்." (யோ.4:35). பார்க்க: யோ.9-4.

D. நாம் அழைக்கப்படும்பொழுது என்ன நடக்கிறது?

1. நாம் அவரால் உருவாக்கப்படுகிறோம்.

"என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்". (மத்.4:19) ஏரே.18:1-10.

2. நாம் அவரால் கற்பிக்கப்படுகிறோம்.

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோ.14:26) பார்க்க: 1கொரி.2:12, 1யோ.2:27.

3. நாம் அவரால் அனுப்பப்படுகிறோம்

"நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்." (யோ.17:18). பார்க்க: மாற்கு16:15.

தேவன் அழைக்கும்பொழுது, அவர் வந்து நம் வாழ்வில் இடைபடுகிறார். வேதாகமத்திலுள்ள சில உதாரணங்கள்:

- மோசே (வனாந்திரத்தில் ஒரு மேய்ப்பன்): "போ என் ஜனத்தை விடுவி" (யாத். 3:1-12)
- சாமுவேல் (ஆலயத்தில் சேவை செய்யும் ஒரு சிறுவன்): "எழுந்து, எனக்காக பேசு" (1சாமு. 3:1-19).
- எசேக்கியேல் (அன்னிய தேசத்தில் ஒரு கைதி): "காலூன்றி நில், நான் உன்னை அனுப்புகிறேன். (எசே. 2:1-7).
- சீஷர்கள் (வியாபாரிகள், மீனவர்கள்): "எனக்குப் பின்சென்று வா" (லூக்கா.5:27-28, மத்.4: 18-22).
- சவுல் (சபையின் எதிரி): "போ, நீ செய்யவேண்டியதை உனக்குச் சொல்லுவேன்".

எனது தீர்மானம்

உலகத்தின் அஸ்திபாரம் இடப்படுவதற்கு முன்பே, எனது வாழ்வைக் குறித்து தேவனுக்கு ஒரு திட்டம் இருந்தது என்பதை நான் இப்பொழுது உணருகிறேன். இத்திட்டத்திற்கு என்னை முழுவதுமாய் அர்ப்பணித்து, வாழ்நாளெல்லாம் தேவனை பின்தொடர்வேன். பிறருடைய வாழ்வைக் குறித்த தேவனுடைய அழைப்பைப் பற்றி அவர்களுக்கு போதிப்பேன்.

சில முக்கிய வார்த்தைகளின் விளக்கவுரைகள்

இரட்சிப்பை குறிக்கும் முக்கிய கருத்துகள்

"சபையின் அஸ்திபாரம்" நமது இரட்சகர் இயேசுவில் இருக்கிறது இரட்சிப்பை குறித்து இன்னும் அநேக வார்த்தைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. அவைகள் முக்கியத்துவம் வாய்ந்தமையால், இங்கே அவைகளில் ஒரு சிலவற்றை குறிப்பிடுவதும் விளக்குவதும் நல்லது.

1. இரட்சிப்பு

கிறிஸ்துவுக்குள் தேவனுடைய கிருபையின் கிரியையை இது குறிக்கிறது. அதன் மூலம் நாம்:

a. பாவத்தின் தண்டனை, வல்லமை, வருங்கால பாதிப்பு ஆகியவற்றிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.
b. தேவனுடைய நோக்கத்திற்காக மீட்கப்பட்டு, அவருடைய குமாரனின் சாயலை வெளிப்படுத்தும் அவருடைய குடும்பத்தில் வைக்கப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்த பொழுதே அவர் நம்முடைய இரட்சகராகிவிட்டார். நாம் மரிக்க வேண்டிய இடத்தில் அவர் மரித்து நம்முடைய பாவங்களுக்காக விலைக்கிரயத்தையும் (அபராதத்தையும்) செலுத்தி தீர்த்துவிட்டார். விசுவாசத்தால் நாம் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்பொழுது, அவருடைய உயிர்த்தெழுந்த ஜீவனின் வல்லமையையும் நாம் பெற்றுக் கொள்ளுகிறோம். இந்த புது வாழ்வு நமக்குள் பாய்ந்து செல்லும்போது, அது நமது ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு முழுமையை (ஆரோக்கியம்) கொண்டு வருகிறது. "இரட்சிக்கப்படுவது" என்பது மன்னிக்கப்படுவது, சுகமாக்கப்படுவது, விடுதலையாக்கப்படுவது, முழுமையாக்கப்படுவது, மீண்டும் புதுப்பிக்கப்படுவது போன்ற பொருட்களை தருகிறது. நாம் பாதுகாப்பாக, ஆரோக்கியமாக, விடுவிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். தேவன் நம்மை அழைத்த எல்லாவற்றிற்காக குறிப்பாக அவருடைய ராஜரீகமும், பிரியமுமான குமாரராக, குமாரத்திகளாக ஆவதற்கு ஏற்புடையவர்களாக இருக்கிறோம்.

2. மறுபிறப்பு

"உற்பத்திசெய்" என்ற வார்த்தைக்கு உண்டாக்கு, அல்லது ஜீவனை விளைவிக்கச் செய் என்று பொருள்படும். மறுபிறப்பு, மரணத்திலிருந்து மீண்டும் வாழ்வுக்கு வருதல் அல்லது திரும்புதல் என்பதைக் குறிக்கிறது. நாம் நம்முடைய பாவங்களில் மரித்திருக்கிறோம். ஆகவே, நாம் மீண்டும் தேவனுடைய குடும்பத்திற்குள் கொண்டுவரப்படுவதற்கு, நமக்கு ஆவிக்குரிய வாழ்வு (மறுபடியும் பிறப்பது) என்னும் "புதுவகையான ஆற்றல்" பெற்றிருக்க வேண்டும். பூமிக்குரிய குடும்பத்திற்குள் பிறப்பதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. அது நமக்கு கொடுக்கப்படுகிற இயற்கையான வாழ்வே. இது உயிரியல் இனப்பெருக்கத்தின் வழிமுறை மூலமாகவே நடக்கிறது. கரு உயிர்மம் அல்லது பாலியல் உயிரணு, ஒன்றாக இணைத்து ஒரு புதிய குழந்தையை (ஆண் அல்லது பெண்) உருவாக்குவதற்குத் தேவையான ஜீவனைத் தருகிறது.

தேவனுடைய குடும்பத்துக்குள் பிறப்பதிலும் இந்த உண்மையே அடங்கியிருக்கிறது. ஆவிக்குரிய வாழ்வாகிய, உள்செலுத்தும் ஆற்றல் - தெய்வீக வித்து அதற்கு இருக்க வேண்டும். அந்த ஜீவனுள்ள வித்து ஒரு நபர், அந்த நபர் இயேசு கிறிஸ்துவே. நாம் கிறிஸ்துவை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் அவரே ஜீவனாயிருந்து பிறக்கச் செய்கிறார். எனவே, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், **இயற்கையான** பிறப்பு, **ஆவிக்குரிய** பிறப்பு ஆகிய இரண்டு பிறப்புக்கள் உள்ளன. இதுவே, மறுபடியும் பிறப்பது என்பதன் பொருளாகும். (பார்க்க யோ. 3:1-8).

3. பரிகாரம் (பிராயசித்தம்)

''பரிகாரம்'' என்ற வார்த்தைக்கு ஒருவருடன் ''ஒன்றாகுதல்'' என்று பொருள். தவறுகளை சரி செய்வதின் விளைவாகிய உடன்படிக்கையையும், சமாதானத்தையும் குறித்து இது பேசுகிறது. பாவம் தேவனுக்கு எதிரான குற்றம். எனவே, பாவம் தேவனிடத்திலிருந்து நம்மை பிரித்துவிடுகிறது. நாம் அவரோடு ஒப்புரவாக அல்லது அவருடைய ஐக்கியத்திற்குள் கொண்டு வரப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது. பாவத்தின் விளைவுகளை ஒன்றுமில்லாமல் போகப் பண்ணும் ஒரே வழி ''நீதிமானாக்குதல்'' (பாவியை நீதிமானாக எண்ணுதல் ஆகும்). நீதிமானாக்குதல் என்பது பாவத்தை புறக்கணிக்கிற, அல்லது மீறுதலை கண்டும் காணாமல் இருக்கிற செயல் அல்ல. பரிசுத்தமும் நீதியுமுள்ள தேவன் பாவத்தை பாராமல் இருக்க முடியாது. பாவத்தின் அபராதத்தை செலுத்தித் தீர்த்தால் மாத்திரமே பாவம் நீக்கப்படுகிறது, மூடப்படுகிறது அல்லது ஓரங்கட்டப்படுகிறது. அப்பொழுது மாத்திரமே நியாயம் திருப்தியாகும், பாவம் நிவர்த்தியாகும். தவறுக்குரிய அபராதம் முழுவதுமாக செலுத்தித் தீர்க்கப்படும்பொழுது, ஐக்கியத்தை மீண்டும் உருவாக்க முடியும்.

பாவத்தின் அபராதம் மரணம். இயேசு தமது கிருபையினாலும், இரக்கத்தினாலும், நமது பாவங்களுக்காக சிலுவையில் மரித்த போது, நமக்கான அபராதத்தை செலுத்தினார். இவ்விதத்தில் அவருடைய இரத்தம் நம்முடைய பாவங்களை மூடியும், நீக்கியும் விட்டது என்று நாம் சொல்ல முடியும் (''நீக்குவது'' என்பது செயலிழக்கச் செய்வது என்று பொருள்படும்). எனவே, பரிகாரம், நமது ஐக்கியம் மீண்டும் புதுப்பிக்கப்பட காரணமாயிருந்த கிறிஸ்துவின் மரணத்தின் மூலமான தேவனுடைய செயலாகும். நாம் தேவனோடு ''ஒன்றாக்கப்பட்டுவிட்டோம்''.

4. நீதி (நேர்மை, நியாயம்)

இது தேவனுடைய பரிசுத்தமான குணத்தை குறிக்கிறது. அவர் எப்பொழுதும் நினைவுகளில், வார்த்தைகளில், கிரியைகளில், நடத்தைகளில், செயல்களில் ''நேர்மையாகவே'' இருக்கிறார். எல்லா விதங்களிலும், எல்லாவற்றிலும் இருக்கிறார். இதுவே, நியாயப்பிரமாணம் கூறும் ''நீதியின்'' நியதி ஆகும். நீதியில்லாத அனைத்துமே அநீதியும், தீயதும், தவறானதும் - சுருக்கத்தில் பாவம் நிறைந்ததுமாய் இருக்கிறது. இந்த காரணத்தினாலே, பாவம் நிறைந்த மனிதன் பரிசுத்தமான தேவனின் முன் எப்பொழுதுமே நிற்க முடியாது. நீதியும் அநீதியும் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று எதிராகவே இருக்கின்றன. ஐக்கியத்திற்கு எவ்வித அடிப்படையுமில்லை. ஆகவேதான், தேவன் நம்முடைய இருதயங்களில் கிறிஸ்துவை இரட்சகராக நாம் ஏற்றுக் கொள்ளும்பொழுது, நம்முடைய பாவங்கள் மூடப்படுகின்றன, நீக்கப்படுகின்றன. தேவன் நம்மை நம்முடைய பாவங்களில் இனிமேலும் பார்க்காமல், அவருடைய குமாரனின் நீதியில் நம்மை பார்க்கிறார். அவர் நம்மிடத்தில் இருப்பது மாத்திரமல்ல, நாமும் அவரிடத்தில் இருக்கிறோம் (2 கொரி. 5:21). இது ''ஒருவர் இன்னொருவருக்காக குற்றஞ்சுமந்து தரும்'' நீதி என்று அழைக்கப்படுகிறது. இப்பொழுது, பிறருக்குரியது நமக்கும் சொந்தமாகிவிடுகிறது. அவர்களுடைய பதவியும், உடமையும், நம்முடைய பதவியும் உடமையுமாகிவிடுகிறது. இது கூட்டாக வைத்துக் கொள்ளும் கணக்கு. இயேசு கிறிஸ்துவின் நீதி நம்முடைய நீதியாகிவிட்டது. பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசுவின் பதவி நம்முடையதாகிவிட்டது. (பார்க்க எபே. 1:20-22, 2:4-5).

நம்முடைய சட்டரீதியான பதவியாகிய ''ஒருவர் இன்னொருவருக்காக குற்றஞ்சுமந்து தரும்'' நீதியைத் தவிர, ''பங்களிக்கப்படும்'' நீதியும் இருக்கிறது. ''பங்களித்தல் என்பதற்கு ஏதாவது ஒன்றை உள்ளே வைத்தல்'' என்று பொருள். நாம் கிறிஸ்தவர்களானபோது, நம்முடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்று வைக்கப்பட்டது. சட்டப்படி நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பது மாத்திரமல்ல, கிறிஸ்து நமக்குள் இருக்கிறார் என்பது, தனிப்பட்டதும், அனுபவப்பூர்வமான நீதியாகும் (கொலோ. 1:27).

நாம் இயேசுவை பெற்றுக்கொண்டபொழுது, அவருடைய பரிசுத்தமும், நீதியுமான சுபாவத்தையும் பெற்றுக்கொண்டோம். நமக்கு ஒரு புதிய சுபாவம் - உள்ளான சக்தியின் ஒரு புதிய ஆதாரம் இருக்கிறது. இதன் மூலம் நாம் நீதியான வாழ்க்கை வாழ முடிகிறது. நம்முடைய ''பழைய சுபாவம்'' இயேசுவோடு சிலுவையில் மரித்து ''புதிய சுபாவத்தை'' வெளிப்படுத்தும் உரிமையையும், அதிகாரத்தையும் நமக்கு தருகிறது.

5. நீதிமானாக்கப்படுதல்

''நீதிமானாக்குதல்'' என்பதற்கு நியாயப்பிரமாணத்திற்கு முன்பு நீதிப்படுத்துதல் என்றும், இவ்வாறு குற்ற உணர்விலிருந்தும், ஆக்கினைத்தீர்ப்பிலிருந்தும் நம்மை விடுதலையாக்குகிறது என்றும் அர்த்தமாகும். ஆக்கினைத்தீர்ப்பு என்பதற்கு நியாயப்பிரமாணத்திற்கு முன்பு ஒருவரை குற்றவாளியாக தீர்ப்பது என்று பொருள். பாவம், தேவனுடைய பிரமாணங்களை முறிக்கிறது. ஆகவே, எல்லா பாவிகளும் தேவனுக்கு முன்பு குற்றவாளிகளாய் இருக்கிறார்கள். நம்முடைய பாவத்தின் அபராதத்தொகை மரணமாகும். பாவத்திற்குரிய அபராதத்தை நாம் செலுத்தாமல் நியாயப்பிரமாணத்தின் கோரிக்கைகளை திருப்திபடுத்த முடியாது. இப்படி ஒன்றும் நடக்காதது போல, ''நியாயம்'' பாவத்தை பாராமல் இருக்க முடியாது.

தேவனுடைய மீட்பின் திட்டத்தில், இரக்கமும் நீதியும் ஒரே வழியில்தான் இணைய முடியும். அது இப்படியாக : நீதிபதி (தேவன்) தீர்ப்பை வழங்குவது மாத்திரமல்ல அதற்குரிய தண்டனையையும் (கிறிஸ்துவின் மரணம்) அவரே செலுத்திவிட்டார். குற்றவாளிகள் இப்பொழுது சட்டத்துக்கு முன்பு நீதிமான்களாகக்ப்பட்டுவிட்டார்கள். இப்பொழுது பலியானவர், **நீதியும்** (சட்டத்திற்குரிய அபராதத்தை செயல்படுத்த தேவையான) **இரக்கமும் நிறைந்தவராக** (ஒரு பாவியின் மீது அபராதம் சுமத்த அவரைத் தூண்டிய நியாயத்தீர்ப்புக்குரிய தண்டனையை செலுத்தியபடியால்) உள்ள நீதிபதியாகிய தேவனிடத்தில் எளிதாக செல்ல முடியும்.

இதுதான் தேவன் நமக்காக கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் செய்தவைகளாகும். பாவம் தண்டிக்கப்பட்டது. அபராதம் செலுத்தப்பட்டது. நாம் மன்னிக்கப்பட்டு விடுதலையாக்கப்பட்டுவிட்டோம். நாம் இவ்வாறு **நீதிமானாக்கப்பட்டுவிட்டோம்.**

பரிசுத்த ஆவியானவர்

முன்னுரை : ஏசா – 61 : 1-2, சக. 4:6

ஆவியை குறிக்கும் எபிரேய வார்த்தையான ரூஆக் மற்றும் கிரேக்க வார்த்தையான ''நியூமா'' ஆகியவற்றின் பொருள். பார்க்க முடியாத ஆற்றல் அல்லது ஆவி என்பதாகும். எனவே, பரிசுத்த ஆவி என்பது

- ☆ தேவனுடைய மகிமைக்காக நம்மை பயன்படுத்தும் ஆள்தன்மை வாய்ந்த ஒரு நபரா?
- ☆ நம்முடைய நன்மைக்காக பயன்படுத்தப்பட தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஒரு வல்லமையா?

இந்த பரிசுத்த ஆவியானவர் கடவுளா?

ஒரே கடவுள்என்பதைப் பற்றி வேதாகமத்திலுள்ள சில வேத பகுதிகள். (உ.ம்) உபா. 6:4, 1 தீமோ. 2:5, 1 யோ. 5:7. ஒரே கடவுளில் பல நபர்கள் இருக்க முடியுமா? ஆம்! கடவுளைக் குறிக்கும் எபிரேய வார்த்தை ஒன்றுக்குள் பல (தனி நபர் அல்ல) என்பதை குறிக்கிறது. (உ.ம்) ஆதி. 1:26 ''பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக...'' ஆதி. 2:24, கலா. 3:28.
ஒரே கடவுள், ஆனால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக தன்னை வெளிப்படுத்துகிறார்.

<u>என்னென்ன குணங்கள் கடவுளை கடவுளாக்குகிறது?</u>

சர்வ வல்லமையுள்ளவர்	-	லூக்கா 1:35
எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர்	-	1 கொரி. 2:10-11
எல்லாவிடத்திலும் நிறைந்தவர்	-	சங். 139:7-10
நித்தியமானவர்	-	எபி. 9:14

முடிவுரை

பரிசுத்த ஆவியானவர் கடவுளே, எனவே நாம் அவரை கனம் பண்ண வேண்டும். ஆராதிக்க வேண்டும், அதே வேளையில், பரிசுத்த ஆவியானவர் இயேசுவை மகிமைப்படுத்தவே வந்தார். அதாவது, விரிவுபடுத்த, இடம் கொடுக்க, இயேசுவுக்கு முதலிடம் கொடுக்க, பரிசுத்த ஆவியானவர் விசேஷித்தவர். அதைக் குறித்து கீழ்க்கண்ட வேத பகுதிகளில் காணலாம்.

- ☆ ஏசா. 63:8-10, பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தும்போது, தேவன் நமது எதிரியாகிறார்.
- ☆ சகரியா 7:12, பரிசுத்த ஆவியின் சத்தத்துக்கு நாம் செவிகொடுக்காதபோது, தேவன் கோபாக்கினையை அனுப்புகிறார்.
- ☆ மத். 12:31-32, பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் தூஷணம் சொல்லும்போது மன்னிக்கப்படமாட்டார்கள்.

தேவத்துவத்துக்குள், பூரண அன்பு, பூரண இசைவு, பூரண ஒற்றுமை ஆகியவற்றை நாம் பார்க்கிறோம்.

- ☆ சிருஷ்டிப்பில், ஆதி. 1:1-2, எபி. 1:2, ஆதி. 1:26 'நமது..
- ☆ இயேசுவின் ஞானஸ்நானத்தில், மத். 3:13-17.
- ☆ இயேசுவின் இறுதி கட்டளையில், மத். 28:19.
- ☆ தேவனிடத்தில் நெருங்கி வருகையில், எபே. 2:18.
- ☆ தேவனுடைய கிரியையில் 1 கொரி. 12:5-7,

பல பொறுப்புக்கள்	:	கர்த்தராகிய இயேசு	-	நிர்வாகி
		பிதா	-	இயக்குபவர்
		பரிசுத்த ஆவியானவர்	-	வெளிப்படுத்துபவர்

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரா?

எது ஒரு நபரை உருவாக்குகிறது? வடிவம், தோற்றம், ஆள் தத்துவம்?
1 யோ. 5:7 ''பரலோகத்திலே சாட்சியிடுக்கிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்''.

ஆள்தத்துவம் -

A).	சித்தம்	-	1 கொரி 12:11
B).	சிந்தை	-	ரோ. 8:27
C).	உணர்ச்சிகள்	-	எபே 4:30 (துக்கமடைந்தார்), ஏசா 63:10 (விசனமடைந்தார்), ரோ. 15:30 (அன்பாக இருந்தார்)

முடிவுரை

பரிசுத்த ஆவியானவரை எண்ணுகிற, உணருகிற, அன்பு செலுத்துகிற, நோக்கமுடைய, விரும்புகிற, அறிகிற, துக்கப்படுகிற, பேசுகிற நபராக நாம் பார்க்கிறோம். (உ.ம்) அப். 13:1-2.
ஆகவே, அவரை அறிந்து கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மை அழைக்கிறார். ஏனெனில், அவர் ஐக்கியத்தை வாஞ்சிக்கிறார். 2 கொரி 13:14, பிலி. 2:1லிருந்து, பரிசுத்த ஆவியானவருடைய ஐக்கியத்தை / உறவாடுதலை பவுல் அறிந்திருக்கிறதாக நாம் காண்கிறோம்.

ஐக்கியத்தின் கிரேக்க வார்த்தை ''கெய்னோனியா'' ஏழு அர்த்தங்கள்

- உரையாடுதலும் உறவாடுதலும்
- பங்காளத்துவம்
- பங்கெடுக்க
- நண்பராக்க
- பிரசன்னம்
- அன்பு
- துணை

பிதாவை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியானவரையும் அறிந்து கொள்வது எவ்வளவு பெரிய சவாலாய் இருக்கிறது. நம் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் மிகவும் அவசியம். ஏனெனில்

- ✓ பரிசுத்த ஆவியின்றி நாம் தேவனை நேசிக்க முடியாது, ரோ. 5:5
- ✓ பரிசுத்த ஆவியின்றி நாம் தேவனிடத்தில் காத்திருக்க முடியாது. கலா 5:5
- ✓ பரிசுத்த ஆவியின்றி நாம் கீழ்ப்படிய முடியாது. 1 பேதுரு 1:2
- ✓ பரிசுத்த ஆவியின்றி நாம் தேவனை ஆராதிக்க முடியாது. பிலி 3:3
- ✓ பரிசுத்த ஆவியின்றி நாம் ஜெபிக்க முடியாது, யூதா 20

(பரிசுத்த ஆவிக்குள் என்பதன் அர்த்தம் : ''பரிசுத்த ஆவியோடு ஒன்றித்து'')

பரிசுத்த ஆவியைக் குறித்து வேதாகமம் சொல்லும் இன்னும் சில காரியங்களை காண்போம் : யோ 16:7ல் இயேசு ''நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்: நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்..'' என்று சொன்னார்.

பரிசுத்த ஆவியின் சில கிரியைகளும் செயல்பாடுகளும் :

- **நமது தேற்றரவாளர்** : இதைக் குறிக்கும் கிரேக்க வார்த்தையான ''பாராக்லேடோஸ்''க்கு ஒருவரின் உதவிக்கு அழைத்தல், துணை நிற்றல், உதவுதல், ஆலோசனை வழங்குதல் போன்ற பல அர்த்தங்கள் உண்டு.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஆதரிப்பவராக, பாதுகாப்பவராக, தாங்குகிறவராக, ஆசிரியராக இருந்த போதிலும், அவர்களை விட்டு அவர் விலகிவிட்டால் அவர்கள் முற்றிலும் கைவிடப்பட்டவர்களாகவும், தனித்துவிடப்பட்டவர்களாகவும் எண்ணுவார்கள். ஆனால் இயேசுவோ, அவர்களிடம் ''இன்னொருவரை'' / ''அவரைப் போலவே'' ஆலோசகரை, தேற்றரவாளரை, பலப்படுத்துகிறவரை, அவர்களோடும், அவர்களுக்குள்ளும் இருந்து ஊக்கப்படுத்துகிறவரை அனுப்புவதாக கூறினார்.

- **நமது வழக்கறிஞர் :** ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ள ''பாராக்லேடோஸ்: என்ற வார்த்தை, அவர் நம்மை நேசிக்கிறபடியால் நமக்காக வழக்காடுபவர் என்றும், நமக்காக பரிந்து பேச நாம் நம்முடைய உதவிக்கு அழைக்கக்கூடிய நபர் என்றும் பொருள்படும். நாமே நமக்காக வழக்காடுவதைக் காட்டிலும், மிகத் திறமையாக நம்முடைய காரியங்களுக்காக அவர் வழக்காடுகிறவராக இருக்கிறார்.

- **நமது ஆசிரியர் :** யோ. 14:26, அவர் கிறிஸ்துவைக் குறித்தும், தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்தும் அநேக காரியங்களை நமக்கு போதிக்கிறார். 1 யோ. 2:27, நமக்கு எல்லாவற்றையும் போதிக்கிற பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து கூறுகிறது.

- யோ. 16:12-13 பரிசுத்த ஆவியானவரை, சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை நடத்தும் **சத்திய ஆவியாக** குறிக்கிறது. யோ. 8:32, ''சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'', எல்லாவித பாவத்தின் அடிமைத்தனத்தினின்று நம்மை விடுவிப்பதே, (ரோ. 8:2), பரிசுத்த ஆவி நமக்கு கற்றுக் கொடுப்பதின் நோக்கமாகும் என்றாலும், வேதாகமத்தை கற்பிக்கும் ஆசிரியர்களால் நாம் கற்றுக் கொள்ள முடியும் என்று நம்புவது தவறாகும். எபே. 4:12, இயேசுவின் சரீரமாகிய சபையை பூரணப்படுத்துவதற்கும், தேவனுடைய வார்த்தையை போதிப்பதற்கும் அபிஷேகம் பண்ணப்பட்ட கற்பிக்கிறவர்களை கிறிஸ்து சபைக்கு தந்திருக்கிறார் என்பதை தெளிவாக சொல்லுகிறது.

<u>பரிசுத்த ஆவியின் வேறு சில கிரியைகளும் பொறுப்புகளும்</u>

- **குற்றத்தை உணர்த்துவார்** - யோ. 16:8, பாவத்தை, குறிப்பாக இயேசுவை விசுவாசியாததை, பரிசுத்த ஆவியானவர் பாவியை மட்டுமல்ல, ஒரு விசுவாசியின் தவறுகளையும், பாவத்தையும் கூட கண்டித்து உணர்த்துவார் என்பது குறிப்பிடத்தக்கது. குற்றத்தை உணர்த்துவது எப்பொழுதுமே திட்டவட்டமாக குறிக்கும். ஆனால் அக்கினித்தீர்ப்பு தோல்வியைக் குறித்த ஒரு பொதுப்படையான உணர்வோடு நம்மை விட்டுவிடுகிறது.

- **கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருப்பார்** - யோ. 16:14-15. பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதுமே தம்மைக் குறித்து பேசாமல், கிறிஸ்துவையும், அவரது கிரியையும், அன்பையும் குறித்தே பேசுவார்.

- **மறு பிறப்பு / இரட்சிப்பு : உயிர்ப்பூட்டுதல் / உயிர்கொடுத்தல் :** கிறிஸ்து பிரசங்கிக்கப்படும் போது பரிசுத்த ஆவியானவரே ஒரு அவிசுவாசிக்குள் ஜீவனை கொடுக்கிறார். (உயிர்ப்பூட்டுகிறார்) (யோ. 6:63a). அவிசுவாசியின் ஆவி, தேவனுடைய காரியங்களுக்கு மரித்தாயிருக்கிறது. (2 கொரி. 3:6) அவன் ஓர் இயற்கை மனிதனாக தேவனுடைய காரியங்களை உணர்ந்துகொள்ள முடியாது. (1 கொரி. 2:14) ஆவிக்குரிய ஆகாரம் அவனால் ஜீரணிக்க முடியாததாகவும், ஏற்றுக் கொளள்க்கூடாததாகவும் உள்ளது.

  எனவே, ஒரு மனிதன் எவ்வாறு மறுபடியும் பிறக்க முடியும்? வசனத்தைக் கேட்பதாகவா? அது மட்டுமல்ல வித்தாகிய தேவனுடைய வார்த்தையால் (1 பேதுரு 1:23). ஆகையால், ஒரு மனிதன், பரிசுத்த ஆவியானவரால் வசனத்தைக் கேட்டு பலன் கொடுக்க உயிர்பூட்டப்பட்ட பின்னரே, வசனத்தை கேட்டு, அழிவிலான அந்த வித்தால் பிறக்க முடியும். பரிசுத்த ஆவியானவரின் இந்த உயிர்ப்பூட்டும், உயிர்கொடுக்கும் கிரியையின் மூலமாகவே சத்தியத்தை உணர முடிகிறது, வித்து நம்முடைய ஆவியில் விதைக்கப்பட்ட பின்னர் புதிய பிறப்பு உண்டாகிறது. பிறப்புக்கு முன்பு உயிர் வருகிறதை அறிய வேண்டும். எனவே, பிறப்பானது, ஏற்கனவே உள்ள உயிரின் <u>வெளிப்பாடாகிறது.</u>

ஒருவர் பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பூட்டப்பட்ட பின்னர், அவனுடைய ஆவி கிறிஸ்துவுக்கு செவி கொடுக்க இயல்கிறது, கர்த்தரை ஏற்றுக் கொள்ளும்படி பரிசுத்த ஆவியானவர் அவனை இழுக்கிறார். யோ. 1:12-13, இதன் பலன் இரட்சிப்பு.

- **முத்திரிக்கிறார்** - எபே. 1:13 "கேட்பது – விசுவாசிப்பது – முத்திரிக்கப்படுவது" 2 கொரி. 1:22-23. பரிசுத்த ஆவியானவரால் இப்படி முத்திரிக்கப்படுவது, தெய்வீக சொந்தம் பாராட்டுதலின் அத்தாட்சியாகவும், நாம் சொந்தம் பாராட்டப்படுகிறோம். அன்பு கூரப்படுகிறோம். விசாரிக்கப்படுகிறோம் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கிறது. அதே சமயத்தில், தேவன் நம்மில் கிரியை செய்ய – பரிசுத்த ஆவியானவர் மூலமாக கிறிஸ்துவின் சாயலிலும், அவரைப் போலவும் நம்மை மாற்றவும், மறுரூபமாக்கவும் தேவனுக்கு அதிகாரம் கொடுக்கிறது.

- **சாட்சி கொடுக்கிறார்** - ரோ. 8:16. நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதற்கும், இரட்சிப்பின் உறுதி, மன்னிப்பின் நிச்சயம், தேவன் நமது பிதா போன்ற உண்மைகளுக்கும் அவர் சாட்சி கொடுக்கிறார்.

- **நமக்குள் வாசம் செய்கிறார்** - எசே.36:27, 1கொரி.6:19. நமது சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்.

- **கிறிஸ்துவின் சாயலில் நம்மை மறுரூபமாக்குகிறார்** - 2கொரி.3:18, கலா.5:22-23.

- **நம்மை நடத்துகிறார், வழிகாட்டுகிறார்** - ரோ.8:14 பரிசுத்த பாதையில் நடந்து, அவருடைய இராஜ்யத்தில் அவருடைய சித்தத்தை செய்கிற எல்லா விசுவாசிகளுடனும் பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார்.

- **நமக்காக பரிந்து பேசுகிறார்** - ரோ.8:26-27, எபே.6:18.

<u>பரிசுத்த ஆவியானவர் உன்னுடன் பேசக்கூடிய பல்வேறு வழிகள்</u>
(எனினும் தாழ்மை அவசியம் சங்.25:9)

- ✞ வசனத்தின் மூலம், (சங்.119:105)
- ✞ தீர்க்கதரிசியின் வாக்கின் மூலம், (அப்.21:11)
- ✞ அறிவுப்பூர்மான வார்த்தையின் மூலம், (1கொரி.12:8, அப்.21:4)
- ✞ அமர்ந்த, மெல்லிய சத்தத்தின் மூலம், (1இரா.19:12, யோ.10:27)
- ✞ கேட்கக் கூடிய சத்தத்தின் மூலம் (அப்.9:7)

<u>தேவன் இவற்றின் மூலமும் பேசுவார்:</u>

- # தூதர்கள் மூலம் (அப்.8:28)
- # தரிசனம் மூலம், (தானி.10:7)
- # ஞானத்திருஷ்டியின் மூலம், (அப்.10:10)
- # சொப்பனம் மூலம், (மத்.1:20)
- # மனதில் ஏற்படும் ஆழமான கருத்துகள், அறிவுறுத்தல்கள் மூலம், (அப்.17:16, 18:5)
- # ஞானிகளுடன் கலந்து ஆலோசிப்பதன் மூலம், (யாக்.1:5, நீதி.2:1-12).

ஆவிக்குரிய வரங்களையும் பலதரப்பட்ட அந்நிய பாஷைகளையும் பற்றிய குறிப்பு

1கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்திலுள்ள சில மேற்கோள்கள்:

வ.1. "ஆவிக்குரிய வரங்கள்"

கிரேக்கம்: "நியுமாடிகா", பொருள்: "ஆவிக்குரியவைகள்." ஒரு விசுவாசியின் மூலம் பரித்த ஆவியானவர் இயற்கைக்கு அப்பாற்பட்டு செய்யும் செயல்களின் விதங்கள் என்றும் கூறலாம்.

வ.4. "வரங்கள்"

கிரேக்கம். "கரிஸ்மாடா", பொருள்: "கிருபையின் வரங்கள்". அவைகள் இலவசமாய் தரப்பட்ட கிருபையின் வரங்கள், அசாதாரணமான வல்லமையும் ஆசீர்வாதமும், தெய்வீக செயல்பாடு அல்லது நன்மைகள் போன்றவை ஆகும்.

வ.7. "வெளிப்பாடு"

கிரேக்கம்: "பானரோசிஸ்," பொருள்: பிரகாசிக்கிற, தோற்றம், காணச் செய்கிற அல்லது வெளிப்படையாய் பார்க்கக்கூடிய வெளிப்படையான கிருபையின் வரங்கள் மூலம் தேவனுடைய பிரசன்னத்தை ஒருவர் உணரச் செய்யும், பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு ஆகும்.

அந்நிய பாஷைகளைக் குறித்த வேத பகுதிகள்: அப்.2:4, 1கொரி.14:5

\# "அந்நிய பாஷைகள்"

கிரேக்கம் : "கலாசோலேலியா", பொருள் : அந்நிய பாஷைகளில் பேசுதல். அந்நிய பாஷைகளை பேசுவதன் மூலம் ஒருவர், இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் தனக்குத் தெரியாததும், (பொதுவாக) பிறர் அறிந்திராததுமான ஒரு பாஷையில் பேசுகிறார்.

<u>தேவையற்ற குழப்பங்களை தவிர்க்க வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள இரண்டு விதமான அந்நிய பாஷைகளை வேறுபடுத்தி பார்ப்பது நமக்கு அவசியம் :</u>

<u>தியான அந்நிய பாஷைகள்</u>	<u>சபை அந்நிய பாஷைகள்</u>
1. பேசுகிறவரை பக்திவிருத்தி அடையச் செய்கிறது. 1 கொரி. 14:4	1. சபையை பக்திவிருத்தி அடையச் செய்கிறது. 1 கொரி. 12:7
2. மனிதன் தேவனிடத்தில் பேசுகிறான். 1 கொரி. 14:2	2. தேவன் மனிதரிடத்தில் பேசுகிறார். 1 கொரி. 14:4-5
3. வியாக்கியானம் தேவையில்லை. 1 கொரி. 14:28	3. வியாக்கியானம் அவசியம். 1 கொரி. 14:13,27
4. தனியாயிருக்கும்போது வெளிப்படுகிறது. 1 கொரி. 14:18-19	4. பிறர் முன்னிலையில் வெளிப்படுகிறது. 1 கொரி. 14:26
5. நிரந்தரமான செயல். 1 கொரி. 14:18	5. பரிசுத்த ஆவியானவர் விரும்பும் குறிப்பிட்ட சமயங்களில் மாத்திரம். 1 கொரி. 12:11,30

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் வெளிப்பாடும்

அத்தியாயம் 1 பரிசுத்த ஆவியானவர் யார்?

பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தின் மூன்றாம் நபர் ஆவார். சபைக்குள்ளும் அவரைக் குறித்து அறியாத வேதனையான சூழ்நிலை உள்ளது. இது இப்படி இருக்கக் கூடாது என்பதற்கு பல முக்கிய காரணங்கள் உண்டு. அவைகள்:

1. பரிசுத்த ஆவியானவர் தேவன்

திரித்துவத்தின் மூன்றாம் நபராகிய அவர், பிதாவாகிய தேவனுடனும், குமாரனாகிய தேவனுடனும் சமமாக உள்ளார். எனவே, அவருக்கு செலுத்த வேண்டிய கனத்தையும், மரியாதையையும், மகிமையையும் செலுத்த வேண்டியது அவசியம். நாம் ஒரு பொழுதும் அவரை தாழ்வுநிலையிலுள்ள ஒரு நபரைப் போல நடத்தக்கூடாது. தெய்வீக திரித்துவத்தின் மற்ற இரு நபர்களைக் குறித்து நாம் அறிந்திருக்கிறது போல, அவரைக்குறித்தும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

2. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து வேதாகமம் அதிகமாய் சொல்லுகிறது

புதிய ஏற்பாட்டில் 2 யோவான், 3 யோவான் ஆகிய இரண்டு நிரூபங்களைத் தவிர்த்து, ஏனைய அனைத்து ஆகமங்களும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும் அவரது கிரியைகளைக் குறித்தும் கூறும் பகுதிகளை உள்ளடக்கியுள்ளன.

3. தேவனுடைய மீட்பின் திட்டத்தில் தீவிர ஈடுபாடு அவருக்கு உண்டு

அவர் உலகத்தை, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார் (யோ. 16:8). உண்மையான தேவனுடைய பிள்ளைகள் ''ஆவியில் பிறந்தவர்கள்'' (யோ. 3:5-6).

4. இது பரிசுத்த ஆவியானவரின் காலம்

இவர் இயேசுவின் இடத்தை எடுத்துள்ள ''வேறொரு தேற்றரவாளன்'' ஆவார் (யோ.14:16). வரலாற்றின் இன்றைய காலம், ''பின்மாரியின் காலம்'' (சகரியா 10:1-3) அல்லது சபை அறிந்துள்ள ஆவியானவரின் பலத்த கிரியையின் காலமாகும். ஆகவே, பரிசுத்த ஆவியைக் குறித்து அதிகம் அறிந்து கொள்வது நமக்கு அவசியமாய் இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் ஆள்தன்மை உடையவர்

அநேக கிறிஸ்தவர்கள் பரிசுத்த அவியை ஆள்தன்மை இல்லாத ஒரு சக்தி அல்லது வல்லமை என்று நினைப்பது போல தெரிகிறது. அவர்கள் பரிசுத்த ஆவியை, மின்சாரம் அல்லது ஏதாவதொரு விசையை பயன்படுத்தி ஒரு பொத்தானை ''ஆன்'' செய்வது அல்லது தொடர்பை துண்டிப்பது போல் நடத்துகிறார்கள். இது உண்மைக்கு மாறான ஒரு கருத்தாகும். பரிசுத்த ஆவியானவர் ஆள்தன்மை உடையவர். அவர் மிகுந்த அதிகாரத்தையும், வல்லமையையும் கொண்டுள்ள ஒரு நபர். ஆனால், அவர் கொண்டுள்ள வல்லமையைக் காட்டிலும் அவர் மிகவும் சிறந்தவர். சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு நாம் செலுத்தும் கனத்திற்கும் மகிமைக்கும் மிகவும் பாத்திரராயிருக்கிறார்.

அவரைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ள தனிமனிதருக்குரிய பெயற்சொற்கள்

A. ''என்றென்றைக்கும் அவர் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு'' (யோ. 14:16).

B. ''அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால்'' (யோ. 14:17).

C. ''அவர் என்னைக்குறித்து சாட்சி கொடுப்பார்'' (யோ. 15:26).

D. ''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். (யோ. 16:13-14).

அவர் கொண்டுள்ள தனிநபருக்குரிய அடிப்படை குணாதிசயங்கள்

A. அறிவாற்றல் நினைக்கவும் பகுத்தறியவும் கூடியதிறன்.
B. கூர்ந்து அறியும் திறன். காரியங்களை உணர்ந்து கொள்ளும் ஆற்றல்.
C. சித்தம். தெரிவு செய்யவும், தீர்மானிக்கும் திறன்

பரிசுத்த ஆவியானவர் உணர்ந்து கொள்ளும் எந்த காரியத்தையும் ஒரு சாதாரண வல்லமையோ அல்லது செயல்விளைவோ உணர்ந்து கொள்ள இயலாது. உதாரணமாக, பரிசுத்த ஆவியை 'துக்கப்படுத்தாதிருக்க'(எபே. 4:30). நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம். அனனியாவும் சப்பீராளும் ''பரிசுத்த ஆவியிடத்தில் பொய் சொன்னார்கள்'' (அப். 5:3-4). ஒரு வல்லமையை துக்கப்படுத்தமுடியாது. மின்சாரத்தை துக்கப்படுத்தவோ, சோர்வடையச் செய்வதோ உங்களால் முடியாது. மேலும், அதனிடத்தில் பொய் சொல்லவோ அல்லது சோதிக்கவோ முடியாது. ஆள்தன்மை இல்லாத இந்த வல்லமை, மேற்கூறிய உணர்வுகளை புரிந்துகொள்ள முடியாது. ஆனால், ஒரு நபரை துக்கப்படுத்தவோ, சோர்வடையச் செய்யவோ, அவரிடத்தில் பொய் சொல்லவோ அல்லது சோதிக்கவோ முடியும்.

<u>பரிசுத்த ஆவியானவருக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆள்தன்மைக்குரிய சில வசனங்களை கவனியுங்கள்</u>

A. அவரால் உணர முடியும் (எபே. 4:30)
B. அவரால் ஆறுதல்படுத்த முடியும். (அப். 9:31)
C. அவரால் நினைக்க முடியும் (ரோ. 8:6)
D. அவரால் பேச முடியும் (அப். 13:2)
E. அவரால் ஜெபிக்க முடியும் (ரோ. 8:26)
F. அவரால் போதிக்க முடியும் (யோ. 14:26)
G. அவரால் அவருடைய சித்தத்தை செயல்படுத்த முடியும் (1 கொரி. 12:11)
H. அவரால் தடுத்து நிறுத்த முடியும் (அப். 16:6)
I. அவரால் அற்புதங்கள் செய்ய முடியும். (அப். 19:6)

இவை அனைத்தும் ஆள்தன்மையற்ற வல்லமைக்கு இருக்க முடியாத, ஆள்தத்துவத்தைக் குறிக்கும் சொற்றொடர்களாகும். அநேகர் பரிசுத்த ஆவியானவரை ஒரு சாதாரண வல்லமையாகவோ, திறனாகவோ நினைப்பதற்குரிய காரணங்களில் ஒன்று, அவருடைய ஊழியங்களைக் குறிக்க அவருக்கு கொடுக்கப்பட்டுள்ள சில குறிப்பிட்ட பெயர்களாகும். அவைகள், காற்று, மழை, எண்ணெய், அக்கினி, பனி போன்றவையாகும். இவை அனைத்துமே அவர் செய்யக்கூடிய பலதரப்பட்ட ஊழியங்களின் அடையாளக் குறிகள். ஆனால் அவர் தாம் செய்யும் அனைத்து ஊழியங்களைக் காட்டிலும் மிகவும் பெரியவர்.

பரிசுத்த ஆவியானவரின் தெய்வத்துவம் (பரிசுத்த ஆவியானவர் கடவுள்)

பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் மாத்திரமல்ல, தெய்வீக வல்லமையுள்ள ஒருவர், அவர் தேவனாயிருக்கிறார்.

1. **வேதாகமம் அவரை தேவன் என்று அழைக்கிறது. (அப். 5:3-4)**
   ''...பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? ...நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான்''.

2. **தேவன் ஒருவருக்கே உரிய குணாதிசயங்களை அவர் கொண்டுள்ளார்.**
   A. அவருக்கு நித்திய தன்மை உண்டு. (எபி. 9:14)
   B. அவர் எங்கும் நிறைந்தவர். (சங். 139:7-10). ஒரே நேரத்தில் எல்லா இடத்திலும் இருக்கக்கூடியவர்.
   C. அவர் சகலத்தையும் அறிந்தவர். (1 கொரி 2:10-11). அவருக்கு எல்லாம் தெரியும்.
   D. அவர் சர்வ வல்லமையுள்ளவர். (லூ. 1:35). எதையும் செய்ய வல்லமையுள்ளவர்.

3. **அவர் பிதாவோடும் குமாரனோடும் சமநிலையில் பங்கு கொண்டுள்ளார்.**
   ''... பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்...'' (மத். 28:19).

அத்தியாயம் 2 பரிசுத்த ஆவியின் நிறைவு முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில், குறிப்பிட்ட ஒரு சிலருக்குள்ளும், சிலர் மீதும் பரிசுத்த ஆவியானவர் இருந்ததாக நாம் காண்கிறோம். இவர்கள் அசாதாரணமானவர்களாக காணப்படுகிறார்கள். இருந்தபோதிலும், தேவன் தீர்க்கதரிசிகளின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் எல்லா ஜனங்களின் மீதும் இருக்கும் ஒரு நாள் வரும் என்பதாக முன்னறிவித்துள்ளார். "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" (யோ. 2:28,29) "உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்" (எசே. 36:27)

தேவனுடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா ஆவியில் நிறைந்தவராகவும் வல்லமையுடையவராகவும் இருப்பார்

"இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்து கொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும், இவரே, என் ஆவியை அவர் மேல் அமரப் பண்ணினேன். அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்" (ஏசா. 42:1). "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைபட்டவர்களுக்கு விடுதலையையும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், ... என்னை அனுப்பினார்..." (இது லூக். 4:18ல் நிறைவேறியது).

தேவனுடைய ஜனங்களெல்லாரும் இந்த ஊற்றப்படுதலை அனுபவிப்பார்கள்

"தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்நதியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்" (ஏசா. 44:3)

ஆவியின் நிறைவுக்கு" பயன்படுத்தப்பட்டுள்ள பல பெயர்கள்

வேதாகமத்தில், ஆவியின் நிறைவை அனுபவிப்பதைக் குறித்து பல வழிகளில் விவரிக்கப்பட்டுள்ளது. இவைகளைப் பற்றி சுருக்கமாக நாம் பார்ப்போம்.

1. "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்

நாம் பேசுகிற இந்த அனுபவத்தை குறிப்பதற்கு புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள சொற்றொடர் இது.

- "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து..." (யோ.7:39)
- "....பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து".. (அப்.1:8)
- "அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." (அப்.2:38)
- "இவர்கள் வந்தபொழுது...பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணி.." (அப்.8:15,16).
- "நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா..." (அப்.10:47)
- "நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான்..." (அப்.19:2).

2. ஆவியால் அபிஷேகம் பண்ணப்படுதல்

"அபிஷேகம்" என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளதால், இது நமக்கு தெரிந்த ஒன்று. எண்ணெயால் அபிஷேகிப்பது போல்" ஒருவர் மீது ஊற்றுவது" என்பதே இதன் முக்கியத்துவம். இவ்வாறு ஆவியானவரின் வல்லமை ஒரு விசுவாசியின் மீது "ஊற்றப்படுகிறது". இயேசுவின் மீது இருந்த ஆவியானவரை விவரிக்க இந்த குறிப்பிட்ட சொற்றொடரே பயன்படுத்தப்பட்டுள்ளது. "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்

பண்ணினார், தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.'' (அப்.10:38).

3. ஆவியில் நிறைதல்

விசுவாசிகளுக்குள் இருக்கும் ஆவியானவரின் விளைவை இது விவரிக்கிறது. அவர்கள் ''ஆவியில் நிறைந்திருந்தார்கள்.'' பெந்தேகோஸ்தே நாளன்று இது நிகழ்ந்தது. ''அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வெறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.'' (அப்.2:4) ஆவியில் நிறைதல் ''தொடரும் ஒரு நிகழ்வு.'' எபே.5:12-ல் பவுல், இதை தொடர்காலத்தில் குறிப்பிடுகிறார். (உ.ம்.) ''...ஆவியினால் நிறைந்து.... இருங்கள்'', ஆவியின் நிறைவை காத்துக்கொள்ள, ஆவியின் ஊற்றிலிருந்து நாம் பருகுவது அவசியம்.

4. ஆவிக்குள் ஞானஸ்நானம் எடுத்தல்

இது வேதத்தின்உறுதியான ஆதாரம் இல்லாத, தர்க்கத்துக்குரிய ஒன்று. இது சுவிசேஷங்களில் நான்கு முறையும், அப்போஸ்தலருடைய நடபடிகளில் இரண்டு முறையும் இடம் பெற்றுள்ளது. (மத்.3:11, மாற்கு 1:8, லூக்கா 3:16, யோ.1:33, அப்.1:5, 11:6).ஞானஸ்நானம் கொடுத்தல் என்பது, ''முழுவதும் முழ்கச் செய்வது'' அல்லது ''நீருக்குள் அமிழ்த்துவது'' என்று பொருள்படுகிறது. இன்னும் ஆழமான ஒரு பொருளுமுண்டு. அது, தன்னைச் சுற்றியுள்ள ஒன்றை மாற்ற வல்லமையுடைய ஒன்றுக்குள் அமிழ்த்துவது'' என்று பொருள்படுகிறது. இன்னும் ஆழமான ஒரு பொருளுமுண்டு. அது, தன்னைச் சுற்றியுள்ள ஒன்றை மாற்ற வல்லமையுடைய ஒன்றுக்குள் அமிழ்த்துவது என்பதாகும். சாயத்துக்குள் மூழ்கச் செய்த ஒரு துணியின் நிறம் முழுவதுமாய் மாறுவதை உதாரணமாக கொள்ளலாம். எனவே ஆவிக்குள் ஞானஸ்நானம் எடுத்தல் என்பது, பரிசுத்த ஆவிக்குள் முழுவதும் மூழ்கச் செய்வது, அமிழ்த்துவது, அடக்கம் செய்வது, முழுவதும் சூழப்பட்டிருப்பது, முழுவதும் சுற்றப்பட்டிருப்பது போன்றவையாகும்.

5. ஆவிக்குள் விடுதலை

இது புதிய ஏற்பாட்டில் நேரடியாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் அதன் பொருள் மறைமுகமாக விளக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவர் ஒருவரை உயிர்ப்பூட்டும் போது அவர் தன்னுடைய ஆவியிலிருந்து விடுவிக்கப்படுகிறார் என்பதாக விவரிக்கிறது. இது ஒருவரை அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கும், உலர்ந்த நிலையிலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகளுக்கும், மலட்டுத்தன்மை யிலிருந்து கனிகொடுத்தலுக்கும் நடத்துகிறது. யோ.7:38-ல் இயேசு கூறியதை இது நிச்சயமாய் விவரிக்கிறது. ஒரு விசுவாசியின் ஆவிக்குள்ளிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகளுக்கு அவனை விடுவிக்கிறது.

ஆயிரக்கணக்கான விசுவாசிகளுக்குள் இன்று நிகழக்கூடிய நிகழ்வுகளை இந்த சொற்றொடர் மிகத் தெளிவாக விவரிக்கிறது. மட்டுமின்றி, உலகளாவிய புதுப்பித்தல் இயக்கத்திற்கு இது அதிகமாய் பயன்படுத்தப்படுகிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்பொழுது, பரிசுத்த ஆவியையும் பெற்றோம் என்று கூறும் அநேக கிறிஸ்தவர்கள் இவ்விதமான ஒரு வல்லமையான விடுதலையை அவர்களின் ஆவிக்குள் உணரவில்லை. ஆவிக்குள் ஞானஸ்நானம் என்னும் அனுபவமும், குறிப்பாக அந்நிய பாஷைகளைப் பேசும் அனுபவமும் கொண்டுவருகிற விடுதலையாகிய இந்த அனுபவத்தையே ''ஆவிக்குள் விடுதலை என்று அழைக்கிறோம்.

அத்தியாயம் 3 பரிசுத்த ஆவிக்குள்ளான ஞானஸ்நானம்

பரிசுத்த ஆவிக்குள்ளான ஞானஸ்நானத்தின் முதல் ஆதாரம்

''ஒருவர் ஆவியின் நிறைவை பெற்றுக்கொள்ளும்போது நடக்கும் முதல் அத்தாட்சியை நாம் இப்பொழுது ஆராயும்பொழுது, மூன்று காரியங்களை மனதில் கொள்ள வேண்டும்.

1. **இங்கே நாம் ஆரம்ப அடையாளத்தை மட்டுமே கவனத்தில் கொள்கிறோம்.** ஆவியின் நிறைவுக்கு பல்வேறு அடையாளங்களும் அத்தாட்சிகளும் உண்டு என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இங்கு குறிப்பாக, பரிசுத்த ஆவியின் வல்லமையை ஒருவர் பெற்றுக்கொள்ளும்பொழுது, அவர் உணரக்கூடிய முதல் அடையாளத்தையே மையப்படுத்திக் காட்டுகிறோம்.

2. **வேத அடையாளத்தையே நாம் தேடுகிறோம்.** எனவே நாம், தனிப்பட்ட அனுபவத்தையோ அல்லது மனித பாரம்பரியத்தையோ கவனிக்காமல், வேதாகமம நாட்களில் பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களின் அனுபவத்தின் அடிப்படை காரியங்களைக் குறித்து வேதாகமம் வெளிப்படுத்தும் ஆதாரங்களின் மீது கவனம் செலுத்துகிறோம்.

3. ஞானஸ்நானத்தைக் குறித்த மனித கருத்துக்களைக் காட்டிலும் ஆவிக்குள்ளான ஞானஸ்நானத்தின் **வேத அனுபவத்திலேயே நாம் அக்கறை காட்டுகிறோம்.** 'ஆவிக்குள் ஞானஸ்நானம் என்று பிறர் எளிதாய் கூறுகிற அநேக ஆவிக்குரிய அனுபவங்களும் உண்டு. 'இரண்டாம் ஆசீர்வாதம்', 'முழு சுத்திகரிப்பு', 'பரிசுத்த அனுபவம்' போன்றவைகளும் இவைகளுள் அடங்கும். இவை அனைத்தும் முக்கியத்துவம் வாய்ந்த, வேத அனுபவங்கள். இவைகளை நாம் தவிர்க்கவோ குறைத்து மதிப்பிடவோ இல்லை. இருந்தபோதிலும், இந்த பாடத்தைப் பொறுத்த வரையில், ஆவிக்குள் ஞானஸ்நானம் என்பதைக் குறித்து வேதாகமம் விளக்கும் ஆவிக்குரிய கிரியைகளே நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது.

அப்போஸ்தல நடபடிகளே இதற்கு முக்கிய ஆதாரம். ஆவியின் நிறைவை பெற்றுக்கொண்ட மக்களைக் குறித்து ஐந்து உதாரணங்களை நாம் இந்த ஆகமத்தில் பார்க்கிறோம்.

1. **பெந்தேகோஸ்தே நாள் (அப்.2:1-4)**
   வேதாகமத்திலுள்ள ஒரு முழுமையான நிகழ்ச்சியைக் குறித்த விளக்கம் இது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஐம்பது நாட்களுக்குப் பின்பு ஆவியைக் குறித்து கூறப்பட்ட இந்த வாக்குத்தத்தம், எருசலேமில் காத்திருந்த சீஷர்களிடத்தில் நிறைவேறியது. இது தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட ஆவியானவரின் புதிய கிரியையின் துவக்கம். ஆவியானவர் அவர்களிடத்தில் வந்ததற்கு அனேக அடையாளங்கள் காணப்பட்டன.

   முதலாவது, வானத்திலிருந்து பலத்த காற்று அடிக்கிற ஒரு முழக்கம்.

   இரண்டாவது, அக்கினிமயமான நாவுகள்.

   மூன்றாவது, ஆவியானவர் அருளியபடி அந்நிய பாஷைகளில் பேசுதல்.

   எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும், 'ஆவி' என்ற வார்த்தைக்கு 'காற்று' என்ற பொருளுமுண்டு. அப்படியானால் பரிசுத்த ஆவியின் வருகைக்கு முன்பு பலத்த இடிமுழக்கம் போன்ற காற்று வருவது முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது. பரிசுத்த ஆவிக்கு மாதிரியான ஜீவன், வல்லமை, இயக்கம், திறன் ஆகியவற்றை காற்று குறிக்கிறது. யோவான் ஸ்நானகன், இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று முன்னறிவித்திருந்தான். அக்கினி: துப்புரவாக்குதல், தூய்மையாக்குதல், சுத்திகரித்தல், பதரை எரித்தல் ஆகியவற்றிற்கு அடையாளமாக இருக்கிறது.

   இவ்விரண்டு நிகழ்வுகளும் சீஷர்கள் 'ஆவியில் நிறைவதற்கு' முன்பே நடந்தது. எனவே, இவைகள் ஆவியின் நிறைவுக்குரிய ஆதாரங்கள் என்று கருதமுடியாது. ஆவியின் நிறைவுக்குப் பின்பு சீஷர்கள் 'ஆவியானவர் அருளியபடி அந்நிய பாஷைகளை பேச ஆரம்பித்ததே' அதற்குரிய வெளிப்படையான அடையாளம். அவ்வேளையில் 120 சீஷர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவருமே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள் என்றும், அந்நிய பாஷைகளைப் பேசினார்கள் என்றும் நமக்குத் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. சீஷர்கள் ஒருபொழுதும் படித்திராத பாஷைகளை பேசுவதற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமையே இந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு சீஷனுடைய வெளிப்படை அடையாளம் ஆகும். அந்நாளில் வெளிப்பட்ட மூன்று அடையாளங்களில் ஒன்று மாத்திரமே பின்வந்த நாட்களில் ஆவிக்குள்ளான ஞானஸ்நானத்தைத் தொடர்ந்து, நிலையாய் நடக்கிற காரியமாய் காணப்படுகிறது. அது அந்நிய பாஷைகளை பேசுவதே.

2. கொர்நேலியுவின் வீடு

பேதுரு இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில், ரோம நூற்றுக்கதிபதி, கொர்நேலியு என்னும் புறஜாதியானுடைய (யூதர் அல்லாத) வீட்டுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டான். தேவனுடைய ஆசீர்வாதங்கள் யூதருக்கு மட்டுமே என்னும் அவனுடைய தீர்ப்புக்கு எதிராக அவன் கீழ்ப்படிந்தான். அது மட்டுமல்ல, 'தேவனாலே கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு' ஆவலாய் கூடியிருந்த ஒரு கூட்ட மக்களை எதிர்கொண்டான். (அப்.10:33). பேதுரு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவர்களிடத்தில் பேச ஆரம்பித்தான் (அப். 10:34-43). அவள் பேசிக் கொண்டிருக்கும்போதே, வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பேதுருவுடைய யூத கூட்டாளிகள் புறஜாதியாருக்கு நடந்த இந்த காரியத்தை முதலில் நம்ப மறுத்தார்கள் (10:45). ஆனால் அவர்கள், புறஜாதியார் ''பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழ்கிறதையும், கேட்கும்போது'' பிரமிப்படைந்தார்கள். இந்த அடையாளம் பேதுருவை, ''நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா'' என்று சொல்லத் தூண்டியது. (அப். 10:47)

பேதுரு எருசலேமுக்குத் திரும்பிய பொழுது, செசரியாவில் நடந்தவைகளைக் குறித்து விவரிக்கும்படி அழைக்கப்பட்டான். அவர்கள் உண்மையில் அவனோடு வாக்குவாதம் பண்ணினார்கள் (அப். 11:3). ஆகவே அவன் தன்னுடைய செய்கைகளை விவரிக்கத் தொடங்கி, ''நான் பேசத் தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்'' என்று கூறினான். (அப். 11:15). மேலும் அவன், ''... நமக்கு தேவன் வரத்தை அனுக்கிரகம் பண்ணினதுபோல அவர்களுக்கும் அந்த வரத்தையே அனுக்கிரகம் பண்ணியிருக்கும்போது...'' என்று விவரித்தான். அவனுடைய விவாதம் என்னவென்றால் பெந்தேகோஸ்தே நாளன்று யூத விசுவாசிகளை தேவன் எப்படி ஆசீர்வதித்தாரோ, அப்படியே புறஜாதிகளையும் பரிசுத்த ஆவியின் வரங்களினால் ஆசீர்வதித்தார் என்பதாகும். அதற்கு முக்கிய காரணம், அவர்கள் அந்நிய பாஷைகளை பேசியதே. ''இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து... தேவனை மகிமைப்படுத்தினார்கள்''. (அப். 11:18)

3. எபேசுவில் பவுல் (அப். 19:1-7)

இங்கே நாம் மூன்றாவது நிகழ்ச்சியை பார்க்கிறோம். பவுல் தனது மிஷினெரி யாத்திரையில், யோவான் ஸ்நானகனுடைய சீடர்கள் இருக்கும் கிரேக்க நகரமாகிய எபேசுவுக்கு வந்தான். ''நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா'' என்ற அவனுடைய கேள்விக்கு அவர்கள், ''பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை'' என்று பதிலளித்தார்கள். ஆகவே பவுல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்தான். பின்னர் அவர்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்னர் பவுல் அவர்கள் மீது தன் கைகளை வைத்த போது, ''பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார், அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்''.

இந்த மூன்று உதாரணங்களிலும், பரிசுத்த ஆவிக்கும் ஞானஸ்நானம் ஒரு சுருக்கமான, உறுதியான, உடனடியான நிகழ்வு என்பதாக நாம் பார்க்கிறோம். இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும், ஒரு உண்மை தெளிவாய் புலப்படுகிறது. அது, வசனத்தைக் கேட்ட யாவர் மீதும் பரிசுத்த ஆவி இறங்கியதன் நேரடி விளைவு, அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள் என்பதே. எனவே நாங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுவது பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதன் உண்மையானதும் நம்பத் தகுந்ததுமான முதல் ஆதாரமாக கருதுகிறோம்.

அப்போஸ்தல நடபடிகளில், விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட இன்னும் இரண்டு நிகழ்ச்சிகள் எழுதப்பட்டுள்ளன.

4. சமாரியாவில் எழுப்புதல் (அப். 8)

இந்த குறிப்பிட்ட பகுதியில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள் அந்நிய பாஷைகளை பேசினதாக குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், தெரிந்து கொள்ள வேண்டிய ஆர்வமுள்ள சில கருத்துக்கள் உண்டு. முதலில், பிலிப்புவின் பிரசங்கத்திற்கு உண்மையான வரவேற்பு இருந்தது. அதனுடைய உடனடி விளைவுகள்:-

- "... அவனால் சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டுக் கவனித்தார்கள்" (8:6).
- "... அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று" (8:8)
- :... அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல்..." (8:15)

பேதுருவும், யோவானும் அவர்கள் மீது கைகளை வைத்த போது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். பரிசுத்த ஆவியைப் பெறுவதின் நேரடி விளைவாக நடந்தவைகளை மந்திரவாதியாகிய சீமோன் பார்த்தான். அது எதுவாயிருந்தாலும், அது திடீரென நடந்தது, மற்றவர்கள் பார்க்கும்படி வித்தியாசமாகவும் இருந்தது. இவைகளை விளைவிக்கச் செய்வதின் திறமையை சீமோன் விரும்பினான். உண்மையில் சீமோன் எதைப் பார்த்தான் என்பதைக் குறித்து அதிகம் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக எவரும் கூற இயலாவிட்டாலும், வேதாகம நாட்களில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்போது காணப்பட்ட அதே அடையாளத்தையே சீமோன் பார்த்தான் என்று யூகப்படுத்திக் கொள்ளலாம்.

5. தர்சுவின் சவுல் (அப். 9)

சவுலுடைய மனமாற்ற அனுபவத்திற்குப் பின்பு தேவன் அனனியாவை அவனிடத்தில் அனுப்பி, "சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும், பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கு என்னை அனுப்பினார்" (9:17) என்று கூறினார். பவுல் தனது பார்வையை மீண்டும் பெற்றான் என்று நமக்குத் தெரியும். மேலும், தேவ பணியின் அடுத்த பகுதியும் நிறைவேறியது என்பதை நாம் நிச்சயமாக யூகிக்கலாம். அதாவது, சவுல் பரிசுத்த ஆவியால் நிறைக்கப்பட்டான். உடனடியாக அவன் அந்நிய பாஷைகளில் பேசினான் என்று கூறப்படாவிட்டாலும், பிந்தைய நாட்களில் அவன் அப்படிச் செய்தான் என்பது நமக்கு நிச்சயமாக தெரியும். உண்மையில், அந்நிய பாஷைகளின் தவறான உபயோகத்தை சரிசெய்ய அவன் கொரிந்து சபைக்கு எழுதும் பொழுது, "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" (1 கொரி. 14:18) என்று அறிக்கை செய்கிறான். அதே அதிகாரத்தில் மேலும் அவன், "நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்..." (1 கொரி. 14:5) என்றும், இறுதியாக "... அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடை பண்ணாதிருங்கள்" (1 கொரி. 14:39) என்றும் கூறுகிறான்.

முன்னதாக நிகழ்ந்த இவ்வித வேதாகம அனுபவங்களின் ஆதாரத்தை அடிப்படையாய்க் கொண்டு, அந்நிய பாஷைகளைப் பேசுவது பரிசுத்த ஆவிக்குள்ளான ஞானஸ்நானத்தின் முதல் அடையாளம் என்று நாங்கள் தாழ்மையுடன் உறுதிப்படுத்துகிறோம். இந்த முதல் அடையாளத்தைத் தொடர்ந்து இன்னும் அநேக வேத அடையாளங்கள் உண்டு என்றும், அவைகளின்றி இந்த அனுபவம் பூரணப்படாது என்றும் நாங்கள் உறுதிபட கூறுகிறோம்.

அத்தியாயம் 4 பரிசுத்த ஆவியும் விசுவாசியும்

நம்முடைய வாழ்வில் ஆவியானவர் உருவாக்கும் கிரியையின் முதல் நோக்கம் இரட்சிப்பு. பரித்த வாழ்வுக்கும் சேவை செய்வதற்கும் தேவையான தேவ வல்லமை. நம்முடைய வாழ்வின் இரண்டாவது நோக்கம்.

இரட்சிப்பைக் கொண்டு வர

A. குற்ற உணர்வை அவர் கொண்டுவருகிறார். (யோ.16:8-11)

பரிசுத்த ஆவியானவரின் முக்கியமான வேலைகளில் ஒன்று இரட்சிக்கப்படாத மக்களை பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவற்றைக் குறித்து கண்டித்து உணர்த்துவதும், குற்ற உணர்வை ஏற்படுத்துவதும் ஆகும். ஆவியானவருடைய கண்டித்து உணர்த்தும் இந்த கிரியை இல்லாவிட்டால் நாம் நம்முடைய பாவத்தைக் குறித்தும் இழந்துபோன நிலைமையை குறித்தும் அறியாமலேயே இருப்போம். அவர் நம்முடைய பாவநிலையையும், தேவ நீதியிலிருந்து எவ்வளவு விலகிவிட்டோம் என்பதையும், ஒவ்வொரு பாவிக்கும் காத்திருக்கிற பயங்கரமான நியாயத்தீர்ப்பையும் அறியச் செய்கிறார்.

B. அவர் இரட்சிப்பையும் புதுவாழ்வையும் அருளுகிறார்.
"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." (யோ.6:63)

C. அவர் பாவம், மரணம் ஆகியவற்றின் வல்லமையிலிருந்து விடுவிக்கிறார்
"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே." (ரோ.8:2).

D. அவர் இரட்சிப்பின் நிச்சயத்தை தருகிறார்.
"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்." (ரோ.8:16). "...ஆவியானவர் சத்தியமாகையில், ஆவியானவரே சாட்சி கொடுக்கிறார்." (1யோ.5:6) "பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது." (1யோ.5:8).

E. அவர் நம்மை சத்தியத்துக்குள் நடத்துகிறார்.
"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள். யாவையுஞ் சொல்லி, வரபோகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோ.16:13).

F. அவர் எல்லாவற்றையும் நமக்கு கற்றுத் தருகிறார்
"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோ.14:26). "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை, அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது, அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தப்படியே அவரில் நிலைத்திருப்பீர்களாக." (1யோ.2:2).

G. அவர் நம்முடைய சரீரங்களை "உயிர்ப்பூட்டுகிறார்."
'அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." (ரோ.8:11). "சாவுக்கேதுவான" என்ற வார்த்தைக்கு "மரணத்திற்கேதுவான குற்றத்தீர்ப்பு" என்று பொருள். மேலும் அது நமது சரீரங்களைக் குறிக்கிறது. "உயிர்ப்பூட்டல்" என்ற வார்த்தைக்கு ஜீவனை அளித்தல் என்று பொருள். எனவே, இந்த வார்த்தையின் வாக்குத்தத்தம், பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணும்போது நமக்கு ஜீவனையும் பெலத்தையும், ஆரோக்கியத்தையும், உடல் வலிமையையும் தருவார் என்று உறுதி அளிக்கிறது. ஆவிக்குள் வாழ்வது என்பது ஆரோக்கியமான ஒரு வாழ்வாகும்.

H. பரிசுத்த ஆவியானவர் ஊழியத்திற்கு தேவையான வல்லமையை தருகிறார்.
"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து.... எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்..." (அப்.1:8). இயேசு பயன்படுத்திய டுனாமிஸ் என்ற இந்த வார்த்தையிலிருந்து, நிலையான, தொடர்ச்சியான மின்சாரத்தை தானே உருவாக்குகிற இயந்திரத்தை குறிக்கும் டைனமோ என்ற வார்த்தை கிடைக்கிறது. இவ்வாறு நமக்குள் இருக்கிற ஆவியானவருடைய வல்லமை கிறிஸ்துவின் சாட்சிகளாக மாறுவதற்கு தேவையான வல்லமையை நமக்குள் உருவாக்குகிறது. இயேசுவுக்காக சாட்சி பகர மாத்திரமல்ல, உண்மையில் அவருக்குள் சாட்சிகளாக மாறிவிடுகிறோம்.

I. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஜெபங்களை வல்லமையுள்ளதாக்குகிறார்.
".....பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி" (யூதா.20)." எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி..." (எபே.6:18) "அந்தப்படியே

ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றப்படி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னவென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.'' (ரோ.8:26-27).

J. பரிசுத்த ஆவியானவர் தேவனுக்கு துதியையும் ஆராதனையும் செய்ய நம்மை ஏவுகிறார். ''நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே என்றார்கள்.'' (அப்.2:11). ''அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும்...'' (அப்.10:46). ''...ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து...'' (பிலி.3:3). ''...ஆவியினால் நிறைந்து: சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி...'' (எபே.5:18:19). ''தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும். (யோ.4:24).

அத்தியாயம் 5 பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுதல்

பரிசுத்த ஆவிக்குள்ளான ஞானஸ்நானத்தை ஒருவர் பெற்றுக்கொள்ள தேவையான முதல் தகுதி, அவர் இயேசுகிறிஸ்துவை ஆண்டவராகவும் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். நீ தேவனுடைய பிள்ளையாயிருந்தால் பரிசுத்த ஆவியின் வரங்களை பெற்றுக்கொள்ளலாம். அதற்குரிய இரண்டாம் தகுதி, அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ஆழமான வாஞ்சை இருக்க வேண்டும். இயேசு இவ்வாறு சொன்னார், ''ஒருவன் தாகமாயிருந்தால், அவன் என்னிடம் வந்து பருகக் கடவன்''. ஆவியின் ஜலத்தைப் பருக நீ தாகமாயிருக்கிறாயா? அப்படி நீ இருந்தால் இயேசுவினிடத்தில் வந்து பருகு. இது மிகவும் இலகுவானது. இந்த ஆசீர்வாதத்தை நீ சம்பாதிக்க வேண்டியதில்லை என்பதை நினைவில் கொள். அதற்கு மாறாக நினைத்தால், அது பரிசுத்த ஆவியின் இலவசமான ''வரமாக'' இருக்கமுடியாது. இந்த அற்புதமான ஆசீர்வாதத்தை உன்னால் சம்பாதிக்க ஒருபோதும் இயலாது. அது தேவையும் அல்ல. இது உனக்குக் கொடுக்கப்படுகிற இலவச பரிசு. இந்த அரிய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள நீ செய்ய வேண்டிய எளிதான மூன்று காரியங்களை உனக்குச் சொல்லுகிறேன். அவைகள் ஆசுவாசப்படு, பெற்றுக்கொள், பதில் செய். அவைகளை ஒன்றன்பின் ஒன்றாக சுருக்கமாய் பார்க்கலாம்.

1. **ஆசுவாசப்படு.** அநேக வேளைகளில் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள வேண்டி வரும்போது ஜனங்கள் பதற்றமடைந்து விடுகிறார்கள். அதற்கு அவசியமே இல்லை. அது உனக்கு உதவுவதற்கு மாறாக தடை ஏற்படுகிறது. எனவே, ஆசுவாசப்படு என்று உன்னை உற்சாகப்படுத்துகிறேன். முதலில் சரீரத்தில் ஆசுவாசப்படு, அது ஆவிக்குரிய பிரகாரமாகவும், உணர்ச்சிப்பூர்வமாகவும் ஆசுவாசப்பட உனக்கு உதவி செய்யும். ஓர் இடத்தில் அமைதியாய் அமர்ந்திருக்கலாமே. பெந்தேகோஸ்தே நாளன்று சீஷர்கள் உண்மையில் அமர்ந்திருந்தார்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள இதுவே வேதாகமம் கூறும் நல்ல நிலை. நன்றாக அமர்ந்து ஆசுவாசப்படு. நீ நல்ல கரங்களாகிய இயேசுவின் கரங்களில் இருக்கிறாய். அவரே பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பவர்.

2. **பெற்றுக்கொள்.** இப்பொழுதே உனக்கு ஆவிக்குள்ளான ஞானஸ்நானம் அருளுமாறு இயேசுவை கேட்டுக்கொள்வது நலமாயிருக்கும். எளிமையான முறையில், அமைதியாக, விசுவாசத்துடன் கேள். மன்றாடவோ முறையிடவோ உன்னுடன் இருக்கிறார். அவர் உன் ஜெபத்தைக் கேட்க முடியும். உன்னை விசுவாசத்துடன், அவர் உன் ஜெபத்தைக் கேட்க முடியும். உன்னை ஆவியால் நிரப்பும்படி நீ அவரை அமைதியாக கேட்டுக்கொண்ட பின்னர், விசுவாசத்துடன், அவர் உன் ஜெபத்திற்கு பதிலளித்துவிட்டார் என்று நீ நம்ப வேண்டும். பரிசுத்த ஆவியை

விசுவாத்தால் பெற்றுக்கொள்!. ஆவியைக் குறிக்கும், அதே வார்த்தையே சுவாசத்தையும் குறிக்கும் என்பதை நினைவில் கொள். வாயைத் திறந்து, ஆழமான மூச்செடுத்து பரிசுத்த ஆவியானவரை சுவாசிக்கலாமே. இதையே இயேசு ஆவியை மூச்செடுத்து பரிசுத்த ஆவியானவரை சுவாசிக்கலாமே. இதையே இயேசு ஆவியை 'பருகுவது' என்று குறிப்பிடுகிறார். தண்ணீரைப் பருக நீ உன் வாயைத் திறப்பது போலவே, ஆவியை பருகுவதற்கும் நீ உன் வாயைத் திறக்கலாம். உன் வாயைத் திறந்து உள்ளே சுவாசி, அவ்வாறு செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் புதிய விதத்தில் உன் வாழ்விற்குள் வருகிறார் என்று நம்பு. இதை விசுவாசத்தில் செய். ''ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்.'' (மாற்கு.11:24). இதை விசுவாசத்தில் செய்கிறாய். இது உணர்வுகள் அல்ல என்பதை நினைவில் கொள். எந்த வித உணர்ச்சிபூர்வமான அனுபவத்தையும் நீ ஒரு வேளை உணரமாட்டாய். இது உணர்ச்சிப்பூர்வமான அனுபவம் அல்ல. இது ஒரு ஆவிக்குரிய அனுபவம். உணர்ச்சிப்பூர்வமான அனுபவமும் இருக்கலாம். இல்லாமலும் போகலாம். அப்படி இருக்குமானால் விசுவாசத்துடன் அதை அனுபவி. அப்படி இல்லாதிருந்தால், அதைக் குறித்து கவலைப்படாதே. உணர்ச்சிகள் தவறாகவும், நம்பத்தகாததாகவும் இருக்கலாம். நீ எதை உணர்கிறாய் என்பது முக்கியமல்ல. எதை நம்புகிறாய் என்பதே முக்கியம். நீ ஆவியை பெற்றுக்கொண்டாய் என்று நம்பு. எனவே இது தான் முதல் படி. பரிசுத்த ஆவியை-உள்ளே சுவாசிப்பது''. அப்படிச் செய்யும் போது, தேவன் உன்னை ஆவியால் நிரப்பியதற்காக அவருக்கு மகிழ்ச்சியுடன் நன்றியையும் துதியையும் ஏறெடுக்கத் துவங்கு. உன் உள்ளம் துதியின் மூலம் தேவனை எட்டட்டும். இன்னும் ஆழமாக ஆவியை பருகிக்கொண்டேயிரு.

3. **பதில் செய்.** உன்னை முழுவதுமாய் நிரப்ப ஆரம்பிக்கிற பரிசுத்த ஆவியானவருக்கு உன்னுடைய பதிலே, மூன்றாவது படியாகும். உள்ளே சுவாசித்த நீ, வெளியேயும் சுவாசிக்க வேண்டும். ஆவியை உள்ளே சுவாசித்தாய், இப்போது நீ விசுவாசத்தில், தேவன் தந்த ஆசீர்வாதத்திற்காக அவருக்கு துதியை வெளியே சுவாசிக்க வேண்டும். இதைச் செய்யும்போது உன் தாய்மொழியிலோ, நீ அறிந்த பாஷையிலோ பேசவேண்டாம். தேவனை துதிக்க வாஞ்சி, ஆனால் ஆவியானவர் உனக்கு கொடுக்கும் புதிய பாஷையில் (அறியாத) நம்பிக்கையுடன் அதை செய். அந்நிய பாஷைகளில் பேசுவது ஒரு அற்புதம். ஆவியானவர் அருளும் ஒரு வியக்கத்தக்க திறன். இது ஒரு கடினமான செயல் என்று அர்த்தமல்ல. நீ தேவனோடு ஒத்துழைக்க வேண்டும். என்று இதற்கு ஒரு நல்ல உதாரணம். (மத்.14:29). இயேசு பேதுருவை நோக்கி, ''வா'', என்று அழைத்தார், அதன் பின்பு, ''பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான்'' என்று நாம் வாசிக்கிறோம். பேதுரு ஜலத்தின்மேல் நடந்தபோது, அவன் சுயநினைவுடன் எந்த ஒரு வியக்கத்தக்க செயலையும் செய்யவில்லை. அவன் உலர்ந்த தரையில் நடப்பது போலவே சாதாரணமாக நடந்தான். ஆனால் அவன் மூழ்கிப் போகாததுதான் அற்புதம் நாம் அந்நிய பாஷைகளில் பேச ஆரம்பிப்பதும் அதைப் போன்றது தான். நாம் நமது நாவையும், உதடுகளையும் எப்பொழுதும் பேசும்போது எவ்வாறு பயன்படுத்துகிறோமோ, அவ்வாறே இப்பொழுதும் பயன்படுத்துகிறோம். இயற்பியல் சார்ந்த செயலான பேச்சில் அற்புதம் நிகழவில்லை. நாம் பேசும்படி நமக்கு கொடுக்கப்பட்ட பாஷை தான் அற்புதம்-வேறு வகையில் சொல்லவேண்டுமென்றால், நீ **எப்படி** பேசுகிறாய் என்பதல்ல, **எதை** பேசுகிறாய் என்பதே அற்புதம்.

பேசுவதும் நடப்பதைப் போலவே ஓர் இயல்பான செயல். நீ அந்நியபாஷையில் பேசும்போது, அதன் இயற்பியல் சார்ந்த பகுதி, உன் பேச்சுத்திறனை நீ பயன்படுத்தும் வேறு எந்த சமயத்திலும் உள்ளதைப் போலவே இயல்பானதாக இருக்கிறது. நீ இதுவரை அறிந்திராத அல்லது கேட்டும்கூட இராத மொழிகளில் பேசுவதற்கு பரிசுத்த ஆவியானவர் வார்த்தைகளை கொடுக்கும்போது அற்புதம் நிகழ்கிறது. அந்நிய பாஷைகளில் பேசுவதன் இலகுவான, எளிமையான தன்மையைப் பற்றி நான் ஏன் வற்புறுத்திக் கூறுகிறேன். என்றால் இதைப் பற்றித் தான் அனேகருக்கு குழப்பம் நேரிடுகிறது. அவர்கள் இதை தங்களுக்கு கடினமாக்கிக் கொள்ளுகிறார்கள். இது தங்களால் செய்ய இயலாத காரியம் என்று நினைக்கிறார்கள். சிலர் நன்றாக அசுவாசப்படுவதை விட்டுவிட்டு பதற்றமடைகிறார்கள். அநேகர் தங்களாலே நேர்ந்தது என்று இது ஆகிவிடக்கூடாது என்பதில் கருத்துள்ளவர்களாயிருப்பதால்,

தாங்கள் எவ்வித தீவிர செயல்பாட்டிலும் பங்குகொள்ளாமல், தேவன் தங்கள் உதடுகள் வழியாக பேசுவார் என்று எதிர்பார்த்து காத்திருந்து, உறைந்துபோய் செயலற்று அமர்ந்துவிடுகிறார்கள்.

அப்.2:4-ல், ''அவர்கள்''- (சீஷர்கள்) என்ற சொல், வாக்கியத்தின் எழுவாயாக வருகிறது என்பதை தயவாக கவனியுங்கள். எனவே, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட சீஷர்கள் தாங்களே. ''ஆவியானவர் அவர்களுக்கு அருளியபடி அந்நிய பாஷையில் பேசத் தொடங்கினார்கள்.'' நீங்கள் அந்நிய பாஷைகளில் பேச ஆரம்பிக்கும்பொழுது, அதை ஆரம்பிக்கிறவர்கள் நீங்களே நீங்களே வார்த்தைகளை பேசுகிறீர்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவார் அவைகளை உங்களுக்குக் கொடுப்பார். பரிசுத்த ஆவியானவர் உங்கள் மனதை சத்தங்கள், வார்த்தை, சொற்றொடர் ஆகியவற்றால் நிரப்புகிறார். இவைகள் உங்களுக்கு விசித்திரமாகத் தோன்றலாம். இது முன்பு நீங்கள் ஒருபொழுதும் கேட்டிராத ஒரு பாஷை. இது நீங்கள் எப்பொழுதும் கேட்கிற பூமிக்குரிய பாஷையிலிருந்து மிகவும் வித்தியாசமான, தூதர்கள் அல்லது பரலோக பாஷையாக இருக்கலாம். ஆவியானவர் அந்த வார்த்தைகளை உங்களுக்குக் கொடுக்கும் போது அவைகளை பேசுங்கள். அவைகள் உங்கள் மனதில் இருந்தல்ல, உங்களுக்குள் இருந்து வெளிவருகிறது. பயப்படாதிருங்கள். ஆரம்பத்தில் உங்களுக்கு ஒன்று அல்லது இரண்டு வார்த்தைகள் மட்டுமே கிடைக்கலாம். அவைகளை நீங்கள் திரும்திரும்ப பேதுவதுபோல உங்களுக்குத் தோன்றலாம். அப்படியே செய்யுங்கள். நீங்கள் விசுவாசத்தில் தைரியமாய் பேசும்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு அதிக வார்த்தைகளை தருவார். உங்களுக்குள்ளிருந்து நதிகள் பாய்ந்தோட ஆரம்பிக்கும் வரைக்கும் வார்த்தைகள் உங்களில் பாய்ந்து கொண்டே இருக்கும். எனவே, நீங்கள் பரிசுத்த ஆவியை உள்ளே சுவாசித்த பின்னர், அதைத் தொடர்ந்து தேவனுக்கு துதிகளை செலுத்துவதன் மூலம் சுவாசத்தை வெளியிடுவோம் என்று தீர்மானியுங்கள்.

உங்கள் சொந்த மொழியில் அல்ல ஆனால் உங்கள் சொந்த சத்தத்தில் அதை செய்கிறீர்கள் என்பதை உறுதி செய்யுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஒரு புதிய நாவை தந்தருளுவார் என்று எதிர்பார்க்கும் அதே நேரத்தில், விசுவாசத்தால் அந்த புதிய பாஷையை பேசத் துவங்குங்கள் உங்கள் இருதயத்தில் ஆவியானவர் வைக்கிற எல்லாவற்றையும் வேகமாய் பேசுங்கள். உங்களுடைய உதடுகள் நடுங்க ஆரம்பிப்பத்தையும் உங்களுடைய வாய் வித்தியாசமான சத்தங்களால் நிறைந்திருப்பதையும் உணருவீர்கள். அவைகளை சத்தமாய் பேசுங்கள். ஒரு முறை நீங்கள் பேச ஆரம்பித்தவுடன், அதை தொடர்ந்து செய்யுங்கள். அதை நிறுத்திவிடாதிருங்கள். அது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கட்டும். அது எந்த அளவுக்கு பாய்கிறதோ, அந்த அளவுக்கு நீங்கள் இலகுவாகிவிடுவீர்கள். அது எதைப்போலிருக்கிறது. என்பதைக் குறித்து கவலைப்படாதிருங்கள். அது பரிசுத்த ஆவியானவருடைய வேலை. இந்த நேரத்தில் நீங்கள் எந்த பாஷையைப் பெற்று கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ, அதை உங்களுக்கு தந்தருளுவார்.

அந்நிய பாஷையின் வரத்தை நீங்கள் தொடர்ந்து பயன்படுத்தும்பொழுது ஒரு பாஷையிலிருந்து இன்னொரு பாஷைக்குச் செல்லுவீர்கள். ஏனெனில், அநேக விதமான மொழிகள் உள்ளன (1கொரி. 12:10). ஆவியானவர் உங்களுக்கு அருளுகிறபடி, ஒருமுறை அந்நிய பாஷைகளில் பேசியபின்பு, நீங்கள் விரும்புகிற பொழுதெல்லாம் இந்த வரத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். இது உங்கள் முதல் முயற்சியையும், தீர்மானத்தையும் சார்ந்திருக்கும்.

''இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்''...(1கொரி. 14:15) என்று பவுல் கூறுகிறார். நீங்கள் விரும்பும்பொழுதெல்லாம் கருத்துடனோ, அல்லது ஆவியுடனோ நீங்கள் ஜெபிக்கலாம். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாளில் பல தடவைகளும் இந்த காரியத்தை செய்யுங்கள். நீங்கள் செய்யும்பொழுதெல்லாம் அது உங்களை பெலப்படுத்தும், உங்களை ஆசீர்வதிக்கும் ஏனெனில், ''அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்..'' (1கொரி.14:4) என்று பவுல் நமக்கு கூறுகிறார். இந்த புதிய பாஷையில் நீங்கள் பேசவும் ஜெபிக்கவும் செய்யும் ஒவ்வொரு நேரத்திலும் நீங்கள் உங்களையே ஆவிக்குரிய விதத்தில் வளர்க்கிறீர்கள். இதைச் செய்கிற ஒருவருக்கு பக்திவிருத்தி உண்டாக்கும் ஆவிக்குரிய வரங்களில் இது ஒன்று. ஆவியின் மற்ற வெளிப்பாடுகளெல்லாம் பிறருடைய பக்திவிருத்திக்கு ஏதுவாக இருக்கிறது. மகா பரிசுத்த விசுவாசத்தில் உங்களை நீங்களே வளர்ப்பதற்கு இது உங்களுக்கு உதவுகிறது (யூதா 20).

அத்தியாயம் 6 ஏன் அந்நிய பாஷையில் பேச வேண்டும்?

ஒருவருக்குப் புரியாத பாஷைகளில் பேசுவதன் நோக்கம் அல்லது பயன் என்ன? ஆவியினால் அருளப்படும் பாஷைகளில் தேவனோடு தொடர்பு கொள்வதன் சில பயன்களை நாம் இங்கே காணலாம்.

1. இது ஆவியின் நிறைவுக்கான முதல் ஆதாரம்.

"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்." (அப்.2:4). "அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்." (அப்.10:46). "...பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்." (அப்.19:6).

2. இது நமக்கான தேவனுடைய சித்தம்

தேவன் (பவுலின் மூலம்) "நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்..." (1கொரி. 14:5) என்று கூறுகிறார். மேலும் பவுல், உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக என்தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்." என்ற உணர்ச்சிபூர்வமாக தெரிவிப்பதை கவனியுங்கள். ஆவிக்குரிய பாஷைகளை தேவனோடு பேசுவதால் ஒருவருடைய தேவனோடுள்ள நெருங்கிய உறவையும் ஐக்கியத்தையும் அதிகரிக்கவும் பெலப்படுத்தவும் செய்கிறது.

பவுல் கீழ்க்கண்ட காரியங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறார்.

அந்நிய பாஷைகளை பேசும் ஆற்றல் ஏனென்றால், இது ஆவியின் மூலம் தேவனால் மாத்திரமே அருளப்படுகிறது.
பரிசுத்தமும் உள்ளார்ந்த இரகசியங்களும் அடங்கிய பாஷைகளைப் பேசும் சிலாக்கியம் (1கொரி.14:2).
இந்த ஆசீர்வாதத்தை எளிதில் பெறும் தன்மை ஒருவர் எந்த நேரத்திலும் எங்கேயும் எந்த சூழ்நிலையிலும் தேவனோடு நெருங்கிய உறவு வைத்துக் கொள்ள முடியும். நாம் ஆவியில் ஜெபிக்கலாம், பாடலாம், நன்றி சொல்லலாம், துதிக்கலாம். இந்நேரத்தில் நம்முடைய மனம் சாந்தமாக இருக்கிறது. இவ்வாறு நாம் ஆசுவாசத்தோடு, புத்துணர்ச்சியோடு, பக்திவிருத்திக்கேதுவாக இந்த ஆவிக்குரிய செயல்பாட்டில் ஈடுபடுகிறோம்.

3. குணப்படுத்தும் இயல்புடைய சுத்திகரிப்பும் விடுதலையும்.

ரோ.8:26-ல் நாம் எதற்காக ஜெபிக்க வேண்டுமென்று எல்லா நேரத்திலும் நமக்குத் தெரியாததே மனுஷ குறைபாடுகளில் ஒன்றாக பவுல் கூறுகிறார். சில வேளைகளில் நமக்கு உதவி தேவைப்படுகிறது என்று நாம் அறிகிறோம். ஆனால் உண்மையில் எது தவறு என்றோ அதற்காக எப்படி ஜெபிக்க வேண்டும். என்றோ நமக்குத் தெரியவில்லை. இருந்த போதிலும், ஆவியானவர் நம்முடைய இந்த குறைபாடை மேற்கொள்கிறார். அவர் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து நாம் எங்கு இருக்கிறோம் என்றும் எது தவறு என்றும் வெளிப்படுத்திக் காட்டுகிறார். ஆவியின் சிந்தை நமக்கான தேவனுடைய சித்தம் என்ன என்பதையும் அவர் அறிகிறார். அதன்பின், தேவனுடைய சித்தத்ததோடுநம்மை இசைந்து வரச் செய்கிறார். நம்மை பாதிக்கிற பலதரப்பட்ட உணர்ச்சி சிக்கல்களுக்காகவும், தடைகளுக்காகவும், தவறான எண்ணங்களுக்காகவும் அவர் ஜெபிக்கிறார். மேலும் நம்முடைய வாழ்வுக்கான நன்மை பயக்கும் தேவனுடைய சரியான வல்லமையான நோக்கங்களுக்காகவும் ஜெபிக்கிறார். இந்த வகையான ஜெபமே நம்முடைய மனம் புதிதாவதற்கு ஏதுவான மிகவும் வல்லமை வாய்ந்த வழிமுறைகளில் ஒன்று.

4. சுயபக்திவிருத்திக்கேதுவான ஆதாரம்

"அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்." (1கொரி.14:4). "பக்திவிருத்தி என்ற வார்த்தையிலிருந்து 'மாளிகை' அல்லது கட்டிடம் என்ற வார்த்தை விளைகிறது. எனவே பக்திவிருத்தி என்பது கட்டி எழுப்புவது என்பதாகும். அந்நிய பாஷைகளில் பேசும்பொழுது,

அவைகள் மனித ஞானத்திற்குப் புரியாத புதிராக இருந்தாலும் நாம் நம்மையே ஆவிக்குரிய விதமாய் கட்டுகிறோம். இந்த திறமையை செயல்படுத்தும்பொழுதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வளருகிறோம்.

5. தேவனுடன் நெருங்கிய ஆவிக்குரிய உறவின் எல்லை.

"ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாததிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்." (1கொரி.14:2).

இந்த ஆவிக்குரிய செயலாகிய அந்நிய பாஷைகளை பேசுவதன் முக்கிய நோக்கம் நாம் மனிதரிடத்தில் பேசுவதல்ல, மாறாக நாம் தேவனிடத்தில் பேசுவதாகும். தேவனோடு இவ்விதத்தில் நாம் உரையாடுவதின் மூலம் வரையறைக்குட்பட்ட சிறிய மனதின் கட்டுப்பாடுகளிலிருந்தும், வரம்புகளிலிருந்தும் விடுதலையாகிறோம். நாம் கற்றிருக்கிறதும் நம்முடைய புத்தியில் பதிந்திருக்கிறதுமான காரியங்களை மாத்திரம் பேச நாம் கட்டுப்படுத்தப்படவில்லை. தேவனுடைய ஆவியினால் உள்ளுணர்வால் நமக்கு கற்றுக்கொடுக்கப்பட்ட காரியங்களையும் பேச நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். (1கொரி.2). ஆழமான காரியங்களைப் பற்றி தேவனோடு உரையாடுகிறோம். அது வரையறைக்குட்பட்ட தம்முடைய மனதுக்கு மர்மமாகவே இருக்கிறது. இது தாவீது கூறுகிற ஆழமான உரையாடுதல் ஆகும். "...ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது." (சங்.42:7). நமது ஆவிக்குரிய ஆளுமையின் ஆழத்திலிருந்து தேவனுடைய ஆளுமையின் ஆழங்களோடு உரையாடுகிறோம்.

6. அந்நியபாஷைகளை பேசுவது நமக்குள்ளிருக்கிற பரிசுத்த ஆவியானவரைக் குறித்த உணர்வில் நம்மை வைக்கிறது.

அந்நிய பாஷைகளை பேசும்பொழுதெல்லாம் நமக்குள்ளிருக்கிற பரிசுத்த ஆவியானவரின் இயக்கத்தையும் கிரியைகளையும் நாம் உடனடியாய் அறிந்து கொள்ளுகிறோம். ஆவியானவர் நம் மூலமாக பேசுகிற அந்த வார்த்தைகளை தேவனுடன் பேசும்போது, நமக்குள்ளிருக்கிற ஆவியானவரின் நெருங்கிய அறிவு அதிகமாகிறது. பிதாவாகிய தேவனுக்கு துதியையும்.ஸ்தோத்திரத்தையும் செலுத்த ஆவியானவர் பயன்படுத்தும் வாய்க்கால்களாக அல்லது வாகனங்களாக நாம் இருக்கிறோம்.

7. தேவனை முழுவதுமாய் நம்புவதற்கு நாம் கற்றுகொள்ள அது நமக்கு உதவுகிறது.

ஆவிக்குள்ளான வாழ்வில் நாம் வளருவது விசுவாச நடக்கையாகும். அந்நிய பாஷைகளின் ஒவ்வொரு வார்த்தைகளும் விசுவாச செயலாகும். சுயபக்திவிருத்தியின் எல்லையிலிருந்து சபை பக்திவிருத்தியின் எல்லைக்கு நம்மை கொண்டுவர தேவன் ஆரம்பிக்கும்போது (1கொரி.14:6), ஒவ்வொரு புதிய வளர்ச்சியின் படிகளும் விசுவாசத்தின் படிகளாய் இருக்கிறது.

8. நேர்மையான உணர்வுகளின் வெளிப்பாடு.

ஆவிக்குள்ளான ஞானஸ்நானம் உணர்வு சார்ந்த அனுபவமல்ல, ஆவிக்குரிய ஒன்று. இருப்பினும் நம்முடைய உணர்வுகள் இந்த அனுபவத்திற்கு தவிர்க்க முடியாத விதத்தில் ஒத்துப்போகிறது. மேலும் அதனுடன் இணைந்துவிடுகிறது. நம்முடைய உணர்வுகள் அடிக்கடி ஆவியால் தூண்டிவிடப்படுகின்றன, நாமும் ஆவியானவர் அருளுகிறபடி அவைகளை வெளிப்படுத்துகிறோம். இது ஒரு தீங்கான அல்லது நேர்மறையான காரியம் அல்ல. அதற்கு மாறாக, இது நமக்கு சுகம் தருவதாகவும் நன்மை பயப்பதாகவும் அமைகிறது. அநேக கிறிஸ்தவர்கள், உணர்வுகளை வெளிப்படுத்துவதில் ஏதோ தீமை இருப்பதாகவோ, அல்லது அதை பாவமாகவோ கருதி, தங்களது உணர்வுகளை முழுவதும் மறுக்கவோ அல்லது அவற்றை அடக்கி வைக்கவோ முயல்கிறார்கள். ஆனால் அவ்வாறு கிடையாது. நாம் உணர்வுகள் உடையவர்கள். ஏனெனில், தேவன் நம்மை அவ்வாறு தான் உருவாக்கியிருக்கிறார். முழுமையாக செயல்படுவதற்கு, அவ்வப்போது உணர்வுகளின் வெளியீடு, நமக்குள் இருக்கும் ஆவியானவரால் தூண்டப்பட்டு ஊக்கமூட்டப்படுமென்றால், அது மிகவும் ஆரோக்கியமான, நேர்த்தியான உணர்வு வெளியீடாக அமையும் என்பது நிச்சயம். அது நம்மை சுத்திகரித்து. விடுவிக்கும். அது பெலப்படுத்தி,

பக்திவிருத்தி உண்டாக்கும் அதைக்குறித்து பயப்படாதேயுங்கள். அத்தகைய உணர்வுகளை அடக்காமல் வெளியிடுங்கள். அப்பொழுது நீங்கள் இச்செயலை செய்ய ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பீர்கள்.

9. தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் நன்றி செலுத்துவதற்கு ஒரு தருணம்

தேவனுக்கு உங்கள் நன்றியையும், பாராட்டையும் போதுமான அளவுக்கு தெரிவிக்க முடியாதிருப்பதை நீங்கள் எப்போதாவது உணர்ந்ததுண்டா? உங்களுக்குள்ளே தேங்கி நிற்கும் நன்றிகளை வெளிப்படுத்துவதற்கு வெறும் வார்த்தைகள் மட்டுமே போதாது என்று தோன்றும் அளவுக்கு அவர் மிகவும் நல்லவராக இருந்திருக்கிறார். அப்படியெனில், இதை நிறைவேற்ற ஒரு வழியுண்டு. நாம் தேவனோடு, அவர் அருளும் பாஷையில் ஆவியிலே பேசுவதன் மூலம் நன்றாய் ஸ்தோத்திரம் பண்ண முடியும் என்பதாக பவுல் கூறுகிறார். இந்த நன்றியைசெலுத்துதல் நம்முடைய மனித மனம் செய்ய முடிந்த எதையுமே கடந்து நிற்கிறது. இது கவிதைகளின் எல்லைகளைத் தாண்டி ஆவியில் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறது. (1கொரி.14:17-18).

10. ஆவிக்குள் ஜெபிக்க ஒருவரை சாத்தியமாக்குகிறது.

இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்.'' (1கொரி.14:15)..'' ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காகவேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.'' (ரோ.8:26-27) ''நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி,'' (யூதா 20).

11. ஓய்வுக்கும் புத்துணர்ச்சிக்கும் ஆதாரமாய் இருக்கிறது.

''பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல், இதுவே ஆறுதல்..'' (ஏசா-28:11,12) அந்நிய பாஷைகளில் தேவனுடன் பேசுவது மனம் முழுவதுமாக ஓய்வெடுக்கலாம். அடுத்து என்ன சொல்லவேண்டுமென்றோ அல்லது எப்படி சொல்லவேண்டுமென்றோ எண்ணத் தேவையில்லை. பிதாவுடன் பூரணமான ஐக்கியத்தில் ஆவியானவர் நம் மூலமாய் கடந்து செல்கிறார். அந்த அழகான ஐக்கியத்தின் நன்மையை நாமும் பெறுகிறோம். இது நமது ஆவிக்கும், ஆத்துமாவுக்கும், சரீரத்திற்குமான நல்ல ஔஷதம்.

12. தேவனுக்கு துதியும் ஆராதனையும் செலுத்தும் ஓர் ஊழியம்

''..நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்டுகிறோமே...'' (அப்.2:11). ''அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்.'' (அப்.10:45). ''சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் (ஆவியானவர் அருளுகிற பாடல்கள்) ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி'' (எபே.5:19). பெரும்பாலும் நாம் அந்நிய பாஷைகளை பேசுகிறபொழுது ஆவி தேவனை தொழுதுகொள்ளுகிறது, துதிக்கிறது, ஸ்தோத்தரிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மகத்துவங்களை நம் மூலம் மகிமைப்படுத்துகிறார். தேவனுக்கு உயர்ந்த துதியைச் செலுத்த அவர் நம்முடைய உதடுகளை பயன்படுத்துவது எவ்வளவு பெரிய பாக்கியமும் சந்தோஷமுமாய் இருக்கிறது.

13. ஆவியில் பாடுதல்

''...நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன். ''(1கொரி.14:15) ''ஞானப்பாட்டுகளினாலும்... உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி.'' (எபே.5:19). பார்க்க: கொலோ.3:16.

14. ஆவியின் நிறைவை காத்துக்கொள்ள ஓர் ஆவிக்குரிய வழி

"....ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு..." (எபே.5:18-19)அந்நிய பாஷைகளில் தேவனுக்கு ஊழியஞ் செய்வது ஆவியில் நிறைந்திருப்பதற்கு சிறந்த வழி எனவே, நாம் இதை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாளிலும் பல முறைகளும் செய்ய வேண்டும்.

15. வியாக்கியானம் செய்வது, பிறரை பக்தி விருத்திக்கேதுவாக்கும் ஒரு வழி

"...ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாக்கும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கத்தரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்.." (1கொரி.14:5) நம்முடைய தனிப்பட்ட தியான பாஷை அல்லது ஜெப பாஷை அதை செயல்படுத்துபவருக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறது. இதை பயன்படுத்துவதால் அவர் மாத்திரமே கட்டுப்படுகிறார். ஆனால் சபைகளில் பயன்படுத்தப்படும் அந்நிய பாஷைகளின் வரம் வியாக்கியானம் செய்யப்படுமானால், பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கும். எனவே ஒரு கூட்டத்தில் அல்லது ஐக்கியத்தில் தேவனுடைய செய்தியை அந்நிய பாஷையின் மூலம் கொடுக்கிறவர் கூடியிருக்கிற பிற விசுவாசிகளும் பக்திவிருத்தியை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அதை வியாக்கியானம் செய்ய அதற்காக ஜெபிக்க வேண்டும். (1கொரி.14:12-13)

16. நம்முடைய சொந்த சிந்தையின் மீது கிறிஸ்துவின் சிந்தையை கொண்டுவரும் திறவுகோல

(யாக்.1:26, 3:1a) நாவு மனிதனின் 'கட்டுபாட்டு மையம்' என்று யாக்கோபு கூறுகிறார். அது கப்பலின் சுக்கானைப் போலவும், குதிரையின் வாயிலுள்ள கடிவாளத்தைப் போலவும் இருக்கிறது. (யாக்.1:26, 3:1-18) நாம் நம்முடைய கட்டுப்பாட்டு மையத்தை பரிசுத்த ஆவியானவரிடத்தில் கொடுக்கும்பொழுது, அவர் நம்முடைய உரையாடல்களை கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆரம்பிக்கிறார். பரிசுத்த ஆவிக்கு நம்மை அர்ப்பணிப்பது இனிமையான ஜீவ தண்ணீராகிய தேவ வார்த்தைகள் அந்நிய பாஷைகள் மூலமாக வெளிவருகிறது. ஒவ்வொரு நாளும் ஒழுங்காக இதை நாம் பயன்படுத்துவது, யாக்கோபு "கசப்பான தண்ணீர்" (யாக்.3:11) என்று அழைக்கிற எதிர்மறையான வீணான பேச்சுகளை எதிர்ப்பதற்கு பெலத்தை நமக்கு தருகிறது. நம்மையும் பிறரையும் கட்டி எழுப்பத் தேவையான அந்த காரியங்களை மாத்திரம் பேச நமக்குள் கிறிஸ்துவின் சிந்தை உருவாக இது வழிவகுக்கிறது. அந்நிய பாஷைகளை பேசுவது நம்முடைய மனதை சுத்திகரிக்கிறது, புதுப்பிக்கிறது (எபே.4:29) அது நம்முடைய உரையாடல், மற்றும் வாழ்க்கை முறைக்கான ஆதாரம்.

அத்தியாம் 7 பரிசுத்த ஆவியின் வரங்கள்

கடந்த பத்தாண்டுகளில் உலகமுழுவதும் பரவியுள்ள மகத்தான ஆவிக்குரிய எழுப்புதல் "தேவன்பால் கவர்ந்திழுக்கும் ஆவிக்குரிய உயிர்மீட்சி" என்று அழைக்கப்படுகிறது. இந்த சொற்றொடர் எழுப்புதலின் மிகவும் மகத்தான ஒரு பகுதியை விவரிக்க பயன்படுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டு திருச்சபையில் மிகவும் வல்லமையாய் காணப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகளின், சபையின் உயிர்மீட்சியாகும். இந்த வெளிப்பாடுகள் அல்லது ஆவியின் வரங்கள் பல நூற்றாண்டுகளாக சபையில் குறிப்பிட்ட அளவில் இல்லாதிருந்தது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் தேவன் இந்த சிறப்பு அம்சங்களை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறார். இந்த மீட்கும் திட்டம் கடந்த இருபதுஆண்டுகளில் பெருமளவில் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. இந்த ஆவிக்குரிய உயிர்மீட்சி கிறிஸ்தவ சபைகளின் எல்லா பகுதிகளையும் ஊடுருவி, கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு புது வாழ்வையும் வல்லமையையும் கொண்டு வந்திருக்கிறது. இந்த ஆசீர்வாதங்களை மீட்டுக் கொண்டு வந்தது இந்த முக்கியமான பாடங்களை கற்பிப்பதின் பெரிய அவசியத்தை உருவாக்கியிருக்கிறது.

"அன்றியும்,சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை" (1கொரி.12:1) என்று பவுல் கொரிந்து சபைக்கு கூறுகிறார். இன்றைய விசுவாசிகளும் இவைகளைக் குறித்து அறியாதிருக்க தேவனுக்கு கொஞ்சமேனும் விருப்பமில்லை.

ஆவியினால் நிறைந்திருங்கள் (எபே.5:18)

பரிசுத்த ஆவி வரும்பொழுது விசுவாசிகள், "பெலனடைந்து அவருக்கு சாட்சிகளாயிருப்பார்கள்" என்று இயேசு முன்னுரைத்தார். (அப்.1:8) இந்த உலகில் அவருடைய பிரதிநிதிகளாக மாறுவதற்கு வல்லமையை பெற்றுக்கொள்வோம் என்பதே இயேசுவின் எண்ணமாயிருந்தது. அவரைப் போல வாழ்வதற்கும் செய்வதற்கும் வல்லமை "அவரைப் போலிருக்கவும்", "அவரைப் போலச் செய்யவும் "தேவையான வல்லமையை இதுக் குறிக்கிறது.

மனித இயல்புகளை உருவாக்கும் இரண்டு முக்கிய காரணங்கள்:

1. குணம்
2. ஆள்தத்துவம்

குணம் என்பது நமது மெய்மையின் செயப்பாட்டு வினையை சார்ந்த ஒன்று. - நாம் என்னவாக இருக்கிறோம்!.

ஆள்தத்துவம் என்பது மெய்மையின் செய்வினையை சார்ந்த ஒன்று - நாம் என்ன செய்கிறோம்.

அவருடைய ஆவியால் கிறிஸ்துவின் குணங்கள் நமக்குள் உருவாகியிருப்பது 'ஆவியின் கனி" என்று அழைக்கப்படுகிறது. (கலா.5:22-23).

- இது நம்மிடத்தில் தனிப்பட்ட விதத்தில் வெளிப்படும் விதங்கள்: அன்பு, சந்தோஷம், சமாதானம்
- இது பிறருடன் உள்ள உறவுகளில் வெளிப்படும் விதங்கள்: நீடியபொறுமை, தயவு, நற்குணம்
- இது தேவனோடுள்ள நமது உறவில் வெளிப்படும் விதங்கள்: விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்.

நமக்குள் இருக்கிற கிறிஸ்துவின் ஆவியானவருக்கு நம்மை தொடர்ந்து அர்ப்பணிக்கும்போது, அவருடைய குணங்கள் நமக்குள் உருவாகுகிறது. மேலும், நாம் மேலே குறிப்பிட்டுள்ள குணங்களாக நம் மூலமாக வெளிப்படுகிறது. அதாவது ஆவியின் கனி (கலா.5:22-23). அவர் வாழ்ந்ததைப் போல நாமும் வாழ நமக்கு உதவுகிறது. இயேசு செய்தது போல தேவனோடும், பிறரோடும், நம்மோடும் தொடர்பு கொள்ள அது நமக்கு உதவுகிறது.

இருப்பினும், இயேசு செய்த கிரியைகளை நாமும் செய்ய தேவன் விரும்புகிறார். ஆகவே அதை செய்து முடிப்பதற்கு நமக்கு அவருடைய பரிசுத்த ஆவியையும், ஆவியின் வெளிப்பாடுகளையும் (வரங்கள்) தந்திருக்கிறார்.

வேதாகமத்தில் அநேக ஆவிக்குரிய வரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகளுக்குரிய முக்கிய வேத பகுதிகள் ரோ.12:3-8, 1கொரி. 12:8-10, 28-30, எபே.4:11.

இந்த குறுகிய ஆய்விற்காக 1கொரி.12:8-10 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது வெளிப்பாடுகளை மாத்திரம் கவனமாய் பார்ப்போம்.

நம்முடைய ஆராய்ச்சியை இலகுவாக்க அவைகளை மூன்று விதமாக பிரிக்கலாம்:

1. பேசும் வரங்கள் (வாய்விட்டு சொல்லுதல்)

1. அந்நிய பாஷைகள்
2. பாஷைகளின் வியாக்கியானம்
3. தீர்க்கதரிசனம்

2. வெளிப்பாட்டு வரங்கள் (ஆவியில் பார்க்க)

1. ஞானத்தைப் போதிக்கும் வசனம்
2. அறிவை உணர்த்தும் வசனம்
3. ஆவிகளை பகுத்தறிதல்

3. வல்லமையின் வரங்கள் (தேவனுடைய கிரியைகளை "செய்ய")

1. விசுவாச வரம்
2. குணமாக்கும் வரம்
3. அற்புதங்களைச் செய்யும் வரம்.

ஒருவர் தனக்கு ஒரு குறிப்பிட்ட வரம் "இருக்கிறது" என்று உரிமை கொண்டாடுவதை அடிக்கடி கேட்டிருக்கிறேன். உதாரணமாக அவர்கள் "எனக்கு குணமாக்கும் வரம் இருக்கிறது", "எனக்கு பாஷைகளை வியாக்கியானம்பண்ணும் வரம் இருக்கிறது," "எனக்கு தீர்க்கதரிசன வரம் இருக்கிறது" என்று கூறலாம்.

ஒருவருக்கும் ஆவியின் வரம் "இருக்கிறது" என்பதை நான் தனிப்பட்ட விதத்தில் நம்பவில்லை. (1கொரி.12:11). நிகழ்ந்திருப்பது என்னவென்றால், இப்போது நாம் ஆவியில் நிறைந்துள்ளோம், அவர் தாம் விரும்புகிற எந்த வழியில் தம்மை வெளிப்படுத்தக்கதாக நாம் எந்த சமயத்திலும் அவர் உபயோகப்படுத்த ஆயத்தமாயிருக்க வேண்டும்.

அத்தகைய வரங்களை செயல்படுத்துவதில் ஆவியானவர் யாரை பயன்படுத்தக்கூடும்?

1. ஆவியால் நிரப்பப்பட்டுள்ள எந்த ஒரு சபை அங்கத்தினரும் பயன்படுத்தப்படலாம்: 1கொரி.12:7:11,14:26,31.
2. நாம் எல்லாரும் தொடர்ந்து ஆவியில் நிறைந்திருக்க வேண்டும். எபே.5:18.
3. நாம் இவ்வகையில் பயன்படுத்துவதற்கு விருப்பமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். 1கொரி.12:31.
4. வரங்கள் செயல்படுத்துவதைக் குறித்து அறியாதவர்களாய் நாம் இருக்கக் கூடாது. 1கொரி.12:31.
5. நாம் ஆவிக்குரிய வரங்களை நாடவேண்டும். 1கொரி.14:1
6. நாம் சபைக்காக உண்மையான அன்பால் ஊக்கப்படுத்தப்பட்டவர்களாய் இருக்க வேண்டும். 1கொரி.13. சபையின் பக்திவிருத்திக்கான மெய்யான நாட்டம். 1கொரி.14:12.
7. நாம் வரங்களின் செயல்பாட்டில் தேறும்படி நாடவேண்டும். 1கொரி.14:12.

பேசும் வரங்களின் செயல்முறை

1. <u>அந்நிய பாஷைகளின் வரம்</u> (1கொரி.12:10)

ஆவியானவரின் வெளிப்பாடு இரண்டு செயல்பாடுகளை கொண்டுள்ளது. முதலாவதாக, தனிப்பட்ட உபயோகத்திற்கான பக்தி சார்ந்த அந்நிய பாஷைகளாக இது பயன்படுத்துபவரை பக்திவிருந்தி அடையச் செய்யும். இரண்டாவதாக, மற்றவர்களுடன் கூடியிருக்கும்போது செயல்படும் அந்நிய பாஷைகளின் வரமாக இது அதனுடன் இயங்கும் வரமான பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரத்துடன் ஒன்றித்து பயன்படுத்தப்படும் போது, தனிப்பட்ட மனிதனை மட்டுமல்ல, முழு சபையையும் பக்திவிருத்தி அடையச் செய்யும்.

பொது மக்கள் கூடியிருக்கிற சபையில் அந்நிய பாஷைகளை உபயோகப் படுத்துவதற்கான விதிமுறைகள்.

1. அதன் உபயோகம் எப்போதும் அன்பால் ஏவப்பட்டதாக இருக்க வேண்டும். (1கொரி.13:1)
2. எப்போதும் வியாக்கியானத்துடன் இயங்க வேண்டும். (1கொரி.14:5, 13:28)
3. எந்த ஒரு கூடுகையிலும் அந்நிய பாஷைகளில் பேசுவதை மூன்று பேரோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். (1கொரி.14:27)

எப்பொழுதாவது அந்நிய பாஷைகளில் பேசியுள்ள எந்த விசுவாசியும், அந்நிய பாஷைகளில் பேசுவதன் மூலம் சபையை பக்திவிருத்தி அடையச் செய்ய முடியும். எனவே, நீங்கள் அப்படிச் செய்ய எந்த நேரத்திலும் ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க நாடுங்கள். உங்கள் மனதில் ஆசுவாசத்தோடு பரிசுத்த ஆவியானவருக்கு இடங்கொடுங்கள். எந்த குறிப்பிட்ட ஆராதனையிலும் உங்கள் மூலம் ஆவியானவர் என்ன செய்யவோ, சொல்லவோ நாடுகிறார் என்பதை கூர்ந்து அறிய வேண்டும். பரிசுத்த ஆவியானவர் உங்கள் நாவின் மூலம் பேச விரும்பும்போது, நீங்கள் பேசத் துவங்குவதற்கு சிறிது நேரத்துக்கு முன்பே ஒரு உள்ளான முன்னுணர்வு காணப்படும். இது பல வேளைகளில் உங்கள் ஆவியில் அமைதியான உந்துதல், பெருகும் கிளர்ச்சி, மற்றும் முன்னுணர்வாக இருக்கும். ஆவியானவர் பேசப்போகிறார் என்றும், அதற்கான வார்த்தைகள் உங்களுக்குள் இருக்கின்றன என்றும் தோன்றும் ஓர் ஆழமான முன்னுணர்வு உங்களுக்குள் பெருகும்.

நீங்கள் உடனே பேச வேண்டியதில்லை. தீர்க்கதரிசிக்குள் இருக்கும் ஆவியானவர், தீர்க்கத்தரிசிக்கு அடங்கியிருக்கிறார். (கட்டுப்பாட்டுக்குள்). (1கொரி.14:32) நீங்கள் பேச வேண்டிய சரியான நேரத்திற்காக காத்திருக்கலாம். அந்த நேரத்தில் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு தெளிவான தூண்டுதலை தருவார். ஆராதனையில் ஏற்கனவே நிகழ்ந்துகொண்டிருப்பதை அவர் குறுக்கிடமாட்டார். அவர் கலகத்தின் காரணர் அல்ல. (1கொரி.14:33).

ஆசுவாசத்துடனும், அமைதியுடனும் காத்திருங்கள், ஆவியானவர் உங்களைத் தூண்டும்போது, இயல்பாகவும் கேட்கக் கூடிய குரலிலும் பேசுங்கள். நீங்கள் சத்தமிடவோ, கூச்சலிடவோ வேண்டாம். நீங்கள் இயல்பான குரலில், நிதானமாக பேசுங்கள், உங்களுக்கு வார்த்தைகளை அருளுகிற ஆவியானவருடன் இணைந்தே பேச நாடுங்கள். அந்த பேச்சு முடிந்தவுடன், எல்லாரும் அதன் வியாக்கியானத்திற்காக தேவனை நோக்கி காத்திருக்க வேண்டும். பல வேளைகளில் வேறொரு விசுவாசிக்கு இந்த வியாக்கியானம் அருளப்படும், ஆனால் அது நடைபெறாதபோது, அந்நிய பாஷைகளில் பேசியவரே, தனக்கு வியாக்கியானமும் அருளப்பட அமைதியாக ஜெபிக்கவேண்டும். (1கொரி.14:13).

2. <u>பாஷைகளின் வியாக்கியானம்</u> (1கொரி. 12:10)

இது ஓர் ஆராதனையில் அந்நிய பாஷைகளின் செயல்பாட்டோடு இணைந்திருக்கும் வரம். இது எப்பொழுதும் அந்த வரத்தோடு ஒன்றித்து பயன்படுத்தப்படுகிறது. இது பரிசுத்த ஆவியானவர் மூலம், அந்நிய பாஷைகளில் பேசப்பட்டதை சபையினருடைய இயல்பான பாஷையில் வியாக்கியானம் செய்யக்கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட சாத்தியமாக்குதல். இது மொழிபெயர்ப்பின் வரம் அல்ல. வார்த்தைகள் அருளப்பட்டதில் உபயோகப்படுத்தப்பட்ட பாஷை, வியாக்கியானம் செய்பவருக்கும் புரியாத ஒன்று தான். அந்நிய பாஷையில் பேசப்பட்டத்தைப் போலவே, வியாக்கியானமும் இயற்கைக்கு அப்பாற்பட்டதுதான். இருப்பினும், இந்த ஆவியின் வரத்தின் மூலம், சம்பந்தப்பட்ட விசுவாசி சபைக்கு தெளிவான வார்த்தைகளை அளிக்கமுடிவதால், சபைமக்கள் அதை பெற்றுக் கொண்டு அதனால் பக்திவிருத்தி அடைகிறார்கள்.

யார் இந்த வரத்தை பயன்படுத்தலாம்?

பாஷைகளின் வியாக்கியானம் ஆவியானவரின் விருப்பத்திற்கிணங்க அளிக்கப்படுகிறது. (1கொரி.12:11). ஆவியில் நிறைந்த எந்த விசுவாசியும் இந்த வரத்தை பயன்படுத்த ஆவியானவரால் தெரிந்துகொள்ளப்பட்டு பயன்படுத்தப்படுகிறார். <u>ஆவியானவரை கூர்ந்து கவனிக்கும் திறனை மேம்படுத்த நாம் மேலும் முயற்சி எடுக்க வேண்டும்</u>. விசுவாசிகள் நிறைந்த சபையில் தேவனை ஆராதிக்கும்பொழுது உங்கள் மனதையும் ஆவியையும் பரிசுத்த ஆவியானவருக்கு திறந்து கொடுங்கள். அந்நிய பாஷைகள் பேசப் படபோகிறது என்றும், ஆவியானவர் அதன் வியாக்கியானத்தை உங்களுக்குக் கொடுக்கப்போகிறார் என்றும் முன்னதாகவே அடிக்கடி உணருவீர்கள். அந்த வார்த்தைகள் வரும்பொழுது, அது முடியும்மட்டும் அமைதியாய் காத்திருங்கள். நீங்கள் முதலில் பேச ஆரம்பிக்கும்பொழுது, முதல் வாக்கியத்தின் வியாக்கியானமும், அதைத் தொடர்ந்து வருகிறதைப் பற்றிய சுருக்கமான எண்ணமும் உங்களுக்கு ஆரம்பத்தில் கிடைக்கலாம் மற்ற எல்லா ஆவிக்குரிய வரங்களைப் போல இதுவும் விசுவாசத்தால் செயல்படுகிறது. ஆவியானவர் உங்களுக்கு

அருளுகிறதை பிறருக்கு கொடுக்க ஆரம்பிக்கும்பொழுது சாதாரண, தெளிவான, கேட்கக்கூடிய சத்தத்தில் பேசுங்கள். உங்கள் விசுவாச அளவிற்கப்பாற்பட்டு பேசாமலிருக்க கவனமாயிருங்கள். (ரோ.12:6) வியாக்கியானத்திற்குள் கடந்து வருகிற உங்கள் தனிப்பட்ட எண்ணங்களை, உணர்வுகளை, கருத்துகளை விடாமுயற்சியுடன் தவிர்த்துவிடுங்கள். உங்கள் சுய எண்ணங்கள் சாந்தமாகவும், உங்கள் மனம் ஆவியானவர் பாய்ந்து செல்கிற நல்ல வாய்க்கலாகவும் இருக்கட்டும். வியாக்கியானம் முடியும்பொழுது, ஆவியானவர் விரும்புகிறதையெல்லாம் சொல்லிமுடித்துவிட்டார் என்று நீங்கள் உணரும்பொழுது நிறுத்திவிடுங்கள். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமென்றால், வியாக்கியானத்தைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று மக்களுக்கு சொல்லாதிருங்கள் அதை மக்களுக்காகவே விட்டுவிடுங்கள். வியாக்கியானத்தை கொடுத்து முடிந்தபின்பு, அங்கு இருக்கிறவர்கள் அந்த வார்த்தைகளை நிதானிக்கும்வேளையில் நீங்கள் அமைதியாய் இருங்கள். பேசும் வரங்களை ஒழுங்காக பயன்படுத்தும் விசுவாசிகள் யாராவது அங்கு இருப்பார்களானால் அந்த வார்த்தைகள் மெய்யாகவே தேவனிடத்திலிருந்து வந்தவைகளா என்பதை நிதானிக்க வேண்டும். இதை ஒருவர் நிதானிக்கும் அளவுகோல், நாம் தொடர்ந்து ஆராயப்போகிற தீர்க்கத்தரிசன வரத்திற்கு பயன்படுத்தப்படும் அளவுகோலைப் போன்றதே.

3. <u>தீர்க்கதரிசன வரம்</u> "ஏவப்பட்டு பேசுதல்" (1கொரி.12:10)

தீர்க்கதரிசனம் என்ற வார்த்தையை எளிதான முறையில் கூறவேண்டும் என்றால்'ஏவப்பட்ட வார்த்தைகளை பேசுவது' என்று பொருள்படும். 1கொரி.14:31ன்படி, எல்லா விசுவாசிகளும், ஆவியானவரின் சித்தப்படி, இந்த வரத்தை ஏதேனும் சமயத்தில் உபயோகப்படுத்தலாம். ஒவ்வொருவராக அனைவருமே தீர்க்கத்தரிசனம் சொல்லலாம், ஆனால் எந்த கூட்டத்திலும் மூன்று பேருக்கு மேல் சொல்லக்கூடாது. (1கொரி.14:29-33)

இத்தகைய தீர்க்கத்தரிசனம் சொல்லுதலின் நோக்கமாவது:

A. சபைக்கு பக்திவிருத்தி உண்டாக்க. அதாவது விசுவாசிகளை கட்டி எழுப்ப,பெலப்படுத்த.
B. அவைகளை உற்சாகப்படுத்த விசுவாசிகளைத் தூண்ட. அவர்களை நேருக்கு நேர் சந்தித்து, அவர்களுக்கு அறைகூவல் விடுக்க.
C. ஆறுதல் செய்ய, ஆதாரங்கள் உற்சாகமூட்டும் வார்த்தைகளைப் பேச (சில வேளைகளில் ஒரு தீர்க்கத்தரிசனத்தில் இம்மூன்று கொள்கைகளும் அடங்கியிருக்கும்).

தீர்க்கத்தரிசனத்தைப் பற்றிய மூன்று தவறான கருத்துகள்

1. இதனை போதனையுடன் ஒப்பிட்டு குழப்பக் கூடாது.

அநேகர் இன்று தீர்க்கதரிசன வரம் என்பது நன்றாக போதிக்கும் திறன் என்று வற்புறுத்துகின்றனர். எனினும் பெரும்பாலும் தேவனுடைய வார்த்தையை ஜெபத்துடன் தியானிப்பது, மற்றும் மக்கள் புரிந்துகொள்ளும்வகையில் எடுத்துரைக்கத்தாக தனது மனதையும் ஆவியையும் கவனத்துடன் ஆயத்தப்படுத்துவதன் விளைவே, போதனையும் உபதேசமாகும். மாறாக, தீர்க்கதரிசன வரமானது. கவனமான ஆய்வின் விளைவல்ல. அது ஆவியானவரைக் கொண்டு தன்னியல்பாகவே பேசுவதாகும்.

2. தீர்க்கதரிசன வரம், எதிர்காலத்தைக் குறித்து முன்னுரைப்பதற்காக அல்ல

இந்த வரம் முன்னுரைப்பதற்காக அல்ல, ஆனால் தேவ செய்தியை உரைக்கவே கொடுக்கப்படுகிறது. பக்திவிருத்தி உண்டாக்குவதும், உற்சாகப்படுத்துவதும், ஆறுதல் செய்வதுமே இதன் நோக்கம், எதிர்கால நிகழ்வுகளை முன்னறிவிப்பது அல்லஒரு தீர்க்கதரிசனத்திற்குள் முன்னறிவுப்பும் இடம் பெறுமென்றால் பொதுவாக அதனுடன் இணைந்து வேறொரு வரமும் (அறிவு அல்லது வார்த்தை) செயல்படுகிறது என்றே அர்த்தம்.

3. இந்த வரம் தனிப்பட்ட வழிநடத்துதலுக்காக அல்ல

நமக்கு தனிப்பட்ட வழிநடத்துதல் தேவையானால் இயேசுவையே கேட்கவேண்டும் (யாக்.1:5) தேவனுடைய வார்த்தையாகிய, வேதாகமத்தின் பக்கங்களிலும் அத்தகைய வழிநடத்துதலை நாம் நாடலாம். எதிர்காலத்தைக் குறித்த அறிவுறுத்தல்களோடு தீர்க்கதரிசன வார்த்தை நமக்கு வருமாயின், அது ஏற்கனவே தேவன் நமக்கு தனிப்பட்ட முறையில் காண்பித்திருப்பதை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

தீர்க்கத்தரிசன வரத்தைக் குறித்த வேத அடிப்படையிலான உபதேசம்

1. **இது மனுஷரிடத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பேசுவதற்கு (1கொரி.14:3)**
இவ்வாறு தேவனின் சிந்தையை சபைக்கு தெரிவிப்பது, தீர்க்கதரிசி தேவனின் சார்பில் விசுவாசிகளிடத்தில், அவர்களது பக்திவிருத்திக்காகவும், அவர்கள் உற்சாகப்படுத்துவதற் காகவும், ஆறுதல் செய்வதற்காகவும் பேசுகிறார்.

2. **தீர்க்கதரிசனத்திற்கு வியாக்கியானம்**
அந்நிய பாஷைகளின் வரத்திற்கு வியாக்கியானம் தேவைப்படுகிறது, தீர்க்கத்தரிசனத்திற்கு அல்ல.

3. **தீர்க்கதரிசனம் கல்லாதவர்களையும் நம்ப வைக்கிறது. (1கொரி.14:24-25)**
தீர்க்கதரிசன வரத்தின் செயல்பாட்டின் மூலம்:
   - எல்லாவற்றையும் நம்புவான்
   - எல்லாவற்றையும் நிதானிப்பான்
   - அவனுடைய இருதயத்தின் இரகசியங்கள் வெளிப்படும்
   - அவன் தேவனுக்கு முன்பாக தாழ்மையோடு பணிந்து கொள்வான்
   - உங்கள் மத்தியில் தேவன் மெய்யாகவே இருக்கிறார் என்று ஏற்றுக் கொள்வான்
   - தேவனை ஆராதிப்பான்

4. **விசுவாசிகள் கற்றுக்கொள்வதற்காக தீர்க்கத்தரிசனம் செயல்படுகிறது**
1.கொரி.14:31 இது தேவனுடைய வார்த்தையை போதிக்கும் உபாத்தியாரின் ஊழியத்தின் மூலமாக வரும் போதனையை குறிக்கவில்லை. ஆனால் இது ஆவியின் அபிஷேகத்தின் மூலமாக ஆவிக்குரிய உண்மைகளை கற்றுக் கொள்வதைக் குறிக்கிறது. அத்தகைய போதனைகள் உட்கொள்ளப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையைக் கொண்டு சோதித்துப்பார்க்கப்பட வேண்டும்.

5. **அனைவரும் இந்த வரத்தை விரும்பி நாடவேண்டும்**
1கொரி.14:39 ஏனெனில் இவ்வகையில் நாம் தேவனுடைய ஜனத்தை உற்சாகப்படுத்துவதற்கு அவராலே பயன்படுத்தப்படலாம்.

6. **இந்த வரத்தை செயல்படுத்துபவரே அதன் உபயோகத்திற்கோ, அல்லது துஷ்டபிரயோகத்திற்கோ பொறுப்புள்ளவராய் இருக்கிறார்**
1கொரி. 14:32. தீர்க்கதரிசனம் கட்டுப்படுத்தமுடியாமல் பேசுவது அல்ல. தீர்க்கதரிசி எந்த வித ஞானதிருஷ்டி நிலையிலோ அல்லது மனக்கட்டுப்பாட்டிலோ இருப்பதில்லை. அவர் தனது சித்தத்திற்கு மாறாக எதையும் செய்யவோ, சொல்லவோ இல்லை. தீர்க்கத்தரிசியின் ஆவி தீர்க்கதரிசிக்கு அடங்கியிருக்கிறது. தீர்க்கதரிசியே தேவனுடைய சார்பில் பேசுகிறார். மேலும் அவர் எல்லா சமயத்திலும் தான் பேசுகிற எல்லாவற்றையும் தனது கட்டுபாட்டிற்குள் வைத்திருக்கிறார்.

7. **மனித கொள்கைகளில் தவறுகள் காணப்படக்கூடும் எனவே தீர்க்கத்தரிசனம் நிதானிக்கப்படவேண்டும் (1கொரி.14:29).**

8. **ஒரு தீர்க்கதரிசனத்தை நாம் எப்படி நிதானிக்கமுடியும்?**
அது உண்மையான, ஆவியால் ஏவப்பட்ட தீர்க்கதரிசனமா என்று அறிந்து கொள்ளவேண்டும்.

   A. **ஒருபோதும் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு முரணாக அமையாது**
   ஆகவே, ஒவ்வொரு தீர்க்கதரிசன வார்த்தையும் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு சோதிக்கப்பட வேண்டும்.

   தேவன் தம்முடைய வார்த்தையை தடை செய்கிற எந்த ஒரு காரியத்தையும், தீர்க்கதரிசனம் மூலம் உங்களை செய்யச் சொல்லமாட்டார்.

B. **அது எப்போதுமே இயேசு கிறிஸ்துவை மேன்மைபடுத்துமே தவிர, அவரது பெருமையை குலைக்காது.**

C. **அது விசுவாசிகளை பக்திவிருத்திடையச் செய்யும், உற்சாகப்படுத்தும், ஆறுதல்படுத்தும்.** அது ஒருபோதும் அவர்களை குழப்பமடையவோ, வேதனையடையவோ, நிச்சயமற்றவர்களாகவோ செய்யக்கூடாது.

D. **அது கூடியிருக்கும் விசுவாசிகளில் பெரும்பாலானோருடன் இணைந்து சாட்சி பகருவதாய் இருக்க வேண்டும்.**
விசேஷமாக பேசும் வரங்களின் செயல்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படும் முதிர்ந்த விசுவாசிகள்.

E. **அது கூட்டத்தின் வழக்கமான நடைமுறையை மாற்றினாலும், கூடி வந்திருக்கிற நோக்கத்தை மாற்றாது**

F. **அதில் ஏதேனும் முன்னறிவிப்பு இருந்தால், அது தவறாமல் நிகழும்**

G. **"கனியின் சோதனை" (மத்.7:16).**
கள்ளத் தீர்க்கத்தரிசிகளைக் குறித்து பேசுகையில், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் என்று இயேசு கூறினார். கிறிஸ்துவின் நாமத்திற்கு அவதூறு உண்டாக்கும் வாழ்க்கையும், செயல்முறையும் உடையவராய் ஒருவர் இருப்பாராயின், அவர் மூலமாக வரும் தீர்க்கத் தரிசனம் என்றழைக்கப்படும் எந்த வார்த்தையையும் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

எவ்வாறு தீர்க்கதரிசனம் உரைப்பது

- ✓ ஆசுவாசப்படுங்கள். அதிகம் சிரமப்படாதீர்கள்.
- ✓ உங்கள் ஆவியில் அமைதியாக தேவனுக்காக காத்திருங்கள். உங்களுக்குள் தொனிக்கும் அவருடைய சத்தத்தைக் கவனிக்கத்தக்கதாக உங்கள் மனதை திறந்து வையுங்கள்.
- ✓ உங்கள் ஆவியில் ஆவியானவரின் தூண்டுதலை நீங்கள் உணரும்போது, அவர் உங்கள் மூலமாக பாயத்தக்க வாய்க்காலாக உங்களை மறுபடியும் ஒப்புக்கொடுங்கள். இந்த வரம் விசுவாசத்தினாலே செயல்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- ✓ தேவன் உங்களுக்கு அருளும் எதையும் பேச ஆரம்பியுங்கள் அதை எளிதாக கூறுங்கள்.
- ✓ நீங்கள் பேசும்போதே, செய்தியின் ஏனைய பகுதிக்காக அமைதியாக காத்திருங்கள்.
- ✓ உங்கள் விசுவாச அளவிற்கு மிஞ்சி தீர்க்கதரிசனம் உரையாதிருங்கள் (ரோ.12:6).
- ✓ ஆவியானவர் பேசி முடித்துவிட்டார் என்று அறியும்போது நிறுத்துங்கள்.

4. அறிவை உணர்த்தும் வசனம் (1கொரி.12:8)

விளக்கவுரை: அறிவை உணர்த்தும் வசனம் என்பது பரிசுத்த ஆவியானவர் மூலமாக ஒருவருக்கு அருளப்படும் தேவ அறிவின் ஒரு சிறிய பகுதி அல்லது பங்கு ஆகும்.
அது பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வெளிப்படுத்தப்படும் குறிப்பிட்ட உண்மைகளையும், தகவல்களையும் அருளுகிறது. இந்த தகவல்கள் ஒருவருக்கு இதற்கு முன்பு தெரியாததும், இயல்பான வழியில் தெரிந்துகொள்ளக் கூடாததுமாயிருக்கும். இது இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அருளப்படுகிறது.

பின்குறிப்பு: இது அறிவை உணர்த்தும் வசனம் அறிவின் வரமல்ல. ஒருவருடைய மனதில் வரும் அநேக எண்ணங்களைப் போல இதுவும் பொதுவாக வருகிறது. இருப்பினும் எந்த ஒரு இயற்கை வழிகளாலும் பெற்றுக்கொள்ளவோ, சேகரிக்கவோ முடியாத தகவலும் அறிவுமாகும். இது இயற்கை வழிகளாகிய கூர்ந்த கவனிப்பு அல்லது ஊகித்தல் ஆகியவற்றின் மூலம் ஒருவர் ஒருபோதும் அறிந்துகொள்ளமுடியாத, ஒருவரைக் குறித்த, ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலையைக் குறித்த தெளிவான அறிவாகும். இது அடிக்கடி அமைதியாகவும், கவனிக்காத முறையிலும் வருவதால் சாதாரணமான இயல்பான எண்ணம்போல தோன்றுகிறது. ஆனால்

உண்மை என்னவென்றால் இது, இயற்கையாக அனுமானிக்கவோ தெரிந்துகொள்ளவோ முடியாத தகவல்களை அது கொடுக்கிறது. எனவே இது, ஆவியானவரால் தரப்பட்ட அறிவை உணர்த்தும் வசனம் என்று தெளிவாகிறது.

வேதாகமத்திலிருந்து உதாரணங்கள்

A. **இயேசுவின் ஊழியத்தில்**
யோ.1:47-50 இயேசு நாத்தான்வேலை சந்திப்பதற்கு முன்பே அவனைக் குறித்த உண்மைகள் அவருக்கு தெரிந்திருந்தது.

யோ.4:18-20. சமாரிய ஸ்தீரியை முன்பு ஒருபோதும் பார்த்திராத போதிலும் அவளைக்குறித்த உண்மைகளை அவர் அறிந்திருந்தார். அவளுடைய கடந்தகால நிகழ்கால வாழ்வைக் குறித்து அவருக்கிருந்த தெளிவான அறிவை பார்த்து அவள் ஆச்சரியப்பட்டாள். இந்த அறிவை உணர்த்தும் வசனத்தின் செயல்பாடு முடிவில் பெரிய எழுப்புதலை கொண்டுவந்தது.

B. **ஆதி திருச்சபை**
அப்.9:10-20 அனனியா, முன்பு ஒருபோதும் சந்தித்திராத சவுலைக் குறித்து குறிப்பிட்ட தகவல்களை மிகவும் அதிக அளவில் பெற்றிருந்தான். சவுல் தங்கியிருந்த வீட்டையும், தெருவையும் அவன் சரியாக அறிந்திருந்தான். அவன் இப்பொழுது ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறான் என்றும், அனனியா அவன் மீது தனது கைகளை வைக்கும்பொழுது அவன் பார்வை பெற்றுவிடுவான் என்றும் அவனுக்குத் தெரிந்திருந்தது.

C. **பழைய ஏற்பாட்டிலிருந்து ஓர் உதாரணம்**
2சாமு.12:1-14 தேவன் நாத்தானுக்கு தாவீதின் மீறுதலைக் குறித்த உண்மைகளையும், முழு விவகாரங்களையும் வெளிப்படுத்தினார்.

<u>வேறுபாடு:</u> அறிவை உணர்த்தும் வசனம், இயற்கை வழிகளால்பெற்றுக் கொள்ளும் மனித அறிவிலிருந்து வேறுபட்டது. இது தேவனால் பரிசுத்தம் பண்ணப்பட்ட சாதாரண மனித அறிவு அல்ல. அறிவு சார்ந்த கல்வியின் மூலம் அறிவை உணர்த்தும் வசனத்தை சம்பாதிக்க முடியாது. இந்த அறிவு புத்தகங்களை படிப்பதாலோ, கல்லூரி அல்லது பல்கலைக்கழகங்களில் உள்ள கல்வி பாடத் திட்டங்களை கற்று பட்டம் பெறுவதாலோ, பெற்றுக்கொள்ள முடியாது. மேலும், இது வேதாகமத்தை படிக்கிற, அல்லது புரிந்து கொள்ளுகிற அல்லது வியாக்கியானம் செய்கிற திறமையும் அல்ல.

வேதாகமத்தில் இதன் செயல்பாடுகள்:
A. பாவத்தை வெளிப்படுத்த 2சாமு.12:1-10, அப்.5:1-11.
B. ஜனங்களை தேவனிடத்தில் கொண்டு வர யோ.1:47-50, 4:18-20.
C. அறிவுரையையும் வழிநடத்துதலையும் கொடுக்க அப்.9:11.
D. சோர்வு நேரங்களில் உற்சாகமூட்ட 1.இரா.19:9.
E. வருங்கால நிகழ்வுகளைக் குறித்த அறிவை தர யோ.11:11-14.
F. மறைவான காரியங்களை வெளிப்படுத்த 1சாமு.10:22.

இந்த வரத்தின் இயக்கம்
A. இது குணத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்டது-தர்க்கசாஸ்திரம், அனுமானம், பகுத்தறிவு ஆகியவற்றாலும்,இயற்கை உணர்வாலும் இதை பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியின் மூலம் தெய்வீக வெளிப்பாட்டினால் இதை பெற்றுக்கொள்ளலாம்.
B. இது விசுவாசத்தால் இயங்குகிறது-வெளிப்பாடைப் பெற்றுக் கொள்ளுபவர் விசுவாசத்தால் அப்படிச் செய்கிறார்.
C. இந்த வெளிப்பாடு ஒருவருடைய ஆவியில் பெற்றுக்கொள்ளப்படுகிறது அறிவிலோ, அல்லது உணர்வுகளிலோ அல்ல.
D. இது பேச்சு வரமாயிருக்க வேண்டிய அவசியமில்லை. (அப்.9:11). இது அமைதியாகவும் கேட்க முடியாததாகவும் ஒருவருடைய ஆவிக்குள் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

E. மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது அது பேச்சாக மாறுகிறது.-(யோ.1:47,4:10)
   a. தேவனுக்கு செவிகொடுக்க விருப்பமுள்ள எந்த ஒரு ஆவியில் நிறைந்த கிறிஸ்தவனும் இந்த வரத்தின் செயல்பாட்டை அனுபவிக்க முடியும்.
   b. இது ஆலோசனை வழங்கும் ஊழியத்தில் மதிப்பிட முடியாத பங்கு வகிக்கிறது.
   c. ஒருவருடைய ஊழியத்தில் இந்த வெளிப்பாட்டின் தொடர்ச்சியான செயல்பாட்டிற்கு அத்தியாவசியமானது கீழ்ப்படிதலும் மறு உத்தரவு அருளுவதும் ஆகும்.
   d. ஞானத்தைப் போதிக்கும் வசனம் அடிக்கடி இதனுடன் இணைந்து செயல்படுகிறது. இது,அறிவை உணர்த்தும் வசனத்தைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்றும், அதை சரியாகவும்,ஞானமாகவும் எப்படிச் செய்ய வேண்டும் என்றும் அறிந்து கொள்ள அருளப்படும் தெய்வீக ஞானமாகும்.

5. ஞானத்தைப் போதிக்கும் வசனம் (1கொரி.12:8)

முன்னுரை:

இது மிகவும் முக்கியமானதால் வரங்களின் வரிசையில் இந்த வரம் முதலாவதாக இருக்கிறது. தெய்வீக ஞானத்துடன் பேசவும், நடந்துகொள்ளவும் செய்கிறது. இவ்வாறு, பிற வரங்களின் சரியான உபயோகத்திற்கும், செயல்பாட்டிற்கும் உறுதி அளிக்கிறது. ஞானத்தைப் போதிக்கும் வசனம் இல்லாமல் இருக்கும் போது, அதிக குழப்பத்தை விளைவிக்கும் வகையில் பிறவரங்கள் தவறாக பயன்படுத்தப்படலாம்.

விளக்கம்:

ஞானத்தைப் போதிக்கும் வசனம் பரிசுத்த ஆவியானவரால் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அருளப்படுகிற தெய்வீக ஞானத்தின் ஒரு சிறிய பகுதி குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன சொல்ல வேண்டும். அல்லது செய்ய வேண்டும் என்பதை தெரிந்துகொள்ள உடனடி ஞானத்தை இது தருகிறது. தேவன் இந்த வரத்தை, விசுவாசிகள் அறிவை உணர்த்தும் வசனத்தை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதைதெரிந்து கொள்ள, அந்த வரத்துடன் பெரும்பாலும் இணைந்தே கொடுக்கிறார்.தேவன் அனனியாவுக்கு அறிவை உணர்த்தும் வசனத்தின் மூலம், சவுல் இருக்கும் இடத்தையும் சூழ்நிலையையும் வெளிப்படுத்தினார். மேலும் அவர், ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் மூலம் இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவன் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவனுக்குக் காண்பித்தார்.

கவனத்திற்கு, இது ஞானத்தைப் போதிக்கும் வசனம் (லோகோஸ்), ஞானத்தின் வரம் அல்ல.

எடுத்துக்காட்டு:

சட்டரீதியான பிரச்சனைகளில் அகப்பட்டுக் கொள்ளும் ஒரு மனிதன், அவனுடைய வழக்கறிஞரை ஆலோசிக்கிறான். வழக்கறிஞர், தனக்குரிய எல்லா ஞானத்தையும் அறிவையும் அந்த நபருக்கு கொடுக்கமாட்டான். மாறாக, தன்னுடைய கட்சி காரருக்கு தேவையான காரியங்களை மாத்திரம் சந்திப்பதற்கு தன்னுடைய அறிவிலிருந்து ஒரு பகுதியை மாத்திரம் எடுத்து அவனுக்கு அளிக்கின்றான். இதைப்போலவே, எல்லாவற்றையும் அறிந்திருக்கிற தேவன், தன்னுடைய அளவிடமுடியாத ஞானமாகிய பொக்கிஷ சாலையிலிருந்து எடுத்து, அந்த ஞானத்தின் குறிப்பிட்ட பகுதியை மாத்திரம் எடுத்து, தேவையிலுள்ள தன்னுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கிறார். ஆவியானவர் மூலமாக இதை அனுப்புகிறார்.

வேறுபாடு:

ஞானத்தைப் போதிக்கும் வசனம்

- இது இயல்பான ஞானம் அல்ல.
- கல்வி தேர்ச்சியில் பெற்றுக்கொள்ளும் ஞானம் அல்ல.
- இது அனுபவத்தால் பெற்றுக்கொள்ளும் ஞானம் அல்ல.
- இது வேதாகமத்தைப் புரிந்து கொள்ள தேவையான ஞானமும் அல்ல
- இது தெய்வீக குணத்தைச் சார்ந்தது.
- இது பரிசுத்த ஆவியின் விருப்பத்திற்கிணங்க கொடுக்கப்படுகிறது. (1கொரி.12:11)

- இது ஒரு குறிப்பிட்ட தேவை அல்லது சூழ்நிலைக்காக கொடுக்கப்படுவது அல்ல.
- இது ஞான வரமல்ல. ஆனால் ஞானத்தைப் போதிக்கும் வசனம்.

வேதாகமத்திலிருந்து சில உதாரணங்கள்:

A. லூக்கா 4:1-3. இயேசு வனாந்திரத்தில் சோதிக்கப்பட்டார் இயேசு சாத்தானுக்கு கொடுத்த பதில் பரிசுத்த ஆவியால் அருளப்பட்ட ஞானத்தைப் போதிக்கும் வசனமாய் இருந்தது.

B. லூக்கா 20. 22-26. வேத பாரகர்கள் இயேசுவிடம் குற்றம் கண்டுபிடிக்க முயற்சித்தார்கள். ஆனால் ஆவியானவரால் கொடுக்கப்பட்ட ஞானத்தின் வசனத்தால் அவர் எல்லாரையும் குழப்பமடையச் செய்தார்.

C. யோ.8:3-11 மீண்டும் வேதபாரகர்களும் பரிசேயர்களும் இயேசுவினிடத்தில் குற்றம்பிடிக்க கைதேடினார்கள். ஆனால் அவருடைய ஞானமுள்ள வார்த்தைகளினாலும், சூழ்நிலையை கையாண்ட விதத்தினாலும் அவருடைய எதிராளிகளை சீர்குலையச் செய்தார்.

D. அப்.6:15 சபை நிர்வாகத்தில் ஞானம் அளிக்கப்படுகிறது.

E. அப்.27: 23:24 அநேகர் இரட்சிப்புக்குள் கடந்துவரும் வகையில் சூழ்நிலையை கட்டுப்படுத்த பவுலுக்கு அளிக்கப்பட்டது.

குறிப்புகள்:

ஞானத்தைப் போதிக்கும் வசனம் இயேசுவின் எல்லா சீஷர்களுக்கும் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. "ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம் பண்ணிக்கொள்ளுங்கள். உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்." (லூக்கா 21:14,15) கூர்ந்து கவனி: ஞானத்தைப் போதிக்கும் வசனம் அடிப்படையில் பேச்சு வரம் அல்ல, மாறாக, அது ஒரு வெளிப்பாட்டு வரம். இது ஒருவருடைய ஆவிக்குள் அமைதியாக பெற்றுக்கொள்ளப்படுகிறது. இது ஆலோசனை வழங்கும்போது, போதனை அல்லது தீர்க்கதரிசனம் வழங்கும்போது அல்லது செயல்படும்போது வார்த்தைகளில் வெளிவருகிறது.

6. ஆவிகளைப் பகுத்தறிதல் (1கொரி.12:10)

பொதுவாக நாம் புரிந்து கொள்வதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று ஆவிகளைப் பகுத்தறிதல் ஆகும். இந்த வரத்திற்கு எதிரியான பிசாசுகளை துரத்துதல், இந்த வரத்தோடு அடிக்கடி பயன்படுத்தப்படுமேயானால், நாம் இன்றுஎதிர்கொள்கிற அநேக பிரச்சனைகள் பெருமளவில் குறைந்துவிடும்.

ஞானத்தைப் போதிக்கும்வசனம்,அறிவை உணர்த்தும் வசனம் ஆகியவற்றைத் தொடர்ந்து ஆவிகளைப் பகுத்தறியும் வரம் வெளிப்பாட்டு வரங்களில் மூன்றாவதாக அமைந்துள்ளது. இந்த தெய்வீக வல்லமை பரிசுத்த ஆவியானவரால் அருளப்படுகிறது. இதன் மூலம் நாம் ஆவிக்குரிய எல்லைக்குள் ஊடுருவி, சாத்தானுடைய ஆவிக்கும் (அசுத்த ஆவிகள்), தேவனுடைய ஆவிக்கும், மனித ஆவிக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ளலாம். இதன் மூலம் பலதரப்பட்ட ஆவிகளின் ஏவுதலால் நடைபெறும் சில காரியங்கள், போதனைகள், சூழ்நிலைகள் ஆகியவற்றின் மூலகாரணங்களை நாம் பகுத்தறிய முடிகிறது.

மற்ற இரண்டு வெளிப்பாட்டு வரங்களைக் காட்டிலும் இந்த வரம் அதிக வரையறைக்குட்பட்டது. இங்கு சான்றாக கூறப்பட்டுள்ள இந்த வெளிப்பாடு கேள்விக்குறியான குணத்தின் மூலாதாரத்தின் வரையுரைக்குட்பட்டது. இருப்பினும், மற்ற எட்டு வரங்களைப் போலவே, ஆவியைப் பகுத்தறியும் வரமும் இயற்கைக்கு அப்பாற்பட்டு செயல்படுகிறது. வேறு எந்த வழியிலும் கிடைக்காத தகவல்களை இது சபைக்கு கொடுக்கிறது.

A. வரத்தின் செயல்பாடு

ஆவிகளை பகுத்தறியும் வரம் ஒருவருக்கு இயற்கையைக் குறித்த வியக்கத்தக்க புரிந்துகொள்ளுதலையும், ஆவிகளின் செயல்பாட்டையும் கொடுக்கிறது. இந்த வரம் தெய்வீக சாத்தான், மனித ஆவிகளின் செயல்பாட்டை வித்தியாசப்படுத்திப் பார்க்கவும், ஆவிகளின் தன்மைகளை வெளிப்படுத்தவும் உதவுகிறது.

சாத்தானுடைய கிரியைகளுக்கும், பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை எல்லா நேரத்திலும் எளிதாக புரிந்துகொள்ள முடியாது. சாத்தான் எப்பொழுதுமே பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைப் போலவே செய்ய முயற்சிக்கிறான். சாத்தான் வஞ்சிக்கிறான். பொய்களின் தகப்பன், வலுசர்ப்பம் ஆகிய பெயர்களால் அறியப்படுகிறான். இந்த எல்லா பெயர்களும் அவனால், முடியும்பொழுதெல்லாம் தீமைகளை கொண்டுவர, அவன் பயன்படுத்தும் குணங்களான சூட்சுமம், தந்திரம் போலி ஆகியவற்றையே குறிக்கிறது. ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை செயல்படுத்தும் யாராவது இல்லாவிட்டால், அநேக வேளைகளில் ஒருவரை ஏமாற்றக்கூடிய அளவுக்கு அவனுடைய தந்திரமான சூழ்ச்சிகள் உண்மையைப் போல தோன்றுகிறது. பிசாசினுடைய கிரியைகள் எப்பொழுதும் தீமையாலும், கொடுமையாலும் நிறைந்திருப்பது வெளிப்படையாக தெரிந்திருந்தால் இந்த குறிப்பிட்ட வரம் இருப்பதற்கு எந்த அவசியமும் இருக்காது.

அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்தில், குறிசொல்லும் ஆவியையுடைய பெண்ணைக்குறித்து சொல்லப்பட்ட நிகழ்ச்சியில், மற்ற தேவனுடைய ஊழியக்காரர்களை எளிதாக ஏமாற்றக்கூடிய "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சொன்னபொழுது அந்த பெண் உண்மையான கூற்றைக் கூறினார். ஆனால் பேசின அந்த ஆவி, அசுத்த ஆவி ஓர் அசுத்த ஆவி அப்போஸ்தலர்களை இந்த விதத்தில் ஏன் விளம்பரப்படுத்தவேண்டும்? ஏனெனில் இந்த பெண் அவர்களை பின்பற்றி வருவதால், ஊழியர்களுக்கோ அல்லது சுவிசேஷத்திற்கோ எந்தவித நன்மையோ அல்லது உதவியோ இல்லை, மாறாக அவளும் அவர்களுள் ஒருவள் என்று அநேகர் எண்ண வழிவகுத்தது.

B. இந்த வரத்தின் செயல்முறையும் இன்றைக்கு அதன் தேவையும்

உலகில் அநேக இடங்களில் இன்று, ஆவிகளைப் பகுத்தறியும் வரம் உயிர்ப்பிக்கப்பட்டு வருகிறது. தற்போதைய எழுப்புதலில், அநேக தேவ மனிதர்களின் ஊழியத்தில் இது செயல்படுத்தப்படுவதை காணலாம். சபையானது தனது ஊழியத்தை பூரணமாக நிறைவேற்றி, பிசாசின் கிரியைகளை அழிக்கவேண்டுமானால், இந்த வரம் செயல்படுவது அதிக அவசியம். இயேசு இப்பூமியில் நடமாடிய நாட்களிலும், ஆதி திருச்சபையின் நாட்களிலும் இருந்ததுபோலவே, இன்றும் அநேக பிசாசுகள் இருக்கின்றன. விசேஷமாக ஆவி வணக்கம், சாத்தான் வணக்கம், மற்றும் பொய்யான வழிப்பாட்டு முறைகள் நிறைந்துள்ள தேசங்களில் உள்ள கிறிஸ்தவ ஊழியர்களுக்கு இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட வரம் தேவைப்படுகிறது.

C. ஆவிகளைப் பகுத்தறியும் வரம் எவ்வாறு செயல்படுகிறது.

இந்த வரத்தின் முதன்மையான மிகவும் வெளிப்படையான செயல்பாடு, மக்களின் வாழ்விலோ, சூழ்நிலைகளிலோ இருக்கும் அசுத்த ஆவிகளை வெளிப்படுத்துவதாகும். என்றாலும் இது ஒரு தீர்க்கதரிசன செய்தி ஒரு குறிப்பிட் போதனை அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடு ஆகியவற்றின் மூலகாரணத்தை மதிப்பிடத்தக்கதாகவும் செயல்படுகிறது. இந்த வரத்தை செயல்படுத்துபவர் ஒரு செய்தி அல்லது செயலின் மூலகாரணம் பேய்தனமானதா, தெய்வீகமானதா அல்லது மனிதப்பூர்வமானதுதானா என்று கூற இயலும். மூலகாரணம் பேய்த்தனமானது என்று பகுத்தறியப்படுமாயின் இந்த வரத்தை செயல்படுத்துபவர் கீழ்கண்டவற்றையும் பொதுவாக வெளிப்படுத்த இயலும்.

1. அந்த பிசாசின் இயல்பு பொய்யுரைப்பது, உடல் நலகுறைவுகள் (புற்றுநோய், கண்பார்வையின்மை,ஊமைதன்மை போன்ற) ஏற்படுத்துவது, அசுத்தமான நடக்கை போன்றவையே அவனுடைய கிரியைகள்
2. அந்த பிசாசின் பெயர், இது பொதுவாக அந்த பிசாசின் இயல்புடனே கூடவெளிப்படுத்துகிறது. ஒரு பிசாசின் பெயரை வெளிப்படுத்துவது வழக்கத்திற்கு மாறானதல்ல.
3. பிசாசுகளின் எண்ணிக்கை. லேகியோனின்' காரியத்திலும், இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்த மரியாளின் காரியத்திலும் இவ்வாறு நிகழ்ந்தது. ஒருவர் ஒரே சமயத்தில்ஒன்றிற்கு மேற்பட்ட பிசாசுகளால் பிடிக்கப்படுவது வழக்கத்திற்கு மாறானதல்ல இது ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தின் மூலம் வெளிப்படுத்தலின் மூலம் அறிந்து கொள்வார்.

4. குறிப்பிட்ட பிசாசுகளின் பலம் பெரும்பாலும், ஓர் அசுத்தஆவியை எதிர்கொள்ளும்போது, அநேக பிசாசுகளில் எது பலம் மிக்கதென்றும், மிகுந்த அதிகாரமுடையதென்றும், ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை செயல்படுத்துபவர், வெளிப்பாட்டின் மூலம் அறிந்து கொள்வார்.
5. தகவல்களை பெற்றுக்கொள்வது. பெரும்பாலும், பிசாசுகள், அவைகள் அறிந்தவர்களுக்கும் அவைகளை துரத்தவும் வல்லமையுள்ளவர்களுக்கு தங்களைக் குறித்த தகவல்களை தாமே தெரிவிக்கின்றன. இருப்பினும், பிசாசுகள் பொய்சொல்லக்கூடும் என்பதால், அவைகள் கொடுக்கும் தகவல்களை சந்தேகத்துடன் பாவித்து, பரிசுத்த ஆவியால் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அருளப்படும் தகவல்களின் அடிப்படையில் கவனிப்பதே நல்லது.

D. ஆவிகளைப் பகுத்தறியும் வரம், பிசாசுகளைத் துரத்துவதற்கு எல்லா நேரத்திலும் விசுவாசத்தோடு செய்யப்படவில்லை.

ஆற்றல் வாய்ந்த விடுதலைக்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரம் அத்தியாவசியமானதாக இருந்தபோதிலும், அது தன்னில் தானே போதுமானதாக இல்லை. அற்புதங்கள் நடைபெறுவதற்கு இது விசுவாச வரத்துடன் இணைந்து செயல்பட வேண்டும். இந்த வரங்களுடன் செயல்படுகிறவர்கள் பிசாசுகளைத் துரத்துவதில் பெருமளவு வெற்றி பெறுகிறார்கள்.

7. <u>விசுவாச வரம்</u> (1கொரி.12:9)

விசுவாசம் எதிர்காலத்துடனும் சரீரப்பிரகாரமாக அனுபவிக்க முடியாததுமான காணப்படாதவை களுடனும் சம்மந்தப்பட்டிருப்பதால், விசுவாச வரம் அசாதாரணமான அளவு நம்பிக்கையை செயல்படுத்த அழைக்கப்பட்ட ஒருவருக்கு கொடுக்கப்படுகிற விசேஷித்த நன்கொடையாகும். வாழ்வில் ஒவ்வொரு முரண்பாடானதும், எதிர்மறையானதுமான சூழ்நிலைகளின் மத்தியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, தேவன் வியத்தகு வழியில் அவருடைய எல்லா சந்தேகத்தையும் நீக்கி, விசேஷித்த விசுவாசத்தால் அவரை நிறைக்கிறார். யோசுவா சூரியனையும், சந்திரனையும் தரித்து நிற்கும்படி கட்டளை கொடுத்தது (யோசு.10:12-14) இதற்கான தெளிவான வேத ஆதாரம் ஆகும். முதலில் அவன் தேவனோடு பேசினான். ஜெபித்தான். பின்பு விசுவாசத்தால் சூரியனிடமும் சந்திரனிடமும் பேசினான். இது தனித்தன்மை வாய்ந்த குறிப்பிடத்தக்க விசுவாசத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்டவெளிப்பாடாய் இருக்கிறது. இது ஒவ்வொரு நாளும் ஒருவருக்கு இருக்கிற விசுவாசத்தைப் போன்றது. அல்லவே. இது தேவனால் அருளப்படுகிற விசேஷித்த முறையான விசுவாசமாகும். ஏனென்றால், அந்த விசுவாசிக்கு தேவன் கொடுத்துள்ள பொறுப்பை நிறைவேற்ற சாதாரணமான அல்லது பொதுவான விசுவாசத்தை காட்டிலும் அதிக விசுவாசம் தேவைப்படுகிறது.

நம்முடைய இருதயத்தில் நடப்பட்டுள்ள உண்மையான வித்தாகிய இரட்சிக்கும் விசுவாசத்திலிருந்து வளரும் பொதுவான விசுவாசத்தை விட, இந்த விசுவாச வரம் விரிவான, மேன்மையான செயல்பாடுகளைக் கொண்டது. (பார்க்க: ரோ.1:17). பொதுவான விசுவாசத்தின் அளவு விசுவாசி வளரும் நிலைகளுக்கேற்ப மாறுகிறது. (“கொஞ்ச விசுவாசம், வசனங்களை உட்கொள்ளுவதன் விளைவாக வருகிறது. அது மிகவும் உயர்ந்த அளவுக்கு வளர முடியும். இருந்தபோதிலும், விசுவாச வரம், பொதுவான விசுவாசத்தின் மிகவும் உயர்ந்த அளவைக் காட்டிலும் மேன்மையான செயல்பாடுகளை கொண்டது.

சில மொழிப்பெயர்ப்பாளர்கள் விசுவாச வரத்தை விசேஷித்த விசுவாசம் என்று குறிப்பிடுகிறார்கள். இது விசேஷமானதும், வழக்கத்திற்கு மாறானதுமான சூழ்நிலைகளிலும் நமது தேவைகளை சந்திப்பதற்கு பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்படும் விசுவாசத்தை இது குறிக்கிறது. மேலும், இந்த விசுவாச வரம் எந்த விசுவாசிகளிடமும் நிரந்தரமாக தங்குவதில்லை என்றும், மாறாக ஒவ்வொரு வெளிப்பாடும் தனித்தனி விசுவாச வரமாக இருக்கிறது என்றும் இது நமக்கு அறிவுறுத்துகிறது. இது எலியாவின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியில் விளக்கப்பட்டிருக்கிறது. அவன் ஆகாப் ராஜாவினிடத்தில் அவனுடைய வார்த்தையின்றி மழை பெய்யாது என்றும், அவனுடைய வார்த்தையின்படி மீண்டும் மழை பெய்யுமென்றும் கூறினான். (1 இரா. 17:1) அவனுடைய விசுவாச வரம் அவனுடைய தீர்க்கதரிசனத்தின் அற்புதமான நிறைவேறுதலைக் கொண்டு வந்தது.

அதற்கு நேர்மாறாக, எலியா சூரைச் செடியின் கீழ் பயத்துடனும், சோர்வுடனும், மரிக்கவும் விருப்பமுடையவனாய் இருந்தபொழுது இந்த விசுவாச வரம் அவனில் இல்லாதிருந்தது. (1 இரா. 19:4) ஏனென்றால், அந்த நேரத்தில் அது அவனுக்கு தேவையில்லாமல் இருந்தது. அவன் தேவன் மீதோ, தேவன் அவருடைய வசனங்களின் மீதோ விசுவாசம் இழந்து காணப்படவில்லை. தேவன் அவனிடத்தில் 7000 உண்மையான விசுவாசிகளை இஸ்ரவேலில் வைத்திருந்தார் என்று சொன்னபொழுது அவனுடைய சுய விசுவாசம் பெலப்பட்டது, மேலும் அது தேவனிடத்தில் விசுவாசம் வைக்கவும், தைரியமாய் இருக்கும்படியும் அவனுக்கு போதித்தது.

இந்த விசுவாச வரம் எப்படி வேலை செய்கிறது?

விசுவாச வரம் மந்தமான நிலையில் செயல்படுகிறது போல் தோன்றுகிறது. அதனால் அது எல்லா நேரத்திலும் அப்படியல்ல. சிங்கங்களிடமிருந்து தானியேலுடைய பாதுகாப்பு (விசுவாச வரத்தின் மந்தமான எடுத்துக்காட்டு), சிம்சோன் சிங்கத்தைக் கொன்றதிலிருந்து வேறுபடுகிறது போல தோன்றுகிறது. (தேவனுடைய வல்லமையின் வெளிப்பாட்டிலுள்ள மனிதனுடைய தீவிர ஈடுபாட்டிற்கு எடுத்துக்காட்டு) இது அற்புதங்களை செய்வதின் எடுத்துக்காட்டு. இது அடிக்கடி, அதிகம் காணக்கூடிய வரங்களுடன் (அற்புதங்களை செய்தல், சுகமளிக்கும் வரம்) இணைந்து எண்ணத் தோன்றுகிறது. இந்த விசுவாச வரம், விசுவாச வார்த்தைகளை பேசுகிறது. இங்கே ஆவியானவரால் ஏவப்பட்டபொழுது, தேவ மனிதனால் பேசப்பட்ட அந்த வார்தைகள் தேவனுடைய சொந்த வார்த்தைகளாக, அவரால் உறுதி செய்யப்பட்டன. விளைவுகள் எப்பொழுதும் உடனடியாக தெரியாவிட்டாலும், அவைகள் நிச்சயம். மேலும் இந்த வரம், பல வழிகளில் செயல்படக்கூடும். (ஆசீர்வதிக்க, சபிக்க, உருவாக்க, அழிக்க)

பேசப்பட்ட வார்த்தைகளின் மூலம் கிரியை செய்த விசுவாச வரத்திற்கு பல குறிப்பிட்ட உதாரணங்கள் உண்டு:

யோசுவா சூரியனையும், சந்திரனையும் தரித்து நிற்கும்படி கட்டளையிட்டான் (யோசு.10:12-14). எலியா அவருடைய வார்த்தையால் காலநிலையைக் கட்டுப்படுத்தினான் (1 இரா. 17:1). ''என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும்''... அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை'' (யாக். 5:17)
பேதுரு அனனியாவையும், சப்பீராளையும் நியாயந்தீர்க்கிறான் (அப்.5) வேதாகமம் விசுவாச வரத்தின் அடிப்படை கொள்கைகளை கற்பிக்கிறது. (மாற்கு 11:23) ''...அவன் சொன்னபடியே ஆகும்...'' என்பது, ''இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால்...'' என்பதுடன் இணைத்து கூறப்பட்டுள்ளது. ''நீர் ஒரு காரியத்தை நிர்ணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்...'' (யோபு 22:28)

8. <u>குணமாக்கும் வரங்கள்</u> (1 கொரி. 12:9)

இந்த வரத்திற்கான மூன்று குறிப்புகள் 1 கொரி. 12ல் வசனங்கள் 9, 28, 30ல் உள்ளன. இந்த வசனங்கள் ஒவ்வொன்றிலும், மூல பாஷையில் ''கரிஸ்மாடா இயாமாடோன்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு வார்த்தைகளும் பன்மையில் உள்ளன. இந்த சொற்றொடரின் உண்மையான மொழிபெயர்ப்பு, குணமாக்கும் வரங்கள் என்பதாகும்.

குணமாக்கும் வரங்கள் எவ்வித இயற்கை வழியுமின்றி, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நோய்களையும் குறைபாடுகளையும் குணப்படுத்த செயல்படுகிறது. இது ஒருவருடைய சரீரத்தின் மீது வந்து, அவனுடைய நோய்களையும், அவனை சுகப்படுத்த அவனுடைய வேதனைகளையும் நீக்கும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை ஆகும். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள பண்பை பெயர்ச்சொற்கள் பாதிக்கப்பட்ட மனுக்குலத்திற்கு தேவனுடைய சுகமாக்கும் வரங்களின் நிறைவை அழுத்தி கூறுகிறது. இது மேலும், இயேசுவின் குணப்படுத்துதல். ஒவ்வொரு வியாதிகள், உடல்நலக் குறைவுகள், பெலவீனங்கள், வாதைகள், உடல் ஊனங்கள், பாதிப்புகள் ஆகியவற்றிலிருந்து விடுதலை அளிக்கும் என்பதையும் குறிக்கிறது. இந்த வரத்தில் பலவகைப்பட்ட வெளிப்பாடுகள் இருக்கின்றன என்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது (1 கொரி 12:4-7).

இந்த குணமாக்கும் வரம் எல்லா நேரத்திலும் எல்லா பிணியாளிகளையும் குணப்படுத்தும் திறமை என்று எடுத்துக் கொள்ள முடியாது. அநேகர் அதை தவறாக புரிந்து கொண்டு, ஏன் மருத்துவமனைகளுக்கும், பிற இடங்களுக்கும் சென்று எல்லா வியாதியஸ்தர்களையும் சுகப்படுத்தக்கூடாது என்று கேட்கிறார்கள். இயேசுவும்கூட அதைச் செய்யவில்லை. ஒருமுறை இயேசு அநேக வியாதியஸ்தர்கள் இருந்த குளத்தின் அருகே சென்றிருந்தார். அங்கு அநேக வியாதியஸ்தர்கள் இருந்தபொழுதும், ஒருவனை மாத்திரம் தெரிந்து கொண்டு அவனை சுகப்படுத்தினார். பிற இடங்களில், வியாதியஸ்தர்கள் கூட்டமாக இயேசுவிடத்தில் வந்தார்கள் என்றும், ''அவர்களெல்லாரையும் சுகப்படுத்தினார்'' என்றும் வாசிக்கிறோம். தெய்வீக வல்லமையின் ஒரு முக்கியமான கோட்பாடு, இயேசுவினிடத்தில் வரும் ஒருவன் விசுவாசத்துடனும், ஒத்துழைப்புடனும் வர வேண்டும் என்பதாகும்.

குணமாக்கும் வரங்களில் நோக்கம்.

A. வியாதியஸ்தர்களையும், உபத்திரவப்படுபவர்களையும், விடுவிக்கவும், அவர்களுடைய வாழ்வில் பிசாசுகளின் கிரியைகளை அழிக்கவும் (1 யோ. 3:8, அப். 10:38, லூ. 13:16).
B. இயேசு தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க. (யோ. 10:36-38).
C. வார்த்தையை உறுதிப்படுத்த (மாற்கு. 16:17-20, அப். 7:29-30,33)
D. சுவிசேஷத்திற்கு நேராக மக்களைக் கவர. (மத். 4:23,25).
E. தேவனுக்கு மகிமையைக் கொண்டுவர (மாற்கு 2:12, லூ. 13:13, 18:43, யோ. 9:2-3)

தேவனுடைய சுயநோக்கத்திற்காக எவரை அவர் சுகப்படுத்த விரும்புகிறாரோ, அவர்களை சுகப்படுத்த பரிசுத்த ஆவியானவர் அவருடைய ஊழியக்காரனுக்கு குணமாக்கும் வரங்களைக் கொடுக்கிறார். மற்ற எல்லா வரங்களைப் போல குணமாக்கும் வரங்களும், கொடுப்பதற்கு மாத்திரமல்ல, பெற்றுக் கொள்வதற்குமே. இந்த வரங்களை எப்படி பயன்படுத்த வேண்டுமென்று விசுவாச பிரமாணங்கள் இருப்பது போல அதை பெற்றுக் கொள்வதற்கும் பிரமாணங்கள் உள்ளன. தேவன் அனுப்பிய குணமாக்கும் வரத்தை பெற்றுக் கொள்வதில் எசேக்கியாவுக்கு கஷ்டம் இருந்தது. 2 இரா. 20:8-11ல் (மேலும் பார்க்க 2 இரா. 5:10-14). குறிப்பிட்டுள்ளபடி ஒரு அற்புதத்தின் மூலம் ஒரு விசேஷித்த வழியில் அவனுடைய விசுவாசம் கட்டப்பட வேண்டியருந்தது. எலிசா மூலம் தேவன் அனுப்பிய குணமாக்கும் வரத்தைப் பெற்றுக் கொள்வதில் நாகமானுக்கு கஷ்டம் இருந்தது. குணமாக்குதலுக்கு பெரும்பாலும் விசுவாசத்தின் இருவகைச் செயல்கள் தேவைப்படுகிறது. பெற்றுக்கொள்ளும் விசுவாசமும், குணமாக்கும் வரத்தை செயல்படுத்தும் விசுவாசமும் இந்த நியதிக்கு விதிவிலக்குகள் இருந்த போதிலும், குணமாக்குதல் எப்பொழுதும் தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.

இருப்பினும், சில வேளைளில் இந்த குணமாக்குதல் கடந்து செல்ல பயன்படும் சாதாரண வழிமுறைகள் மிக நன்றாகச் செயல்படுவதில்லை. அந்த வேளைகளில் தேவன் விசேஷித்த குணமாக்கும் வல்லமையை அனுப்புவது அவசியமாகிறது. சில வேளைகளில், தேவன் சாதாரண குணமாக்கும் வழிகள் மூலமாக குணமாக்கும் வரங்களைச் செயல்படுத்துகிறார். இன்னும் சில வேளைகளில், அசாதாரணமான வழிகளில் அவருடைய சித்தத்தின்படி செயல்படுத்துகிறார் (உதாரணம் பேதுருவின் நிழல் அப். 5:15-16).

9. அற்புதங்களைச் செய்தல் (1 கொரி. 12:10)

இயற்கையின் சாதாரண விதிகளைக் கடந்து தேவன் செயல்படும்பொழுது அற்புதம் நடக்கிறது. மனித திறமையை முழுவதுமாய் கடந்து சிலவற்றை செய்ய பரிசுத்த ஆவியானவர் நமக்கு வல்லமையை தரும் பொழுது இந்த அற்புதங்களை செய்யும் வரம் வருகிறது. குறிப்பிட்ட நேரத்தில் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக தேவன் அதை நமக்கு தருகிறார். அற்புதம் என்பது, படிப்படியாய் நடக்கும் குணமாக்குதலின் வெளிப்பாடிலிருந்து வேறுபட்டு, வழக்கமாக உடனடியாய் நடப்பது ஆகும்.

எல்லா ஆவியின் வரங்களும் அற்புதமானவைகளே. ஆனால் இந்த இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ''அற்புதம்'' என்ற வார்த்தை, வல்லமையான செயல்களைக் குறிக்கிறது. வேதாகமம்

அற்புதங்களால் நிறைந்த புத்தகமாய் இருக்கிறது. தேவன் அற்புதங்களின் வெளிப்பாடு இல்லாமல், கிறிஸ்தவத்திற்கு எவ்வித நம்பகத்தன்மையும் இல்லை. ஏனென்றால் தேவன், இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள் ஆகியவற்றின் மூலம் உறுதிப்படுத்தினார் (அப். 2:22)

அற்புதங்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்த மறுக்க முடியாத நிரூபணங்களை நமக்குத் தருகிறது.

இயேசு உயிரோடு இராவிட்டால் வியாதியஸ்தர்களை சுகமாக்கவோ, அல்லது அற்புதங்களை செய்யவோ, அவருடைய பெயருக்கு வல்லமை இருந்திருக்காது. (அப். 4:33) இயேசுவின் பெயருக்கு வியாதியஸ்தர்களை சுகப்படுத்தவும், அற்புதங்களை செய்யவும் வல்லமை இருக்கிறது என்ற உண்மையின் பெலத்தைக் கொண்டே பேதுரு, விசுவாசியாத யூதர்களை, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், அவர்கள் மனந்திரும்ப வேண்டுவதின் அவசியத்தையும், அவர்களுக்கு உணர்த்தினார். எனவே:

A. அது கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்க விசுவாசிகளுக்கு தைரியத்தை கொடுத்தது. (அப். 4:29-30). அற்புதம் செய்கிறவராகிய இயேசுவோடு அவர்கள் இருந்தார்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள். (அப். 4:13)
B. தேவனைக் குறித்து அதிகம் அறிய விசுவாசிகளுக்கு பசியை உண்டாக்கியது. (அப். 4:31).
C. அது மனிதரை, அவர்களுடைய பாவங்களைக் குறித்த குற்ற உணர்வை ஏற்படுத்தி, அதை ஒப்புக்கொள்ளச் செய்தது. (அப். 5:28,33).
D. ஒரு அற்புதத்தின் மூலம், ஒரே நாளில் ஐயாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள் (அப். 4:4, 5:14).
E. நடந்த எல்லாவற்றிற்காகவும், எல்லா மனிதரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். (அப். 4:21)
F. அது சுவிசேஷத்தை வேகமாய் ஆரம்பிப்பதற்கு(அப். 5:14-16)

முன்பு, ஒருவரும் எங்கேயும் அவரை பின்தொடரவில்லை. அவர் அடிக்கடி ஜெப ஆலயங்களில் பிரசங்கம் செய்திருக்க வெண்டும். ஏனெனில், அது அவருடைய வழக்கமாய் இருந்தது என்று லூக்கா 4:16 சொல்லுகிறது. ஆனால் லூ. 4:33-37ல் கூறப்பட்டுள்ள அற்புதம் நடந்தபொழுது "அவருடைய கீர்த்தி சுற்றிலுமிருந்த நாடுகளிலுள்ள இடங்களிலெல்லாம் பிரசித்தமாயிற்று" அப்பொழுதிருந்தே அவரது வார்த்தைகளைக் கேட்கவும், அவரது அற்புதங்களைப் பார்க்கவும் திரள்கூட்ட மக்கள் அவரை நெருக்கினார்கள். "அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின் சென்றார்கள்" (யோ. 6:2).

சீஷர்கள் எல்லா இடங்களிலும் பிரசங்கித்தார்கள், வியாதியஸ்தர்களை குணமாக்கினார்கள், பிசாசுகளை துரத்தினார்கள், அற்புதங்களை செய்தார்கள், திரளான ஜனங்கள் கிறிஸ்துவினிடத்தில் திரும்பினார்கள்.

A. பிலிப்பு செய்த அற்புதங்களை கேட்டும், பார்த்தும் சமாரியா அவனுக்கு செவிகொடுத்தது. (அப். 8:5).

B. பேதுரு ஐனேயாவிடம் "இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்: நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள்..." என்று சொன்னபொழுது, அவன் உடனடியாக எழுந்தான். (அப். 9:34) இதைப் பார்த்த லித்தாவில் குடியிருந்தவர்களெல்லாரும் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

C. பேதுரு தொற்காளை உயிரோடு எழுப்பியபொழுது, யோப்பா பட்டணத்திலுள்ள அநேகர் விசுவாசம் வைத்தார்கள். (அப். 9:42).

D. சப்பாணியான மனுஷன் நடப்பதையும், பவுலைப் பின்தொடர்வதையும் பார்த்த லீஸ்திராவிலுள்ள மக்கள், தேவர்கள் அவர்களிடத்தில் இறங்கி வந்தார்கள் என்று நினைத்தார்கள். (அப். 14:8-18). "அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக

அடையாளங்களும், அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டிடங்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும், எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள், அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்''. (அப். 5:12-16).

E. முழு அளவிலான அற்புதங்களோடு அப்போஸ்தல நடபடிகளின் புஸ்தகம் முடிவடைகிறது. (அப். 28:8-9) புபிலியுவினுடைய தகப்பன் குணமாக்கப்பட்டதை ஜனங்கள் பார்த்தபொழுது, தேவன் இப்படி ஒருவரை சுகப்படுத்துவாரென்றால், தேவையிலுள்ள ஒவ்வொருவரையும் சுகப்படுத்த வல்லமையும், விருப்பமும் உடையவராயிருக்கிறார் என்பதை நம்பினார்கள். தேவனைப் பற்றி சரியாக எண்ணவும், விசுவாசிக்கவும் தொடங்கியபொழுது, தேவன் அவர்களுக்கு என்ன கொடுக்க விரும்பினாரோ, அதை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

F. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் அற்புதங்கள் நடைபெறுகின்றன. தேவன் விசுவாசிக்கு அற்புதங்களைச் செய்யும் திறமையை கொடுப்பது ஒரு விசுவாசியின் வாழ்வில் தேவன் செய்யும் அற்புதங்களிலிருந்து வேறுபட்டது. இவ்வாறு, அற்புதங்களைச் செய்யும் வரத்தை ஒரு பொழுதும் பெற்றிராதவர்கள், அவர்களுக்காக தேவன் செய்த ஆச்சரியமான அற்புதங்களை அடிக்கடி அனுபவித்திருக்கிறார்கள்.

சில உதாரணங்கள்

A. அப். 5:17-20லும், அப். 12:1-10லும் உள்ள பேதுருவினுடைய விடுதலையாக்கும் வரங்கள். மேலும், அப். 16:15-30லுள்ள பவுல், சீலாவுடைய அற்புதங்கள்.

B. ஆவியானவரால் எடுத்துச் செல்லப்படும் அற்புதங்கள் (அப். 8:39). ''... கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் காணாமல்...''

இவைகளைப் போன்ற இன்னும் அநேக உதாரணங்கள், விசுவாசிகளின் வாழ்வில் தேவனால் செய்யப்பட்ட அற்புதங்கள் ஆகும். சில வேளைகளில், விசுவாசிகளின் ஒத்துழைப்பில்லாமலும் அற்புதங்கள் நிகழ்கின்றன. அற்புதங்களைச் செய்யும் வரம் செயல்படாத உதாரணங்கள் இவை. இந்த வரம் செயல்பட்ட உதாரணங்கள்.

A. அப். 19:11, ''பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்''.

B. அப். 9:40, பேதுரு தொற்காளை மரித்தோலிருந்து உயிரோடு எழுப்பினான்.

C. அப். 20:9-12, பவுல் ஐத்திகுவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினான்.

இந்த வரத்தின் நடைமுறை சார்ந்த செயல்பாடுகள்.

A. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஒரு விசேஷித்த நம்பிக்கையையும் அதிகாரத்தையும் உருவாக்குகிறது.

B. விசுவாசத்துடனும், அதிகாரத்துடனும் பேசும் வார்த்தை, அக்கினியின் மூலம் பதில் கொடுக்கும் தேவனே, இஸ்ரவேலின் தேவனாய் இருக்க வேண்டும் என்று எலியா சொன்னான். அக்கினி கீழே இறங்கி வந்தது, அற்புதங்களைச் செய்யும் வரத்திற்கு உதாரணம்.

C. தைரியமான விசுவாச கிரியை.

முடிவுரை

பரிசுத்த ஆவியும், அவருடைய வெளிப்பாடுகளின் மீதும் உள்ள இந்த குறுகிய போதனையில், நம்முடைய சொந்த மனித அனுபவம் எப்படியிருக்கிறது என்றோ, அல்லது நாம் சார்ந்திருக்கிற சபை பிரிவு என்ன சொல்லுகிறது என்றோ பார்க்காமல், இந்த விஷயத்தைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதையே நாம் பார்த்திருக்கிறோம். வேதாகமம் கூறும் எந்த காரியத்தின் மீதும் ஒரு எதிர்மறையான நிலையை எடுப்பதால், தேவனுக்காக ஒரு காரியத்தையும் எப்பொழுதுமே சாதிக்க இயலாது. தேவன், நம்முடைய அவிசுவாசத்தின் மூலமல்ல, விசுவாசத்தின் மூலமே கிரியை செய்கிறார். எனவே, உங்களுடைய பாரம்பரிய இறையியல் சார்ந்த அறிவு அல்லது உங்கள் சொந்த அனுபவம் எப்படியிருக்கிறதோ என்பதை பொருட்படுத்தாது, இயற்கைக்கு அப்பாற்பட்டதும், அற்புதமுமான காரியங்களுக்கு உங்கள் மனதையோ இருதயத்தையோ அடைத்துவிடாமல் இருக்கும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமத்தையும், இந்த பாடத்தையும் திறந்த இருதயத்தோடு படியுங்கள். உங்கள் பதிலுக்கு அடையாளமாக உங்களையே தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். அவர் விவரிக்கிற எல்லாவற்றிற்கும் நீங்கள் திறந்த மனதோடு இருக்கிறீர்கள் என்றும், அவர் உங்களுக்கென்று வைத்திருக்கிற எல்லாவற்றின் நிறைவையும் அனுபவிக்க விரும்புகிறீர்களென்றும் உண்மையாய் அவரிடம் கூறுங்கள்.

பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுதல் - தெய்வீக வழிநடத்துதலும் முன்னுரிமைகளுடன் வாழ்தலும்

அத்தியாயம் I – தேவன் தம்முடைய ஜனங்களை நடத்தும் பல்வேறு வழிகள்

என்ன செய்ய வேண்டும் என்று தெரியாத சூழ்நிலைகளில் நம்மில் அநேகர் சிக்கிக் கொள்கிறோம். ஆனால் தேவனிடத்தில், நமக்கான பதில்கள் உண்டு. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தலைமைத்துவ பொறுப்பில் உள்ளவர்கள் எவரும் மாம்சிக பெலனைக் கொண்டு கிரியை செய்ய வேண்டுமென்று தேவன் ஒருபோதும் விரும்பவில்லை. ஊழியம் ஒருபொழுதும் மனுஷீக அறிவால் மாத்திரம் செய்யப்படும் வேலை அல்ல. தலைமைத்துவ பொறுப்பில் உள்ளவர்கள் அவருடைய ஆவியினால் நடத்தப்பட வேண்டும் என்று தேவன் நிர்மானித்திருக்கிறார். நம்முடைய ஊழியத்தில் ஆவிக்குரிய கனிகளை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், நம்முடைய ஊழியங்கள் ஆவியானவரால் நடத்தப்பட்டதாகவும், ஆவியானவரால் வல்லமைப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இந்த உலகத்தில் ஊழியத்தில் இருப்பவர்களுக்கு இருக்கும் காரியங்களில் ஏமாற்றத்தை உண்டாக்கும் ஒரு காரியம், ஆவியானவரால் எப்படி நடத்தப்பட வேண்டும் என்று தெரியாமலிருப்பதே.

சரியான தீர்மானங்கள் எடுக்க நமக்கு உதவ தேவன். நமக்கு அவருடைய ஆவியானவரை தந்திருக்கிறார். சபையிலுள்ள கடினமானதும், கலகக்கார குணம் கொண்ட மக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும்போது நாம் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படவேண்டும். நாம் உபத்திரவங்களையும், ஆவிக்குரிய தாக்குதல்களையும், பல்வேறு அழுத்தங்களையும் எதிர்கொள்ளும்பொழுது ஆவியானவரால் நாம் நடத்தப்படவேண்டும். கட்டிடத்திற்காக நிலத்தை வாங்கும்பொழுதும் ஆவியானவரால் நடத்தப்படவேண்டும். நாம் தலைவர்களை தேர்ந்தெடுக்கும்பொழுதோ, பிரசங்கம் செய்யும்பொழுதோ, அல்லது ஜனங்களுக்கு உதவும்பொழுதோ, தேவனுடைய ஆவியானவரின் உதவி நமக்கு தேவை.

தலைவர்களாக, நாம் செய்கிற அல்லது செய்யாத அநேக காரியங்களால், அநேகருடைய வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. நம்முடைய எல்லா தீர்மானங்களும் ஒருபொழுதும் மனித அறிவுக்கு மட்டும் உட்பட்டு இருக்கக்கூடாது. நாம் சரியான, ஞானமான தீர்மானங்களை எடுப்பதற்கு தேவன் அவருடைய ஆவியானவரை நமக்கு தந்திருக்கிறார். ஆனால் நாம் அவருக்கு செவி கொடுக்க கற்றுக்கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய ஆவியானவருக்கு செவிகொடுக்கும்பொழுது, மற்றவர்கள் கேட்கமுடியாத காரியங்களை நாம் கேட்கிறோம்.

வாசிக்க: உபா. 4: 5,6.

I. தேவன் நம்மை அவருடைய எழுதப்பட்ட வார்த்தையின் மூலம் நடத்துகிறார்.

A. தேவனால் எழுதப்பட்ட வார்த்தைகள் தேவனுடைய ஞானமாயிருக்கிறது. (லூக்கா 11:49) உங்களுடைய சபைக்காக, வீட்டு கூட்டங்களுக்காக, இன்று தேவனுடைய ஞானம் உங்களுக்கு தேவைப்படுகிறதா, நீங்கள் பார்க்க வேண்டிய முதல் இடம் வேதாகமமே.

B. தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகள் ஊழியத்தில் வெற்றியை தருகிறது. (யோசுவா1:8).

C. தேவனுடைய வார்த்தைகள் நாம் நடக்க வேண்டிய பாதையில் வெளிச்சத்தை தருகிறது. (சங்.119:105,125).
   1. தேவன் அவருடைய வார்த்தையால் நம்மை நடத்துகிறார்
   2. தேவனுடைய வார்த்தைக்கு நாம் சரியான எண்ணமுடையவர்களாய் இருக்க வேண்டும்.
   3. அந்த எண்ணம் கீழ்ப்படிதலின் ஒன்றாக இருக்க வேண்டும். (ஏசாயா 8:20).
   4. தேவன் அவருடைய எழுதப்பட்ட வார்த்தைகளுக்கு முரண்பாடாக நடத்தமாட்டார்.

D. பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய வார்த்தையால் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார். (யோவான் 16:13,17:17).

1. வழிநடத்துதலுக்கு, தேவனுடைய வார்த்தையை பாருங்கள்.
2. நீங்கள் தீர்மானம் எடுப்பதற்கு முன்பு தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்பதை பாருங்கள்.
3. நீங்கள் தலைவர்களை ஏற்படுத்துவதற்கு முன்பு, சபை தலைமைத்துவத்திற்கு வேதாகமத்தின் அடிப்படையில் என்ன தகுதிகள் தேவை என்று பாருங்கள்.
4. தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் விலகும்பொழுது, பிரச்சனைகளுக்குள் சிக்கிவிடுகிறோம்.

II. தேவன் நம்முடைய உத்தமத்தால் நம்மை நடத்துகிறார் (நீதி-11:3).

<u>உத்தமம் என்பது :</u> நேர்மையான குணமும், உண்மையாய் இருத்தலும். (யோபு 27:3-6).
நாம் உத்தமமாய் நடக்க தீர்மானிக்கும்பொழுது, வாழ்வு இலகுவாகிறது.

A. போதகர்கள் உத்தமத்தின்படியே நடத்த வேண்டும். (சங்.78:70-72).
   1. பணம் கொடுக்கிறார்கள் என்பதற்காக, சபையில் மக்கள் தலைமைத்துவ பொறுப்புகளில் நிறுத்தப்படுவதில்லை.
   2. அவர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்படாவிட்டால், அவர்களை தலைமைத்துவத்தில் வைப்பது உத்தமம் என்னும் கொள்கைக்கு பாதிப்பை கொண்டுவரும்.
   3. உத்தமம் என்பது நான் பணத்தை திரட்ட தவறான எந்த வழிகளையும் பயன்படுத்தமாட்டேன்.
   4. போதகர்களே, உத்தமத்துடன் உங்கள் ஊழியங்களை காத்துக்கொள்ளுங்கள்.
   5. ஜனங்களோடு பேசும்பொழுது,நேர்மையாயிருங்கள்.
   6. உங்கள் மனச்சாட்சியை மீறாதிருங்கள்.
   7. சிலவற்றை பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் உண்மையோடு சமரசம் செய்யும் எந்த நேரத்திலும், அதை இழந்துவிடுவீர்கள்.

III. தேவன் அவருடைய சமாதானத்தால் நம்மை நடத்துகிறார் (கொலே.3:15)

A. உங்கள் மனதில் தோன்றுகிற எல்லா கேள்விகளையும், தேவ சமாதானம் தீர்மானிக்கவும், நல்ல முறையில் தீர்த்தும் வைப்பதாக. அது உங்கள் இருதயத்திற்கும் தேவனுக்கும் இடையில் நடுவராக இருக்கட்டும்.
   நீங்கள் சில காரியங்களைச் செய்வதற்கு ஜெபிக்க ஆரம்பிக்கும்பொழுது, உங்கள் இருதயத்தில் சமாதானம் இருக்கிறதா, அல்லது தயக்கத்தையும், அமைதியின்மையையும் உணருகிறீர்களா என்று உங்களையே கேட்டுப் பாருங்கள்.

B. ஞானத்தின் பாதையில் நடத்தல் சமாதானத்திற்கு வழிநடத்துகிறது. (நீதி.3:13,17)
   1. தீர்மானங்களைக் குறித்து இருக்கும் சமாதானத்தின் அடிப்படையில் அநேக முக்கியமான தீர்மானங்கள் எடுக்க முடியும்.
   2. இயேசு சமாதான பிரபுவாய் இருக்கிறார்.

IV. பிறருடைய ஆலோசனை மூலம் தேவன் நம்மை நடத்துகிறார். (நீதி- 20:18,24:6)

A. நமக்கு உதவ தேவன், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை தந்திருக்கிறார்.
   1. எந்த ஆணோ அல்லது பெண்ணோ தனித்து விடப்பட்டவர்கள் அல்ல.
   2. பிறரிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட ஆலோசனை, உங்கள் இருதயத்தில் தேவன் வைத்த ஆலோசனைக்கு மாறுபட்டு இருக்குமானால், அதைக் குறித்து அதிக நேரம் ஜெபியுங்கள்.
   3. நீங்கள் எடுக்கும் தீர்மானங்களுக்காக நீங்களே தேவனுக்கு பதில் சொல்ல வேண்டும்.
   4. ஆனால் பிறர், புதிய கோணத்தில் காரியங்களைப் பார்க்க நமக்கு உதவுவார்கள். இதற்கு முன்பு நாம் ஒருபோதும் எண்ணிப்பார்க்காத காரியங்களை எண்ணிப் பாருங்கள்.
   5. நம்முடைய சொந்த உத்தேசங்களை சீர்தூக்கிப் பார்க்கவும், சரியான நேரத்தில் கவனிக்கவும் உதவும்.

B. நம்மை நேசிக்கிறவர்களிடத்தில் நாம் திறந்த மனதுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (நீதி.18:1) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தலைவர்களாக நாம் எடுக்கும் தீர்மானங்கள் மற்றவர்களை பாதிக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, நாம் தேவனுடைய வார்த்தைக்கும் செல்லுவோம், தேவ சமானத்துடன் உத்தமத்திலும், பிறருடைய ஆலோசனையிலும் நடப்போம்.

அத்தியாயம் II -தேவன் நம்மை நம்முடைய ஆவியின் மூலம் எப்படி நடத்துகிறார்

வாசிக்க: சகரியா 12:1.

I. மனிதன் ஆவியின் தன்மையுடைவன்.

- தேவன் மனிதனுக்குள் ஆவியை வைத்திருக்கிறாரா என்பதை இந்த பகுதியில் கவனியுங்கள்.
- மனிதனுக்குள் ஆவி இருக்கிறது.
- 1தெச.5:23-ம் மனிதன் மூன்று தன்மைகள் உள்ளவன் என்று போதிக்கிறது: ஆவி, ஆத்துமா, சரீரம்.

A. மனிதனுடைய ஆத்துமாவுக்கும் ஆவிக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.
1. ஆவி சரீரத்துக்குள் வாழுகிற மெய்யான நபர்
2. ஆத்துமா என்பது சித்தம், மனம், உணர்ச்சிகள் ஆகியவற்றால் ஆனது.
3. சரீரம், மனிதன் வாழுகிற வீடு.

B. தேவன் ஆவிகளின் தகப்பனாயிருக்கிறார். (எபி.12:9)
1. யோ.4:24-ல் தேவன் ஆவியாயிருக்கிறார் என்று கூறி இயேசு இதை உறுதிப்படுத்துகிறார்.
2. தேவன் ஆவியாகவும், மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டும் இருக்கிறான். ஆதி.1:27, 2:7.
3. ஆவியில்லாத சரீரம் செத்தது என்று வேதாகமமே கூறுகிறது. (யாக்.2:26).

C. ஏதேன் தோட்டத்தில் மனிதனிலுள்ள ஆவி மரித்துவிட்டது (ஆதி. 2:15-3:19)
1. தேவன் ஆதாம், ஏவாளின் ஆவிக்குரிய மரணத்தைப் பற்றி கூறுகிறார்.
2. தேவனிடத்திலிருந்து விலகுவது என்று இது பொருள்படும். (ஆதி.3:8-9)
3. ஆதாமும் ஏவாளும் மனித குலத்தின் தலைமை ஊற்றுக்கள்.
4. அப்படியானால் மனிதன் இயற்கையால் கோபாக்கினையின் பிள்ளையாக மாறுகிறான். (எபே.2:1-3).

II. தேவனுடைய மீட்பின் திட்டம் மனித இயல்பை மாற்றுகிறது. (எசே.36:26-27)

இயேசு கிறிஸ்துவின் மூலம் அத்திட்டம் நிறைவேறியது.

A. மனிதனுக்குள் புதிய ஆவி. (யோ.3:1,8).
1. இந்த புதிய ஆவியை பெற்றுக்கொள்ள மனிதன் மறுபடியும் பிறக்கவேண்டும்.
2. தேவனுடைய ஆவியின் மூலம் உண்டாகும் ஆவிக்குரிய பிறப்பை இது குறிக்கிறது.
3. மாற்றம் உள்ளே நிகழ்கிறது.
4. ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது, ஒரு புதிய ஆவியை அவன் பெற்றுக்கொள்கிறான்.

B. நம்முடைய ஆவி மூலம் நாம் தேவனை தொடர்புகொள்கிறோம், தம்முடைய ஆவி மூலம்அவர் நம்மை தொடர்புகொள்கிறார்.
- தேவன் தம்முடைய ஆவியின் மூலம் நமக்கு அறிவுரை கூறி, நம்மை வழிநடத்துவாரானால், நம்முடைய ஆவியின் வழியாகவே அப்படி செய்வார்.

C. தேவன் நம்முடைய ஆவியின் மூலமாக நமக்கு வெளிச்சம் கொடுக்கிறார். (நீதி:20:27).
   1. பரிசுத்த ஆவியானவர், நம்முடைய ஆவியுடனே சாட்சிகொடுக்கிறார். (ரோமர் 8:16, 1கொரி.2:14).
   2. தேவன் நமக்கு ஆயத்தம்பண்ணினவைகளை ஆயத்தம் பண்ணினவைகளை தம்முடைய ஆவியின் மூலம் வெளிப்படுத்துகிறார், ஆவியானவர் நம்முடைய ஆவியுடனே சாட்சி கொடுக்கிறார். (1கொரி.2:9-12).

III. நம்முடைய ஆவியை தேவன் எவ்வாறு கையாளுகிறார். (யோ.13:2,21)

A. ஆவியில் கலக்கமடைதல். (யோ.13:21).
   1. தவறான ஆவியையோ, நோக்கத்தையோ உடைவர்களின் அருகே நீங்கள் இருக்கும்போது, உங்கள் ஆவி கலக்கமடையும்.
   2. அவர்கள் சரியான காரியத்தை சொல்லி சரியான காரியத்தை செய்தாலும் அவர்கள் அருகே நீங்கள் செல்லும்போது, ஏதோ ஒன்று உங்கள் ஆவியை கவலையுறச் செய்கிறது.
   3. உங்களுக்குள்ளாக குழப்பத்தை நீங்கள் உணரும்போது, விழிப்புடன் இருங்கள், தேவன் உங்களோடு இடைப்படுகிறார்.

B. ஆவியில் துக்கமடைதல் (அப்.16:16-18)
   - சில குறிப்பிட்ட மக்களோ அல்லது இடங்களோ, உங்களை ஆவியில் துக்கமடையச்செய்யலாம். அப்படி நடக்கும்பொழுது, உங்களை காத்துக்கொண்டு, அதற்கு கவனம் செலுத்த கற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால், இது உங்களை பிரச்சனையிலிருந்து காத்துக்கொள்ளும்.

C. ஆவியில் அமைதலற்று இருத்தல் (2கொரி.2:12,13).
   1. சில காரியங்கள் சரியாய் இல்லாவிட்டால், உங்கள் ஆவியில் அமைதி இருக்காது.
   2. நீங்கள் செல்லுகிற வழியில் அமைதியின்மை காணப்பட்டால், நின்று தேவனுக்காய் காத்திருங்கள்.

D. ஆவியில் வைராக்கியமடைதல் (அப்.17:16-17).
   1. அது உங்களுக்கு நடக்கும்போது, நீங்கள் உங்கள் வாயைத் திறந்து பகிர்ந்து கொள்ளுவது அவசியம்.
   2. தேவன் உங்களை நடத்துவதால், அதில் ஈடுபடுங்கள்.
   3. "வைராக்கியம்" என்ற வார்த்தைக்கு தூண்டுதல் என்றும், மெதுவாய் தள்ளு என்றும் பொருள்.
   4. இந்த வழியில் தேவனுக்கு செவிகொடுக்க கற்றுக்கொள்வீர்களேயானால், உங்கள் ஊழியம் மிகவும் வரையறுக்கப்பட்டதாயிருக்கும்.

E. ஆவியில் வலியுறுத்தப்படுதல் (அப்.18:5).
   1. பேசுவதற்கு உள்ளான வலியுறுத்தல்.
   2. தேவன் உங்கள் ஆவியுடன் எப்படி கையாளுகிறார் என்பதை அறிய கவனமாயிருக்கும் வழி, தேவனுடைய வார்த்தையோடு அதிக நேரம் செலவழிப்பதே.
   3. அவருடைய வார்த்தை ஆவியும் ஜீவனுமாய் இருக்கிறது.
   4. குறிப்பாக அந்நிய பாஷைகளில் ஜெபிக்க அதிக நேரம் செலவிடுங்கள்.
   5. நீங்கள் அந்நிய பாஷைகளில் ஜெபிக்கும்பொழுது உங்கள் ஆவி ஜெபிக்கிறது.
   6. ஜெபித்து வார்த்தையை தியானியுங்கள்.
   7. உங்கள் ஆவிக்குச் செவிகொடுங்கள்.

அத்தியாயம் III - இக்கட்டான நேரங்களில் வழிநடத்துதலை எப்படி பெறுவது.

சில நேரங்களில் நாம் அழுத்தங்களுக்குள் கடந்து செல்லும்பொழுது, தேவனிடத்திலிருந்து கேட்பது கடினமாயிருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட நேரங்களே, தேவனிடத்திலிருந்து அதிகமாக கேட்கவேண்டும்.

வாசிக்க: 1.இராஜா. 19:1-10.

I. இந்த வேத பகுதியின் சுருக்கம்

A. இஸ்ரவேல் மக்கள் பின்வாங்குதலின் நிலையில் தள்ளப்பட்டார்கள்.
B. அவர்கள் சிலை வணக்கத்திற்கு இடங்கொடுத்தார்கள்.
C. எலியா ஜெபித்து, மழையில்லாதபடி வானத்தை அடைத்துவிட்டான்.
D. அவன் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரையும் கர்மேல் மலை உச்சியில் கூடும்படி அழைத்தான்.
E. அங்கே எலியா வானத்திலிருந்து அக்கினியை இறங்கிவரப்பண்ணினான். மக்கள் மனந்திரும்பி, தேவனிடத்திற்கு திரும்பிவந்தார்கள்.
F. அவன் மீண்டும் ஜெபித்தான், மழை பெய்யத் தொடங்கியது.
G. தேவனுக்காக வெற்றியை கொண்டு வந்த அநேக அருமையான இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள் எலியாவுக்கு இருந்தது.
H. அப்பொழுது அவனது வாழ்வில் பெரிய சோதனை ஒன்று வந்தது.
I. அநேக வேளைகளில் நம்முடைய பெரிய வெற்றிகளை தொடர்ந்து, பெரிய சோதனைகளும் பின்தொடருகிறது.
J. தேவனுடன் மிக உயந்ததும், இனிமையானதுமான அனுபவங்களை கொண்ட பின்பு, நாம் எப்பொழுதுமே அனுபவித்திராத, சில பெரிய சோதனைகள் நமக்கு வருகிறது.
K. எலியாவின் இந்த இக்கட்டான, கடினமான நேரத்தில் தேவனிடத்திலிருந்து புதிய வழிநடத்துதல் அவனுக்கு அவசியமாயிருந்தது.

II. இந்த வேத பகுதியின் கொள்கைகள்

இக்கட்டான நேரங்களில் தேவனிடத்திலிருந்து வழிநடத்துதலை எவ்வாறு பெறுவது என்று கற்றுத்தரும் சில கொள்கைகள் இப்பகுதியில் உள்ளன.

A. இடையில் விட்டுச் செல்லாதிருங்கள்.
   1. இக்கட்டான நிலை ஏற்பட்டபொழுது, தான் தேவனிடத்திலிருந்து கேட்டகவேண்டும் என்று எலியா அறிந்திருந்தான்.
   2. அவன் ஓரேப் பர்வத்திற்குச் செல்ல தீர்மானித்தான்.
   3. இது இப்போது சீனாய் மலை என்று அழைக்கப்படுகிறது.
   4. இதுவே எலியாவின் இலக்கு.
   5. ஆனால் அதை சென்றடையும் முன்பே, அவன் விட்டுச் செல்ல விரும்பினான். (1இரா.19:4).
   6. நீங்கள் விடாமுயற்சியுடன் இருந்தால் தடைகள் நீக்கப்பட்டு, வழி உண்டாகும் ஓர் இடத்தை அடைவீர்கள்.

B. தேவையற்ற காரியங்களை நீக்கிவிடுங்கள். (1இரா.19:3)
   1. அவன் தன்னுடைய வேலைக்காரனை பெயெர்செபாவிலே நிறுத்திவிட்டான்.
   2. இந்த வேலைக்காரன் எலியாவுக்கல்ல, எலிசாவுக்கே ஊழியஞ்செய்ய தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன். (1இரா.19:16).
   3. இந்த வேலைக்காரனை அழைத்துச்செல்ல எலியா திரும்பவில்லை.
   4. சில வேளைகளில் தேவன் நமக்கென்று தீர்மானித்திராத காரியங்களை நம் வாழ்வில் நாம் சேர்த்துக் கொள்கிறோம்.
   5. தேவன் உங்களுக்கென்று நியமித்திருக்கிற எல்லைக்குள் நீங்கள் தரித்து நிற்கிறீர்களா?.

6. அல்லது தேவன் விதித்திராத அநேக காரியங்களை உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்களா? (2கொரி.10:13-14).
7. நீங்கள் செய்யும்படி தேவன் உங்களிடம் கூறிய கடைசி காரியம் என்ன?
8. நீங்கள் அதை முடித்துவிட்டீர்களா, அல்லது செய்யாமல் விட்டுவிட்டீர்களா?
9. உங்களுக்கு தேவனுடைய வழிநடத்துதல் தேவையானால், விசேஷமாக இக்கட்டான நேரங்களில் தேவையானால், நீங்கள் மறுபடியும் யோசித்து, மறுபடியும் கூர்ந்தாராய்ந்து, மறுபடியும் அனுபவிப்பது அவசியம்.
10. பழைய வழிநடத்துதல் வழிந்தோடிய பின்னர் தேவனிடமிருந்து புதிய வழிநடத்துதல் வரும் என்று உணருங்கள்.
11. தேவனுடைய சித்தத்தின் முதல் படியை நீங்கள் நிறைவேற்றாத வரையில், அதன் இரண்டாவது படியை நீங்கள் காண முடியாது.

C. நீங்கள் ஓய்வெடுக்க வேண்டும். (1இரா.19:5-6)
1. நீங்கள் ஆவிக்குரிய பிரகாரமாக தேவனில் இளைப்பாற வேண்டும்.
2. கவலை, தேவனுடைய ஞானம் உங்கள் வாழ்வுக்குள் பாய்ந்தோடுவதை தடுத்துவிடும்.
3. இயற்கையாகவே ஓய்வெடுப்பது மிகவும் முக்கியம்.

D. தேவனுடைய வார்த்தையிலும், ஜெபத்திலும் நேரத்தை செலவிடுங்கள். (1இரா.19:6).
1. அடை தேவனுடைய வார்த்தைக்கு எடுத்துக்காட்டு, தண்ணீர் தேவனுடைய ஆவிக்கு எடுத்துக்காட்டு.
2. உங்களுக்கு தேவனிடமிருந்து வழிநடத்துதல் தேவையானால், நீங்கள் உண்ணவும் குடிக்கவும் வேண்டும்.
3. தேவனுடைய வார்த்தைக்குள்ளும், ஜெபத்திற்கும், தேவனுடைய ஆவியின் ஐக்கியத்திற்குள்ளும் செல்லுங்கள்.
4. அப்படி நீங்கள் செய்யும்பொழுது தேவன் தம்முடைய வார்த்தையைக் கொண்டு உங்களிடம் பேசுவார். (நீதி.6:22).
5. நீங்கள் வார்த்தைக்கும், ஜெபத்திற்கும் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் தேவனிடமிருந்து கேட்கக்கூடிய நிலையை அடைவீர்கள்.

E. தேவன் எவ்வாறு உங்களை வழிநடத்துகிறார் என்று உங்களை நீங்களே நினைவுப்படுத்துங்கள். (1இரா.19:11-12).
1. ஓரேப் மலை அல்லது சீனாய் மலை தேவன் அனைத்து இஸ்ரவேல் மக்களிடமும் பேசிய இடமாகும். (யாத்.19).
2. தேவன் உங்கள் உணர்வுகளான சரீரப்பிரகாரமான அடையாளங்கள் மூலம் அல்ல, பரிசுத்த ஆவியானவரின் அமர்ந்த மெல்லிய சத்தத்தின் மூலமே உங்களை நடத்தப்போவதாக கூறுகிறார். (எபி.12:18,26).
3. நீங்கள் அமைதியாயிருக்கும்பொழுது, அமர்ந்த மெல்லிய சத்தம் சொல்லுவது என்ன?
4. ஒருவருடைய வாழ்க்கையில் நடக்கக்கூடிய மிகவும் முக்கியமான நிகழ்ச்சி, அவர் இரட்சிக்கப்படுவதே.
5. இது நம்முடைய ஆவியுடன் ஆவியானவர் சாட்சி கொடுப்பதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது.(ரோ.8:16).
6. நம்முடைய வாழ்வில் குறைந்த விஷயங்கள் வரும்பொழுது, நாம் ஏன் அதிகம் எதிர்பார்க்கவேண்டும்.
7. தேவன் உங்களிடத்தில் பேசுவதை அறிந்து கொள்வதற்கு, ஆவிக்குரியவைகளில் வளருங்கள்.
8. வாழ்வில் நாம் எடுக்கும் எல்லா தீர்மானங்களும் இரட்சிப்பை விட குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவைகளே.
9. தேவனிடத்திலிருந்து நீங்கள் கேட்பதற்கு முன்பு வெளிப்படையான காரியங்கள் நடக்க வேண்டும் என்று எதிர்பாராதிருங்கள்.
10. தேவன் அமர்ந்த மெல்லிய சத்தத்தில் பேசுகிறார்.

F. நீங்கள் தனியாய் இருக்கவில்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள் (1இரா.19:16).
   1. இன்றைய உலகில் நீங்கள் மாத்திரம்தான் அழுத்தங்களை அனுபவிக்கிறீர்கள் என்று எண்ணாதிருங்கள்.
   2. நீங்கள் இப்பொழுது கடந்து செல்லுகிற அதே சோதனைக்குள் அநேக தேவஜனங்கள் கடந்து செல்லுகிறார்கள்.
   3. அவர்கள் தேவனிடத்திலிருந்து கேட்டு, சோதனைகளினூடே கடந்து சென்று விட்டார்கள்.

G. நீங்கள் பெற்றுக்கொண்ட வழிநடத்துதல் மேல் செயல்படுங்கள் (1இரா.19:19)
   1. நீங்கள் தேவனிடத்திலிருந்து வழிநடத்துதலை பெற்றுக்கொண்டீர்கள் என்று நினைத்தால் அதின்படி செயல்படுங்கள்.
   2. தேவனுடைய ஒட்டத்தினூடே கடந்து சென்று, அதனுடன் செல்லுங்கள்.
   3. உங்கள் உச்சிதமான நாட்கள் உங்களுக்கு முன்னாலேயே இருக்கிறது.

அத்தியாயம் IV - வாழ்வின் முன்னுரிமைகள்

உங்கள் முன்னுரிமைகள் சரியாக இருக்கும்பொழுது, நல்ல தீர்மானங்கள் எடுக்க உங்களுக்கு உதவுகிறது. அப்படி இல்லையென்றால், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும் அநேக இடர்பாடுகளை சந்திப்பீர்கள்.

நாம் நம்முடைய முன்னுரிமைகளை பார்க்கும்பொழுது, சில தீர்மானங்களை எடுக்க மிகவும் எளிதாக இருக்கிறது. இந்த பாடத்தில் நாம் நான்கு முக்கிய முன்னுரிமைகளைக் குறித்து படிக்கப்போகிறோம். அவைகள்: ஊழியம், குடும்பம், தேவனோடுள்ள உறவு, பொழுது போக்கு. எதை முதலில் வைப்பது என்பதை ஒரு வினாடி யோசித்து பாருங்கள். முன்னுரிமைகள், மதிப்பு மிக்கதாகவும், விலையுயர்ந்ததாகவும், நாம் பார்க்கும் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. நீங்கள் தனியாய் இருக்கும்பொழுது, அந்நேரத்தில் நீங்கள் எதை செய்கிறீர்கள் என்பதன் மூலம் நீங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

<u>உங்கள் முன்னுரிமைகள் எந்த வழியில் இருக்க வேண்டும் என்று நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளட்டும்.</u>

முன்னுரிமை # 1: தேவனுடன் தனிப்பட்ட உறவு

முன்னுரிமை # 2: குடும்பம்

முன்னுரிமை # 3: ஊழியம்

முன்னுரிமை # 4: ஓய்வும், பொழுதுபோக்கும்.

1. எந்த நேரத்திலும் இந்த முன்னுரிமைகளில் ஏதாவதொன்று முதலிடத்தைப் பிடிக்கலாம்.
2. ஆதாம், ஏவாளுடைய முன்னுரிமைகள் சரியாய் இராததால் இந்த உலகம் அந்தகாரத்திற்குள் மூழ்கியிருக்கிறது.
3. ஏவாள் உலகப்பொருள், ஆவிக்குரியவைகளுக்கு மேலாக,வைத்தாள்.
4. ஆதாம், அவனுடைய மனைவியை தேவனுக்கு மேலாக வைத்தான்.
5. தேவன் ஒருங்குமுறையின் தேவனாயிருக்கிறார்.
6. காரியங்களைச் செய்ய தேவனுக்கு குறிப்பிட்ட ஒழுங்குமுறைகள் உண்டு.
7. நீங்கள் உங்கள் வாழ்வில் வேதாகம மாதிரிகளுக்கும், வேதாகம கொள்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தால், உங்கள் வாழ்விலும் ஊழியத்திலும் அநேக பிரச்சனைளைத் தவிர்க்க முடியும்.

I. முன்னுரிமை # 1: தேவனுடன் தனிப்பட்ட உறவு (உபா.30:19-20)

A. விளக்கவுரை
1. பிரசங்கம் செய்வது தேவனுடன் உள்ள உறவல்ல.
2. பிரசங்கிப்பது தேவனோடுள்ள உறவின் நிறைவே.
3. ஜெபிப்பதும், படிப்பதும் தேவனோடுள்ள உறவாகாது.
4. தேவனோடுள்ள தனிப்பட்ட உறவு என்பது, தேவனுடன் கொள்ளும் நட்பும், ஐக்கியமும்.
5. அவருடைய பிரசன்னத்தில் ஜெபத்திலும், ஆராதனையிலும் நீங்கள் செலவிடும் நேரம்.
6. அவரை அறிந்துகொள்வதற்கு அவருடைய வார்த்தையில் நீங்கள் செலவிடும் நேரம்.
7. இதுவே வாழ்வின் முதல் முன்னுரிமை

B. ஜெபத்தின் மூலமும், வார்த்தையின் மூலமும் தேவனோடுள்ள ஐக்கியம்.
1. தேவனோடுள்ள இந்த தனிப்பட்ட ஐக்கியத்தின் வளர்ச்சியின் நிறைவே, வல்லமையுள்ள ஊழியமாயிருக்கும்.
2. இயேசுவே திராட்சச்செடி, நாம் கொடிகள் (யோ.15:4-5).
3. அவருடன் உயிருள்ள தொடர்பு வைத்துக்கொள்வதே நாம் கனியுள்ளவர்களாய் இருக்க ஒரே வழி.
4. இயேசு அப்போஸ்தலர்களை, முதலில் அவரோடு இருக்கவும், பின்பு பிரசங்கம் பண்ணவும் ஏற்படுத்தினார் என்பதை கவனியுங்கள். (மாற்கு 3:13-15).
5. அவருடைய வல்லமையை அறிவதற்கு முன்பு, அவரை அறிவது அவசியம். (பிலி.3:10).
6. தேவனோடு நேரம் செலவழியாமல், அவருக்காய் வேலை செய்ய முடியும்.
7. மார்த்தாள், இயேசுவுக்கும், அவருடைய சீஷர்களுக்கும் உதவி செய்ய மிகவும் சுறுசுறுப்பாகவும், அதிக வேலையினாலும் ஆட்கொள்ளப்பட்டிருந்தாள். ஆனால் இயேசுவின் பாதத்தில் அமர அவளுக்கு சமயம் இல்லாதிருந்தது. (லூக்கா 10:38-42).
8. ஊழியர்களே, தலைவர்களே, இயேசுவின் பாதத்தில் அமர நேரம் செலவிடுங்கள். தேவனோடிருக்க நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

II. முன்னுரிமை # 2: குடும்பம்

A. மனைவிக்கு முக்கியத்துவம்
1. மனைவி தேவனுக்கு பின்பும், பிள்ளைகளுக்கு முன்பும் வருகிறாள்.
2. ஆதாமுடைய மனைவி அவனுக்கு ஏற்ற துணையாயிருந்தாள், ஆனால் ஊழியத்திற்கு அல்ல. (ஆதி.2:18).
3. ஊழியம் மக்களுக்காக, எனவே, அது மனைவியிடம் ஆரம்பிக்கவேண்டும். (1தீமோ.3:1-5).
4. நீங்கள் உங்களுடைய மணவாட்டியை கவனியாவிட்டால், எப்படி கிறிஸ்துவின் மணவாட்டியை கவனிப்பீர்கள்?.
5. நீங்கள் உங்கள் சொந்த குடும்பத்தை கவனிக்காவிட்டால், தேவனுடைய குடும்பத்தை எப்படி கவனிப்பீர்கள்?
6. ஊழியத்தில், தேவனுக்கு பின்பு, எந்த மனிதருக்கு முன்பும் மனைவிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

B. குழந்தைகளுக்கு முக்கியத்துவம்
1. உங்கள் குழந்தைகளே உங்கள் முதல் பணித்தளம்
2. அவர்கள் இரட்சிக்கப்பட்ட பின்பு, அவர்கள் முதல் சபையாகிறார்கள்.
3. மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்ய தகுதியாவதற்கு முன்பு, முதலில் அவருடைய குடும்பம் ஒழுங்காய் இருக்க வேண்டும்.
4. ஆசாரியனாகிய ஏலியின் கதையை நினைத்துப் பாருங்கள். (1சாமு.2:22-36).
5. நீங்கள் பெரிய பிரசங்கியாய் இருக்கலாம். ஆனால், நீங்கள் உங்கள் குடும்பத்துடன் நேரம் செலவழிக்காவிட்டால்,உங்கள் ஊழியம் பேராபத்தில் முடிந்து விடும்.

III. முன்னுரிமை # 3: ஊழியம் (கொலோ.4:17; 2தீமோ.4:5)

உங்களை முழுவதுமாய் ஊழியத்திற்கு கொடுங்கள்.
ஊழியம் மக்களின் வாழ்வையும், அவர்களது எதிர்காலத்தையும் மாற்றுவதற்கு தேவனோடு இணைந்து செய்யும் ஒன்றாகும்.
ஊழியம் பல பிரிவுகளாக பிரிக்கப்படும்:

A. ஜெபத்திற்கும் வேத ஆராய்ச்சிக்குமான நேரம்.
தேவனுடைய மந்தையை போஷிக்க, தேவனிடத்திலிருந்து புதிய செய்திகளை பெற்றுக்கொள்ள, ஜெபத்திலும், தேவனுடைய வார்த்தையை படிப்பதிலும் நேரம் செலவழிக்கவேண்டும்.

B. சபையின் தலைவர்களோடும் பிற பணியாளர்களுடனும் இருப்பதற்கு நேரம் செலவிடுங்கள்.
<u>இயேசுவின் மாதிரியை கவனியுங்கள்:</u>
1. அவருக்கு மூன்று நெருங்கிய சீடர்கள்: பேதுரு, யாக்கோபு, யோவான்
2. பின்பு ஏனைய பன்னிரண்டு சீடர்கள்.
3. எழுபது சீடர்களின் கூட்டம்
4. அதன்பின் திரள் கூட்ட மக்கள்.

- நீங்கள் உங்கள் சபையின் தலைவர்களுடன் இருப்பதற்கு நேரம் செலவிடுங்கள்.
- அதன்பின், சபைக்கு ஊழியம் செய்யுங்கள்.
- அவர்கள் அணுகக்கூடியவர்களாகவும், தொடர்பு கொள்ளக்கூடியவர்களாகவும் இருங்கள். உங்கள் சபை மக்களோடு உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.

C. ஊழியம் ஒரு பணி. (1பேதுரு 5:1-5).
1. ஊழியர்கள் சர்வாதிகாரிகள் அல்ல.
2. அவர்கள் எடுத்துக்காட்டாய் வாழ வேண்டும்.

IV. முன்னுரிமை # 4: ஓய்வும், பொழுதுபோக்கும்.

A. ஓய்வெடுங்கள்.
1. நாள் முழுவதும், எல்லா நாளும் செலவழித்தும், எல்லாரோடும் தொடர்புகொள்ள முடியாத அளவுக்கு நீங்கள் ஊழியத்தில் ஓய்வில்லாமல் இருக்கலாம்.
2. வந்து, சிறிது நேரம் ஓய்வெடுங்கள் என்று இயேசு உங்களுக்குச் சொல்லும் நேரங்களும் இருக்கின்றன.
3. நீங்கள் ஓய்வெடுக்காவிட்டால், உங்கள் சரீரம் பாதிக்கப்படும்.

B. உடற்பயிற்சியில் நேரம் செலவிடுங்கள். (1தீமோ. 4:8).
1. பொழுது போக்கிற்காக எதையாவது செய்யுங்கள்.
2. நீங்கள் விரும்புகிறதும், உங்கள் சரீரத்திற்கு நன்மை பயக்குகிறதுமான காரியங்களைக் கண்டுபிடியுங்கள்.
3. அது உங்கள் மனதை சாந்தப்படுத்த உதவும்.
4. ஊழியத்துடன் ஓய்வும், உடற்பயிற்சியும் சமநிலையில் இருக்க வேண்டும்.
5. ஓய்வெடுக்கும் உடற்பயிற்சிக்கும் நேரம் எடுங்கள். வாழ்வின் முன்னுரிமைகளின் அடிப்படையில் தீர்மானம் எடுங்கள்.

அத்தியாயம் V - தேவ வழிநடத்துதலைப் பெறுவதில் உள்ள இடறுகுழிகளும் அபாயங்களும்.

நாம் ஏமாற்றப்படாதபடி, ஞானமுள்ள தீர்மானங்களை எடுப்பதற்கு உதவி செய்யத் தேவையான சில செயல்முறை ஞானத்தைக் குறித்து இந்த பாடத்தில் பார்ப்போம். வெளித்தோற்றத்தை வைத்தோ, அல்லது பொதுவான அபிப்பிராயத்தை அடிப்படையாய்க் கொண்டோ தீர்மானங்கள் எடுக்காமலிருக்க கவனமாயிருங்கள்.

வாசிக்க: அப்போஸ்தலர் 27: 9-15

I. பவுலின் உள்ளுணர்வு

இது பவுல் தன்னுடைய ஆவியில் உணர்ந்துகொண்ட ஒன்று வெளிப்பாடாக இருந்தது.

A. வெளிப்படையாக இருந்த எல்லாம், பவுல் தன் ஆவியின் உணர்ந்து கொண்டதற்கு முரண்பாடாக இருந்தது.
   - பவுலுக்கு முரண்பாடான இருந்த மூன்று காரியங்கள்.
     1. வல்லுநர்கள் அவனுக்கு முரண்பாடாய் இருந்த மூன்று காரியங்கள்.
     2. பெரும்பான்மையானோர் அவனுக்கு இருந்தார்கள். (அப்.27:12).
     3. சூழ்நிலைகள் அவனுக்கு முரண்பாடாய் இருந்தது. (அப.27:13).

B. அவைகள் எல்லாமே தவறாய் இருந்தது. ஆனால் பவுல் செய்ததெல்லாம் சரியே.

C. ஆவியின் உள்ளான செய்தியை கவனிக்க கற்றுக்கொள்ளுங்கள்.
   - நமது வாழ்வில் அநேக நேரங்களில் தேவன் நம்முடைய உள்ளான ஆவி மூலம் பேசுவதை நாம் கேட்பதில்லை.

II. தேவனுடைய சித்தத்தை தீர்மானிக்க வெளிப்படையான அடையாளங்களைத் தேடுதல்

நியாயாதிபதிகள்-6: கிதியோனின் கதை

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களாகிய நாம், கிதியோனைப் போல அடையாளங்களைத் தேடலாமா?

முதலில் சில குறிப்பிட்ட உண்மைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

A. கிதியோன் மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி அல்ல.
   - ❖ புதிய உடன்படிக்கையின் கீழ் அவன் வாழ்வில்லை.
   - ❖ பின்வாங்கிப்போன சந்ததியில் அவன் வாழ்ந்தான்.
   - ❖ அவனுடைய தகப்பனார் பாகாலை வழிபட்டவர்.
   - ❖ தனிப்பட்ட விதத்தில் அவன் தேவனை அறிந்திருக்கவில்லை.

B. கிதியோனுக்கு இல்லாத தேவனுடைய வெளிச்சம் கிறிஸ்தவர்களுக்குள் இருக்கிறது.
   - ✓ நாம் புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோம்.
   - ✓ நாம் தேவனால் பிறந்தவர்கள்.
   - ✓ தேவனுடைய ஆவியானவர் நம்மில் வாசம் செய்கிறார்.
   - ✓ தேவனுடைய வார்த்தையை அணுகுவதற்கு நமக்கு வழி இருக்கிறது.
   - ✓ நாம் அடையாளங்களைத் தேட ஆரம்பித்தாலோ, கம்பளி ஆட்டுத் தோலை விரித்தாலோ, நாம் பிரச்சனைகளுக்குள்ளாகிவிடுவோம்.
   - ✓ புதிய ஏற்பாட்டில் இதைப் போலொத்த ஒன்றை ஒரே ஒரு தடவை அப்போஸ்தலர்-முதலாம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.
   - ✓ ஆனால் அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் வந்தார். அவர் நமக்குள் வாசம் செய்ய வந்தார். புதிய ஏற்பாட்டில் மீண்டும் அந்த காரியத்தை செய்ததாக நாம் எங்கும் பார்க்கவில்லை.

நாம் தேவ சித்தத்தை அறிய அடையாளங்களை தேடினால் நாம் ஏமாந்துவிடுவோம்.

வெளிப்படையான அடையாளங்களுக்குப் பதிலாக நமக்குள் வாசம் செய்யும் தேவனுடைய ஆவியானவரால் நாம் நடத்தப்படவேண்டும்.

C. யோசுவாவின் வாழ்வில் ஏற்பட்ட வெளிப்படையான அடையாளங்களின் ஏமாற்றத்தை நினைவுகூறுங்கள். (யோசுவா 9:3-14)
   - எனவே நாம் கவனமுடையவர்களாய் இருக்கவேண்டும்.
   - எதுவும் சரியாய் தோன்றவில்லை என்றால், தேவனிடத்தில் நேரம் செலவிடுங்கள்.
   - தேவன் நமக்கு வழிகாட்ட விரும்புகிறார்.
   - தேவன் நம்முடைய இருதயங்களின் மூலம் நம்மை நடத்துகிறார்.

III. சுய தீர்க்கதரிசனத்தின் மூலம் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள நாடுதல்

A. தீர்க்கதரிசனத்தைக் குறித்த சில முக்கியமான காரியங்கள்:
   1. தேவனுடைய ஆவியிலிருந்து மெய்யாய் வந்த தீர்க்கதரிசனம் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைக்கு ஒருபொழுதும் முரண்பாடாய் இருக்காது.
   2. புதிய ஏற்பாட்டின் தீர்க்கத்தரிசன வரம், வழிநடத்துதலுக்காக அல்ல.
      a. புதிய ஏற்பாடு தீர்க்கதரிசனத்தால் நடத்தப்பட நமக்குப் போதிக்கவில்லை.
      b. 1கொரி. 12:7-11-ல் நாம் காண்கிற ஆவியின் வரங்கள் ஒன்பதும், நமக்கு படிப்பதற்கு வசதியாக, மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
         i. வல்லமை வரங்கள்
         ii. வெளிப்பாட்டு வரங்கள்
         iii. பேச்சு வரங்கள்
   3. புதிய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனத்தின் நோக்கம், 1கொரி.14:1-5ன்படி
      a. பக்திவிருத்தி கட்டி எழுப்ப
      b. உற்சாகப்படுத்துதல்: தேவனுக்கு அருகில் அழைக்க
      c. ஆறுதல்: ஆறுதல் படுத்த
   4. நாம் தீர்க்கதரிசனத்தால் நடத்தப்படுவதற்கு அல்ல.
      a. பிறர் மூலமாக தேவன் ஏற்கனவே நம்மிடத்தில் பேசியுள்ள காரியங்களை பரிசுத்த ஆவியானவர் உறுதிப்படுத்தலாம்.
      b. நாம் தேவனோடு தனிப்பட்ட உறவை மேம்படுத்த வேண்டும் என்பதே முக்கியம்.
      c. தீர்க்கதரிசனம் சபையை பக்திவிருத்தி அடையச்செய்ய, உற்சாகப்படுத்த, ஆறுதல் படுத்த.

B. சபையில் தேவனுடைய அசைவாடுதலை வரவேற்றல் (1தெச.5:19-21).
   1. நாம் தீர்க்கதரிசனத்தை இழிவாக கருதக்கூடாது.
   2. சிலவேளைகளில் பரிசுத்த ஆவியானவர் வருங்கால நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தலாம்.
   3. ஆனால் நாம் எல்லா காரியங்களையும் சோதித்துப் பார்க்கவேண்டும்.
   4. தீர்க்கதரிசனம் நிதானிக்கப்படவேண்டும்.
   5. ஏனென்றால் மனிதர்கள் தவறு செய்யக்கூடும்.
   6. நாம் தீர்க்கதரிசனத்தை, தேவனுடைய வார்த்தையைக் கொண்டு சோதிக்க வேண்டும்.
   7. நம்முடைய இருதயங்களிலுள்ள ஆவியானவரின் உள்ளான சாட்சியைக் கொண்டு தீர்க்கத்தரிசனத்தை நிதானித்துப் பார்க்க வேண்டும்.
   8. அது தேவனிடத்திலிருந்து வந்தது என்றால், அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
   9. ஆனால் யாராவது உங்கள் வாழ்வை, சுயதீர்க்கதரிசனத்தின் மூலம் பொறிக்குள் விழவைப்பதற்கு இடங்கொடாதிருங்கள்.

C. புதிய ஏற்பாட்டிலுள்ள, தேவனால் வழிநடத்தப்படும் பல விதங்கள்
   1. சொப்பனங்களின் மூலமாக
   2. தரிசனங்களின் மூலமாக
   3. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்பதின் மூலமாக

D. இது உள்ளான எண்ணப்பதிவை விட மேலானது
   1. தேவன் நம்மை, எந்த நேரத்திலும் அவர் தெரிந்தெடுக்கும்போது இந்த விதங்களில் ஏதாவதொன்றின் மூலம் நடத்தலாம்.
   2. அந்த வழிகளில் நடத்தப்பட தேட ஆரம்பிக்கயாதிருங்கள்.
   3. அப்படிச் செய்தால் நீங்கள் ஏமாற்றப்படுவீர்கள்.
   4. நீங்கள் தேவனுடைய வார்த்தைக்குப் போக எப்பொழுதும் அது உங்களிடம் இருக்கிறது.
   5. அவருடைய ஆவியின் நிலையான பிரசன்னம் உங்களிடம் எப்பொழுதும் இருக்கிறது.
   6. தேவன் எப்பொழுதும் உங்கள் இருதயத்திலுள்ள சமாதானத்தின் மூலம் உங்களை நடத்துகிறார்.
   7. அந்த காரியங்களை கவனியுங்கள். தேவன் உங்களை வழிநடத்த வெளிப்படையான ஏதாவதொன்றை தெரிந்தெடுத்தால், அது அவருடைய தனி சிறப்புரிமை
   8. சொப்பனம், தரிசனம் அல்லது வெளிப்பாடு உங்களுக்கு இருந்தாலோ அல்லது ஒரு சத்தத்தை நீங்கள் கேட்டாலோ, அது ஒருபொழுதும் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைக்கு முரண்பாடாக இருக்கக்கூடாது.
   9. தேவனுடன் நெருங்கிய, அன்னியோன்னிய உறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.
   10. பரிசுத்த ஆவியானவரை அடையாளம் கண்டுகொள்ள கற்றுக்கொள்ளுங்கள்.
   11. அவருடைய உள்ளான எண்ணத்தை உணரவும், கவனிக்கவும்கற்றுக் கொள்ளுங்கள்.
   12. தேவனுடைய வார்த்தையை தெரிந்துகொள்ளுங்கள்.

இந்த அடையாளங்கள் தொடரும்.....

"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவாக்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்." (மாற்கு 16:17).

கிறிஸ்தவ விசுவாசிகளின் சாட்சியை உறுதிப்படுத்தும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையின் இரண்டு வெளிப்பாடுகளை இயேசு இங்கே இணைத்திருக்கிறார்.அவைகளில் முதலாவது பிசாசுகளைத் துரத்துவது, இரண்டாவது நவமான பாஷைகளைப் பேசுவது. இன்று, பெரும்பாலான சபைகளில் அதிகம் கேள்விப்படுகிறோம். (குறிப்பாக, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கு அத்தாட்சியாக), ஆனால் பிசாசுகளைத் துரத்துவதைக் குறித்து குறைவாகவே கேள்விப்படுகிறோம். இந்த இரண்டு வெளிப்பாடுகளும், ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து முழுவதுமாக தனித்திருப்பது எப்படி?

உண்மையில், கிறிஸ்து நவமான பாஷைகளை பேசுவதற்கு முன்பு, பிசாசுகளைத் துரத்துவதை வைக்கிறார். இந்த வரிசைப்படுத்துதலில் முக்கியத்துவம் இருக்கிறது. அதன் உள்நோக்கம் என்னவென்றால், ஜனங்கள் ஆவியில் ஞானஸ்நானத்தை பெறுவதற்கும், நவமான பாஷைகளை பேசுவதற்கும் முன்பு பிசாசுகளிடமிருந்து முழுவதுமாய் விடுவிக்கப்படவேண்டும். இருந்தபோதிலும், பகுத்தறியும் தன்மை இல்லாததாலும், புரிந்துகொள்ளுதல் இல்லாமையாலும், சபைகளில் பொதுவாக இவைகள் பயன்படுத்தப்படவில்லை. இதன் விளைவு என்னவென்றால், தற்பொழுது ஜனங்கள் அடிக்கடி பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெறுகிறார்கள். நவமான பாஷைகளையும் பேசுகிறார்கள், ஆனால் அதன் பின்பு, பிசாசுகளிடமிருந்து விடுதலை பெறுவது மேலும் அவசியமாகிறது. பேய்களையும், அவைகளின் தன்மைகளையும் குறித்து ஜெபத்தோடும், திறந்த மனதோடும் படிக்க, சபைக்கு இதுவே நேரம்.

"பிசாசு" என்ற வார்த்தைக்கு, புதிய ஏற்பாட்டு கிரேக்க மொழி "டைமோனியன்" ஆகும். இது "டைமோன்" என்ற பிறிதொரு கிரேக்க வார்த்தையின் சுருக்காமாகும். கிரேக்க புராணங்களிலும், நாடோடி கதைகளிலும், இந்த வார்த்தைகள், மாறுபட்ட அளவு வல்லமையும், இயற்கைக்கு அப்பாற்பட்ட செல்வாக்கும் உள்ள ஒரு விசேஷித்த வகையிலான சில ஆவிகளைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. பலதரப்பட்ட வழிபாட்டு மரபுகளும்,மூடப் பழக்க வழக்கங்களும் இந்த ஆவிகளை மையமாய்க் கொண்டுள்ளன. எனவே, அவைகள் சாதாரண மக்களின் அனுதின வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றன.

"கிங் ஜேம்ஸ்" மொழிபெயர்ப்பில் கிரேக்க வார்த்தை "டைமோனியன்" பெரும்பாலும் பிசாசு என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது சரியானதல்ல. பிசாசு என்ற வார்த்தை டையபோலோஸ் என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானது. அதன் பொருள், அவதூறு பேசுபவர் என்பதாகும். வேதாகமத்தில், இந்த வார்த்தை பொதுவாக சாத்தானுக்கே அடைமொழியாக கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் "டைமோனியன்" என்ற பெயர்ச்சொல்லோடு "டைமோனியன்மாய" என்ற செயப்பாட்டுவினை இணைக்கப்பட்டுள்ளது. இந்த வினைச் சொல்லின் அர்த்தம் பிசாசாவதற்கு அதாவது பிசாசின் வல்லமை அல்லது செல்வாக்கின்கீழ் இருப்பது என்பதாகும். இவ்வாறு இந்த வினைச்சொல்லின் பொருள் மிகவும் பொதுவானதாக இருக்கிறது. கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பினால் இந்த வினைச்சொல் "பிசாசுகள் பிடிக்கப்படுவது" அல்லது "தீய ஆவிகள் அல்லது பிசாசுகளால் தொந்தரவு செய்யப்படுவது" என்று பொதுவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் பலதரப்பட்ட ஆங்கில வார்த்தைகள் இதற்கு கொடுக்கப்பட்டிருந்தாலும், மூல கிரேக்க வார்த்தையில் எந்த வேறுபாடுகளும் இல்லை. சில போதகர்கள்,பிசாசுகளினால் பிடிக்கப்படுதல், ஒடுக்கப்படுதல், அல்லது ஆட்டிப்படைத்தல் ஆகியவவைகளுக்கிடையில், விரிவான வேறுபாடுகளை சுட்டிக்காட்டியுள்ளனர். இருப்பினும் கிரேக்க மூல பாஷைகளில் இந்த வேறுபாடுகளுக்கு ஆதரவாக ஒன்றும் காணப்படவில்லை.

புதிய ஏற்பாட்டில், இதனோடு தொடர்புபடுத்தி கூறப்பட்டுள்ள இரண்டு சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை தீய ஆவி, அசுத்த ஆவி ஆகும். வெளிப்படுத்தின விசேஷம் 16ஆம் அதிகாரம், 13ஆம், 14ஆம் வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது அவைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு சொற்களான பிசாசுகளும் அசுத்த ஆவிகளும் ஒன்றிற்கு பதிலாக மற்றொன்று பயன்படுத்தப்பட்டிருப்பது போல தோன்றுகிறது.

"ஆள்தத்துவம்" என்ற கருத்துக்கு உளயியல் பொதுவாக மூன்று முக்கிய கூருகளோடு தொடர்புபடுத்தி காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த மூன்று கூறுகளும்: அறிவு, சித்தம், உணர்ச்சி என்பவையாகும். ஆள்தத்துவத்தின் இந்த மூன்று கூருகளும், புதிய ஏற்பாடு சித்தரிக்கும் பிசாசுகளுக்குள் காணப்படுவது, நாம் பார்க்க வேண்டிய முக்கியமான ஒன்று.

பிசாசுகள் அறிவை உள்ளடக்கியுள்ளன: மாற்கு 1:24-ல் கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்தில் பிசாசுபிடித்த மனிதன் இயேசுவிடம் உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர்.." என்று கூறினான். அப்-19:15-ல் எபேசில் அசுத்த ஆவி பிடித்து மனிதன், ஸ்கேவாவின் ஏழு மகன்களிடம்: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன் நீங்கள் யார்?. என்று கூறினான்

பிசாசுகள் சித்தத்தை உள்ளக்கியுள்ளன: மத்.12:44-ல் ஒரு மனிதனிடமிருந்து வெளியே வந்த அசுத்த ஆவி வேறு எங்கும் செல்ல முடியாமல், நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொன்னது லூக்கா 8:31-33ல் கதரேனருடைய நாட்டில் பிசாசுகள் பாதாளத்திற்குள் போடப்படாமல், பன்றிகளுக்குள் போகும்படி அனுமதிக்கப்படவேண்டும் என்று தங்களது விருப்பத்தை உறுதியான வெளித்தின.

பிசாசுகள் உணர்ச்சிகளை உள்ளடக்கியுள்ளன: யாக். 2:19ல் பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன என்று வாசிக்கிறோம்.

பிசாசுகளின் இத்தன்மைகளோடு இணைத்து கூறப்பட்டுள்ள இன்னொரு உண்மை அவைகளுக்குப் பேசும் திறமை இருப்பதே. புதிய ஏற்பாட்டில், பல இடங்களில் இது குறிக்கப்பட்டுள்ள. உளயியலின் கண்ணோட்டத்திலிருந்து, நாம் பொதுவாக தெளிவான பேச்சில், அதன் அர்த்தத்தை வெளிப்படுத்த முடிகிற எதற்கும், ஆள்தத்துவத்தின் கருத்துகளை உடமையாக்குகிறோம்.

ஆகவே, அங்கீகரிக்கப்பட்ட தரத்தின் அடிப்படையில் பிசாசுகள், ஆள்தத்துவத்திற்குரிய அனைத்து குணாதிசயங்களையும் வெளிப்படுத்துகிறது என்று நாம் காண்கிறோம். இது மிகச் சிறந்த முக்கியத்துவம் வாய்ந்தது. கிறிஸ்தவ விசுவாசிகள் பிசாசுகள் பொருட்களல்ல, ஆட்கள் என்பதை புரிந்து கொள்ளாத வரையில் அவைகள் வெற்றிகரமாக எதிர்கொள்ளமுடியாது. பிசாசு ஒரு மனப்பாங்கோ, மனநிலையோ, அல்லது உளயியல் சார்ந்த நிலையோ அல்ல பிசாசு ஒரு நபர்.

பிசாசுகளின் பிரசன்னம் அல்லது செயல்பாடுகளை கண்டுபிடிக்கக்கூடிய ஒரு வழி, 1கொரி.12:10-ல் "ஆவிகளைப் பகுத்தறிதல்" என்று அழைக்கப்படுகிற பரிசுத்த ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடாகும். பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்ற அநேக கிறிஸ்தவர்கள், இந்த பகுத்தறிதலின் ஒரு சிறிய அளவை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், பெரும்பாலும் அவர்கள், பரிசுத்த ஆவியின் வரமாகிய இந்த செயல்பாட்டின் தன்மையை முழுவதுமாய் புரிந்துகொள்ளவில்லை. எனவே, அவர்கள் அதை வல்லமையாக பயன்படுத்தவில்லை. இந்த வகையான பகுத்தறிதல், ஒழுங்கான பயிற்சியின் மூலம் பேணிக்காப்பது அவசியமாகிறது. இந்த காரணத்திற்காக, எபி.5:14-ல் விசுவாசிகள் "...நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரங்களை யுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்கள்." என்று வாசிக்கிறோம். சபைகளில் இன்று, மிகக்குறைந்த விசுவாசிகளே ஆவிக்குரிய முதிர்ச்சியின் இந்த அடையாளத்தை வெளிகாட்டுகிறார்கள்.

கிறிஸ்தவர்கள், தங்களுடைய ஆவிக்குரிய தன்மைகளை வெளிப்படுத்த விருப்பமுடையவர்களாய் இருந்தால், அவர்கள் பிசாசுகள் இருப்பதையும், அதன் கிரியைகளையும் பொதுவாய் குறிக்கிற அநேகவிதமான முன்னடையாளங்களை விரைவில் கண்டுபிடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். இந்த முன்னடையாளங்களில் பொதுவான சிலவற்றை இரண்டு தலைப்புகளில் கீழே பார்ப்போம்: முதலாவது, உளயியல் சார்ந்தது-உள்ளான தன்மையையும், ஆள்தத்துவத்தையும் அடிப்படையாய் கொண்டது. இரண்டாவது, உடல் சார்ந்தது-வெளிப்படையான உடல்தோற்றத்தையும், நிலைமையையும் அடிப்படையாய் கொண்டது.

I. உளயியல் சார்ந்த

(a). ஒருவரை அவரது விருப்பம் அல்லது தன்மைக்கு முரண்பாடாக ஆதிக்கம் செலுத்துகிற, விடாப்படியான அல்லது மீண்டும் தோன்றுகிற தீமை அல்லது அழிவை ஏற்படுத்துகிற உணர்வுகள் அல்லது மனப்பான்மைகள். (உ.ம்). மனகசப்பு, வெறுப்பு, பயம், எரிச்சல், பொறாமை, பெருமை, சுயஇரக்கம், கடுமையான மனத்தாக்கு, பொறுமையின்மை.

(b). ''மனநிலைகள்''- காரணமற்ற, திடீரென்ற, மிதமிஞ்சிய ஏற்ற இறக்கங்கள். (உ.ம்.) உற்சாகமூட்டுகிற பேச்சிலிருந்து, அமைதியான மனசோர்வு.

(c). பல்வேறு வகையான மதசார்ந்த தவறுகளும், கட்டுகளும், (உ.ம்) வேதத்திற்கு புறம்பான துறவற வாழ்க்கையை மேற்கொள்வது, சாதாரண உணவுகளை உண்ண மறுப்பது எல்லா வகையான மூடநம்பிக்கைகள், எல்லாவித உருவவழிபாடு.

(d). அடிக்கடி மந்திரம் கூறுவது, குறி சொல்லுதல், சோதிடம் பார்ப்பது, ஆவியுலகத்தோடு தொடர்பு கொள்வது.

(e). அடிமைப்படுத்தும் பழக்கங்கள்: (உம்) பெருந்தீனி, குடிப்பழக்கம், போதை பழக்கம், வேசித்தனம் அல்லது எல்லாவிதமான பாலுணர்ச்சி நடத்தைகள், கட்டுபடுத்த முடியாத அசுத்தமான எண்ணங்களும் பார்வைகளும்.

(f). தகுதிக்கேடான பேச்சு, ஏளனம் செய்தல், அசுத்தமான வார்த்தைகளை பேசுதல்

(g). வேதாகமத்தின் சத்தியம் அல்லது பரிசுத்த ஆவியின் கிரியைகளுக்கு விடாப்படியான அல்ல வன்முறையான எதிர்ப்பு.

II. உடல் சார்ந்த

(a). இயற்கைக்கு மாறான ஓய்வின்மையும், மிகுதியாய் பேசுகிறதும், முணுமுணுத்தல்

(b). எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாத கண்கள் அல்லது இயற்கைக்கு மாறான வெளிச்சமும், வெளியே தள்ளியிருக்கிறதும், அல்லது இயற்கையாய் பார்க்க முடியாத

(c). வாயில் நுரை, துர்நாற்றமுள்ள மூச்சு

(d). சீரற்ற இதயத் துடிப்பு, இயற்கைக்கு மாறாக முடுக்கிவிடப்படுகிற இருதயத்தின் செயல்

(e). வல்லமை அல்லது பரிசுத்த ஆவிக்கு பயந்து ஓடுதல் அல்லது எதிர்த்து நிற்றல்

அநேக சம்பவங்களில் பிசாசு இருப்பதை அல்லது செயல்படுவதை காட்டும் இந்த அறிகுறிகளில் ஒன்று மாத்திரம் இருப்பது முடிவான அடையாளமாய் இருக்கமுடியாது ஆனால், இந்த அறிகுறிகளில் பல ஒன்றாக இருக்குமானால், பிசாசுகளின் செயல்பாடுகள் மிகவும் உயர்ந்ததாக இருக்கும் என்பது உண்மையான ஒன்று.

இந்த அறிகுறிகளுடன், புதிய ஏற்பாடு, சரீர வியாதிகளும் அல்லது குறைபாடுகளும் ஏற்பட பெரும்பாலான காரணம் பிசாசுகளே என்பதை சாதாரணமாக சுட்டிக் காட்டுகிறது. உதாரணமாக, லூக்கா 13:11-ல் ''பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்தீரி அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்.'' என்று நாம் வாசிக்கிறோம்.

சரீர நிலை முழுவதும் இயல்பான நிலைக்கு வந்தது. இயேசுவும் அவளை ஆபிரகாமின் மகள் என்று விவரித்தார் அதாவது, அவள் உண்மையான விசுவாசி என்று சொல்லலாம் எதோ ஒரு குறிப்பிட்ட பாவத்திற்கு உட்பட்டிருந்தாள் என்று சொல்ல முடியாது. பிசாசின் வல்லமை அவளுடைய சரீரத்தில் மாத்திரம் வெளிப்பட்டது.

மேலும் அப்.19:12-ல், எபேசுவில், பவுலின் ஊழியத்தைக் குறித்து வாசிக்கிறோம். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப்போயின, பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன.'' இங்கே, பொல்லாத ஆவிகளுக்கும், நோய்களுக்கும்'' இடையில் ஒரு விதமான சாதாரண உறவு இருப்பது போல, அவைகள் ஒன்றைஒன்று இணைத்து கூறப்பட்டுள்ளது.

சிலவேளைகளில், பிசாசுகளால் விளைவிக்கப்படுகிற பொதுவான சில மனநிலை அல்லது உடலியல் சார்ந்த நிலைகளை கீழே பார்ப்போம்: பைத்தியம், தூக்கமின்மை, காக்காய் வலிப்பு, வலிப்புகள், சுழுக்குகள், ஒற்றைத் தலைவலி, ஆஸ்துமா, எலும்பின் உட்புழை நோய்கள், கட்டிகள், வயிற்றுப் புண்கள், இருதய நோய்கள், வாதக்கோளறுகள், பக்கவாதம், ஊமை, செவிடு, குருடு.

பிசாசுகளுடைய வல்லமையிலிருந்தும் அழிவுக்கேதுவான பாதிப்புகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான நிபந்தனைகள் என்ன?

முதல் நிபந்தனை சரியானபடி நோயை உறுதிசெய்தல். 1கொரி.9:26-ல் பவுல் தன்னுடைய ஊழியத்தை பின்வருமாறு விவரிக்கிறார். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். பிசாசுகளோடு எதிர்த்து நிற்கிற கிறிஸ்தவர்கள் தங்கள் எதிராளியின் தன்மையை புரிந்துகொள்ளாமல், ஒரு குத்து சண்டைவீரன் தன்னுடைய எதிராளியின் முகத்தில் குத்தாமல், காற்றில் குத்துவது போல் இருக்கிறார்கள். அவர்கள் அதிக நேரத்தையும், சக்தியையும் செலவிடலாம்.ஆனால் அவர்களை எதிர்த்து நிற்கிற, பார்க்க முடியாத எதிராளியை ஒருபொழுதும் தொட முடிவதில்லை. ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, கொஞ்சமாகவே சாதிக்க முடிகிறது.

பிசாசுகள் இருப்பதையும், அவைகளின் கிரியைகளையும் சரியாக உறுதி செய்த பின்பு, விடுதலைக்காக தொடர்ந்து அநேக நிபந்தனைகள் இருக்கின்றன. அவைகளில் சில, விடுதலைக்கு உதவி செய்கிற ஊழியக்காரரை பற்றியது. மற்றவைகள், விடுவிக்கப்படவேண்டிய நபரைப் பற்றியது.

நம்முடைய வசதிக்காக, விடுவித்தலின் ஊழியத்தை செய்கிற விசுவாசியை ஊழியக்காரன் என்று அழைப்போம். ஐந்து முக்கிய நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1). ஊழியக்காரன், இயேசுவின் நாமத்தில் அவனுக்கு வல்லமை கொடுக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இயேசு தாமே சொன்னார். என் நாமத்தில் அவர்கள் பிசாசுகளைத் துரத்துவார்கள். லூக்கா 10:17-ல் நாம் பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து ஆண்டவரே உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்படிகிறது என்றார்கள்'' என்று வாசிக்கிறோம். அப்.16:18-ல், பிலிப்பி பட்டணத்தில் பவுல், குறிசொல்லும் ஆவியையுடைய பெண்ணை பார்த்து ''நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று கூறினார்.

(2). ஊழியக்காரனுக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை தேவை மத்.12:28-ல் இயேசு, நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே'' என்று கூறினார். இவ்வாறு அவர், பிசாசுகளைத் துரத்தும் தனது திறமையை பரிசுத்த ஆவியினால் வல்லமையாய் கருதுகிறார் அதைப்போல, லூக்கா 4:18-ல் அவர் தன்னுடைய திறமையாகிய சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், ...யை பரிசுத்த ஆவியின் அபிஷேகமாய் கருதுகிறார்.

(3). ஊழியக்காரன், பாவமன்னிப்புகான நிபந்தனைகளையும், இயேசுவின் இரத்தம் மூலமான சட்டரீதியான மீட்பையும் விளக்குகிற வேதாகமத்தின் சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை புரிந்துகொள்ளவும், அவைகளை ஒவ்வொரு சம்பவங்களுக்கும் பயன்படுத்தவேண்டும்.

(4). ஊழியக்காரன் நெருங்கிய தனிப்பட்ட ஆலோசனைக்கு நேரத்தையும் இடத்தையும் கொடுக்க ஆய்த்தமுள்ளவனாய் இருக்கவேண்டும். பொதுவாக சொன்னால் மிகவும் பொருத்தமற்ற நேரம் அல்லது இடம், சபைக்கு முன்பு, ஆராதனை வேளையில் ஆகும்.

(5). ஊழியக்காரன், ஆவிக்குரிய பெருமையின் எவ்வித தன்மைக்கும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். விடுதலை செய்யப்படவேண்டிய ஒருவருக்காக அவன் தேவன் அருளும் மெய்யான மனதுருக்கத்தினால், உந்தப்பட்டவனாய் இருக்க வேண்டும். இன்று சபையின் வெளி ஊழியத்தில் பிசாசுகளிடமிருந்து விடுலை பெற விரும்புபவர்களை விட அதிக தேவையில் உள்ள, அல்லது இரக்கப்படும் நிலையிலுள்ள நபர்கள் யாருமல்லர்.

இப்பொழுது நாம் நம்முடைய வசதிக்காக நோயாளி என்றழைக்கப்படும், விடுவிக்கப்படவேண்டிய நபருக்கு நேராய் திரும்புவோம். விடுதலைக்கான சிலநிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1). **தாழ்மை**. நோயாளி, தாழ்மையுள்ளவனாக, பிசாசை எதிர்ப்பதற்கு முன்பு தேவனுக்குத் தன்னை ஒப்படைக்கிறவனாய் இருக்க வேண்டும். (பார்க்க: யாக்.4:6-7).

(2). **உண்மை**. இது அந்த நிலைமைக்கு காரணமாயிருந்த அவளது எந்த பாவத்தையும், அவனது நிலைமையையும், முழுவதும், உண்மையுமாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கோருகிறது. (பார்க்க: சங்.32:1-5).

(3). **அறிக்கை**. நோயாளி, எல்லா அறிந்த பாவத்தையும் தேவனிடத்தில் குறிப்பாக அறிக்கை செய்ய வேண்டும். (பார்க்க - 1யோ.1:9). இதனோடு கூட அவன் தனது விடுதலைக்காய் அவனுடன் ஜெபிக்கிற ஊழியக்காரனோடும் அறிக்கை செய்திருக்க வேண்டும். யாக்.5:16-லுள்ள வார்த்தைகளில் மறைமுகமாய் கூறப்பட்டுள்ளது. உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்'' இது தேவனோடு மாத்திரமல்ல, மனிதரோடும் அறிக்கை செய்தை குறித்து பேசுகிறது. இந்த வரிசையில் முதலாவது அறிக்கையிடு, பின்பு ஜெபி என்று வருகிறது.

(4). **விட்டுவிடுதல்**. பாவத்தை விட்டுவிடாமல், அதை அறிக்கை செய்வது, போதாது தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதி.28:13). துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில், திரும்பக்கடவன், அவர் அவன்மேல் மனதுருகுவார், நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன், அவர் மன்னிக்கிதற்கு தயை பெருத்திருக்கிறார் (ஏசாயா 55:17). பாவி தனது வழியை (வெளிப்படையான நடக்கை) மட்டுமல்ல, தனது நினைவுகளையும்'' (வெளிப்படையான நடக்கையில் காண்பிக்கப்படா விட்டாலும், பாவத்துக்குத் துணைபோகிற காரியங்கள் அல்லது விருப்பங்கள் உள்ளன) விட்டுவிடுதல். இரக்கத்திற்கும், மன்னிப்பிற்கும் முன்பு வரவேண்டும்.

(5). **மன்னிப்பு** தேவனிடத்திலிருந்து மன்னிப்பை விரும்பும் ஒருவன், முதலில் சகமனிதரை மன்னிக்க வேண்டும். மனக்கசப்பும், மன்னியாமையும், விடுதலைக்கு எதிராயிருக்கிற மிகவும் பொதுவான இரண்டு தடைகளாகும். எபி.12:15-ல் யாதொரு கசப்பான வேர்'' என்பதற்கு எதிராக எச்சரிக்கப்படுகிறோம். எங்கெல்லாம் கசப்பு இருதயத்தை கெடுத்திருக்கிறதோ, அது முழுவதுமாய் அகற்றப்படவேண்டும். அதனுடைய சிறிய வேர்கூட இருக்கக்கூடாது. கர்த்தருடைய ஜெபத்திலுள்ள வார்த்தைகளின் வரிசையில் விசேஷித்த முக்கியத்துவம் இருக்கிறது. முதலாவது, எங்களுக்கு விரோதமாய் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்'' (அதாவது, தேவனிடத்திலிருந்து வரும் நமது மன்னிப்பும், நம்முடைய சகமனிதருக்கு நாம் கொடுக்கும் மன்னிப்பும் ஒன்றுக்கொன்று சமநிலையில் உள்ளன.) அதன்பின், ''தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்...'' என்று வருகிறது.

அதாவது, விடுதலைக்கு முன்பு மன்னிப்பு வரவேண்டும். மன்னிப்பு இல்லாமல், விடுதலை பெற நமக்கு எந்த உரிமையும் இல்லை.

(6). மேலே கூறப்பட்ட ஐந்து நிபந்தனைகளையும் நோயாளி நிறைவேற்றிய பின்பு, யோவேல் 2:32-ல் சொல்லியுள்ள வாக்குத்தத்தை உரிமையாக்கும் நிலையில் இருக்கிறான். கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனே அவன் இரட்சிக்கப்படுவான்.'' கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சத்தமாக கூப்பிடுவது, விடுதலையின் நடைமுறையை செயல்படுத்துகிறது.

விடுதலையை, சாதாரணமாக, ஒரு செயல்முறை என்று புரிந்துகொள்வது முக்கியமானதாய் இருக்கிறது. இந்த செயல்முறை குறுகியதாகவோ, அல்லது விரிவாக வரையப்பட்டதாகவோ இருக்கலாம், அது பதற்றத்துடனோ தீடீர் திருப்பங்களுடையதாகவோ இருக்கலாம், அல்லது சாந்தமாகவும் இருக்கலாம், உணரக்கூடியதாகவும் இருக்கலாம். ஆனால் பிசாசுகளிடமிருந்து ஒரு மனிதன் விடுவிக்கப்படும்பொழுது, அங்கே சில குறிப்பிட்ட அனுபவங்களும் அல்லது எதிர்விளைவுகளும் இல்லாவிட்டால், உண்மையிலே விடுதலை நடந்ததா என்பது கேள்விக்குறியாய் இருக்கும். இந்நிலையில், சில மிகவும் எளிதான, பகுத்தறிவு சார்ந்த நிபந்தனைகளை பயன்படுத்தலாம். ஒரு மனிதனுக்குள், எந்த இடத்தில் பிசாசு இருந்தாலும், அது வெளியே வரவேண்டும். பிசாசு வெளியே வராத நிலையில், விடுதலை இல்லை. பொதுவாக பிசாசு நான் இருப்பதை வெளிப்படுத்தவோ அல்லது வெளிவரவோ விரும்பாமல், அதற்கு மாறாக, ஒளித்துக்கொண்டிருப்பதை நாடும்.

இப்பொழுது, பிசாசு ஆவியாய் இருக்கிறது. ஆவி என்பதற்கு, கிரேக்க வார்த்தையில் நியூமா ஆகும். அதன் பொருள்: ''மூச்சு''. ஒரு மனிதனுடைய மூச்சு பொதுவாக அவனுடைய வாய் அல்லது மூக்கின் மூலம் உள்ளே செல்லவோ, வெளியே வரவோ செய்கிறது. பிசாசுகளுக்கும், தீய ஆவிகளுக்கு இது பொருந்தும். பிசாசு ஒரு மனிதனிடத்திலிருந்து வெளியே வரும்பொழுது, பொதுவாக அவனுடைய வாய் மூலமாகவே வெளிவருகிறது. இந்த நேரத்தில் அங்கே வழக்கமாக சில குறிப்பிட்ட வெளிப்பாடு இருக்கும். பொதுவாகவே விடுதலையின் செயல்முறையின் உச்சக்கட்டத்தை குறிக்கிற, வாயுடன் தொடர்புடைய சில வெளிப்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. உஸ் என்ற ஒலி, இருமல், தேம்பி அழுதல், அலறுதல், கூச்சலிடுதல், ஏப்பமிடுதல், துப்புதல், அலறுதல், கூச்சலிடுதல் ஆகிய வழக்கத்துக்கு மாறான நிகழ்ச்சிகள்.

அப்-8:7-ல் குறிக்கப்பட்டுள்ளன. அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது.'' இருப்பினும் வாயுடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்வுகளில் இவைகள் இரண்டு மாத்திரமே குறிக்கப்பட்டுள்ளன. பலதரப்பட்ட வகையான பிசாசுகள், பல வகையான குணங்களை வெளிப்படுத்துவதை நான் என்னுடைய அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். உதாரணமாக பாலியல் சம்மந்தப்பட்ட அசுத்த ஆவிகள் பொதுவாக வெளியே வரும்பொழுது, துப்பவோ அல்லது வாந்தி எடுக்கவோ செய்கின்றன. (பெரும்பாலும், அதிக அளவு பிசுபிசுக்கலான கோளையை தேம்பல் அல்லது அழுகையோடு வெளிவருகின்றன. பொய் பேசும், வெறுப்பை ஏற்படுத்தும் பிசாசுகள் பெரிய உறுமலை வெளியிடுகின்றன. போதைக்கு (புகை பழக்கம்) அடிமையாகும்பிசாசுகள் இறுமலோடு அல்லது மூச்சுத்திணறலோடு வெளிவருகிறது.

சில வேளைகளில், பிசாசுகள் அவை பிடித்திருக்கும் நோயாளியின் தன்மைகளை ஒதுக்கிவிட்டு, தங்களுடைய சொந்த தன்மையின் மூலம் வெளிப்படுகின்றன. அந்த நேரங்களில், அவைகள் நோயாளியின் பேசும் உறுப்புகளை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து தங்களுடைய வார்த்தைகளை அவைகள் மூலம் பேசுகின்றன. சில வேளைகளில் சத்தத்தின் வெளிப்படையான மாற்றங்கள் இதன் மூலம் விளைகிறது. ஒரு பெண்ணின் தொண்டையிலிருந்து முரட்டுத்தனமான ஆண்கள் பேசுகிற சத்தம் கேட்கப்படுகிறது. சில சமயங்களில், ஒரு நபருக்குள் இருக்கும் பிசாசு, அவனுக்கே தெரியாத பாஷையை புரிந்து கொள்ளவும், பேசவும் செய்கிறது. இந்த சம்பவங்களில் ஊழியக்காரன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மூலம் அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வல்லமையை பயன்படுத்தி, ஒவ்வொரு பிசாசுகளும் தங்கள் பெயரை சொல்லும்படி கட்டளை கொடுத்து, இவ்வாறு அவைகளின் தன்மைகளையும், கிரியைகளையும் வெளிப்படுத்த வேண்டும்.

நான் கேட்டிருக்கிற பெயர்களில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன: பயம் - வெறுப்பு - பொய்கள் - சந்தேகம் - வன்மம் - பொறாமை - குழப்பம் - வக்கரிப்பு - மனக்கோளாறு - மரணம் - தற்கொலை - விபச்சாரம் -ஏளனம் - தூஷணம் - பில்லிசூனியம்.

இன்று தெய்வ அருளால் சிற்றின்ப வேட்கையின் முகத்திரை ஒருமுறைகூட ஒதுக்கப்பட்டு, புதிய ஏற்பாட்டு சபையை எதிர்த்து நின்ற பிசாசுகளின் வல்லமைக்கு எதிராக இயேசு கிறிஸ்துவின் சபை நிற்கிறது. இந்த சூழ்நிலைகளில், சபையானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயர், இரத்தம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், வேதாகம சத்தியம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் அதிகாரத்தையும் வல்லமையையும், மீண்டும் அறிந்து கொள்ள வேண்டும்.

வேத ஆதாரங்கள்: சுவிசேஷங்கள், அப்போஸ்தலர் நடபடிகள், நிருபங்களில் அடையாளங்களும் அற்புதங்களும்

முன்னுரை

அடையாளங்களும் அற்புதங்களும் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தின் மையமாக இருந்தன. (இருக்கின்றன). இயேசுவின் இறுதி கட்டளையில், தேவனுடைய அதிகாரம் சபைக்கு அளிக்கப்பட்டது. பெந்தேகோஸ்தே நாளில், தேவனுடைய வல்லமை அளிக்கப்பட்டது. ஞானஸ்நானத்தில், ஆவியானவரின் வல்லமையை பெற்ற பின்பே, இயேசுவானவர் தனது ஊழியத்தை ஆரம்பித்தார். இயேசு தாமே சாத்தானை எதிர்த்து நின்றார். அவரும் சுவிசேஷ எழுத்தாளர்களும் நோயை சாத்தானுடைய கிரியையாகவே கண்டார்கள். அடையாளங்களிலும், அற்புதங்களிலும்மான இயேசுவின் ஊழியம் பரிசுத்த ஆவியுடன் அவர் கொண்டிருந்த உறவின் அடிப்படையைக் கொண்டிருந்தது. எனவே, ஒருவர் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை சாதாரண கொள்கைகளை கொண்டிருந்தது என்ற வரையறைக்குள் கொண்டுவராமல் இருக்க வேண்டும். இந்த கண்ணோட்டத்தோடு, தனது அடையாளங்களின் அற்புதங்களின் ஊழியம் உருவாக்கப்பட்டது.

உருவாகிக்கொண்டிருந்த சபையாகிய அவரது சீடர்கள் இயேசு செய்த அதே ஊழியத்தை செய்யும்படி வல்லமையால் நிரப்பப்பட்டனர். அப்போஸ்தல நடபடிகளின் புஸ்தகம் முழுவதும் நடந்துள்ள அற்புதங்களும் அடையாளங்களும் அதன் விளைவாகும். அப்படி நடந்தவைகளுக்கும், ஆதி சபையின் வளர்ச்சிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. எங்கெல்லாம் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதோ, அடையாளங்களும் அற்புதங்களும் நிகழ்ந்ததோ, அங்கெல்லாம் சபை வளர்ந்தது. புதிய ஏற்பாட்டு சபையினை கிரியைகள், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஈடுபாட்டின் எதிர்பார்ப்பை விவரிக்கிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளில் சபை வழி நடத்தப்பட்டது. அதாவது, தரிசனங்கள், சந்திப்புகள், தீர்க்கத்தரிசனங்கள். வல்லமை வெளிப்பட்டபோதெல்லாம் அங்கே அடையாளங்களும், அற்புதங்களும் நிகழ்ந்தன. புதிய ஏற்பாட்டில் நமக்காக வெற்றி தோல்வி ஆகிய இரண்டும் எழுதப்பட்டுள்ளன. நிருபங்கள் குறிப்பாக சில வெளிப்படையான தோல்விகளை பகிர்ந்துகொள்கின்றன.

அப்போஸ்தலத்துவம், சுவிசேஷ செய்தி ஆகியவற்றிற்கு சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்டன. அவைகள் தேவன் நமது மக்களின் மீது கொண்ட மனதுருக்கத்தின் சிறப்பு அடையாளமாக இருந்தது,இருக்கின்றது.

எழுத்து ஆவணங்கள்

முன்னுரை

மத்தேயு 14:26-29 இயேசு ஜலத்தின் மேல் நடந்ததையும், அவ்வாறு நானும் செய்யும்படி பேதுரு கேட்டுக்கொண்டதையும், முயற்சித்ததையும் குறித்து நாம் வாசிக்கிறோம், அவர் கடலின்மேல் நடக்கிதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து. ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். உடனே இயேசு அவர்களோடே பேசி, திடன் கொள்ளுங்கள், நான்தான் பயப்படாதிருங்கள் என்றார். பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். எப்படி குணமாக்குவது என்று கற்றுக்கொள்வது, எப்படி ஜலத்தின்மேல் நடப்பது என்று கற்றுக்கொள்வதைப் போன்றதாகும். இரண்டு காரியங்களிலுமே, சம்மந்தப்பட்ட வேதாகம கொள்கைகளை அறிந்து கொள்வதும், இயேசுவே அனைத்து சிருஷ்டிக்கும் ஆண்டவர் என்று புரிந்து கொள்வதும், இத்தகைய செயல்களில் வெற்றிகரமாக ஈடுபாடு கொண்டுள்ள பிறரிடம் பேசுவதும், வெவ்வேறு அணுகுமுறைகள் வெற்றியுறுவதோ தோல்வியுறுவதோ எதனால் என்பதை ஒப்பிட்டு குறிப்பெடுப்பதும் பிரயோஜனமாக அமையும். இவை அனைத்துமே உதவியாக இருக்கும் இருப்பினும், படகை விட்டிறங்க வேண்டிய நேரம் வரும்பொழுது ஜலத்தின் மேல் நடப்பதை குறித்த அனைத்து சிறந்த கருத்துகளும், உள்நோக்குகளும் மிகவும் குறைந்த மதிப்புடையதாகிவிடும். இயற்கையின் விதிகளை வெற்றிகரமாய் கடந்து செல்லும் ஆற்றல்,

உத்திகளிலோ, அல்லது வழிமுறைகளிலோ தேர்ச்சி பெறுவதன் மூலம் கண்டுபிடிக்கப்படுவதில்லை. பரிசுத்த ஆவியின் வல்லமையோடு ஊழியம் செய்வதை பொறுத்தவரையில், குறிப்பிட்ட காரியங்கள் ஏன் நிகழக்கூடும் அல்லது நிகழ வேண்டும் என்று அநேகர் அறிந்துள்ளனர் ஆனால் வெகு சிலரே தங்கள் அனுபவங்களின் மூலம் அவைகள் நிகழ்வதை மெய்யாகவே பார்த்துள்ளனர்.

இயேசுவின் குணமாக்கும் ஊழியம் எவ்வாறு நடைபெற்றது என்பதே ஒரு இரகசியம் ஆனால் அதைவிட அதிகம் குழப்பத்தை உண்டாக்கும் கேள்வியுடன் ஏன் நம்முடைய குணமாக்கும் ஊழியத்தை தொடர்ந்து செய்யும் உன்னதமான சிலாக்கியத்தை ஏன் இயேசு தம்மை பின்பற்றியவர்களுக்கு கொடுக்க வேண்டும். உண்மை என்னவெனில், அவர் அவ்வாறு செய்வதை தெரிந்து கொண்டார் எவ்வளவு துன்பம் விளைவிப்பதாயிருப்பினும், அற்புதங்களின் எல்லைக்குள் கடந்து செல்வதைத் தெரிந்து கொள்வதன் மூலம் அவருக்குக் கீழ்ப்படிந்து செவிகொடுக்கும் சில அங்கத்தினர்கள், அவருடைய சரீரமாகிய சபையில் உண்டு. சீஷர்களுள் பதினொருவர் படகிலேயே தங்கிவிட்டார்கள் என்பதை நினைவுகூறுங்கள். பேதுரு மட்டுமே துணிகரமாக ஜலத்தில் இறங்கினான். விளைவாக பேதுரு மட்டுமே, ஆண்டவரின் அழைப்புக்கிணங்கி இயற்கையின் விதிகளை மேற்கொள்ளும் சிலாக்கியத்தை அனுபவித்தான்.

மாம்ச சக்திக் பெலத்தால் ஊழியம் செய்ய நாடுவோருக்கு, ஆவியின் ஊழியம் அருளப்படுவதில்லை. பெருமையும், புகழ் ஆர்வமும் ஆவிக்குரிய எல்லைக்குள் வருவதற்கு தடையாக அமைகின்றன. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் மகிமையில் நானும் பங்கு பெற நாடுபவன், அவரால் தான் பயன்படுத்தப்படுவதை மட்டுப்படுத்திக் கொள்கிறான். குணமாக்கும் ஊழியத்தில் மிகுதியாக பயன்படுத்தப்படும் அநேகர் இந்த நுட்பமும், அழிவுக்கேதுவுமான தவறுக்கு ஆளாகிவிடுகின்றனர் என்பது கவலைக்குரியது. அடிக்கடி, ஆவிக்குள் ஆரம்பமாகிறது, துரதிஷ்டவிதமாக மாம்சத்தில் முடிகிறது. திடீர் இடையூறுகளின் உள்ளார்ந்த ஆற்றலை தெரிந்துகொண்டு, பயபக்தியுடனும், பரிசுத்த ஆவியின் ஆதரவின் கீழ் இருந்தும், குணமாக்கும் ஊழியத்தை நாம் அணுக வேண்டும். புயல் மோதிய கலிலேயாக் கடலில் இயேசு எதை செய்தாரோ அதை இன்றைக்கும் செய்கிறார்- சாதாரண மனிதரை, இயற்கையின் விதிகளுக்கு மேற்பட்டும் அவைகளைத் தாண்டியும் சென்று, அற்புதங்களின் எல்லைக்குள் அவருடன் நடந்துவர அழைக்கிறார். ஆவியின் எல்லைக்குள் ஒன்று மாத்திரம் உறுதி-அதாவது, அறியப்பட்டதைக் காட்டிலும் அறியப்படாதது அதிகம். ஆனால் தம்மைப் பின்பற்றி வரும்படி நமது ஆண்டவர் நம்மை அழைக்கிறார். நாம் இணைந்து அவரைப் பின்பற்றும்பொழுது, அவர் நமக்குக் காண்பிப்பவற்றைக் காணும் கண்களையும், ஆவியானவர் பேசுவதை கேட்டு, புரிந்து கொள்ளும் செவிகளையும் ஒவ்வொரு விநாடியும் அற்புதமான வாழ்க்கையை வாழும் உற்சாகத்தை தாங்கக்கூடிய இருதயங்களையும் நமக்கு தருவாராக.

இயேசுவின் குணமாக்கும் ஊழியம்

இயேசு கிறிஸ்து சென்ற இடமெல்லாம் சுகமாக்குகிறவராக செயல்ப்பட்டார் உடல் மற்றும் மனம் சார்ந்த சுகமாக்குதல் 41 வேறுபட்ட நிகழ்ச்சிகள் நான்கு சுவிசேஷங்களிலும் எழுதப்பட்டன. ஆனால் இவைகள் ஒரு ஜனங்கள் சுகம் பெற்றதாக, மிக சுருக்கமாக பல இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. விரிவாக விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளெல்லாம் இயேசு கிறிஸ்துவின் சுகமாக்கும் ஊழியத்தில் நிகழ்ந்த ருசிகரமான சம்பவங்கள் மட்டுமே இரட்சகரின் வாழ்வையும் ஊழியத்தையும் குறித்து முடிவாக யோவான் எழுதும்பொழுது இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு, அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். (யோவான் 20:30-31, 21:25) என்று குறிப்பிடுகிறார்.

சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் ஐந்தில் ஒரு பாகம், இயேசு கிறிஸ்துவின் சுகமாக்கும் ஊழியத்திற்கும், அதனோடு தொடர்புடைய விவாதத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. நான்கு சுவிசேஷங்களிலுமுள்ள 3,779 வசனங்களில் 727 வசனங்கள், சரீரம் மற்றும் மனநிலை சார்ந்த வியாதிகளின் சுகமாக்குதலையும் இறந்தவர்கள் உயிரோடு எழுந்திருப்பதையும் குறிக்கின்றன.

அற்புதங்களைக் குறித்த பொதுவான விவாதத்ததை தவிர, வேறு எந்த ஒரு அனுபவத்தையும் விட அதிக கவனம் இயேசு கிறிஸ்துவின் சுகமாக்கும் ஊழியத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. உடல் மற்றும் மனம் சார்ந்த குணமாக்குதலுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தையும் ஒழுக்கம் சார்ந்த சுகமாக்குதலுக்கு கொடுக்கப்படும் குறைந்த கவனத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எதிர்பாராத அதிர்ச்சியை தருகிறது. கீழ்க்கண்ட விளக்க அட்டவணையில் சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள 41 இயேசுவின் சுகமாக்கும் நிகழ்ச்சிகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. சுவிசேஷங்களில் எழுத்தாளர்கள் இந்த ஊழியத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ள மாறுபாடுகளையும், மிகுதியான எண்ணிக்கையையும் அதன் முக்கியத்துவத்தையும் கவனியுங்கள். இரண்டாவது விளக்க அட்டவணை, இயேசுவின் சுகமாக்கும் ஊழியத்தை வகையின் வரிசையில் காண்பிக்கிறது, மூன்றாவது விளக்க அட்டவணை இயேசுவின் குணமாக்கும் அற்புதங்களைத் தவிர ஏனைய அற்புதங்களைக் காண்பிக்கிறது.

இயேசுவின் குணமாக்கும் ஊழியம் : மேலான கண்ணோட்டம்

(படத்திலுள்ள A,B,C போன்றவற்றின் குறிப்புரைகளுக்கு விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது)

குறிப்புரை:

A. பிசாசுகளைத் துரத்தினார்
B. வார்த்தை பேசப்பட்டது
C. இயேசுவால் தொடப்பட்டார்
D. இன்னொருவரின் ஜெபம்
E. இன்னொருவரின் விசுவாசம்
F. இயேசுவின் போதகம்
G. அந்த நபரின் விசுவாசம்
H. இயேசு மனஸ்தாபப்பட்டார்
I. அந்த நபர் இயேசுவை தொட்டார்
J. இயேசுவின் உபதேசம்

எண்	விளக்கம்	மத்.	மாற்.	லூக்.	யோ.	A	B	C	D	E	F	G	H	I	J
1.	அசுத்த ஆவியுள்ள மனுஷன்		1:23	4:33		X	X								
2.	பேதுருவின் மாமி	8:14	1:30	4:38			X	X	X						
3.	திரளான ஜனங்கள்	8:16	1:32	4:40			X	X		X					
4.	அநேக பிசாசுகள்		1:34			X					X				
5.	குஷ்டரோகி	8:2	1:40	5:12			X	X				X	X		
6.	திமிர்வாதக்காரன்	9:2	2:3	5:18			X			X					
7.	சூம்பினகையையுடைய மனுஷன்	12:10	3:1	6:6			X					X			
8.	திரளான ஜனங்கள்	12:15	3:10			X									
9.	கதரேனர் நாட்டிலுள்ள பிசாசுபிடித்தவன்	8:28	5:1	8:26		X	X								
10.	யவீருவின் மகள்	9:18	5:22	8:41			X	X		X					
11.	பெரும்பாடுள்ளஸ்திரீ	9:20	5:25	8:43								X		X	
12.	சில நோயாளிகள்	13:58	6:5					X							
13.	திரளான ஜனங்கள்	14:34	6:55							X				X	
14.	சீரோபேனிக்கியஸ்திரீயின் மகள்	15:22	7:24						X	X					
15.	கொன்னைவாயுடைய செவிடன்		7:32				X	X	X						
16.	குருடன்		8:22				X	X	X						
17.	அசுத்தஆவியுள்ளசிறுவன்	17:14	9:14	9:38			X	X		X	X				
18.	பர்திமேயு என்ற குருடன்	20:30	10:46	18:35			X	X					X		
19.	நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன்	8:5		7:2					X	X	X	X			
20.	இரண்டு குருடர்	9:27					X	X							
21.	பிசாசுபிடித்த ஊமையன்	9:32				X									

எண்	விளக்கம்	மத்.	மாற்.	லூக்.	யோ.	A	B	C	D	E	F	G	H	I	J
22.	பிசாசுபிடித்த குருடும் ஊமையுமானவன்	12:22	11:14	11:14		X									
23.	ஜனங்கள்	4:23	6:17	6:17							X				X
24.	திரளான ஜனங்கள்	9:35									X				X
25.	திரளான ஜனங்கள்	11:7	7:21	7:21							X				X
26.	திரளான ஜனங்கள்	14:14	9:11	9:11	6:2								X		
27.	திரளான ஜனங்கள்	15:30									X				X
28.	திரளான ஜனங்கள்	19:2													
29.	தேவாலயத்தில் குருடரும், சப்பாணிகளும்	21:14													
30.	விதவையின் மகன்		7:11	7:11			X						X		
31.	மரியாளும்மற்றவர்களும்		8:2	8:2		x									
32.	சாத்தானால்கட்டப்பட்டிருந்த ஸ்திரீ		13:10	13:10			X	X							
33.	நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷன்		14:01	14:01				X							
34.	பத்து குஷ்டரோகிகள்		17:11	17:11			X					X			
35.	மல்குஸ்ஸின் காது			22:50			X								
36.	ஜனங்கள்		5:15	5:15											
37.	பற்பல வியாதியஸ்தர்		13:32	13:32		x									
38.	ராஜாவின் மனுஷனின் மகன்				4:46		X			X					
39.	**38** வருஷம் வியாதி கொண்டிருந்தவன்				5:2		X					X			
40.	பிறவிக் குருடன்				9:1		X	X							
41.	லாசரு				11:1		X								

இயேவின் குணமாக்கும் ஊழியம்

வகையின் வரிசையில்

விளக்கம்	மத்.	மாற்.	லூ.	யோ.
1. முடம், திமிர்வாதம், பக்கவாதம்				
a). நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன்	**8:5**		**7:1**	
b). திமிர்வாதக்காரன்	**9:1**	**2:1**	**5:18**	
c). சூம்பின கையையுடைய மனுஷன்	**12:10**	**3:1**	**6:6**	
d). சாத்தானால் கட்டப்பட்டிருந்த ஸ்திரீ			**13:16**	
e). தேவாலயத்தில் குருடரும் சப்பாணிகளும்	**21:14**			
2. குஷ்டரோகம்				
a). குஷ்டரோகி	**8:2**	**1:40**	**5:12**	
b). பத்து குஷ்டரோகிகள்			**17:12**	
3. ஜீரம்				
a). பேதுருவின் மாமி	**8:14**	**1:30**	**4:38**	
b). ராஜாவின் மனுஷனின் மகன்				**4:47**
4. கண்பார்வையின்மை				
a). பிறவிக் குருடன்				**9:1**
b). பர்திமேயு என்ற குருடன்	**20:30**	**10:46**	**18:35**	
c). குருடன்		**8:22**		
d). இரண்டு குருடர்	**9:27**			
e). தேவாலயத்தில் குருடரும் சப்பாணிகளும்	**21:14**			
5. செவிடு				
a). செவிடும் ஊமையுமான மனுஷன்		**7:32**		
6. நீர்க்கோவை வியாதி				
a). நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷன்			**14:1**	
7. உடல் முழுமையாக்கப்பட்டது				
a). மல்குஸ்ஸின் காது			**22:50**	
8. பாவம் மன்னிக்கப்படுதல்				
a). திமிர்வாதக்காரன்	**9:2**	**2:3**	**5:17**	
b). 38 வருஷம் வியாதி கொண்டிருந்தவன்				**5:14**
9. பிசாசு பிடித்தல்				
a). கதரேனர் நாட்டிலுள்ள பிசாசுபிடித்தவன்	**8:28**	**5:1**	**8:26**	
b). சீரோபேனிக்கிய ஸ்திரீயின் மகள்	**15:22**	**7:24**		

c). அசுத்த ஆவியுள்ள சிறுவன்	17:14	9:14	9:38	
d). அசுத்த ஆவியுள்ள மனுஷன்		1:23	4:33	
e). மகதலேனா மரியாளும்மற்றவர்களும்			8:2	
f). பிசாசு பிடித்த ஊமையன்	9:32			
g). அநேகர்	4:24			
h). அநேகர்	8:16			
i). பிசாசு பிடித்த குருடும் ஊமையுமானவன்	12:22		11:14	
j). அநேக பிசாசுகள்		1:32,34		
k). அநேகர்		3:10;6:13		
l). அநேகர்		4:36		
m). அநேகர்		6:34		
n). அநேகர்		7:17		
10. மரித்தோர் உயிரோடு எழும்புதல்				
a). யவீருவின் மகள்	9:18	5:22	8:41	
b). லாசரு				11:1
c). விதவையின் மகன்			7:11	
11. ஓய்வுநாளில் குணமாக்கப்படுதல்				
a). அசுத்த ஆவியுள்ள மனுஷன்		1:21	4:35	
b). சூம்பின கையையுடைய மனுஷன்	12:9	3:1	6:6	
c). சாத்தானால் கட்டப்பட்டிருந்த ஸ்திரீ			13:16	
d). நீர்க்கோவை வியாதியுள்ள மனுஷன்			14:1	
e). 38 வருடமாய் வியாதியாயிருந்தவன்				5:2
f). பிறவி குருடன்				9:1
12. உதிர ஊறல்				
a). பெரும்பாடுள்ள ஸ்திரீ	9:20	5:25	8:43	
13. திரளான ஜனங்கள்				
a). சில நோயாளிகள்	13:58	6:5		
b). திரளான ஜனங்கள்	14:34	6:55		
c). திரளான ஜனங்கள்	4:23		6:17	
d). திரளான ஜனங்கள்	9:35			
e). திரளான ஜனங்கள்	14:14		9:11	6:2
f). பெருங்கூட்ட ஜனங்கள்	15:30			
g). பெருங்கூட்ட ஜனங்கள்	19:2			
h). பல்வேறு நபர்கள்				

i). திரளான ஜனங்கள்	**11:4**			
14. எல்லா வித நோய்கள்				
	4:23	**6:5**		
	9:35			
	12:15	**6:55**		
	14:14			
	14:35			
	19:2			
15. ஒரே வகையான வார்த்தைகள்				
a). பிசாசு பிடித்தல்- சேர்க்கப்பட்டது	**8:16**	**1:32**	**4:40**	
		3:7	**6:17**	
			8:2	
16. இவைகளும், மற்ற வகையினங்களும்				
	4:24		**7:21**	
	15:30			
	21:14			
17. இயற்கையிலும்,கிருபையிலும், நியாயத்தீர்ப்பிலும் குணமாக்கப் படுதலைத் தவிர ஏனைய அற்புதங்கள்				
a). மீன்களைப் பிடித்தல்			**5:1-11**	
b). காற்றை அமர்த்துதல்	**8:23-27**	**4:36-41**	**8:22-25**	
c). தண்ணீர் திராட்சரசமாக மாறியது				**2:1-11**
d). 5000 பேரை போஷித்தல்	**14:15-21**	**6:32-44**	**9:12-17**	**6:1-13**
e). ஜலத்தின் மேல் நடந்தது	**14:22-23**		**6:45:52**	**6:15-21**
f). 4,000 பேரை போஷித்தல்	**15:32-39**	**8:1-10**		
g). மறுரூபமாகுதல்	**17:1-9**	**9:2-10**	**9:28-36**	
h). மீனின் வாயில் வெள்ளிப்பணம்	**17:24-27**			
i). திரை கிழிதலும், பூமியதிர்ச்சியும்	**27:51**	**15:38**	**23:45**	
j). 153 மீன்கள் பிடித்தல்				**21:1-14**

இயேசுவின் குணமாக்கும் பணியிலுள்ள சில முக்கிய கொள்கைகளும், மாதிரிகளும்

இயேசு நமது ஞானஸ்நானத்திற்கும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கும் பின்னரே குணமாக்குதலை ஆரம்பித்தார். (லூக்கா 3:21-22; 4:1-19) தம்மிடத்தில் வந்த யாவரையும் எல்லா வித நோய்களிலுமிருந்து விடுவித்தார், பிசாசு பிடித்தலும், அதன் விளைவுகளிலுமிருந்து (மத். 17:14-21) சரீர மரணத்திலிருந்தும் கூட (யோவான் 11:43-44) விடுவித்தார்.

இயேசுவின் சுகமளிக்கும் கிரியைகள், நோயாளிகள் மீது கொண்டிருந்த மனதுருகத்தினாலும் இரக்கத்தினாலும் உந்தப்பட்டவைகளயிருந்தன என்று சுவிசேஷத்தின் எழுத்தாளர்கள் அடிக்கடி குறிப்பிட்டுள்ளனர். அவர் ஜனங்களைக் கண்டு மனதுருகினது மட்டுமல்ல (மத்.9:36,14:14). இரண்டு குருடர்களைக் கண்டு மனதுருகினது மட்டுமல்ல (மத்.9:36,14:14), இரண்டு குருடரான பிச்சைக்காரரையும் கண்டு மனதுருகினார் (மத்-20:34). அவரிலும், அவரது குணமாக்கும் வல்லமையிலும் விசுவாசம் இருந்த பட்சத்தில், அவர் சுகப்படுத்துவது எளிதாக காணப்பட்டது. விசேஷமாக, நூற்றுக்கு அதிபதியின் பெரிய விசுவாசம் அவரை உணர்ச்சியூட்டியது. (மத். 8:5-13) திமிர்வாதக்காரனை சுமந்து வந்த, படுக்கை சுமந்தவர்களின் விசுவாசத்தை அவர். இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் உற்று நோக்கினார். குருடர்கள் (மத்.9:27-31), பெரும்பாடுள்ள ஸ்திரீ (மாற்கு 5:246-34). பிசாசு பிடித்த சிறுவனின் தகப்பன் (மாற்கு 9:14-29), போன்ற இன்னும் பல உதாரணங்கள் உண்டு. அவர்யார் என்பதைக் குறித்த விசுவாசம் வெளிப்பட்டதில், தமது சொந்த ஊரில் அவர் விளைவுடன் செயலாற்ற இயலவில்லை. (லூக்கா 4:23-28). தாம் மட்டுமே விசுவாசித்த பொழுதும், சில வேளைகளில் இயேசு குணமாக்கினார். ஆனால் விசுவாசமில்லாத (எதிர்மறை விசுவாசம்) சூழ்நிலையில் அவர் தெளிவாக மட்டுப்படுத்தப்பட்டார். அவர் நாசரேத்தில் பலத்த செய்கைகள் ஒன்றும் செய்ய முடியவில்லை. (மாற்கு 6:1-6, லூக்கா 4:23-28), மேலும் அவர் குருடனை சுகப்படுத்த அவனை பெத்சாயிதாவுக்கு வெளியே அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. (மாற்கு 8:22). இயேசு எல்லா வேளைகளிலும் குணமாக்கியதாகத் தெரிகிறது, ஆனால் அவர் ஆவியால் நிரம்பி வழியும்போது, ஆவியானவர் வல்லமையோடு அசைவாட ஆயத்தமாக இருந்த விசேஷமான வேளைகளை அவர் வெளிப்படையாக அறிந்திருந்தார்-உ.ம். குணமாக்கத்தக்கதாகக் கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று. லூக்கா 5:17

குஷ்டரோகியைப் போலவும் (மத். 8:1-4), நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைப் போலவும் (மத். 8:5-13), சீரோபேனிக்கிய ஸ்திரீயைப் போலவும் (மாற்கு 7:24-30), நம்மிடத்தில் விசுவாசத்தோடு வந்தவர்களை குணமாக்க அவர் எப்பொழுதும் விருப்பமுடையவராயிருந்தார். கர்த்தர் அடிக்கடி ஒருவர் பின் ஒருவராக பெரிய கூட்டங்களிலோ, கூடுகைகளிலோ அநேகரை குணப்படுத்தினார். (மத்தேயு 4:23; 14:13,14; 15:30,31). ஆனால் தம்மை சோதிக்கவோ, அல்லது மகிழ்ச்சிக்காகவோ மட்டும் நாடியவர்களுக்கு அவர் எந்த அற்புதத்தையும் செய்யவில்லை. உ.ம். வேதபாரகரும், பரிசேயரும்-மத்.12:38-42. தேவையுள்ளவர்களை குணமாக்குவதை எக்காரணம் கொண்டும் தடுப்பது கர்த்தரை துக்கப்படுத்தியது. இரண்டு உதாரணங்கள், ஓய்வுநாளில் குணமாக்கப்பட்ட சூம்பின கையையுடைய மனிதனும் (மாற்கு 3:1-6), ஓய்வுநாளில் தானே குணமாக்கப்பட்ட பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஸ்திரீயுமே. (லூக்கா 13:10-17)

குணமாக்குதலில் நம்முடைய ஆண்டவர் பல்வேறு மாதிரிகளையும், முறைகளையும் உபயோகித்தார். சில வேளைகளில், பேதுருவின் மாமியின் காரியத்தைப் போல, ஒரு தொடுதலாக இருந்தது. (மத். 8:15) மற்ற வேளைகளில் லாசருவின் காரியத்தைப் போல, ஒரு ஜெபமாக இருந்தது. (யோவான்.11:41-42). அடிக்கடி அவர், நூற்றுக்கதிபதியிடம் கூறியது போல "போ" என்றும் (மத். 8:5-13) திமிர்வாதக்காரனிடம் கூறியது போல எழும்பு என்றும் (லூக்கா 5:17-26), சூம்பின கையையுடைய மனுஷனிடம் கூறியது போல நீட்டு என்றும் (லூக்கா 6:6-10), நாயினூர் விதவையின் மகனிடம் கூறியது போல எழுந்திரு என்றும் (லூக்கா 7:11-17) கட்டளையின் வார்த்தையைப் பேசினார். சில வேளைகளில் அவருடைய மாதிரியில், குஷ்டரோகியின் காரியத்தைப் போல தொடுதலும் கட்டளையும் சேர்ந்து வரும். மற்ற வேளைகளில், மத்.14:34-36ல் காண்கிற அநேகரைப் போலவும், லூக்கா 8: 24b-48ல் காண்கிற பெரும்பாடுள்ள ஸ்திரீயைப் போலவும், யாரேனும் அவரைப் தொடுவதாக

இருந்தது அநேக சமயங்களில் அவர் உமிழ்நீரையும், சேறையும் பயன்படுத்தினார். (கொன்னைவாயுடைய செவிடன்- மாற்கு 7:31-37, குருடன் -மாற்கு 8:22-26 குருடன்- யோ. 9:6-7). அடிக்கடி அவர் யாருக்காக ஜெபித்தாரோ அவர்கள் ஒரு விசுவாச செயலை செய்யும்படி எதிர்பார்த்தார். சில உதாரணங்கள்: சூம்பின கையையுடைய மனுஷனிடத்தில் உன் கையை நீட்டு என்றார். (லூக்கா 6:6-10), குருடனிடத்தில் ''போய் கழுவு'' என்றார் (யோவான் 9:7), பத்து குஷ்டரோகிகளிடத்தில் போய் ஆசாரியர்களுக்கு உங்களை காண்பியுங்கள் என்றார். (லூக்கா17:11-19).

இயேசு பெரும்பாலும் பொது இடங்களில் குணமாக்கினார், ஆனால் சில வேளைகளில் அவர் தனியே சென்றார். விசேஷமாக, எதிர்மறையான சூழ்நிலைகளில்): யவீருவின் மகள் (மாற்கு 5:35-43), பெத்சாயிதாவின் குருடன், (மாற்கு 8:22-26), சீமோனின் மாமி (லூக்கா 4:38-39) ஆகியோரின் காரியங்களில் நிகழ்ந்தது போல தனிமையிலே சுகப்படுத்தினார். அவர், சில வேளைகளில் அறிவின் வார்த்தைகளைப் பெற்றார் என்றும், பிற வேளைகளில் பெறவில்லை. என்றும், 2, தனது கவனம் குறிப்பிட்ட இலக்கில் ஒருமுகப்படுத்தப்படவேண்டும் என்றும் குறிக்கத்தக்கதாக, அந்த குணமாக்குதலைப் பற்றிய கேள்விகளை அடிக்கடி கேட்டார் அவர் குருடனைப் பார்த்து ''எதையாகிலும் காண்கிறாயா?..'' என்றும் (மாற்கு 8:22-26), கதரேனர் நாட்டின் பிசாசு பிடித்தவனைப் பார்த்து ''உன் பேர் என்ன? என்றும் (மாற்கு 5:1-13), பிசாசு பிடித்தவனைப் பார்த்து ''உன் பேர் என்ன? என்றும் (மாற்கு 5:1-13), பிசாசு பிடித்த சிறுவனின் தகப்பனிடத்தில், இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று? என்றும், (மாற்கு 9:14-29), பர்திமேயுவிடத்தில், நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய். என்றும் கேட்டார். அடிக்கடி இயேசு தாம் சுகப்படுத்தினவர்களை மருத்துவச் சான்றுகளைப் பெறும்படி அனுப்பினார். (பார்க்க: லேவி.13:49, 14:2-32), மேலும் அவர், மருத்துவர்களின் பணிமீது நம்பிக்கை கொண்டிருந்தார். சில உதாரணங்கள்: குஷ்டரோகி (மத். 8:1-4), பத்து குஷ்டரோகிகள் (லூக்கா 17:11-19), மருத்துவரின் அவசியம் (மாற்கு 2:17).

சில வேளைகளில் இயேசு சுகமாக்கப்பட வேண்டிய நபருக்காக ஒரு முறைக்கும் மேலாக ஜெபிக்க வேண்டியிருந்தது. உம் பெத்சாயிதாவின் குருடன்-மாற்கு-8:22-26. கதரேனர் நாட்டிலுள்ள பிசாசு பிடித்தவனுக்காக தொடர்ந்து ஜெபித்தார். சொல்லியிருந்தார் கிரேக்கம்: எலிகென் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, முடிவுறாநிலை குறித்த வினைச் சொல்லாக வருகிறது. அந்த வினைச்சொல் கொண்டுள்ள செயலின் இனம், தொடர்ச்சியான செயல் ஆகும். அவர் அடிக்கடி பல வகைகளில் பிசாசு பிடித்தவர்களை விடுதலையாக்கி, அதன் விளைவுகள் நீங்க அவர்களை சுகப்படுத்தினார். மாற்கு 5:1-13-ல் பிசாசுகளின் பெயரைக் கேட்டார். லூக்கா 4:31-37, 40-41-ல் பிசாசுகள் அமைதியாயிருக்கும்படி கேட்டுக் கொண்டார். கட்டளையிட்டு அவைகளைத் துரத்தினார். (லூ-4:35-36). இறுதியாக, அவர் தம்முடைய நாமத்திலும், தமது ஆவியினாலும் நிகழ்ந்த குணமாகுதலை பிசாசின் கிரியை என்று கூறுவதை எதிர்த்து கடுமையான எச்சரிப்புகளை விடுத்தார். அத்தகைய வார்த்தைகள் ஆவியானவரை தூஷிப்பதாகவும் அவரை நிரந்தரமான கோபாக்கினைக்குத் தள்ளுவதாகவும் அமையும் உ.ம். பரிசேயர் ஆவியானவரைத் தூஷித்தது. (மாற்கு 3:196-30).

இயேசுவின் வாழ்வின் நான்கு முக்கியமான அம்சங்கள்.

A. பிதாவுடன் அவர் கொண்டிருந்த உறவு

தேவனுடைய நித்திய குமாரனாகிய இயேசு, மாம்சமானார். இயேசுவின் பாவமற்ற வாழ்க்கை மற்றும் அவரது அற்புதமான ஊழியம் ஆகியவற்றின் இரகசியம், பிதாவோடு அவர் கொண்டிருந்த உறவின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அவர் தேவனாயிருந்தும், பரலோகத்திலுள்ள பிதாவுடன் கொண்டிருந்த நெருக்கமான, சிறு பிள்ளையைப் போன்ற உறவிலிருந்தே இயேசு தமது வல்லமையை பெற்றுக்கொண்டார் ஒருவன் பிதாவோடு அதே விதமான நெருக்கத்தையும், அவர் மீது சார்ந்ததிருத்தலையும் வளர்க்கும்போது, தேவன் கூறுவதை கேட்கவும், தேவன் செய்வதைப் பார்க்கவும், அற்புதங்களின் எல்லைக்குள் செல்லவும் கூடிய ஆற்றலை அவன் பெறுவான். இயேசு தாம் செய்ததை எப்படி செய்தார்? பிதாவோடு அவர்கொண்டிருந்த உறவிலேயே பதில் உள்ளது. இயேசு வாக்கு பண்ணிய இவைகளிலும் மேலான கிரியைகளை நாம் எப்படி செய்ய முடியும்? அதே நெருக்கமான, எளிதான, கீழ்ப்படிதலின் உறவை கண்டுகொள்வதாலேயே.

இந்த உறவின் குணத்தையும், இயேசுவின் ஊழியம் எவ்வாறு அதிலிருந்து பெருக்கெடுத்து ஓடியது என்று யோவான் விளக்கிக் காண்பிக்கிறார். யோவான் 1:1-ல், பிதாவோடு இயேசுவின் உறவு எப்பொழுதும் இருந்திருக்கிறது என்பதாக கூறுகிறார் (இருந்தது-முடிவுறாநிலை குறித்த வினைச் சொல்லின் காலப்படிவம்). இந்த உறவு, பூமியில் தொடர்ந்தது என்று மேலும் விளக்குகிறார். மேலும், யோ.3:13-ல் இயேசு தாம் அறிந்ததையே பேசினார் என்றும் யோவான் பகிர்ந்து கொள்கிறார். (கிரேக்கம்: ஓய்டா அனுபவம் மூலம் வந்த அறிவு). பிதாவோடு அவருக்கு இருந்த அனுபவத்தின் நிறைவிலிருந்து அவருடைய பேச்சு வெளிப்பட்டது. இயேசு பிதாவோடு இணைந்து கிரியை செய்கிறார். அவர் சுயமாக தீர்மானித்து எதையும் செய்வதில்லை. பிதாவானவர் செய்யத் தாம் காண்கிறதெதுவோ, அதையே அவர் செய்யவும் பேசவும் செய்கிறார். (யோ. 5:17-21). இக்குறுகிய விளக்கவுரை பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையே உள்ள உறவை வலியுறுத்திக் கூறுகிறது. இதைக்குறித்து யோவான் இன்னும் அநேக காரியங்களைக் கூறுகிறார். அவைகளை படிப்பது மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.

B. பரிசுத்த ஆவியுடன் அவருக்குள்ள உறவு

திருத்துத்தின் ஓர் அங்கமாகிய பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவனின் வாழ்வில் வாசம் செய்ய வருகிறார். அவருடைய பிரசன்னத்திற்கு முக்கிய காரணம், வல்லமை அளிப்பதாகும். கிறிஸ்தவனின் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு மிகவும் உணர்ச்சிபூர்வமாகவும், மற்றவர்கள் புரிந்து கொள்ளும் விதத்திலும் லூக்கா சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ளது. தேவனுடைய பணியைச் செய்ய ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையின் ஒரே ஆதாரம் ஆவியானவரே லூக்கா, இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பங்கை மிக கவனமாக எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் அவருடைய வல்லமைக்கும், விளைவுகளுக்கும் முக்கிய காரணம் பரிசுத்த ஆவியானவரே என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி அவர் எழுதுகிறார். இயேசுவின் ஊழிய ஆயுத்தத்தைக் குறித்து லூக்கா எழுதும் இந்த வேத பத்திகளில், ஐந்து தடவைகளில் லூக்கா இயேசுவோடு பரிசுத்த ஆவியானவர் கொண்டிருந்த உறவைக் குறித்த முக்கியமான செய்திகளை நமக்குத் தருகிறார். இந்த ஆரம்ப பத்திகள் இயேசு கிறிஸ்துவின் ஊழியப் பிரவேசத்தில் காண்பிக்கின்றன. அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் போதிக்கவும் சுமாக்கவும் செய்தார். பரிசுத்த ஆவியானவர் நம் மூலம் சுகப்படுத்துவது போலவே இயேசுவானவர் மூலமும் சுகப்படுத்தினார்.

C. அவருடைய ஜெப வாழ்வு

சுகப்படுத்துதலோடு தொடர்புள்ள ஜெபம் புதிய ஏற்பாடு முழுவதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் அது தனிப்பட்ட விதத்தில் குறிக்கப்பட்டிருந்தது. ஒரு முறை இயேசு, மிகவும் கடினமான சுகப்படுத்துதலின் சூழ்நிலைகளில் தொடர்ச்சியான ஜெபம் மிகவும் அவசியம் என்று அனுமானித்துள்ளார். (மாற்கு 9:29). இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் ஜெபத்தை குறிப்பாக அவருடைய சுகமாக்குதலின் ஊழியத்தில் தொடர்புடையதாய் இருப்பதால், அதை நாம் கவனிப்பது மிகவும் ஆவலுடையதாய் இருக்கும். இதைக்குறித்து லூக்கா கருத்து கூறுவதைப் போல காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் இடையில் உள்ள உறவை லூக்கா சொல்லியிருப்பதை நாம் ஏற்கனவே கவனித்திருக்கிறோம். அதே கவனத்தை இயேசுவின் ஜெபத்திற்கும் கொடுத்திருப்பது நமக்குப் புலப்படுகிறது. இயேசுவின் ஞானஸ்நானத்தில் அவர் ஜெபித்துக் கொண்டிருந்ததாக லூக்கா கூறுகிறார். இயேசு தன்னுடைய ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு அவர் வனாந்திரத்தில் நாற்பது நாட்கள் உபவாசத்திலும், ஜெபத்திலும் தரிந்திருந்தார். (லூ.4:1-13). ஜெபத்தைக் குறித்து, லூக்கா மேலும் கூறியிருப்பது, மிகவும் நெருக்கமானதும் ஓய்வில்லாததுமான ஊழியத்தில் ஈடுபடுவதற்கு முன்பு, இயேசு அதிகாலையில் இருட்டோடு எழுந்து தேவனோடு தனித்திருந்தார் என்பதாகும். (லூ.4:42). அதன்பின், திரளான ஜனங்கள் சுகம் பெறவும், அவருடைய வசனத்தைக் கேட்கவும் இயேசுவிடம் வந்ததைப் பற்றியும், அக்கூட்டத்திலிருந்து எப்படி இயேசு தன்னை விடுவித்துக் கொண்டு ஜெபிக்கச் சென்றார் என்பதையும் லூக்கா குறிப்பிடுகிறார் (லூ.5:15). போதிக்கவும், சுகப்படுத்தவும் தம்முடைய சீஷர்களை அனுப்ப, அவர்களை தெரிந்தெடுப்பதற்கு முன்பு, இரவு முழுவதும் இயேசு ஜெபித்தார். (லூ.6:12-16).

இயேசுவின் போதனையிலும், சுகமாக்குதலிலும் இருந்த இயேசுவின் ஜெப வாழ்வுக்கும், வல்லமை நிறைந்த ஊழியத்திற்கும் இடையில் காணப்பட்ட உறவு, இன்றைய திருச்சபைக்கு மிகவும் பிரயோஜனமாக மாதிரியைத் தந்திருக்கிறது. பிரசங்க கலையும், தொடர்பு முறைகளையும் அதிகமாய் கற்பதன் மூலம் நல்ல பிரசங்கம் செய்ய முடியும், ஆனால் வேதனையிலுள்ள ஒருவரின் தேவைகளை பூர்த்தி செய்வது ஆழமான ஜெப வாழ்வின் மூலமாகவே முடியும். சுகமாக்குதலின் ஊழியத்தில் ஜெப ஆயுதத்தை பயன்படுத்த கற்றுக்கொள்கிறார். நிச்சயமாக கிறிஸ்தவ வாழ்வின் பிற பகுதிகளோடு தொடர்பு இல்லாமலில்லை. கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியில் திறமையோடு செயல்படாமல் இருப்பது, முழுவதையுமே பாதிக்கும். கிறிஸ்தவ சுகமாக்குதலில் ஊழியத்தில் சிறந்த விசுவாசமுள்ள ஜெபத்தை உள்ளடக்குவது,சபையினுடைய வாழ்வின் எல்லா பகுதிகளிலும் ஒரு புது விதமான அதிர்வை ஏற்படுத்தும்.

D. நோய்களை குறித்து அவருடைய கண்ணோட்டம்

இயேசு மக்கள் மீது கொண்டிருந்த அன்பு மாத்திரமல்ல, அவர்களை கட்டியிருந்த சக்திகளின் மீது அவருக்கிருந்த வெறுப்பும், அவர்களை சுகமாக்கம்படி அவரை ஊக்கப்படுத்தியது. இயேசு பிசாசுகளை கையாளும்போது அடிக்கடி அவருடைய உதடுகளில் கண்டிப்பின் வார்த்தை காணப்பட்டது. இயேசு தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் சந்தித்த முதல் பிசாசு, அவர் அதட்டும்வரை உரத்த சத்தமிட்டது. (லூக்கா 4:35) மற்ற வேளைகளிலும் இயேசு இவ்வாறு செய்தார். ஒருமுறை அவர் ஜீரத்தையும் பார்த்து அது இயேசுவின் கட்டளைக்கு செவிக் கொடக்கக் கூடிய ஓர் உயிருள்ள பொருளை போல கருதி அதை அதட்டினார். (அதுவும் அப்படி செய்யது, லூக்கா 4:39). இன்னொரு முறை இயேசு தாமும் தம்முடைய சீஷரும் இருந்த படகை அமிழ்த்த இருந்த இயற்கை சூழல்களை கடிந்து கொண்டார். (லூக்கா 8:24).

கண்டித்தார். என்ற வார்த்தையின் தனிப்பட்ட உபயோகத்தைத் தவிர இயேசு தீய சக்திகளை எதிர்த்தார் என்பதற்கு வேறு ஆதாரங்களும் உண்டு. இதன் ஒரு உதாரணம் மாற்கு-3:1-6-ல் உள்ளது. இங்கு இயேசு ஒரு ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் இருப்பதாக பார்க்கிறோம். சூம்பின கையையுடைய ஒரு மனுஷன் அங்கிருந்தான். ஓய்வுநாளில் இயேசு அந்த மனுஷனை முன்னே வரும்படி அழைத்து அங்கே நிற்கும்படி கூறினார். பின்பு அவர் தமது எதிராளிகளிடம் திரும்பி ஓய்வுநாளில் நன்மை செய்ய நியாயப்பிரமாணம் அனுமதிக்கிறதா என்று அவர்களை வினவினார். பிலிப் மொழிபெயர்ப்பின் புதிய ஏற்பாடு அங்கு மிகுந்த அமைதி இருந்தது. என்று சேர்த்து கூறுகிறது. பின்பு இயேசு அவர்களது மனுஷிகத்தை உணர்ந்து அதிக வருத்தம் அடைந்தவராய் தம்மைச் சூழ்ந்திருந்தவர்களின் முகங்களை கோபத்துடன் பார்த்து. அந்த மனுஷனிடம் உன் கையை நீட்டு என்றார். இங்கு அவர்களது மனதுருக்கத்தின் குறைவை பார்த்து இயேசு கோபமுற்றதாக கூறப்படும். சில தடவைகளில் ஒன்றை காண்கிறோம். பிசாசு பிடித்தவர்களும், சரீர சுகவினத்தோடும் இருந்தவர்களும் ஏதோ ஒரு தீய சக்தியின் பாதிப்பில் இருக்கிறார்கள். என்பதே இயேசுவின் அடிப்படையான மனப்பான்மையாக இருந்தது. ஆவியானவருக்கு விரோதமான ஏதோ ஒரு தீய சக்தி பிசாசுகள் சாத்தான் அழிவும் உருவாக்கும் திறன் இல்லாததுமான ஒன்று நோயாளியை முழுவதும் ஆட்கொண்டதாகவோ அல்லது அவரை சிறிதளவேனும் பாதிப்புக்குள்ளாக்கியதாகவோ காணப்படுகிறது. இயேசு இயற்கையாகவே இந்த சக்திக்கு விரோதியாகவும். அதை எதிர்ப்பவராகவும் இருந்தபடியால் அவர் அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மனுஷனை விடுவிக்க விரும்பினார். மனிதரை கட்டியிருக்கும் அல்லது அடிமைப்படுத்தும் எதையும் இயேசு விரோத்ததால் அவர் குணமாக்கினார். மனிதனின் சரீர குறைபாடுகளுடன் ஏதோ ஒரு வழியில் அந்தகார சக்திகள் சம்பந்தப்பட்டவை என்பதை அவர் உணர்ந்திருந்தார். அந்த குறைபாடுகளை எதிர்கொள்வதன் மூலம், அவர் பிசாசுக்கும் அவனது இராஜ்யத்துக்கும் தமது விரோதத்தை தெரிவித்தார்.

இயேசுவும் பிறருடைய குணமாக்கும் ஊழியமும்

இயேசு, ஜனங்களை இரட்சித்து, சுகப்படுத்தி, தேவனுடைய ராஜ்யத்தை கொண்டு வருவதற்காக மட்டும் வரவில்லை, தேவனுடைய ஆட்சியின் கீழ் மக்களைக் கொண்டு வருவதில் பிறரும் பங்கு வகிக்கும் வகையில், அவர்களுக்கும் இந்த குணமாக்கும் ஊழியத்தை கொடுப்பதற்காகவும் வந்தார். திருச்சபையாகிய நாம் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பே, அனைத்து சிருஷ்டிக்கும்

நற்செய்தியை அறிவிக்கவும், அச்செய்தி எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் குணமாக்கும் அடையாளங்கள் தொடரவும், அதை உறுதிப்படுத்தவும் தக்கதாக நியமிக்கப்பட்டிருக்கிறோம். இன்று உலக ஜனத்தொகையின் பாதி அளவு மக்கள் இன்னும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை கேள்விப்படாத நிலையை நாம் காண்கிறோம். எனவே உலகெங்கும் தேவனுடைய ராஜ்யம் சென்றடைவதை நாம் காண விரும்புவோமாயின், இயேசுவின் குணமாக்கும் ஊழியம் பிறரிடம் (சபையிடம்) திட்டமாக மாற்றப்படுவதும், இன்றைக்கு அது வல்லமையாக பயன்படுத்தப்படுத்தப்படுவதும் அதிக அவசியமாகும்.

ஊழியத்தின் மாதிரி காண்பித்தல்

இயேசு, தமது குணமாக்கும் ஊழியத்தின் போதிய அளவு மாதிரி காண்பித்த பின்னரே அதை இடம் மாற்றம் செய்தார். முதலில் தம்முடன் கூட இருக்கும்படியாகவும், பின்னர் குணமாக்க அனுப்பப்படும்படியாகவும், அவர் பன்னிரண்டு சீஷரை தெரிந்தெடுத்து அழைத்தார். முதலில் அவர்கள், இயேசுவின் குணமாக்கும் மாதிரியை கவனிப்பதன் மூலமே கற்றுக்கொண்டனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் இயேசுவோடு வாழ்ந்தபோது, குணமாக்குதலில் அடங்கியுள்ள வல்லமை, சந்தோஷம், பொறுப்பு, சிரமம், மற்றும் சோர்வு ஆகியவற்றை கண்டார்கள். அவருடைய உதாரணத்திலிருந்து அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை சரியாய் கற்றுக்கொண்டார்கள். தம்முடைய சீஷர்கள் கவனிக்கையில் ஊழியம் செய்வதும், தாம் அவர்களை கவனிக்கும்போதோ அல்லது அவர்கள் அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் வகையிலோ அவர்களை ஊழியம் செய்ய வைப்பதும், பின்னர் அவர்களை தாங்களாகவே செய்ய விடுவதும் இயேசுவின் தெளிவான முறையாக இருந்தது.

ஊழியத்தை கொடுத்தல்

இயேசு இந்த ஊழியத்தை அர்ப்பணிப்புள்ள மக்களிடம் கொடுத்தார். பன்னிருவரும் இயேசு என்ற நபருக்கு தங்களை அர்ப்பணிக்க அழைக்கப்பட்டிருந்தனர். கடினமான, உயர்ந்த அந்தஸ்துள்ள, தீவிரமான போன்ற பல்வேறு பின்னணியங்ளிலிருந்து வந்தஒரு பலதரப்பட்ட குழுவாகவே அவர்கள் இருந்தனர். ஆனால் ஒருவருக்கொருவர் இருந்த அர்ப்பணிப்பின் மூலம் இயேசு அவர்களை சீஷர்களாக உருவாக்கினார். அவர்களுக்குள் குணத்தையும், தலைமைத்துவத்தையும் அவர் வளரச் செய்தார் என்றாலும், அவர்களை அனுப்பும்போது, அவர்கள் எவ்விதத்திலும் பூரணராகவில்லை. அதுதான் பயிற்சியில் காணப்படும் ஊறுபாடாகும். இயேசு செய்ததை, பன்னிருவரும் செய்த பின்பு அனுப்பப்பட்ட எழுபது பேர், பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்ட அர்ப்பணமுள்ள மக்களின் ஒரு அகன்ற குழுவாக காணப்படுகிறது. இதன் பின்னர், இயேசு இந்த சுகமாக்கும் ஊழியத்தை சபைக்கு கொடுத்துவிட்டார் என்றும், ஆவியில் நிறைந்த எந்த ஒரு விசுவாசியும் குணமாக்க முடியும் என்றும் தெளிவாகிறது.

ஊழியத்திற்கு பொறுப்பளித்தலும், வரம் அளித்தலும்

இயேசு, பொறுப்பளித்ததன் மூலமும், வரம் அளித்ததன் மூலமும் இந்த ஊழியத்தை இடம் மாற்றம் செய்தார். அவர் குணமாக்குதலின் மாதிரியை காண்பித்த பின்னர், அவர் தம்முடைய சீஷர்கள் போய் குணமாக்கும்படி அவர்களுக்கு பொறுப்பளித்து, அதை செய்வதற்கான வல்லமையையும் கொடுத்தார். ஆகவே, அவர்கள் அவருடைய அதிகாரத்திலும் (பொறுப்பளித்தல்), அவருடைய வல்லமையிலும் (வரம் அளித்தல்) செயல்பட்டனர். இயேசு இப்பூமியை விட்டு சென்றது முதல், அவருடைய ஊழியத்தின் பங்களித்தல் எல்லா விசுவாசிகளுக்கும் உண்டு, அந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கான வல்லமையால் நம்மை நிரப்பும்படிக்கு பரிசுத்த ஆவியின் வரமும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது.

ஊழியம் செய்வதற்கான போதனைகள்

இயேசு சில போதனைகள் தந்தார். அவர்கள் எங்கே, யாரிடம் செல்ல வேண்டும் என்று அவர்களுக்கு அவர் கூறினார். (அவர் இப்பொழுதும் ஒவ்வொரு நாளும், கேட்கின்ற விசுவாசிகளின் உள்ளங்களில் தமது ஆவியின் மூலம் இப்படிச் செய்கிறார்.). பெற்றுக் கொள்பவர்களுக்கு தேவனுடைய இராஜ்யத்தை அறிவிப்பது, தாங்கள் இலவசமாக பெற்றதால், தேவை எத்தகையதாக இருப்பினும்,

குணமாக்குதலை இலவசமாக கொடுப்பதும் அவசியமாக இருந்தது. தேவனை நம்புவதும், பாதையின் வெளிச்சம் பெறுவதும், நோயாளிகளை சுகப்படுத்துவதுமான ஒரு எளிதான வாழ்க்கைமுறை உருவாக்கப்பட்டது. அவர்களை ஏற்றுக்கொள்ளும் மக்களின் உபசரிப்புக்கும் ஆதரவுக்கும் தங்களை ஒப்புக்கொடுக்கவும், தேவனுடைய இராஜ்யத்தை ஏற்க மறுத்தவர்களிடம் தங்கள் நேரத்தை வீணாக்குவதை தவிர்க்கவும் வேண்டியிருந்தது. உபத்திரவம் எதிர்பார்க்கப்பட்டபடியால், அவர்கள் ஞானமாக செயல்படவும், தங்கள் குற்றமின்மையை காத்துக் கொள்ளவும் வேண்டியிருந்தது. ஒவ்வொரு சூழ்நிலையிலும், நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரே நமது உதவியாளராகவும் போதகராகவும் இருக்கிறார்.

ஊழியத்திலுள்ள இடையூறுகள்

இந்த ஊழியம் எவர்களுக்குக் கொடுக்கப்பட்டதோ அவர்கள் இடையூறுகளை சந்தித்தார்கள். அவர்களின் முதல் பயணம் வெற்றியுள்ளதாகவும், சந்தோஷம் தருவதாகவும் அமைந்தது. இயேசுவின் நாமத்தில் பிசாசுகளும் கூடஅவர்களுக்குக் கீழ்படிந்தன. இருப்பினும், அவர்கள் விரைவில், தங்களது பெருமையினாலும், மாம்சீகத்தினாலும் இடையூறுகளை சந்தித்தார்கள். உ.ம்., இயேசுவின் நாமத்தில் குணமாக்கிய பிறரை தடுக்க முயற்சித்தார்கள். அவர்கள் அவிசுவாசத்திற்குள் பின்வாங்கினார்கள், இயேசு அவர்களை கண்டிக்கவேண்டியிருந்தது. ஆதி திருச்சபையும், கொடிய உபத்திரவத்தை, விசேஷமாக அந்நாட்களில் இருந்த மதத் தலைவர்களிடமிருந்து எதிர்ப்புகளை சந்தித்தது.

ஊழியத்தில் ஆவியின் அபிஷேகம்

அவரைப் பின்பற்றியவர்களின் தன்னுறுதியுடன் செயலாற்றும் விசுவாசம், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலாலும், அபிஷேகத்தாலும் ஊக்குவிக்கப்பட்டு, அதன் மூலமே சுகமாக்குதலின் ஊழியம் நடைபெற்றது. குணமாக்குதலின் ஊழியம் எவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதோ, அவர்களால் நிகழ்த்தப்பட்டதன் முக்கிய அம்சங்கள், விசுவாசமும், ஆவியின் அபிஷேகமுமே, உ.ம்., பேதுருவும் யோவானும் அலங்கார வாசலில் இருந்த சப்பாணியை சுகமாக்கியபோது, அந்த மனிதனை பூரணமாக்கியது தங்களுடைய சுயபக்தி அல்ல என்றும், இயேசுவின் நாமமும், அந்த நாமத்திலுள்ள விசுவாசமுமே என்றும் பேதுரு விவரித்தான். விசுவாசமுள்ள ஜெபமே பிணியாளியை இரட்சிக்கும். ஆகவே தன்னுறுதியுடன் செயலாற்றும் விசுவாசம் என்பது. எந்த சான்றோ அல்லது சாட்சியோ இல்லாதிருப்பினும் உறுதியான நம்பிக்கை வைப்பது என்றும், உண்மையுடனும், மனப்பூர்வமாகவும் அதை சார்ந்து நிற்கும் உறுதி என்றும் பொருள்படும். இந்த குணமாக்குதலில் வேறு கொள்கைகள் வெளிப்படையாக காணப்பட்டாலும் (வார்த்தை பேசினார்கள், கைகளை வைத்தார்கள்). அனைத்துமே ஆவியானவரின் வழிகாட்டுதலினாலும், அபிஷேகத்தினாலுமே நிகழ்ந்தன. இதன் விளைவாக, சுகத்தை பெறுபவரிலோ, குணமாக்குபவரிலோ, விசுவாசம் ஊக்கவிக்கப்பட்டது. மேலும் அவர்கள் எப்பொழுதும் குழுவாகவே ஊழியம் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊழியத்தின் விரிவாக்கம்

குணமாக்குதலின் ஊழியம் ஒருவரிடத்திலிருந்து அநேகரிடம் பரவி விரிவாக்கப்பட்டதால், உலகளவிலும் அண்ட சராசரங்களிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. இயேசு முதலில் பன்னிருவரையும், பின்னர் எழுபது பேரையும் அனுப்பியபோது, மக்கள் சுகமாக்கப்படக்கூடிய நிலையை மிக அதிகமாக்கியது மட்டுமல்ல, இயேசு தாமே கூறியவாறு, சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதையும் கண்டார். (லூக்கா 10:18). அந்தகாரத்தின் இராஜ்யம் தோல்வியுற்றது. நோயாளிகளை சுகப்படுத்துவரின் எண்ணிக்கையைப் பொறுத்தே, தேவனுடைய இராஜ்யத்தின் விரிவாக்கமும் அமையும். ஆதி திருச்சபையில், இதுவே சுவிசேஷப்பணியின் மிகுந்த பலனளிக்கும் முறையாக இருந்தது. இந்த வழியிலேயே அவர்கள் உலகத்தை தலைகீழாய் மாற்றி, ரோம சாம்ராஜ்யத்தையே கைப்பற்றினார்கள். முழு பட்டணங்கள் இயேசுவிடம் திரும்பின. பொருளாதாரமும் சமுதாயமும் மாறின, உபத்திரவங்களும் ஆரவாங்களும் எழுந்தன. திருச்சபைகள் நாட்டப்பட்டன. இவை அனைத்தும், குணமாக்கும் ஊழியத்தின் தொடர்ச்சியான விரிவாக்குதலின் நிமித்தமே நிகழ்ந்தன.

குணமாக்கும் ஊழியம் இன்று

குணமாக்கும் ஊழியம் இன்றைக்கும் பொருத்தமானது. நாங்கள் இங்கு குறிப்பிட்டுள்ள வசனங்கள் இந்த ஊழியம் இன்றைக்கும் பொருத்தமானது என்று காண்பிப்பதால், அதை நீங்கள் இப்பொழுதே, அப்பியாசப்படுத்துங்கள். இயேசுவும், அப்போஸ்தலரும் செய்ததை நீங்கள் செய்ய ஆரம்பிக்கவேண்டும் என்பதே எங்களுடைய பாரம், ஏனெனில் அதைத் தான் நீங்கள் செய்யும்படி எதிர்பார்க்கப்படுகிறீர்கள். நாம் குணமாக்குதலைக் குறித்து படிக்க நமக்கு உரைக்கப்படவில்லை. எனினும், உங்கள் விசுவாசத்திற்கும் ஊழியத்திற்கும் ஒரு வேதாகம அடிப்படையை இந்த பாடத்திட்டம் கொடுக்கிறது. நாம் மக்களை சுகமாக்க பொறுப்பளிக்கப்பட்டும், வல்லமையால் நிரப்பப்பட்டும் இருக்கிறோம். இது தான் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அப்போஸ்தலர் நடபடிகள்: ஒரு முன்னுரை

ஆதி திருச்சபை ஏன் வளர்ச்சி அடைந்தது? தேவன் தம்முடைய சபையை வளர்த்த விதத்தை காண்பிக்கும் மாதிரி ஏதாவது உண்டா? அடையாளங்களும் அற்புதங்களும் ஏதேனும் பங்கு வகிக்திருக்கக் கூடுமா? இத்தகைய கேள்விகளுள் சிலவற்றிற்கு பதில் காண முடியுமா என்று பார்ப்போம். அப்போஸ்தலர் நடப்படிகள், புத்தகம் அடிப்படையாக ஆறு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும், அப்:1:8ன் நிறைவேறுதலாக, எருசலேம் துவங்கி ரோமாபுரி வரைக்கும், ஒவ்வொரு படியாக முன்னேறி செல்கிறது. ஆவியானவரின் ஊழியம் எருசலேமில் துவங்குகிறது, பின்னர் யூதேயாவுக்கும் சமாரியாவுக்கும் தொடர்ந்து புறஜாதியார் மத்தியிலும் (யூதர் அல்லாதோர்), பின்னர் ஆசியாவுக்கும், ஐரோப்பாவுக்கும், இறுதியான ரோமபுரிக்கும் சென்று எட்டுகிறது. சாத்தானின் அதிகார எல்லைக்குள் தேவனுடைய ஆட்சியை கொண்டுவருவதற்கென பரிசுத்த ஆவியானவரால் வல்லமை அருளப்பட்ட தேவ ஜனத்தின் கதையை விவரிப்பதே அப்போஸ்தல நடபடிகள் ஆகும். புதிய ஏற்பாட்டில், லூக்கா பரிசுத்த ஆவியின் இறையியல் வல்லுநர், எனவே வல்லமைதரும் தேவ ஆவியானவரே, சபையை, தன்னுடைய எல்லையை கடந்து, தேவன் விரும்புவற்றை செய்யவும், அவர் விரும்புவது போல் மாறவும் செய்கிறார் என்று அவ்வப்போது தன்னுடைய வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் விரும்புகிறார். அப்போஸ்தலர் நடபடிகளில் திருச்சபையின் வளர்ச்சியை புரிந்து கொள்ளுதலின் ஆதாரம் பரிசுத்த ஆவியானவரே.

வல்லமையின் சுவிசேஷபணி-அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம்

லூக்கா, தேவன் செயல்படும் விதத்தின் மாதிரி ஏதேனும் விட்டுச் சென்றிருக்கிறாரா, என்று பார்க்க, அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தை இப்போது நோக்குவோம் இங்கு நான் காண்கிறது என்னவென்றால் வல்லமையின் சுவிசேஷப்பணி என்று நாம் அழைக்கும் ஒன்றாகும். இது இயேசுவானவர் செய்யவும் கற்பிக்கவும் துவங்கிய எல்லாவற்றையும் விவரிக்கும் தனது சுவிசேஷத்தின் ஒரு இணை நூலாக இருக்கிறது என்று சொல்லி லூக்கா (அப்-2) ஆரம்பிக்கிறார். இப்போது லூக்கா, இயேசுவின் செய்கைகளையும், போதனைகளையும் விவரிக்கும் கதையை, பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்ற சீஷர்களைக் கொண்டு தொடர்வதாக தெரிகிறது. (பார்க்க: வ.5) வசனங்கள் 6-7-ல் காண்கிறது போல, சீஷர்கள் இன்னமும் அவருடைய இராஜ்யத்தைக் குறித்து சரியாக புரிந்துகொள்ளவில்லை. அப்போஸ்தலர் நடபடிகளின் தொடர்ச்சிக்கு முக்கியமான காரணம் 1:8லேயே உள்ளது. பின்னர் இயேசு, தமது இரண்டாம் வருகையின் வாக்குத்தத்தத்துடன் அவர்களை விட்டு பரமேறி செல்கிறார்.

பெந்தேகொஸ்தேக்கு முன்பு இருந்த வல்லமை பெறாத குழுவையும், பெந்தேகொஸ்தேக்கு பின்பு இருந்த வல்லமை பெற்ற குழுவையும், வித்தியாசப்படுத்தி காண்பிப்பது போல லூக்காவின் ஆரம்பம் இருக்கிறது. முதலாம் அதிகாரத்தில் காணப்படும் இந்தக் குழு, பழைய ஏற்பாட்டு மாதிரியைப் பின்பற்றியே காரியங்களைச் செய்கிறதை பார்க்கிறோம். யூதாவின் இடத்தில் ஒருவரைத் தெரிந்தெடுக்க பழைய ஏற்பாட்டில் தேவனுடைய சித்தத்தை அறிய பயன்படுத்தப்படும். ஊரீம், தும்மீம் முறையை நினைவுகூர்ந்து அவர்கள் சீட்டு போடுகிறதை கவனியுங்கள் ஆவியானவரின் வருகைக்குப் பின்னர், ஒருவர்தெரிந்தெடுக்கப்பட வேண்டிய சூழ்நிலையில், இவைகள் ஒன்றும் நிகழவில்லை. (பார்க்க: 6:1-6). இரண்டாம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரின் வருகையை குறித்த முழு விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

திருச்சபையின் சுவிசேஷ வளர்ச்சியை விளைவித்த, குறைந்தது **பத்து அடையாள நிகழ்வுகள் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் உள்ளன**. அவைகள் இங்கே குறிக்கப்பட்டுள்ளன.

1.	**பேசும் வரங்கள்** உதாரணம் அந்நிய பாஷைகள் -2:4 அந்நிய பாஷைகள் -10:44 தீர்க்கதரிசனம்(?) -13:1 அந்நிய பாஷைகள், தீர்க்கதரிசனம் -19:1-7	இவைகள் நான்கு முறை நிகழ்கின்றன (அவைகளுள் முன்றில் திருச்சபை வளர்கிறது) விளைவு 3,000 பேர் சேர்க்கப்பட்டனர்-2:41 விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் -10:47 யோவான் ஸ்நானகனின் சீஷர்களின் மனமாற்றம் -19:7
2.	**தரிசனங்கள்** உதாரணம் கொர்நேலியு -10:1 பேதுரு – 10:9 பவுல், மக்கெதோனியா தேசத்தான் - 16:8 பவுல் - 18,9	நான்கு நிகழ்ச்சிகள் எழுதப்பட்டுள்ளன விளைவு விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர் -10:47 ஐரோப்பிய திருச்சபைகள் கொரிந்து சபை
3.	**தீய சக்தியை எதிர்கொள்ளுதல்**	13:4-ல் பவுலுக்கும் எலிமாசுக்கும் இடையே ஏற்பட்ட ஒன்று குறிக்கப்பட்டுள்ளது அதன் விளைவு-அதிபதி விசுவாசித்தான்.
4.	**மரித்தோர் உயிரோடு எழுப்பப்படுதல்** உதாரணம் தொற்காள் - 9:36 ஐத்திகு – 20:9	மரித்தோர் ஜீவன் பெற்ற இரண்டு சம்பவங்கள் எழுதப்பட்டுள்ளன. விளைவு அநேகர் விசுவாசித்தார்கள் -9:42
5.	**அற்புதங்கள்** (குறிப்பாக) உதாரணம் அனனியா, சப்பீராள்-5:1-11 ஆவியானவர்பிலிப்பை கொண்டு போய்விட்டார் 8:39 பவுல் குருடாக்கப்பட்டான் - 9:1-9அ எலிமாஸ் குருடாக்கப்பட்டது - 13:11 பவுல் கல்லெறியப்பட்டான், எழுந்தான்- 14:19-23 விரியன்பாம்பு பவுலை கடித்தது - 28:3-10	ஆறு முறை இவை நிகழ்ந்தன விளைவு பயம்-5:12 அதிபதி விசுவாசித்தான்-13:12 சீஷர்கள் -14:21 சபை ஸ்தாபிக்கப்பட்டது - அப்போஸ்தலர் நடபடிகளில் குறிக்கப்படவில்லை. ஆனால் திருச்சபை வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

6.	**குணமாக்குதல்** (குறிப்பாக) உதாரணம் சப்பாணி -3:1 பிணியாளிகளும் அசுத்தஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் -5:16 பவுலின் கண்பார்வை சீராக்கப்படுதல் -9:1-9அ ஐனேயாவின் திமிர்வாதம் பேதுருவால் குணமாக்கப்படுதல்-9:32:35 சப்பாணி-லீஸ்திரா- 14:8 பிசாசு துரத்தப்படுதல்-16:16 புமிலியுவின் தகப்பன்-ஜீரம், இரத்தபேதி-28:3-10	இவைகளில் ஏழு எழுதப்பட்டுள்ளன விளைவு 5,000 பேர் -4:4 குணமாக்கப்பட்டார்கள் -5:16 லித்தாவிலும்சாரோனிலும் குடியிருந்தவர்கள் எல்லாரும் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்-9:35 சீஷர்கள் - 14:21 சகோதரர்-16:40 தீவிலிருந்து எல்லா வியாதிக்காரரும் குணமாக்கப்பட்டார்கள். திருச்சபை வரலாறுபடி சபை உருவானது
7.	**கைகளை வைத்தல்** உதாரணம் ஏழுபேர் தெரிந்தெடுத்தல்-6:6 சமாரியா, ஆவியை பெறுதல் 8:17 பவுலுக்கு அனனியா-9:17 பவுலுக்கும் பர்னபாவுக்கும் சபை -13:1-3	நான்கு முறை இது நிகழ்கிறது விளைவு அடையாளங்களும் அற்புதங்களும், ஸ்தேவான்-6:8, அடையாளங்கள், பிலிப்பு-8:6. சீமோன் வருதல்-8:24
8.	**உணர்வு நிகழ்வுகள்** உதாரணம் பலத்த காற்று போல முழக்கம், அக்கினிமயமான நாவுகள்-2:4 பேதுருவுக்கு கதவு திறவுண்டது 12:8 பூமி அதிர்ச்சி, கட்டுகள் கழன்றன, கதவுகள்திறவுண்டது-6:25:88	இது மூன்று முறை நிகழ்கிறது. விளைவு 3,000 பேர் இரட்சிக்கப்படுதல்-2:41 சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்படுதல் -16:34
9.	**அடையாளங்களும் அற்புதங்களும்**	இவைகள் ஒன்பது முறை நிகழ்கின்றன: மேலும் இவை அடிக்கடி நிகழ்ந்தன. லூக்கா இவைகளை, இயேசு தம்முடைய சீஷர்களுடன் இருந்தபோது செய்த காரியங்கள் என்று குறிப்பிடுகிறார் (2:22-ல்) குணமாக்கப்படுதல், பிசாசுகளைத் துரத்துதல், இயற்கையோடும், உணவோடும் சம்பந்தப்பட்ட அற்புதங்கள், மரித்தோரை உயிரோடு எழுப்புதல், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்படுதல் போன்றவை இவற்றுள் அடங்கும்.

	<u>உதாரணம்</u> சீஷர்களால் -2:43 தேவ வல்லமை பலத்த கிரியைகளில் வெளிப்பட்டது-4:33 அப்போஸ்தலரின் கரங்களாலே-5:12 ஸ்தேவான் -6:7 பிலிப்பு-8:6 கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது 11:20-21, 13:11 பரிசுத்த ஆவியால் நிறைந்து 11:24-25 ஸ்தேவான்-6:8 பவுல், பர்னபா-14:1-7 எபேசுவின் விசேஷித்த அற்புதங்கள், போதனை -19:11	<u>விளைவு</u> தினமும் சபையில் சேர்க்கப்படுதல்-2:47 திரளானவர்கள் சேர்க்கப்படுதல்-5:14 சமாரியா சபை-8:12 அநேக ஜனங்கள்விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்-11:21 அநேகர் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்-11:24 விசுவாசிகள்-14:4,20 இந்த இரண்டு ஆண்டுகளில் வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள எல்லா சபைகளும் உருவாக்கப்பட்டன.
10.	**தேவதூதனின் சந்திப்பு** <u>உதாரணம்</u> பிலிப்பு -8:26 பேதுரு -12:8 பவுல் -27:21	இவைகளில் மூன்று குறிப்பிடப்பட்டுள்ளன <u>விளைவு</u> மந்திரி ஞானஸ்நானம் பெற்றான் - 8:38

போதனை பிரசங்கத்தோடுள்ள தொடர்பு

அடையாளங்களையும் அற்புதங்களையும் குறித்து இன்னொரு முக்கியக் கருத்து தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. அப்போஸ்தலர் நடபடிகளில், அடையாளங்களும், அற்புதங்களும், பிரசங்கம் மற்றும் சபை வளர்ச்சியோடு இணைந்து பதினான்கு முறைகள் வருகின்றன. கீழ்க்காணும் பட்டியலை நாம் கூர்ந்து கவனிப்போம்.

அடையாளங்களும் அற்புதங்களும்	பிரசங்கம்	சபை வளர்ச்சி
2:4	2:14	2:41
3:1	3:12	4:4
8:6	8:6	8:12
8:26	8:35	1:38
10:3,12,44	10:34	10:47
11:20-21	11:20	11:21
11:24-25	11:25	11:246
13:1-3		ஆசியா, ஐரோப்பிய சபைகள்
14:1-7	14:3	14:4,20

14:8-18	14:15	14:21
16:16	16:14	16:40
16:25	16:31	16:34
18:1	18:1-18	18:18
19:11	19:10	ஆசியாவில் சபைகள்

குறைந்தபட்சம் இரண்டு முக்கியமான காரியங்களை குறிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. 1. இருபது இடங்களில் சபை வளர்ச்சியுடன் அடையாளங்களும் அற்புதங்களும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. 2. ஓரே ஒரு இடத்தில் மாத்திரம் பிரசங்கம் செய்வது சபை வளர்ச்சியோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் நடபடிகளின் மேல் செய்யப்பட்ட இந்த ஆய்வு, சுவிசேஷம் பரவுவதற்கு முக்கியமானதும் மையப் பகுதியுமானதாக அடையாளங்களும் அற்புதங்களும் செயல்பட்டன என்பதை நமக்கு தெரிவிக்கிறது. இது தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா? நிச்சயமாக இல்லை. சுவிசேஷத்தை பரப்புவது முடுக்கிவிடப்படுவதற்காக, பல நூற்றாண்டுகளாக ஆவியானவர் கிரியை செய்ததுபோல, இன்றும் சபைகளில் பரிசுத்த ஆவியானவர் ஈடுபாடு கொள்ள இன்றும் விரும்புகிறார்.

நிருபங்கள் - நிகழக்கூடிய தோல்விகள்

புதிய ஏற்பாட்டின் பக்கங்கள், இயேசுவும் அவரது சீஷர்களும் செய்த ஊழியத்தில் நடந்த அற்புதங்களால் நிறைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், நான்கு மனிதர்கள் சுகத்தை பெற்றுக்கொள்ளாத நிகழ்ச்சிகளும் உள்ளன. அவர்கள் சுகம் பெறாததற்கு எந்த காரணமோ, நோக்கமோ குறிப்பிடப்படவில்லை. பவுல் இதற்கு விதிவிலக்கு (கலா.4:13-16). அவைகள்:

1. பவுலுக்கு இருந்த கண் பாதிப்பு (கலா.4:13-16),
2. பவுல் மிலேத்துவில் சுகவீனமாய் விட்டு வந்த துரோப்பீமு (2 தீமோ.4:20),
3. வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாய் இருந்த எப்பாப்பிரோதீத்து (பிலி. 2:25-30) - தேவனுக்கு இரக்கம் இருந்தது, ஆனால் அவன் சுகம் பெற்றதாக அர்த்தமாகுமா?
4. வயிற்றிற்காகவும், அடிக்கடி நேரிடுகிற பெலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சரசம் குடிக்கும்படி பவுல் அறிவுரை கூறிய தீமோத்தேயு. (1தீமோ. 5:23).
5. பவுலைக் குறித்து விவாதத்திற்குரிய இன்னும் ஒரு வேத பகுதியுண்டு. அதைக்குறித்து பவுல் தானே மாம்சத்தில் உள்ள முள் என்று 2கொரி. 12:7-10-ல் எழுதுகிறார். இந்த வேத பகுதி வழக்கமாக கலாத்தியரில் உள்ள வேத பகுதியோடு (கலா. 4:13-15) தொடர்புபடுத்தி கூறப்பட்டுள்ளது. முள் என்பது பவுல் ஒருபோதும் சுகம் பெறாத சரீர வியாதி என்று கருதலாம். இருப்பினும், இது காணப்படுகிற வேத பகுதி, முள் என்பது அவருக்கு மற்றவர்களிடமிருந்து வந்த எதிர்ப்பு என்பதைக் குறிப்பதைப் போல தோன்றுகிறது என்றாலும், இந்த முழு பகுதியும் மேலும் ஆராயப்படவேண்டியதாய் உள்ளது.

ஆவிக்குரிய யுத்தம் - ஒரு முன்னுரை

விளக்கம்: ஆவிக்குரிய யுத்தம் என்பது. ஆவிக்குரிய எல்லைகளில் தேவனுக்கும் அவரது சிருஷ்டிக்கும், வானங்களிலும் பூமியின் மேலுள்ள அவரது ஆளுகைக்கும் எதிராக போரிடும் அந்தகார சக்திகளின் (சாத்தானுடைய வல்லமைகள்) சண்டையாகும். (பார்க்க: எபே.6:12)

தேவனுடைய தூதர்களில் ஒருவனாகிய லூசிபர், நாம் தற்போது பிசாசுகள் என்று அழைக்கும் தூதர்களுடன் இணைந்து தேவனுடைய பதவி,ஆகியவற்றைப் பெற தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்த பொழுது, ஆவிக்குரிய யுத்தம் ஆரம்பித்தது. ஏசாயா-42:8-ல் தேவன் தம்முடைய தீர்க்கதரிசி மூலம் நான் கர்த்தர், இது என் நாமம், என் மகிமையை வேறொருவனுக்கும், கொடேன் என்று தெளிவாக கூறுகிறார்.

ஆனால் சாத்தான் பெருமையினிமித்தம் தேவனுடைய இடத்தை பிடிக்கவும் தேவனைப் போல உயர்த்தப்படவும் விரும்பினான். என்று நாம் பார்க்கிறோம். அவனுயை பாவம், கலகத்தை விவரிக்கும் இரண்டு வேத பகுதிகள் உண்டு. 1. ஏசாயா 14:10-15, 2. எசேக்கியேல் 28:12-17. இந்த வார்த்தைகள் பாபிலோன், தீரு ராஜாக்களுக்கு எதிராக கூறப்பட்டிருந்தாலும், அது தேவதூதனாகிய வேதம் கூறும் பிசாசாகிய சாத்தானேயன்றி வேறு எவருமில்லை என்பது மிகத் தெளிவாகவும் உருவகமாகவும் கூறப்பட்டுள்ளது. லூக்கா 10:18-ல் இயேசுவும், வானத்திலிருந்து சாத்தான் விழுந்ததை குறிப்பிடுகிறார். யூதா 6:, 2பேதுரு 2:4 ஆகிய வேதபகுதிகள் அவனைப் பின்பற்றினவர்களும் அவனோடுகூட விழுந்ததை கூறுகின்றன. தேவனுடைய தூதர்களுக்கும், அந்தகார சக்திகள் விழுந்துபோன தூதர்கள் அல்லது பிசாசுகளுக்குமிடையில் வானத்தில் நடந்த நிஜ யுத்தத்தை குறித்து தானியேல் 10:13,21, யூதா 9 ஆகியவற்றில் நாம் வாசிக்கிறோம். இதைப் போன்றதொரு எதிர்கால யுத்தத்தை வெளி.12:9 கூறுகிறது.

இந்த ஆவிக்குரிய யுத்தத்தில் மனிதன் எப்படி, எப்பொழுது நுழைந்தான் என்று பார்க்கும்பொழுது அதன் முதல் வேத ஆதாரம் ஆதி.3:16-ல் உள்ளது. அங்கே சாத்தான், சர்ப்பத்தின் வடிவில் மனிதனை ஏமாற்றி வஞ்சித்து, பாவத்தில் விழச் செய்து, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரு பிரிவை கொண்டு வந்தான் என்று பார்க்கிறோம். ஏசாயா 59:1-2ஐ பாருங்கள். ஆதாரப் பூர்வமாக தேவனுக்கும் அவருடைய சிருஷ்டிக்கும் (மனுக்குலம்) எதிரி சாத்தான் ஆவான். அவன் ஒரு போதும் மனந்திரும்ப மாட்டான். கடைசி நியாயத் தீர்ப்பை அடைவான் என்று வெளி. 20:7-10-ல் எழுதப்பட்டுள்ளது.

<u>நம்முடைய எதிரியாகிய சாத்தானைக் குறித்து மனதில் வைக்க வேண்டிய சில முக்கியமான உண்மைகள்:</u>

1. அவன் மோசம் போக்குகிறவன் - ஆதி.3:13
2. அவன் பொய்யன் - ஆதி.3:4, யோவான் 8:44
3. அவன் குற்றஞ்சாட்டுகிறவன் - யோபு 1:11, 2:5, சகரியா 3:1-2, வெளி.12:10
4. அவன் கொல்லுபவன் - யோவான் 10:10, 1பேதுரு 5:8
5. அவன் திருடன் - யோவான் 10:10, மத்.13:19

சாத்தான் தேவனை நேரடியாக தாக்க இயலாதபடியால், தேவனுடைய சாயலாகவும் அவருடைய ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட மனிதரை தாக்க முற்படுகிறான். அவனுடைய தாக்குதலுக்கு எதிராக நம்மை எப்படி காத்துக்கொள்ள முடியும், அவனுக்கு எதிராக எப்படி ஜெயம் பெற முடியும்? முதலில், சாத்தான் மனிதனை பாவம் செய்ய வைத்ததின் விளைவாக அவனை தோற்கடித்தான் என்பதையும், பிசாசை காட்டிலும் அதிக வல்லமை பொருந்திய தேவனிடமிருந்து மனிதனை பிரித்தான் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை சிலுவையில் இரத்தம் சிந்தவும், அதன் மூலம் பாவத்திலிருந்து மன்னிப்பையும்,

வெற்றியையும், பிசாசு, மரணத்தின் மேல் அதிகாரத்தையும் வழங்கவும், அனுப்பினார் என்பது ஒரு நற்செய்தி. கீழ் குறிப்பிட்டுள்ள முக்கியமான வேத பகுதிகளை வாசியுங்கள். 1கொரி. 15:22-26, ரோமர் 5:12,15. மேலும், எபி. 2: 14,15, 1யோ. 3:8. ஆகியவற்றையும் பாருங்கள். இயேசுவின் இரத்ததால் மாத்திரமே இந்த சண்டையில் வெற்றியையும் எதிராளியை தோற்கடிக்கவும் முடியும். இது அவருடைய சுவிசேஷம், அவருடைய வார்த்தை, அவருடைய சாட்சி ஆகியவற்றை பெற்றுக்கொண்டு, நம்முடைய வாழ்க்கையை முழுவதுமாய் அவருக்கு ஒப்புக்கொடுப்பதின் மூலம் இதை நாம் பெற்றுக் கொள்ள முடியும். பார்க்க: வெளி.12:11.

நம்முடைய எதிராளியின் மேல் இயேசுவுக்கு இருக்கும் அதிகாரத்தை அவரது சிலுவை மரணத்தின் முக்கியத்துவத்தோடு தொடர்புபடுத்தி பார்த்தால் கீழ் குறிக்கப்பட்டுள்ள வேத பகுதிகள் நமக்கு தெளிவை கொடுக்கிறது. பிலி. 2:7-11, கொலோ. 1:13-16, மத். 28:18. பிசாசு மற்றும் எல்லா அந்தகார சக்திகளின் மீதும், இயேசு கிறிஸ்துவுக்கு வெற்றி உண்டு என்பதையும் அவர் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம் மாத்திரம் அந்த வெற்றியில் நுழைய முடியும் என்பதையும் இந்த வார்த்தைகள் மேலும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது.

இந்த பாடத்திட்டதில் கிறிஸ்துவில் நாம் யாராய் இருக்கிறோம் என்றும், நாம் கிறிஸ்துவில் இருப்பதால் வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லாஅந்தகார சக்திகளின் மீதும் நமக்கு இருக்கும் அதிகாரத்தையும் ஒரு குறுகிய கண்ணோட்டத்தின் மூலம் தொடர்ந்து பார்ப்போம். **கிறிஸ்துவில்** இருப்பதற்கு தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கீழ் குறிக்கப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்வது அவசியமாய் இருக்கிறது.

1. மறுபடியும் பிறந்து, இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட விதத்தில் ஆண்டவராகவும் இரட்சகராகவும் அறிந்திருக்கிறவர்கள் - யோவான் 3:3-5, யோவான் 5:4-3,18 ரோமர் 10:9-10.
2. மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று பாவங்கள் மன்னிக்கபட்டவர்கள்- அப்.2:38, 1யோ.1:3-9.
3. தேவனுடைய அதிகாரத்திற்கு முழுவதும் ஒப்புக்கொடுத்தவர்கள்- யாக். 4:7, 1பேதுரு 5:6.
4. அவரிலும் அவருடைய வார்த்தைகள் அவர்களிலும் நிலைத்திருக்கிறவர்கள்-1யோ. 2:3-6, யோவான் 15:7.
5. அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள். 1யோவான் 15:7.
6. பரிசுத்த ஆவியினால் நடத்தப்படும், பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். ரோமர் 8:9,14: கலா. 5:24-25, மத். 3:11.

அப்பொழுது, நம்மைக் குறித்து தேவனுடைய வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தங்களின்படி, நம்முடைய ஒத்திசைவை கிறிஸ்துவுக்குள் நாம் யார் நாம் காணவும், நம்முடைய சுதந்தரத்தை அறியவும் முடியும். (2கொரி. 1:20). **கிறிஸ்துவுக்குள்** நாம் யார் என்பதைக் குறிக்கும் சில முக்கியமான வேத பகுதிகளை நாம் பார்க்கலாம். (குறிப்பு-ஒரு முழுமையான விளக்கத்தையும், புரிந்து கொள்ளுதலையும் பெறுவதற்கு **கிறிஸ்துவுக்குள் அவருக்குள்** என்றும் **கிறிஸ்து மூலம் அவர் மூலம்** என்றும் வரும் வேத பகுதிகளை நீங்களே படியுங்கள். இது உங்களுக்கு மிகுந்த ஆவிக்குரிய வளமுட்டும் ஆசீர்வாதமாக அமையும் அல்லது புத்தக எண்-12-ல் படியுங்கள்.

a. புது சிருஷ்டி - 2கொரி. 5:17.
b. தேவனுடைய பிள்ளைகள் - யோ. 1:12, ரோமர் 8:14-16.
c. சுதந்திரம், உடன் சுதந்திரரும் - ரோமர் 8:17, யாக். 2:5.
d. தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம் - 1பேதுரு 2:9.
e. பரிசுத்த ஆவியின் ஆலயங்கள்- 1கொரி. 3:16, 6:19-20.
f. சிநேகிதர் - யோவான் 15:15.

g. உடன் வேலையாட்கள் - 1கொரி. 3:9.

h. ஊழியக்காரர் - 2கொரி.3:5-6.

i. போர்ச்சேவகர் - 2தீமோ. 2:3-4.

j. ஜெயிக்கிறவர்கள் - 1யோவான் 4:4, 5:4.

k. முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள் - ரோமர் 8:37:39

நாம் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் நம்முடைய அதிகாரத்தின் நிலையைப் பற்றியும் இந்த அதிகாரத்தை ஆவிக்குரிய போராட்டத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்றும் பார்ப்போம். மத். 28:18-லிருந்து வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் இயேசுக்கு உரியது என்றும், அவர் பிசாசின் துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் செயலிழக்கச் செய்து, சிலுவையின் மேல் அவைகளை வெற்றிசிறந்தார் என்றும் அறிகிறோம். (கொலோ. 2:14-15 எபி. 2:14:15 எழுதப்பட்டுள்ளபடி இது பிசாசை வல்லமையிழக்கச் செய்துள்ளது. ஆதாமின் வீழ்ச்சி துவங்கி, கல்வாரி வரைக்கும், சாத்தான் மரணம் மற்றும் நரகத்தின் திறவுகோலை உடையவனாகவும், நம்மை ஆவிக்குரிய மரணத்திற்குள்ளாக்கி நரகத்திற்கு அழைத்துச் செல்ல அதிகாரம் உடையவனாகவும் இருந்தான். ஆனால் இயேசு, அந்த திறவுகோலை மறுபடியும் கைப்பற்றியதின் நிமித்தம் நம்மீதுள்ள பிசாசின் அதிகாரத்தை அழித்துவிட்டார். திறவுகோல் என்ற வார்த்தை அதிகாரத்தைக் குறிக்கும். வெளி. 1:17-18-ல் இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, இப்போது அந்த திறவுகோலை வைத்திருக்கிறார், மேலும் அவர் மரணத்தை ஜெயமாக விழுங்கினார். (பார்க்க: 1கொரி. 15:54-57) யோவான் 12:31 மற்றும் 16:11-ல் இயேசு கூறிய வார்த்தைகளின்படி, சாத்தான் ஏற்கனவே நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டான் (அவனுடைய முடிவு நிர்ணயிக்கப்பட்டது). பிசாசுக்கு இயேசுவில் எந்த பங்கும் இல்லை, ஆதலால் கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் அனைவரும் கூட பிசாசால் தொடப்படுவதில்லை. (யோவான் 14:30, 1யோவான் 5:18) நம்முடைய அதிகாரத்தைக் குறித்து மத். 16:19ன்படி பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ளவைகளை கட்டவும் அவிழ்க்கவும் தக்கதாக பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை இயேசு நமக்குத் தருகிறார். ஆவிக்குரிய போராட்டத்தில் இது, பிசாசின் சத்துவங்கள் மக்களுக்கு விரோதமாக செயல்படாதபடிக்கு அவைகளைக் கட்டுவதையும் அவிழ்ப்பதையும், அவர்கள் மீது தேவனுடைய ஆசீர்வாதங்களை அவிழ்த்துவிடுவதையும் குறிக்கிறது.

கட்டுவதையும், அவிழ்ப்பதையும் கீழ்க்கண்ட முறையில் இன்னும் தெளிவாக விளக்கலாம்.

- **<u>கட்டுவது என்பது:</u>** ஒன்றை கட்டிப்போடுவது அல்லது செயலிழக்கச் செய்வது, அதன் வல்லமையையும் அதிகாரத்தையும் அழிப்பது என்று அர்த்தங்கொள்ளும். நாம் கட்டுவது எவற்றையெனில், பிசாசுகள், வியாதிகள், பிசாசின் தாக்கல்கள் போன்ற பரலோகத்தில் அனுமதிக்கப்படாத காரியங்களை அல்லது ஐந்துகளையோகும். அதோடு கூட புயல்கள், எதிர்மறையானவை, முரண்பாடான சூழ்நிலைகள் போன்ற தேவனுடைய காரியங்களின் ஒழுங்குமுறையில் இடம் பெறாத இயற்கை சூழல்களையும் குறிக்கும்.
- **<u>கட்டவிழ்ப்பது என்பது:</u>** விடுவிப்பது என்று பொருள்படும். இங்கு இரண்டு வெவ்வேறான செயல்படுத்துதல் உள்ளன.
  1. ஒரு வியாதியையோ, ஒரு பிசாசையோ கட்டவிழ்ப்பது, அதாவது அந்த வியாதி அவிழ்ந்து, அந்த நபரின் சரீரத்தை விட்டு வெளியேறும்படி கட்டளையிடுவது.
  2. ஒருவர் மீது குணமாக்குதலையும், சுவிட்சத்தையும், தேவனுடைய ஆசீர்வாதத்தையும் அவிழ்த்துவிடுவது. இந்த நிலையில் பரலோகத்தில் அனுமதிக்கப்படுபவற்றை அவிழ்த்துவிடுகிறோம்.

கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே நமக்குள்ள அதிகாரத்தின் ஆவிக்குரிய நிலையின் நிமித்தமே நாம் இவைகளைச் செய்ய முடியும். (எபே.1:3) மேலும் எபே.2:6,7ல் கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் உன்னதங்களிலே கிறிஸ்துவோடேகூட உட்கார வைக்கப்பட்டுள்ளோம் என்று வேதாகமம் கூறுகிறது. மேலும் எபே. 1:20-22ன்டி இந்த நிலை எல்லாத் துறைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும்,

கர்த்தத்துவத்துக்கும், பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலானது மேலும் பிசாசு இப்போது அவருடைய பாதங்களுக்கும், நம்முடையவைகளுக்கும் கூட கீழ்ப்படுத்தப்பட்டுள்ளான்.

தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும் அவருடைய சித்தத்தையும்,தெய்வீக நோக்கங்களையும் நம்முடைய வாழ்வில் நிறைவேற்ற, நம்முடைய வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் ஆவிக்குரிய போராட்டத்தில் அவருடைய பெயரை பயன்படுத்த, விசுவாசிகளாகிய அவர் நமக்குக் கொடுத்திருக்கும் அனுமதி, நம்முடைய அதிகார வரம்பின் இன்னுமொரு முக்கியமான கொள்கையாகும். யோவான் 14:13-14-ல் இயேசு கிறிஸ்து, அவருடைய நாமத்தை பயன்படுத்த அவரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் நியமிக்கப்பட்டவர்களுக்கும் (விசுவாசிகள்)அவரில் நிலைத்திருக்கிறவர்களுக்கும் அவருடன் தனிப்பட்ட உறவு வைத்திருக்கிறவர்கள். அவருடைய சித்தத்தின்படி கேட்கும்பொழுது, அவருடைய வார்த்தையின் அதிகாரத்தை புரிந்து கொள்பவர்களுக்கும் உரிமை அளித்திருக்கிறார். (வாசிக்க: யோவான் 15:16, 15:7, 1யோவான் 5:14:15. ஒருவருடைய பெயரையும் அவர் கூறியிருக்கிறவைகளையும் நாம் பயன்படுத்துவது அந்த நபரின் பிரதிநிதியாக செயல்படுகிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் எனவே, இயேசுவின் நாமத்தில் நாம் பேசும்பொழுது நம் மூலமாக இயேசு பேசுகிறார் என்று புலனாகிறது. அவருடைய நாமத்தை நாம் பயன்படுத்தும்பொழுது அந்த இடத்தில் அவரை நாம் கொண்டு வருகிறோம், அவருடைய வல்லமை நம் மூலமாக வெளிப்படுகிறது. (பார்க்க: யோவான் 16:24, மத்.12:20).

எச்சரிக்கை: ஆவிக்குரிய போராட்டத்தில் சாத்தானையும், அவனுடைய தீய ஆவிகளையும் எதிர்க்கவோ தோற்கடிக்கவோ, வல்லமையும் அதிகாரமும் நமக்குள்ளும், நம்மிடத்திலும் இல்லை என்பதை உணர்ந்து கொள்வது அவசியம் (யோவான் 15:5). இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களுக்கு மட்டுமே இந்த அதிகாரம் இருக்கிறது.

வேதாகமத்தில் இது சம்மந்தப்பட்ட இரண்டு நிகழ்வுகளை நாம் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவை தனிப்பட்ட விதத்தில் அறியாமல், அவருடைய நாமத்தில் அதிகாரத்தை பயன்படுத்த முயற்சித்ததன் விளைவாக, தங்களுக்குத் தாங்களே துன்பத்தையும் அழிவையும் வருவித்துக் கொண்டார்கள். மத்.7:22-23-ல் பொதுவாக ஒரு நிகழ்வு கூறப்பட்டுள்ளது. மற்றொரு குறிப்பிட்ட நிகழ்ச்சி அப். 19:13-16-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கே, ஒரு மனிதனிடமிருந்து பிசாசுகளைத் துரத்த முயன்ற ஸ்கேவாவின் ஏழு மகன்களைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.

ஆனால், அவருடைய எல்லா சீஷர்களுக்கும் இயேசு சத்துருவின் எல்லா வல்லமையின் மீது அதிகாரத்தையும், அவர்களை ஒன்றும் சேதப்படுத்தாது என்ற வாக்குத்தத்தத்தையும் கொடுத்திருக்கிறார். (லூக்கா 10: 17-20). அவருடைய பணியை செய்வதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் அவர்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ளதை வசனம் 20-ல் நாம் வாசிக்கிறோம்.

தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தையும் வல்லமையையும் அறிந்து கொள்ளுங்கள் 2தீமோ. 3:16:17 எதிராளிக்கு எதிராய் யுத்தம் செய்யும்பொழுது அவருடைய வார்த்தையை பயன்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவரால் கற்றுக்கொள்வதும், வழிநடத்தப்படுவதும் மிகவும் அவசியம். (யோவான் 14:26, 16:13)

எதிராளி நம்மை தாக்க முயற்சிக்கும் சில தந்திரமான வழிகள் என்ன? சிலுவையில் நமக்காக ஏற்கனவே பெற்ற வெற்றியில் நடப்பதும், அவனை தோற்கடிப்பதும், பிசாசினுடைய வழிகளை ஒன்றுமில்லாமல் செய்து நம்மை காத்துக்கொள்வதும் எப்படி?

முதலாவதாக, கிறிஸ்தவர்கள் சந்திக்கும் பிசாசின் தாக்குதல்கள் மற்றும் தோல்விகளில் பெரும்பாலானவை தெரிந்திராத நிலையில் இருப்பதாலும், ஆயத்தம் அற்ற நிலையில் இருப்பதாலும், தேவனைத் தவிர பிற காரியங்களுக்குத் தங்கள் வாழ்வில் முக்கியத்துவம் தந்துவிடுவதாலும், இவற்றின் நிமித்தம் சோதிக்கவும், ஏமாற்றவும், துன்புறுத்தவும், அலைக்கழிக்கவும் பிசாசுக்கு இடம் கொடுப்பதின் மூலமே ஏற்படுகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும். மாறாக நாம் தெளிந்தத புத்தியுள்ளவர்களாகவும் விழிப்புள்ளவர்களாகவும் இருந்து, பிசாசின் கிரியையை உணரும்போது

அவனை எதிர்க்க வேண்டும். (1பேதுரு 5:8-9) விசுவாசிகள் பாவங்களில் விழுவதற்கு தங்களை அனுமதிக்கும்பொழுதும், தங்கள் வாழ்வில் பிசாசு நுழைவதற்கு இடங்கொடுக்கும்பொழுதும், நிச்சயமாகவே தாக்குதலுக்கு தங்களை ஆளாக்கிக் கொள்கிறார்கள். பார்க்க எபே. 4:25-27. இத்தகைய கவனிக்கப்படாத மனஸ்தாபப்படாத பாவங்கள், நுழை புள்ளிகள் என்று அழைக்கப்படும், இவற்றின் வழியாக பிசாசு உள்ளே நுழைந்து விசுவாசிகளை பாதித்து, ஒடுக்கி, அவர்களை வழி விலகச் செய்து மறுபடியும் அடிமைத்தனத்திற்குள் நடத்துகிறான். பார்க்க- கலா. 7:8. இதன் உதாரணங்கள் சிலவற்றை

பாவம் / நுழை புள்ளிகள்	விளைவு / கொடிய பாவம் / தாக்குதல்	தேவனின் தீர்வு / போராட்டம்
கோபம் எபே.4:26-27	மன்னியாதிருத்தல், கசப்பு, வன்மம், வெறுப்பு, முறிந்த உறவுகள். மத். 6:14-18, எபி. 12:15, தீத்து 1:15-16	மனந்திரும்பு, மன்னி, திரும்பிச் செல், ஜெபி. எபே.4:32, கொலோ.3:8,13 மத்-5:44. எதிர்த்துநில் யாக்.4:7
பெருமை நீதி. 16:5	கலகம், அழிவு: 2பேதுரு 2:10-12, நீதி.16:18.	மனந்திரும்பு, உன்னையே தாழ்த்து, தேவனுக்குக் கீழ்ப்படிந்திரு, பிசாசுக்கு எதிர்த்து நில்-1பேதுரு 5:6,8:யாக்.4:6-7
வேசித்தனம் நீதி. 5:1-23	ஏறுமாறான நடத்தை அவமானம், அடிமைத்தனம், வியாதி, மரணம், 1கொரி.5:1-5, ரோமர் 1:26-28.	மனந்திரும்பு, விட்டு விலகு, கீழ்படிந்திரு, எதிர்த்து நில்... 1கொரி.6:18, 1தெச.4:3. 5:22.
விக்கிரக ஆராதனை உபா.5:7-9	வஞ்சனை தேவனை விட்டு விலகுதல் 1இரா.11:1-9, ரோமர்1:25	மனந்திரும்பு, விலகி ஓடு, கீழ்படிந்திரு எதிர்த்து நில்...1கொரி.10:14, வெளி.2:5

நாம் தவிர்க்க வேண்டிய பிற பாவ வரம்புகள் உதாரணமாக கலா.5:19-21, 2பேதுரு 2:13-22-ல் குறிக்கப்பட்டுள்ளன. நாம் மேற்கண்டபடி, இல்வுலக பொருட்களையும், இன்பங்களையும் கொண்டு தேவ ஜனத்தை விலகிப் போகச் செய்யவும், தேவனைத் தவிர மற்ற காரியங்களுக்கும், மக்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவரோடுள்ள அவர்களுடைய தொடர்பை தடுக்கவோ, துண்டிக்கவோ செய்யவும் பிசாசு விரும்புகிறான். யாக்.4:4, 1யோ.2:15-16. எப்பொழுதும் மனந்திரும்புவதும் (தேவனிடத்தில்திரும்புதல்), அவருடைய வார்த்தைக்க்குக் கீழ்ப்படிவதுமே முடிவான தீர்வு என்பதை கவனியுங்கள். அப்படிச் செய்வதின் மூலம், தேவனுக்கு கீழ்ப்படிந்திருப்பதின் மூலம் நாம் எதிராளியை எதிர்த்து போர் புரிகிறோம். மேலும் அவருடைய அதிகாரத்தைக் கொண்டு நாம் யோவான் 14:30-ல் இயேசு இந்த உலகத்தின் அதிபதி (சாத்தான்) வருகிறான், அவனுக்கு வல்லமையினாலே பாவத்திற்கு விலகி இருப்போமானால், எதிராளி நம்மை குற்றஞ்சாட்டவோ, தாக்கவோ வரும்போது, அவன் நுழைவு அனுமதி இல்லை என்று கண்டு, நம்மிடத்தில் ஒன்றுமில்லாதிருப்பான்.

மூன்று யுத்தக்களங்கள்

நம் வாழ்வில் தீமைக்கு எதிராக நாம் வலுப்படுத்த வேண்டிய மூன்று போர்த்திறம் சார்ந்த பகுதிகளை வல்லுநர்கள் வேறுபடுத்திக் காட்டுகின்றனர். அவைகள்: மனம், இருதயம், வாய், இவைகள் ஆவிக்குரிய போராட்டத்தில் மிகவும் நெருக்கடியான நிலைகள், எனவே அவைகளை பாதுகாக்க நாம் போரிட வேண்டும்.

1. மனம்:

நம் மனத்திற்குள் நுழைகிற ஒவ்வொரு எண்ணத்திற்கும் மூன்று பிறப்பிடங்கள் இருக்கக்கூடும்:

a. தேவன்: தேவன் வெளிப்பாடுகள், வழிநடத்துதல் மூலமாகவும், ஆவியானவரால் அருளப்படும் ஞானம், மற்றும் அறிவின் வார்த்தையாகிய வரத்தின் மூலமாகவும் நம் மனதில் பேசுகிறார். 1கொரி. 12:8, 14:26.

b. நாமே: நம் சொந்த எண்ணங்களை விளைவிக்கக்கூடிய சிருஷ்டிக்கும் ஆற்றலோடு தேவன் நம்மை சிருஷ்டித்திருகிறார். நீதி. 23:7.

c. சாத்தான்: பிசாசின் சத்துவங்கள் நம் மனதை அறிந்துகொள்ள முடியாவிட்டாலும், அதில் தீய எண்ணங்களையும், சோதனைகளையும் வைக்க அவைகளால் முடியும்: யோவான் 8:44.

பேதுருவின் வாழ்விலிருந்து இதற்கான ஒரு தெளிவான உதாரணத்தை நாம் காணலாம்:

1வது தேவன் : மத்.16:16-17
2வது அவனே : மத்.17:4
3வது சாத்தான்: மத்.16:22-23

எண்ணங்கள் நம் மனதிற்குள் நுழைவதை நாம் எப்பொழுதும் தடுக்க முடியாவிட்டாலும், அவைகள் எங்கிருந்து வருகின்றன என்பதை பகுத்தறிந்து அவைகள் அங்கு வந்த பின்னர் அவைகளைக் குறித்து ஏதேனும் செய்ய முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை, ஏனெனில் தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் என்று 2தீமோ.1:7 கூறுகிறது ஆகவே இந்த விஷயத்தில் இரண்டு காரியங்களைச் செய்ய பரிசுத்த ஆவியானவர் நமக்கு வல்லமை அளிக்கிறார்.

1. கற்பனையான எண்ணங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியச் சிறைப்படுத்துதல். (தீமையானதும் பேய்த்தனமுமான எண்ணங்களை நமது மனதிலிருந்து அகற்றுதல்). பார்க்க:- 2கொரி. 10:3-5.

2. தேவனுடைய எண்ணங்களை நினைக்கச் செய்து,அவருடைய வார்த்தைகளை ஞாபகமூட்டுதல் பார்க்க: பிலி. 4:8, யோ.14:26 (அப்படிச் செய்வதற்கு நம்முடைய மனங்களை கட்டுப்படுத்துவது அவசியம்).

கற்பனைகளைப் பொறுத்தவரையில் அவற்றை நாம் எப்படி பயன்படுத்துகிறோம். என்பதில் கவனமாயிருப்பது அவசியம். தேவன் நமக்கு செயல்திறமுடைய கற்பனை வளத்தையும் நம்முடைய மனங்களில் அவற்றை உருவாக்கும் திறனையும் கொடுத்திருக்கிறார். அப்படித்தான், ஆண்டுகளாக மனிதனுக்கு பிரயோஜனமான பல கண்டுபிடிப்புகள் வந்துள்ளன. ஆனால் தேவன் நமக்கு விசுவாசத்திற்காகவும், தேவன் பேசியிருக்கிறவைகள் ஏற்கனவே நிறைவேறிவிட்டதைப் போல நினைப்பதற்காகவும் கற்பனை திறனை நமக்கு கொடுத்திருக்கிறார். நான் சாதாரண கற்பனையைப் பற்றி பேசவில்லை, மாறாக அவருடைய வார்த்தையின் படி (ரீமா வார்த்தை) அவரை விசுவாசிப்பதற்காக நம்முடைய மனங்களில் போட்ட காரியங்களைக் குறித்து பேசுகிறேன். தீய சக்திகள் நம்முடைய கற்பனை திறனை கெடுக்க முயற்சித்து, கெட்ட நிகழ்ச்சிகள் நமக்கு நடக்கிறதைப் போல நாம் எண்ணவும் வருத்தப்படவும் அல்லது இந்த சக்திகள் நம்மை அவிசுவாத்திலும், பயத்திலும், அடிமைத்தனத்திலும் அல்லது பிற பாவங்களிலும் விழுவதற்கு ஏதுவான பாவம் நிறைந்ததும், இயற்கைக்குக் புறம்பானதுமான இன்பமூட்டும் கற்பனைகளில் திளைக்கவும் செய்கிறது. பார்க்க: மத்.5:27-28, ரோமர் 14:236

2கொரி.10:4 எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. என்று கூறுகிறது. விசுவாசிகளின் மனதில் அடிக்கடி எதிராளியானவன் ஸ்தாபிக்க முயற்சிக்கிற மனம் சார்ந்த அரண்கள் இரண்டு உண்டு. அவைகள்: தாழ்வு மனப்பான்மை, ஆக்கினைத் தீர்ப்பு, நீ நல்லவனல்ல, சுறுசுறுப்பானவன் அல்ல, நீ பிரயோஜனமற்றவன், என்றெல்லாம் பிசாசு மக்களிடம் சொல்லும்பொழுது தாழ்வு மனப்பான்மை எழும்புகிறது. நீ ஒரு பாவி, நீ ஆவிக்குரியவன் அல்ல, தேவனுக்கு உன்னிடத்தில் பிரியம் இல்லாததால் உன் ஜெபங்கள் பதிலளிக்கப்படவில்லை..'' போன்ற குற்ற உணர்வுகளை நம்முடைய மனதில் கொண்டு வரும்பொழுது ஆக்கினைத் தீர்ப்பு தோன்றுகிறது. நாம் இந்த அரண்களை, தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிப்பதன் மூலமும், அவைகளை குப்பை என்று நிராகரிப்பதன் மூலமும், நிர்மூலமாக்கமுடியும். எபி. 4:12, எபே. 2:10. பிசாசின் சத்தத்திற்கு அல்ல, பரிசுத்த ஆவியின் சத்தத்தை கவனிக்க கற்றுக்கொள்ளுங்கள். பார்க்க: ரோமர் 8:1.

நாம் தெரிந்திருக்க வேண்டிய **இரண்டு விதமான பயங்கள்** உண்டு. ஒன்றும் தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாய் வருகிறது, மற்றொன்று அவிசுவாசத்தின் மூலமாய் வருகிறது.

1. **தேவனுக்குப் பயப்படும் பயம்:** கீழ்ப்படியாமை, பிரிவினையையும், ஊழலையும், அழிவையும் கொண்டு வரும் என்று அறிந்து, தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் செலுத்தும் பரிசுத்தமான மரியாதையும், பயமும் உபா.13:4.

2. **எதற்கோ அல்லது எவருக்கோ பயப்படும் பயம்:** சங்.31:13, 1யோவான் 4:18 நாம் தேவனுக்கு பயந்து அவரை நம்பினால், பிசாசை குறித்த பயங்கள் முற்றிலுமாய் அழிக்கப்பட்டுவிடும், அவருடைய கட்டுப்பாட்டுக்குள்ளும், அவர் நமக்காகவும் இருப்பதால், எவரும் நமக்கு எதிராக இருக்கமாட்டார்கள் என்ற உறுதியுடன் அவருடைய அன்பில் பாதுகாப்பாய் இருப்போம். (1யோவான் 4:18, சங்.118:6, ரோமர் 8:31)

இரண்டு விதமான ஞானங்கள்:

1. தேவ ஞானம்: யாக்.3:13:17
2. உலகம் அல்லது பேய்த்தனத்துக்கடுத்த ஞானம்: யாக்.3:14-16

சங்.111:10:ல் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்..” என்று கூறுகிறது. தேவன், விசுவாசத்துடன் கேட்கும் தம்முடைய பிள்ளைகளில் எவருக்கும் தம்முடைய ஞானத்தை வாக்களித்தார். பார்க்க: யாக்.1:5-6. எனவே, தேவனுக்கு பயந்து, அவருடைய ஞானத்தைப் பெற்று அதில் நடப்பதின் மூலம், நாம் ஆவிக்குரிய போராட்டம் செய்து, பிசாசைக் குறித்த பயங்களிலிருந்து, பிசாசின் ஞானத்திலிருந்து நம்மை காத்துக் கொள்ளலாம்.

சோதனை : யாக்.1:14-16ன்படி நாம் நம்முடைய சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சோதிக்கப்படுகிறோம். இது பாவத்தையும், பின்னர் மரணத்தையும் பிறப்பிக்கும். சாத்தான் இந்த மாம்சீக அல்லது பேராசைக்குரிய எண்ணங்களுடன் கூட்டவும் அவைகளின் மீது கட்டவும் விரும்புகிறான், பாவம் நேரிடும்போழுது, அவன் தாக்குதலுக்கான நுழைவை பெற்றுக் கொண்டு இன்னும் மோசமான அழிவுக்கு நேராய் நம்மை நடத்துகிறான். ஆனால் தேவன் தம்முடைய வல்லமையினால், நம்முடைய எண்ணங்களை கட்டுப்படுத்தி, தீய சூழ்நிலைகளை நடக்கச் செய்து பாதுகாப்பையும், தப்பிக்கும் வழியையும் தருகிறார். பார்க்க: 2பேதுரு 1:3-4, 2:9, 1கொரி. 10:13. இயேசு, ஆவியானவரின் வல்லமையினால் சோதனையை சந்தித்து, எதிராளியின் பொய்களை உடைக்க தேவனுடைய வார்த்தையை பயன்படுத்தியது நமக்கு கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டு. லூக்கா 4:1-14.

ஏமாற்றுதல் (வஞ்சனை): உலகத்தின் மிக முக்கியமான சாத்தானின் தந்திரமாக அழைக்கப்படுகிறது. ஒருவன் ஏமாற்றப்படும்பொழுது, உண்மையில் அது எப்படிப்பட்ட பொய்யாயிருந்தாலும், அது மெய்யே என்று அவனை நம்ப வைக்கிறது. அவன் எதிராளியின் பொய்யை நம்பி, அதில் வாழுகிறான். இதற்கு விரோதமாக வேதமும் நமக்கு பலமான எச்சரிக்கைகளை தருகிறது. இந்த விதமான மக்களுக்குப் பொருந்தும் சில வேத பகுதிகளை கீழே படியுங்கள்.

அவிசுவாசி	மாம்சீக விசுவாசி	முதிர்ந்த விசுவாசி
ஏசா. 44:20	யாக். 1:22,26	ரோ. 16:17,18
எரே. 17:9	கலா. 6:3,7	1கொரி. 10:12
எபி. 3:13	1கொரி. 3:18	2பேதுரு. 3:17
2கொரி. 4:4	1கொரி. 15:33	1தீமோ. 4:1
1கொரி. 6:9-10	1யோ. 1:1-8	2கொரி. 11:14

தேவனுக்கு முன்பாகவும், ஒருவருக்கொருவரும், நம்மை தாழ்த்தி இயேசுவின் நாமத்தில் ஜெபித்து உபவாசித்து எல்லா வஞ்சனை ஆவிகளின் மேல் அதிகாரத்தை செலுத்தி, நம்முடைய மத்தியிலிருந்து துரத்தும்பொழுது, வஞ்சனை உடைக்கப்படுகிறது. ஆவிக்குரிய போராட்டம் தொடர்கிறது. பார்க்க. 2 நாளா. 7:14; லூக்கா 22:31,32; மாற்கு 9:29.

2. இருதயம்:

ஆவிக்குரிய போராட்டத்தை பொறுத்தவரையில் இருதயத்தைக் குறித்த காரியங்கள் பெரும்பாலும் வேதாகமத்தில் இரண்டு காரியங்களைக் குறிக்கின்றன-அவைகள் மனப்பான்மைகள், உணர்வுகள். பாவச் செயல்களுக்கு முந்தி வரும் இருதயத்தின் பாவங்களாகிய கலகம், சுயாதீனம், வாதம், பெருமை, வீம்புத்தனம், கசப்பு, சீற்றம், ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காது, அநேக வேளைகளில் பாவச் செயல்களையே கவனிக்கிறோம். இவைகள் தேவனுடன் நாம் நடப்பதற்கு தடை ஏற்படுத்தி சாத்தான் தாக்குவதற்கு வழி உண்டாக்குகிறோம். பார்க்க: சங். 66:18. ஏரே. 17:9-ல், எல்லாவற்றைப்பார்க்கிலும், இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் எல்லா மனிதரின் இருதயங்களையும் அறிந்திருக்கிற தேவன் (அப்.1:24), எசே.36:26,27-ல் கூறப்பட்டுள்ள அவருடைய வாக்குத்தத்தின்படி, அவருடைய பிள்ளைகளில் புதிய இருதயத்தை உருவாக்கி அவைகளுக்குள் அவருடைய குமாரனின் ஆவியானவரை அனுப்பியிருக்கிறார். (கலா.4:6). ஆனால் தேவனுடைய பிள்ளைகளாய் இருந்தபொழுதிலும் நம்முடைய இருதயங்கள் குளிர்ந்து, தேவன், ஜனங்கள், சூழ்நிலைகளுக்கு விரோதமாக கெட்ட மனப்பான்மையுடன் காணப்படுகிறோம். ஏனெனில், அவைகள் என்ன சொல்லுகிறதோ அல்லது சொல்லவில்லையே அவர்கள் என்ன செய்தார்களோ அல்லது செய்யவில்லையோ, அவர்கள் என்ன செய்யவில்லையோ என்பதையெல்லாம் பாராமல், நம்முடைய சுய இச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிடுகிறோம். இந்த தவறான மனப்பான்மையிலிருந்து தவறான உணர்வுகள் வெளிவந்து தேவனுக்கு பதிலாக நம்மடைய உணர்ச்சிகளையே சார்ந்து நாமே பிரச்சனைகளில் மாட்டிக் கொள்கிறோம். சாத்தான் உண்மைகளை திரித்துக் கூறி நம்முடைய இருதயங்களை தொடர்ந்து சஞ்சலமடையச் செய்கிறான்.ஆனால் இயேசு யோவான் 14:1-ல் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று கூறுகிறார். இங்கே ஆவிக்குரிய போராட்டம் செய்ய வேண்டிய விதம் என்னவென்றால், முதலில் எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். (நீதி. 4:23). இரண்டாவது, சங்.51:10-12-ல் உள்ள தாவீது இராஜாவின் ஜெபத்தை ஜெபிக்க வேண்டும். மூன்றாவது, பரிசுத்த ஆவி மூலம் தேவனுடைய இருதயங்களில் தொடர்ச்சியாய் நிரம்ப வேண்டும். ரோமர் 5:5.

3. வாய்

அடிக்கடி, சகோதரர்களை உற்சாகப்படுத்தவும், சத்தியத்தை வெளிப்படுத்தவும் செய்கிற நாம் நம்முடைய வாய்களை சாத்தானின் கரங்களிலுள்ள அழிவுக்குரிய ஆயுதங்களாக மாற்ற அனுமதிக்கிறோம். நம்முடைய வார்த்தைகள் சத்தியம், நீதி, ஜீவன் போன்றவற்றிற்காக பரிசுத்த ஆவியின் வாகனங்களாகவோ அல்லது வஞ்சகத்தையும், குற்றஞ்சாட்டுதலையும், மரணத்தையும் விளைவிக்கிற சாத்தானின் வாகனங்களாகவோ இருக்கலாம். வேதாகமம் நீதி. 18:21-ல் மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் அதில் பிரயப்படுகிறவர்கள்அதின் கனியைப் புசிப்பார்கள் என்று கூறுகிறது. வாய்ப்பு கிடைக்கும்பொழுதெல்லாம் சாத்தான், நம்முடைய நண்பர்களுடன் ஒன்றாகக் கூடும்போது நடைபெறுகிறது. அங்கு இல்லாத ஒருவரைக் குறித்து ஒரு சாதாரண கருத்து கூறுவதுடன் ஆரம்பிக்கிறது. கருத்து கூர்ந்து கவனிக்கச் செய்கிறது. கூர்ந்து கவனித்தல் ஈடுபாடு கொள்ளச் செய்கிறது. ஈடுபாடு விமர்சிக்கச் செய்கிறது. விமர்சனம் குற்றஞ்சாட்டுகிறது. யாக்-3:8-10ன்படி நாம் நம்முடைய வாய்களின் மூலம் தேவனுடைய ஆசீர்வாதங்களை வெளிப்படுத்தவோ அல்லது சாத்தானின் தாக்குதலை மக்கள் மீது செலுத்தவோ கூடும். ஆகவே தான், நாம் நம்முடைய இருதயங்களிலும் மனதிலும் அனுமதிக்கிற காரியங்களைக் குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் வாயிலிருந்து வெளிவருகிற காரியங்கள், இருதயத்திலிருந்து தீய எண்ணங்கள். பார்க்க: மத்.15:18-19. இங்கே ஆவிக்குரிய போராட்டம் செய்ய முதலில் சங்.141:3-ல் உள்ள

சங்கீதக்காரனின் ஜெபத்தை செய்ய வேண்டும். இரண்டாவது, எபே. 4:29,31-ல் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். மூன்றாவது, ஜனங்களை கட்டக்கூடிய அன்பின் வார்த்தைகளை பேசுவதற்கு ஏதுவாக தேவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களை நிரப்புவதற்கு இடங்கொடுக்க வேண்டும். ஏனென்றால், இயேசு,இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று கூறினார். மத். 12:34. அவிசுவாசத்தின் எதிர்மறையான வார்த்தைகளை ஒருவருக்கொருவர் பேசுவதற்கு பதிலாக தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் விசுவாச வார்த்தைகளை பேசும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இறுதியாக தேவனுடைய வெற்றியின் சேனையை கட்டும் ஊழியத்திற்காக 1கொரி. 14:26-ல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைக்கு செவி மடுக்க வேண்டும். ஆகவே நாம் நம்முடைய வாய்களை ஒருவரையொருவர் எதிர்க்க பயன்படுத்தாமல், பிசாசை எதிர்க்க பயன்படுத்துவோம். அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.

அசுத்த ஆவிகளின் சத்துவங்களை கையாளுதல் - மேற்கொள்வது

எப்படி வார்த்தையானது எளிதாகவும், தெளிவாகவும் சுவரில் எழுதப்பட்டிருக்கிறது. எக்காளம் சத்தமாகவும், அருகிலேயும் ஒலிக்கிறது. அடிமைத்தனத்தில் இருப்பவர்களின் அழுகை தேசம் முழுவதும் எதிரொலிக்கிறது. சிற்றின்பத்தின் பெருக்கம், காமம் சார்ந்த அசுத்தங்கள், வேசித்தனம், இச்சை பிசாசுகள், இயற்கைக்கு மாறான பாலுணர்வு தன்மைகள், நிர்வாணங்கள் ஆகியவைகளை பெருகுவதற்கு நரகத்தின் கதவுகள் திறக்கிற சத்தம் கேட்க முடிகிறது. போதை பழக்க வழக்கங்கள், கொடுமைத்தனம், மதத்துரோகங்கள், எல்லாவிதமான தீமைகள் வேகமாக பெருகுவதைப் போல காணப்பட்டு, துரைத்தனங்களும் அதிகாரங்களும், இறந்த சடலத்தைச் சுற்றி பறக்கும் ஈக்களைப் போல நம்மைச் சுற்றி சுழன்றுகொண்டிருக்கிற, சரித்திரத்தில் திகிலுட்டும் நேரத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அன்பும் சமாதானமும் முற்றிலும் இழந்து, முழுவதும் பாவம் சீறி எழுகிறது போல நமது உலகம் காணப்படுகிறது. சுவரின் மீது எழுதப்பட்டவைகள் **அபாயம்! யுத்தம! துன்பம்! தாக்குதல்**! என்று சொல்லுகிறது.

குறிப்பாக வாலிபர்களின் கலாச்சாரத்தில் பேய்த்தனமான காரியங்கள் சாதாரண காரியம் போல அதிகமாய் மாறிக் கொண்டு வருகிறது. மாய மந்திரத்துடன் மயக்கும் ஒரு புதிய வித அலை திகிலுட்டும் திரைப்படங்கள் பேய்த்தனமான புத்தகங்கள் சாத்தானை என்றும் இல்லாத அளவுக்கு அதிக பிரபலமாக்குகிறது. ஆனால் இவை எல்லாவற்றிற்கும் மத்தியிலும் தேவன் தம்முடைய சொந்த ஜனங்களை ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபடும்படி அழைக்கிறார். இது ஒவ்வொரு விசுவாசியும் முன்னணியில் நின்று செய்யும் யுத்தம். இது வெற்றியின் யுத்தம், யுத்தத்திற்குரிய திட்டங்கள் ஏற்கனவே வரையப்பட்டுள்ளன. இந்த யுத்தத்தில் நாம் சாத்தானுடைய நயவஞ்சகமும், இயற்கைக்கு மாறான பாலுணர்வு கொண்ட கிரியைகளையும் ஒழிக்க நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம். நாம் எல்லாத் தீமைகளையும் முற்றிலுமாய் அழிக்க முடியாவிட்டாலும், அதிலிருந்து ஜனங்களை காப்பாற்ற உதவ முடியும்.நாம் சாத்தானை அழிக்க முடியாவிட்டாலும், அவனுடைய கிரியைகளையும் செயல்பாடுகளையும் கட்டமுடியும். அவனுடைய முன்னேற்றங்களையும், அவனுடைய செயல்பாடுகளையும் திட்டங்களையும் தடுக்க முடியும். அவனுடைய நோக்கங்களை முறியடித்து, ஜனங்களின் வாழ்வில் தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியும்.

1. ஜெபமும் உபவாசமும்

அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும்,நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும்...அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் ஏசாயா 58:6,7 உங்கள் வாழ்க்கை ஜெபத்திற்கு கொடுக்கப்படாவிட்டால், எதிராளியை எதிர்த்து நிற்பது கூடாத காரியம். ஜெபமே உங்கள் வாழ்வில் தேவனின் அபிஷேகத்தை கொண்டு வரும் ஜெபமும் உபவாசமும், உங்கள் ஆவி, ஆத்துமா சரீரத்தை தேவ ஆவியோடு இசைத்திருக்கும்படி அவைகளை கட்டுப்படுத்தும் இந்த ஆவிக்குரிய எல்லையின் மூலம், ஆவிக்குரிய உலகத்தில் நாம் நுழைந்து அந்தகார சக்திகளின் வல்லமையை தணிக்க முடியும். தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலம் இதை செய்வதற்கான வல்லமையையும் அதிகாரதையும் நமக்கு தந்திருக்கிறார். உபவாசம், ஜெபத்தின் மூலம் நாம் எதிரியை எதிர்த்து நின்று அவனுடைய செயல்பாடுகளை நாம் நிறுத்த முடியும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைச் கட்டுவீகளோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில்,இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்.18:18-20).

கட்டுதல் என்பது: ஏதோ ஒன்றை கயிறுகள் அல்லது சங்கிலிகளால் இறுக்குவது அல்லது கட்டுப்படுத்துவது என்று பொருள்படும். எதிராளியின் கிரியைகளை கட்டும் அதிகாரத்தை தேவனுடைய வார்த்தை நமக்கு தருகிறது. இது அவன் செயல்படுவதிலிருந்து கட்டுப்படுத்துதல், கட்டுப்பாட்டுக்கு

உட்படுத்துதல் அல்லது தடுத்து நிறுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுகிறது. உதாரணமாக பிசாசே, வாழ்வில் நீ கிரியை செய்வதிலிருந்து இயேசுவின் நாமத்தில் உன்னை தடுத்து நிறுத்துகிறேன் என்று நீங்கள் சொல்லலாம். அல்லது, கலகம், பயம், சச்சரவு அல்லது ஒதுக்குதலின் ஆவியே, என்னுடைய வாழ்வில் கிரியை செய்வதிலிருந்து, இயேசுவின் நாமத்தில் உன்னை கட்டி அப்புறப்படுத்துகிறேன். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் என்னை மூடுகிறேன். எனவே என்னுடைய வாழ்வில் உனக்கு எந்த பங்குமில்லை என்று நீங்கள் சொல்லலாம்.

<u>கட்டுகிறதற்கும் கட்டவிழ்ப்பதற்கும் முக்கியமான காரியங்கள் என்று நான் நம்புகிற, அழுத்தமாய் கூற விரும்புகிற சில காரியங்கள்:</u>

- நீங்கள் உங்கள் கட்டளையில் திட்டவட்டமாய் இருக்க வேண்டும். இயேசுவின் நாமத்தில், பிசாசு அல்லது ஆவியே, நான் உன்னைக் கட்டுகிறேன். என்று சொல்லாதிருங்கள். ஆனால் என்ன பிசாசு என்பதை குறிப்பிடுங்கள் அவைகளை இனம் கண்டுகொள்ளுங்கள்.
- கட்டளையிடுங்கள் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, உங்கள் நிலையில் நில்லுங்கள்.
- நம்புங்கள், ஆவிகள் உங்களுக்குக் கீழ்படியும் என்று விசுவாசியுங்கள்.
- கட்டிய பின்பு விட்டுச் செல்ல அவைகளுக்குக் கட்டளையிடுங்கள். அவைகளை கட்டி அங்கே விட்டுவிடாதிருங்கள். ஆனால் உலர்ந்த இடம் அல்லது கடல் அல்லது வானம் ஆகியவற்றிற்குச் செல்லும்படி சொல்லுங்கள். திட்டவட்டமாயிருங்கள், ஏனென்றால், நீங்கள் தந்திரமானவைகளை கையாளுகிறீர்கள்.

தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்தையும் வல்லமையையும் பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய ஜெபம் ஜீவன், வல்லமை, அதிகாரம் அன்பு, நம்பிக்கை, பெலம் ஆகியவற்றின் வார்த்தைகளால் நிறைந்திருப்பதாக. சாத்தானின் கிரியைகளை கட்டியபின்பு அன்பு, சமாதானம், கீழ்ப்படிதல் ஆகிய தேவனுடைய கிரியைகளை அந்த இடத்தில் ஸ்தாபியுங்கள். அவைகள் முழுவதுமாய் வெளிப்படுவதற்கு முன்பு அதிக நேரம் எடுக்கலாம். ஆகவே பொறுமையாய் இருங்கள். இது தோட்டத்தில் ஒரு விதையை நடுவது போல் இருக்கிறது அறுவடைக்கு அதிக நேரம் எடுக்கிறது.

ஜெபம், உபவாசத்தின் மூலம் எதிரியின் கிரியைகளை நாம் அழிக்க முடியும். இது நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வீட்டு வேலைகளில் ஒன்று எதிரியின் எல்லாவற்றையும் நாம் அழிக்க கிறிஸ்து விரும்புகிறார். (ஆனால்) பாவஞ்செய்கிறவன் தீய காரியங்களை செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானானவன் ஆதி முதல் பாவஞ்செய்கிறான். (தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறான்) பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே (கட்டவிழ்க்கவும், ஒன்றுமில்லாமல் செய்யவும்) தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். பார்க்கக்கூடிய 1யோவான் 3:8. ஆதலால் இந்த அவருடைய பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் (தாமே) மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார், மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், அப்படியானார். (எபி. 2:4,15).

நான் சென்றிருக்கிற கூட்டத்தில் தேவனுடைய வார்த்தையை கேட்பதிலிருந்து குறிப்பிட்ட நபர்களையோ அல்லது ஜனங்களையோ, சாத்தான் திசை திருப்பிய சூழ்நிலைகள் அநேகம் உண்டு. வழக்கமாக அவன் குழந்தைகளின் அழுகை அல்லது ஜனங்களின் இறுமல் ஆகிய இயல்பான சூழ்நிலைகளை பயன்படுத்துகிறான். சில வேளைகளில் அவன் கூட்டத்திற்கு முன்பு குழப்பங்கள் அல்லது மனவேற்றுமைகளை ஏற்படுத்துகிறான். அல்லது திட்டங்களின் படி காரியங்கள் நடைபெறாமல் இருக்கச் செய்கிறான். இந்த நேரங்களில் எதிராளியானவன் கூட்டத்தை அழிப்பதை நான் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பதற்கு மாறாக அவனுக்கு எதிராக தேவனுடைய அதிகாரத்தை எடுப்பதற்கு நான் கற்றுக் கொண்டிருக்கிறேன். நான் இயேசுவின் நாமத்தில் அவன் கிரியைகளை கட்டி அவன் செயல்பாடுகளை நிறுத்த கட்டளையிடுகிறேன்.

ஒரு நாள், ஒரு குறிப்பிட்ட இன மக்கள் மத்தியில் திறந்த வெளி கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கும்போது, திடீரென சுமார் பத்து குடிகார மனிதர்கள் வந்து இடையூறு செய்ய ஆரம்பித்தனர். அவர்கள், தங்கள் வீடுகளிலிருந்தும்,வழியில் சென்றுகொண்டிருந்தவர்களையும் அழைத்து எங்களை பைத்தியக்காரர்கள் போல பார்க்க கூறினார்கள். 15,20 நிமிடங்களில் எங்களுடைய கூட்டம் இருமடங்கு மக்களால் நிறைந்தது. அந்த குடிகாரர்கள் அவர்களை தாக்க ஆரம்பித்தனர். அப்பொழுது நாங்கள் இயேசுவின் நாமத்தில் வல்லமையை எடுத்து அமைதியாய் இருக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டோம். நாங்கள் சாத்தானைக் கட்டி, சமாதானத்திற்காக ஜெபித்தோம். சாத்தான் தோற்கடிக்கப்பட்டான். ஏனென்றால் எங்கள் கூட்டம் இருமடங்காகியது. அநேக மக்கள் தங்கள் வாழ்க்கைகளை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். தேவனுடைய வேலையில் இடையூறு செய்யும்பொழுதெல்லாம் அவன் தோற்றுப்போவான். எனவே, இதைப்போல எதாவது நடந்தால், நீங்கள் அமைதியாய் இருந்து உங்கள் யுத்தகங்களில் தேவனை போராட விடுங்கள். உங்கள் முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை, உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி உங்களால் உண்டாகும் பயமும் கெடியும் நீங்கள் மிதிக்கும் பூமியின் மேலெல்லாம் வரப் பண்ணுவார். (உபா.11:25).

2. தேவனுடைய வார்த்தையை வாசித்தலும் தியானித்தலும்

தேவனுடைய வார்த்தையை தவிர்ப்பதால் சிலர் தங்கள் பழைய பழக்கவழக்கங்களுக்குத் திரும்பிவிடுகிறார்கள். அல்லது பிசாசுடைய செயல்பாடுகளின் கட்டுப்பாட்டுக்குள் தங்களை கொண்டுவர அனுமதிக்கிறார்கள் சாத்தானுடைய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்படுவது ஒரு காரியம் ஆனால் அந்த சுயாதீனத்தை தக்க வைத்துக் கொள்வது மற்றுமொரு முக்கியமான காரியம். உங்கள் மனது தேவனுடைய எண்ணங்களால் நிரம்பியிராவிட்டால், எதிராளி தன்னுடைய எண்ணங்களை அதில் நிரப்பிவிடுவான். அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டுப்புறப்படும்போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல் நான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்றுசொல்லி அங்கே வந்து அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி ஜோடிக்கப் பட்டதாகவும் இருக்கக்கண்டு திரும்பிப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக் கொண்டு வந்து, உட்கார்ந்து அங்கே குடியிருக்கும் அப்பொழுது அந்த மனுஷருடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும், அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும் என்றார். (மத்.12:43 - 45)

தேவனுடைய வார்த்தை நமது மனங்களிலிருந்து உலகத்தை வெளியே தள்ளவும் நம்முடைய விசுவாசத்தை வளர்க்கவும் உதவுகிறது. விசுவாசம் இல்லாமல் தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள முடியாது. சாதாரணமாக ஒரு மருத்துவர் ஒரு நோயாளியை குறிப்பிட்ட சிகிச்சையில் நீண்ட காலம் வைக்கலாம். அந்த நோயாளி மருத்துவரின் ஆலோசனைக்குக் கட்டுப்படாவிட்டால், அவனுடைய வாழ்வு ஆபத்தில் முடியும். உதாரணமாக, குடிகாரனாக இருந்த ஒரு மனிதனை நான் அறிவேன். சாராயத்திற்கு அடிமையாயிருந்த அவனை, அடிமைத்தனத்தின் ஆவி கட்டி வைத்திருந்தது மருத்துவர் அவனிடம் மேலும் குடிக்க வேண்டாம் என்றும், குடித்தால் மரித்துவிடுவான் என்றும் கூறியிருந்தார். ஆனால் அவன் மருத்துவரின் அலோசனைக்குக் கீழ்ப்படியாமல் விரைவில் மரித்துவிட்டான். இதைப்போல, ஆவிக்குரிய எல்லைகளில் எதிரியிடமிருந்து தூரமாய் இருப்பதற்கு தேவனுடைய வார்த்தைகளை கடைபிடிக்கவேண்டும். குறிப்பாக முன்பு சாத்தானுடைய வல்லமையின் ஆதிக்கத்திற்குள் இருந்தவர்களும், மேற்கூறிய காரியங்களில் கவனமாய் இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை அவர்களுடைய மனங்களை புதுப்பித்தும் அவர்களுடைய ஆவிகளை தேவனுக்குள் உறுதியாகவும் வைக்கும்.

தேவனுடைய வார்த்தைக்கு அடிமைத்தனத்தின் ஆவியிலிருந்து எவரையும் விடுவிக்க போதுமான அதிகாரம் உண்டு. தேவனுடைய வார்த்தையில் உள்ள வல்லமையை விசுவாசிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தைகளை வாசிப்பது மட்டுமல்ல, தங்களுடைய சொந்த வாழ்க்கையில் அவைகளை அப்பியாசப்படுத்தவும் வேண்டும். நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2).

3. தூய்மையான வாழ்வு வாழுதல்

எல்லா கிறிஸ்தவர்களும் பாவத்தின் ஆதிக்கத்தை எதிர்க்கவும் மேற்கொள்ளவும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். பாவம் ஒருவருடைய வாழ்க்கையில் அடிமைத்தனத்தின் ஆவி, முறைகேடுகள், அசுத்த ஆவிகள், எளிதாக நுழைந்து விடுவதற்கு ஏதுவாக அசுத்தங்களைக் கொண்டு வருகிறது. பரிசுத்தத்திற்கும் பதிலாக வேறு எதுவுமில்லை. ஒவ்வொரு விசுவாசியிடமிருந்தும் தேவன் இதை எதிர்பார்க்கிறார். ஒருவருடைய வாழ்வில் தடையின்றி பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தடையின்றி ஓடுவதற்கு பரிசுத்தம் அனுமதி அளிக்கிறது. நம்முடைய வாழ்வில் பரிசுத்த ஆவியின் வல்லமை வெளிப்படுவதற்காக அநேக முறை ஜெபித்திருக்கிறோம். ஆனால் எந்த விளைவும் ஏற்படவில்லை. அதற்கு ஒரு காரணம் பரிசுத்த ஆவியை நாம் பெற்றுக்கொள்வதற்கு முன்பு நம்முடைய வாழ்வு சுத்திகரிக்கப்படவேண்டும். தேவனுடைய விருப்பம் சுத்தமான பாத்திரங்களை பயன்படுத்துதலாகும். ஆனால் சாத்தானுடைய விருப்பம் அவைகளை அசுத்தமாக்கி தான் பயன்படுத்தவும், அல்லது தேவன் அவைகளை பயன்படுத்துவதை எப்படியாகிலும் நிறுத்தவும் விரும்புகின்றான்.

விடுதலையாக்கும் ஊழியத்தில் சாத்தானுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு, அது சுத்தமாக வைக்கப்படவில்லையென்றால், எந்த நேரத்திலும் எதிராளியானவன் திரும்ப வந்துவிடுவான் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அநேக வருடங்களாக பிசாசால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு மனிதனை நான் அறிவேன். அநேக பிசாசுகள் அவனுக்குள் வாழ்ந்துகொண்டிருந்தன. அவன் தெருக்களில் நிர்வாணமாய் நடந்து, குப்பைக்கூடங்களில் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவன் பழைய நிலைக்கு திரும்புவான் என்ற நம்பிக்கை இல்லாதிருந்தது. ஆனால், அவனுக்காக ஜெபிக்கப்பட்டபோது, எல்லா பிசாசுகளும் அவனிடத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டன. அவன் மாம்ச இச்சைகளில் ஈடுபடாமல் இருக்கவும், குடிப்பழக்கத்திற்கு விலகி இருக்கவும், தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கவும், சாத்தானுடைய எல்லைகளிலிருந்தும் எச்சரிக்கப்பட்டான். இவை எல்லாவற்றையும் கொஞ்ச நாட்கள் கடைப்பிடித்தான் ஆனால் ஒரு நாள், மீண்டும் குடிப்பதற்கு தீர்மானித்தான். திரும்பவும் எச்சரிக்கப்பட்டான். ஆனால் அந்த எச்சரிப்புக்கு செவிகொடுக்கவில்லை. பிசாசுகள் மீண்டும் அவனுக்குள் வந்தன. இந்த முறை முன்பைக் காட்டிலும் மிகவும் கேடானதாக இருந்தது.

பரிசுத்தத்தைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது? நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். ஆகையால் நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். (ரோமர் 6:6, 12-13). அன்றியும், சகோதரரே நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து, தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாகவும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து (1தெச. 4:1-5). அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (ரோமர் 12:1) உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாய் இருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள்

நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் (1பேதுரு 2:11-12.)

நான் சொல்ல விரும்புகிற இன்னொரு காரியம்: ஜெபங்களும் வேதபாடங்களும் நம்முடைய வாழ்வில் பயன்படாத நேரங்களும் இருக்கின்றன. நாம் பாவத்துக்கு இடங்கொடுக்கும்பொழுது அல்லது தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாய் செயல்படும்பொழுது, நாம் மனந்திரும்பி காரியங்களை சரிசெய்யாமல் ஜெபிக்க முயற்சித்து நமது நேரத்தை வீணடிக்கிறோம். பாவம் தோல்வியின் கதவை திறக்கிறது. மேலும் அது, வியாதி அல்லது அழிவின் கதவையும் திறக்கலாம். மனந்திரும்பாவிட்டால், பாவம் தொடர்ந்து உங்களை கீழ்நோக்கி இழுக்கும்.

4. இயேசுவின் இரத்தத்தால் மூடுதல

உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1 பேதுரு 1:18-19). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுள்ளது, ஏனெனில், அது தெய்வீக இரத்தம். நம் எல்லாருடைய இரத்தமும் முதல் மனிதன் ஆதாமிடத்திலிருந்து ஓடுகிறது, ஆனால் இயேசுவின் இரத்தம் ஆதாமிடத்திலிருந்து அல்ல. அவர் மனிதனால் கருத்தரிக்கப்படவில்லை, ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கருத்தரிகக்ப்பட்டார். அவருடைய இரத்தம் தேவனிடத்திலிருந்தே வந்தது. ஒரு குழந்தை கருத்தரிக்கப்படும்பொழுது, அதன் இரத்தம் தாய் மூலம் அல்ல, தந்தையின் மூலமாகவே கடந்து செல்லுகிறது. இயேசுவிலும் அதுவே நடந்தது. அவருக்கு மனித தகப்பன் இல்லாதிருந்தபடியால், அவருடைய இரத்தம் பரிசுத்த ஆவியால் நேரடியாகச் செலுத்தப்பட்டது. அது பாவத்தால் கரைபடவில்லை. அது பரிசுத்தமாகவும், ஜீவனும் வல்லமையும் நிறைந்ததுமாகவும் இருந்தது. எனவேதான், சாத்தான் அதைப்பார்த்து பயப்படுகிறான். அதற்கு எதிராக அவனால் நிற்க முடியவில்லை. இந்த இரத்தமே இந்த உலகத்தின் எல்லா அசுத்தங்களிலிருந்தும் நம்மை சுத்தப்படுத்துகிறது. இந்த இரத்தம் தூய்மையானதும், மிகவும் பரிசுத்தமானதும், சாத்தானோ அல்லது அவனுடைய பிசாசுகளோ தொடக்கூடாததுமாய் இருக்கிறது.

"அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி : இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது, இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ்சுமத்தும் பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப் போனான். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்". (வெளி. 12:10-11)

<u>நம்முடைய சாட்சியின் வசனம் என்ன?</u>

- இயேசுவின் இரத்தத்தால் கிரையத்திற்கு கொள்ளப்பட்டிருக்கிறோம். (அப். 20:28)
- இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறோம். (1 யோவான் 1:17)
- இயேசுவின் இரத்தத்தால் தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறோம். (கொலோ 1:20).
- இயேசுவின் இரத்தத்தால் நீதிமானாக்கப்பட்டிருக்கிறோம். (ரோ. 5:8-9)
- இயேசுவின் இரத்தத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். (எபி. 13:12)
- இயேசுவின் இரத்தத்தின் மூலம் தேவனோடு ஐக்கியங்கொண்டிருக்கிறோம். (எபே. 2:13)
- இயேசுவின் இரத்தத்தின் மூலம் தேவ பிரசன்னத்திற்குள் நுழைகிறோம். (எபி. 10:19-22)
- இயேசுவின் இரத்தத்தின் மூலம் மீட்கப்பட்டிருக்கிறோம். (எபே. 1:7)

இந்த சாட்சி இன்னும் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் இந்த அறிக்கையை செய்ய கற்றுக் கொள்ள வேண்டும், ஏனெனில் அது மெய்யானது.

5. துதித்தலும் ஆராதனையும்

"ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" எபி. 13:15). சாத்தானுடைய வல்லமைகளுக்கு எதிரான வெற்றிக்குள் துதி நம்மை நடத்துகிறது. அது சந்தோஷம், வெற்றி, வல்லமை ஆகிய சூழ்நிலையை உருவாக்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அது நம் மத்தியில் தேவனுடைய பிரசன்னத்தை கொண்டு வருகிறது. உதாரணமாக, பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட பொழுது, அவர்கள் கீழே அமர்ந்து துக்கித்துக் கொண்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக தேவனை துதித்து ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். அதன் விளைவு என்ன? அப். 16:25-26ஐப் படித்துப் பாருங்கள். துதியும், ஆராதனையும் உங்களை ஆவியில் பலம் கொள்ளச் செய்து, நீங்கள் சாத்தானுடைய பிடியிலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளீர்கள் என்று சொல்ல உதவும். துதியும் ஆராதனையும் குறித்த இன்னொரு அருமையான நிகழ்ச்சியை 2 நாளா. 20:1-30ல் படியுங்கள். மேலும் வாசிக்க சங். 149.

6. அந்நிய பாஷைகளில் ஜெபித்தல்

இந்த வரத்தை நீங்கள் பெற்றிருந்தால் அதை உங்களிடமிருந்து திருட சாத்தானுக்கு இடங்கொடாதிருங்கள். இது ஒரு ஆற்றல் வாய்ந்த வல்லமை. இது பிசாசை முழுமையாக அழிக்க வல்லது. அந்நிய பாஷைகளில் ஜெபிப்பது உங்கள் ஆவியை பலம் கொள்ளச் செய்து, அந்தகாரத்தின் இராஜ்ஜியத்தை நீங்கள் பகுத்தறியவும், அதற்கு எதிர்த்து நிற்கவும் உங்களுக்கு உதவி செய்கிறது. ஆவியில் ஜெபிப்பது சாத்தானுடைய இராஜ்யத்தின் குழப்பத்தை கொண்டு வருகிறது. நமக்கு எதிரான திட்டங்களை அது கெடுத்து விடுகிறது. "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோ. 3:26).

சில உண்மையான கிறிஸ்தவர்கள் இந்த அற்புதமான வரத்தை ஒரு பொழுதும் அனுபவித்ததே இல்லை. சில முதிர்ச்சியடையாத கிறிஸ்தவர்களின் தவறான பிரதிநிதித்துவத்தால் மற்றவர்கள் அதைக் குறித்து பயப்படுகிறார்கள். இந்த வரம் உங்களுக்கு இல்லாவிட்டால், தயவு செய்து விடுபட்டு போகாதிருங்கள். வித்தியாசமான வழியில் தேவனுடைய ஆழங்களை நீங்கள் இன்னும் அனுபவிக்க முடியும். இருப்பினும், நீங்கள் தேடவும் திறந்த மனதாய் இருக்கவும் உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய எல்லா வல்லமைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

7. அதிகாரத்தை எடுத்தல்

எல்லா பேய்த்தனங்களும் கொடுமையானதும், வேசித்தனம் நிறைந்ததுமாய் இருப்பதை கவனியுங்கள். இருப்பினும் நாம் அவைகளுக்குப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இயேசுவானவர் அவைகளின் மீது அதிகாரத்தையும், வல்லமையையும் நமக்குத் தந்திருக்கிறார். சாத்தானுடைய அல்லது பிசாசினுடைய எல்லா காரியங்களின் மீதும் நமக்கு முழு வல்லமையும் வெற்றியும் உண்டு. இயேசு நமக்காக எல்லாற்றையும் மேற்கொண்டார். அவர் எல்லா அதிகாரம், வல்லமை, துரைத்தனம், ஆளுகை ஆகியவற்றின் மீது நமக்காக வெற்றி சிறந்தார். அவர், சாத்தான், அவனது பேய்களின் அதிகாரத்தை உரிந்து கொண்டார். சாத்தான் உங்களையும், என்னையும் போல உருவாக்கப்பட வஸ்து என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். அவன் பலமுள்ளவனாய் காணப்படலாம். ஆனால் தேவனுக்கு முன்பாக வெட்டுக்கிளியைவிட பலமுள்ளவன் அல்ல. அவன் நமக்கு இணையாக மாட்டான். எல்லாவிதத்திலும் அவனுடைய வல்லமைகள் வரையறைக்குட்பட்டவைகள். உதாரணமாக, தேவன் அவனை அனுமதிக்காதவரையில், யோபுவை அவன் தொடமுடியாமல் இருந்தது. யோபுவைச் சுற்றிலும் பாதுகாப்பு வேலி இருந்தது. சாத்தான் அதற்குள் கடந்து செல்ல முடியவில்லை. நீங்கள் தேவனுடைய வல்லமையால் பாதுகாக்கப்படும்பொழுது சாத்தானுக்கு பயப்பட எந்த காரணமும் இல்லை. (வாசிக்க யோபு 1:11-19, சங். 124::5-6, 1 பேதுரு 5:8).

உங்கள் எதிரியை புரிந்துகொள்ளுதல் - சாத்தானும், அசுத்த ஆவிகளும்

A. சாத்தான் என்னும் நபர்

1. பழைய ஏற்பாடு – பழைய ஏற்பாட்டில் சாத்தானைக் குறிக்கும் நேரடியான வேத பகுதிகள். (ஆதி. 3:15, 1 நாளா. 21:1, யோபு 1:6-12, 2:1-7, சகரியா 3:1-2).
2. புதிய ஏற்பாடு – பல வேத பகுதிகள் உள்ளன. மத். 4:1-11, லூக்கா. 10:18-19, யோ. 13:2,27, வெளி. 20:1-3.
3. சாத்தான் ஒரு நபர் - கீழ்க்கண்ட வேத பகுதிகளை படியுங்கள் - யோபு 1:8-10, ஏசா. 14:13-14, மத். 4:10, யோ. 8:44, யூதா 9.
4. சாத்தானின் 12 பெயர்கள்
   a). சாத்தான் : பொருள் : தேவனுக்கும் மனிதனுக்கும் ''எதிராளி'' 1 நாளா. 21:1, 1 தீமோ. 1:10.
   b). பிசாசு : பொருள் : பழி சொல்லுகிறவன், சகோதரரை குற்றஞ்சாட்டுகிறவன். (புதிய ஏற்பாட்டில் மட்டுமே காணப்படுகிறது).
      1). மனிதனிடத்தில் தேவனைக் குறித்து பழிசொல்கிறான். (ஆதி. 3:1-7).
      2). தேவனிடத்தில் மனிதரைக் குறித்து பழி சொல்கிறான். (யோபு 1:9, வெளி. 12:10)
   c). சர்ப்பம் : இந்த வார்த்தையின் மூலம் அவனுடைய நேர்மையின்மையும், வஞ்சகத்தன்மையும் குறிப்பிடப்படுகிறது. (யோபு 26:13, 1 கொரி. 11:3)
   d). வலுசர்ப்பம் : வலுசர்ப்பம் ஒரு கடல் மிருகம் (சர்ப்பம் அல்லது கடல் பூதம்) உலகத்திலுள்ள கடல்களில் அவனுடைய செயல்பாடுகளை குறிக்கிறது. (ஏசாயா 51:9, வெளி. 13:2).
   e). பெயல்செபூப் / பெயல்செபூல் : சீரிய மொழியில் அதன் பொருள் ''சாணி மலையின் பிரபு'' – ''ஈக்களின் பிரபு'' (மத். 10:25, லூ.11:15, 18, 19, வெளி. 13:2)
   f). பேலியாள் : (2 கொரி 6:15) பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தை பிரயோஜனமற்றதை குறிக்க பயன்படுத்தப்படுகிறது. (1 சாமு. 10:27, 1 இரா. 21:13).
   g). லூசிபர் : பொருள் : ''விடிவெள்ளி'' (ஏசாயா 14:12)
   h). பொல்லாங்கன் : இது அவனது குணத்தைக் குறிக்கிறது. (மத். 13:19, 1 யோ. 5:19)
   i). சோதனைக்காரன் : அவனுடைய செயல்பாட்டை குறிக்கிறது. (1 தெச 3:5)
   j). ''இந்த பிரபஞ்சத்தின் தேவன்'': (2 கொரி 4:4), எல்லா பொய்யான மார்க்கங்களும், சாத்தானுடைய ஆராதனை வழக்கங்களுக்கும் நிறுவனர். அவனுக்கு ''ஊழியக்காரர்கள்'' (2 கொரி 11:5), ''உபதேசங்கள்'' (1 தீமோ 4:1) ''பலிகள்'' (1 கொரி 10:20), ''ஜெப ஆலயங்கள்'' (வெளி. 2:9) இருக்கின்றன.
   k). ஆகாயத்தின் அதிகாரப் பிரபு : (எபே. 2:2, 6:12) தீய தூதர்களின் தலைவன் (மத். 24:41), பிசாசுகளின் பிரபு (மத். 12:24)
   l). உலகத்தின் அதிபதி : (யோ. 12:31, 16:11) உலகத்திலுள்ள அரசாங்கங்களின் மீது அவனுக்கு இருக்கிற ஆதிக்கத்தை இது குறிக்கிறது.

B. சாத்தானுடைய கிரியைகள்

சாத்தானுடைய பல பெயர்கள், அவனுடைய வேலையின் தன்மையை குறிக்கின்றன. அவனுடைய நோக்கம் ஏசாயா 14:4ல் குறிக்கப்பட்டுள்ள. ''நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்'' சாத்தான் தேவனை நேரடியாக தாக்க இயலாததால், அவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற பலவிதமான வழிகளை பயன்படுத்துகிறான். அவன் தேவனின் சிருஷ்டிப்பின் மகுடமாகிய மனிதனை கீழ்க்கண்ட வழிகளில் தாக்குகிறான்.

1). பொய் சொல்லுதல் (யோ. 8:44, 2கொரி. 11:3)
2). சோதித்தல் (மத். 4:1)
3). திருடுதல் (மத். 13:19)
4). துன்புறுத்துதல் (2கொரி. 12:7)
5). தடைசெய்தல் (1தெச. 2:18)
6). புடைத்தல் (லூக்கா 22:31)
7). பிறரைப் போலவே நடித்தல் (மத்.13:25; 2 கொரி. 11:14)
8). குற்றஞ்சாட்டுதல் (வெளி. 12:9-10)
9). நோயால் தொல்லைப்படுத்துதல் (1கொரி. 5:5, லூக்கா 13:6)
10). தனக்கு உரிமையாக்கிக் கொள்ளுதல் (யோ.13:27)
11). கொலை செய்தலும், விழுங்குதலும் (1பேதுரு 5:8, யோ.10:10)

C. சாத்தானின் முடிவு

1). உபத்திரவத்தின் நாட்களில், குறைந்த காலம் பூமியில் தள்ளப்படுவான். (வெளி. 9:1, 12:9,10, 12-13).
2). கிறிஸ்து தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்க வல்லமையோடும் மகிமையோடும் பூமிக்கு திரும்ப வரும்பொழுது, சாத்தான் பாதாளத்தில் தள்ளப்படுவான். (வெளி. 20:1-3).
3). கொஞ்சகாலம் அவன் விடுதலையாக்கப்படுவான். அந்நேரத்தில் பூமியில் தேவனுடைய நோக்கத்தை சீர்குலைக்க முயற்சிப்பான். (வெளி. 20:3).
4). அவனுடைய திட்டம் தோற்றுப்போகும், வானத்திலிருந்து அக்கினி விழுந்து சேனையை அழிக்கும். இறுதியாக அவனும் அவனுடைய தூதர்களும் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். அங்கே அவர்கள் நித்திய காலமாக வதைக்கப்படுவார்கள். (வெளி. 20:7-10, மத். 25:41).

தீய தூதர்கள்

அவைகளை இரண்டு பிரிவுகளாக நாம் பார்க்கலாம்:

a). சிறையில் வைக்கப்பட்டுள்ள தூதர்கள்
b). சுயாதீனமுள்ள தூதர்கள்.

A. சிறையில் வைக்கப்பட்டுள்ள தூதர்கள்

அவைகள் 2பேதுரு 2:4லும் யூதா 6லும் குறிப்பிடப்பட்டுள்ளன.

1). 2பேதுரு 2:4-அவைகள் பாவம் செய்ததாகவும், ''நரகத்திலே தள்ளப்பட்டு, நியாயத்தீர்ப்பின் நாளுக்காக வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மட்டும் பேதுரு குறிப்பிடுகிறார்.
2). இந்த தூதர்கள் தேவகுமாரர் என்றும் ''மனுஷகுமாரத்திகளுடன்'' சஞ்சரித்ததின் நிமித்தம் இயற்கைக்கு மாறான பிள்ளைகள் அல்லது இராட்சதர் உருவாகினர் (எபிரேய பாஷையில், ''நெபிலிம்'' பொருள்: ''விழுந்து போனவர்கள்''-ஆதி. 6:1-4) இதுவே யூதா 6,7-ல் குறிப்பிடப்பட்டுள்ள ''அந்நிய மாம்சம்'' ஆகும். அவர்கள் பூமிக்கு வந்து, மனித சரீரங்களை எடுத்து இப்படிப்பட்ட அருவருப்புகளைச் செய்ய அவர்கள் விட்டுவந்த வாசஸ்தலம் பரலோகம்.

B. சுயாதீனமுள்ள தூதர்கள்

1). சில வேளைகளில் தங்கள் தலைவனாகிய சாத்தானோடு தொடர்புபடுத்தியும் (மத்.25:41, வெளி.12:7-9) அல்லது சில வேளைகளில் தனியாகவும் (சங்-78:49, ரோ-8:38, 1கொரி-6:3, வெளி. 9:14) குறிப்பிடப்பட்டுள்ளன.

2). துரைத்தனம், அதிகாரம், வல்லமை, கர்த்தத்துவம் ஆகியவற்றுடன் இணைத்து கூறப்பட்டுள்ளன. (எபே. 1:20)

3). அவர்கள் வெளிப்படையாக எபே. 6:12, கொலோ. 2:15-ல் குறிக்கப்பட்டுள்ளனர்.

C. தீய தூதர்களின் கிரியைகள்

1). துன்மார்க்கனை துன்பப்படுத்த, வதைக்க தேவன் அவர்களை விடுவிக்கலாம் (சங். 78:49).

2). தன்னுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் செயல்படுத்த சாத்தானுக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கிறார்கள். (எபே. 6:12)

3). நல்ல தூதர்களை அவர்களுடைய வேலைகளில் எதிர்க்கிறார்கள். (தானி.10:12-13).

4). தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் எதிராக சரீரப்பிரகாரமான துன்புறுத்துதல், உபத்திரவங்கள், பழிசொல்லுதல் ஆகியவற்றின் மூலம் விசுவாசிகளை கிறிஸ்துவிடமிருந்தும், அவருடைய பூரண சித்தத்திலிருந்தும் பிரிக்க முயற்சிக்கிறார்கள். (ரோ. 8:38). இந்த தீய தூதர்களை நியாயத்தீர்ப்பு செய்வதில் விசுவாசிகளுக்கும் பங்குண்டு. இறுதியாக இவர்கள், தங்கள் தலைவனாகிய சாத்தானோடு அக்கினிக் கடலில் பங்கடைவார்கள்.

பிசாசுகள்

A. பிசாசு என்ற வார்த்தை

1). "டையமோனியன்" என்ற கிரேக்க வார்த்தை "பிசாசுகள்" (ஆங்கிலம் - டீமன்) என்று நவீன மொழிபெயர்ப்புகளில் சரியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் டீமன் என்பதற்குப் பதிலாக டெவில் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது வருத்தத்திற்குரியதே. (உபா.32:17, சங். 106:37, மத். 8:31, மாற்கு 1:34, லூக்கா 8:2).

2). "அசுத்த /தீய ஆவிகள்" - பிசாசுகளையும் குறிக்கும். (மத். 10:1, லூக்கா 9:42)

B. பிசாசுகள் யாவை?

அவற்றின் தோற்றத்தைக் குறித்து வேதாகமம் ஒன்றும் கூறாவிட்டாலும், கீழ்க்கண்ட காரியங்களை நாம் தெளிவாக அறியலாம்:

1). அவைகள் மரித்துப்போன கெட்ட மனிதர்களின் ஆவிகள் அல்ல.இரட்சிக்கப்படாத மரித்தவர்களின் ஆவிகள் "நரகம் அல்லது பாதாளத்தில்" உள்ளன என்றும்- பூமியில் உலாவுவதில்லை என்றும் வேதாகமம் தொடர்ந்து கூறுகிறது. (சங். 9:17, எசே. 32:17-24, லூ. 16:23, வெளி-20:13). இயேசு மாத்திரமே பாதாளத்தின் திறவுகோல்களை வைத்திருக்கிறார். (வெளி. 1:18).

2). அவைகள் விழுந்துபோன தூதர்கள் அல்ல:

a). விழுந்துபோன தூதர்கள் மனித சரீரங்களுக்குள் புகும்படி நாடியதாக எங்கேயும் குறிப்பிடப்படவில்லை.

b). அவைகளின் செயல்பாட்டு எல்லை பூலோகத்தில் அல்ல,வானங்களிலேயே உள்ளது.

3). அவைகள் ஆதாமுக்கு முன்னிருந்த இனம் அல்லது ஆதி-6ல் குறிப்பிட்டுள்ளவர்களின் உடலிலிருந்து விடுபட்ட ஆவிகள் என்று சில வேத நிபுணர்களால் கருதப்பட்ட ஒரு வகை ஆவி வஸ்துக்கள் ஆகும்.

C. பிசாசுகளின் கிரியைகள்

பிசாசுகளும், தங்கள் தலைவனாகிய சாத்தானின் தீமையான திட்டங்களையும், நோக்கங்களையும் செயல்படுத்தஅவனுடன் இணைந்து அவனுக்குக் கீழ்ப்படிந்தும் கிரியை செய்கின்றன.

1). அவைகள் சரீரங்களுக்குள் புகுவதை மிகவும் விரும்புகின்றன. அவைகள் மனித சரீரங்களை பெருமளவில் வசப்படுத்துவது மட்டுமல்ல, சில வேளைகளில் மிருகங்களையும் வசப்படுத்தவும் முனைகின்றன. (மாற்கு 5:8-14, அப். 16:16)

2). அவைகள் வியாதியை உட்புகச் செய்கின்றன. (யோபு 1:5-10, லூ. 9:37-42)

3). அவைகள் மனகோளாறுகளை ஏற்படுத்துகின்றன. (மத். 5, 4-5, லூ. 8:35)

4). அவைகள் அநேகரை பாலுணர்வு அசுத்தங்களுக்கு நேராய் நடத்துகின்றன (மாற்கு 1:23-27, லூ. 4:33)

5). அவைகள் பொய்யான போதனைகளை பரப்புகின்றன. (1தீமோ. 4:1)

6). அவைகள் தேவபிள்ளைகளின் ஆவிக்குரிய முன்னேற்றத்தை தடுக்க முயற்சிக்கின்றன. (எபே. 6:12)

7). அவைகள் சில வேளைகளில், தேவனின் நோக்கங்களை நிறைவேற்ற அவரால் பயன்படுத்தப்படுகின்றன. (நியா. 9:23, 1சாமு.16:14).

<u>பிசாசுகளுடன் உள்ள ஈடுபாட்டில் மூன்று அடிப்படை விதங்கள் உள்ளன</u>

1). ஆவிக்குரிய அல்லது ஆவியின் தன்மைகள் : உ.ம். மரித்தவர்களின் ஆவிகளுடன் பேசும் கூட்டம், மாயமந்திரம்.

2). குறி சொல்லுதல்: உம். பில்லிசூனியம்,மந்திர ஆற்றலால் முன்னதாகக் காணுதல்,கைரேகை, ஜாதகம்..

3). பிசாசு வணக்கம்: பேய்த்தனமான சடங்குகள், சூனியம், பில்லிசூனியம்...

விசுவாசிகளாக நாம் இவை அனைத்திற்கும் விலகி இருக்க வேண்டும். இவைகளுடன் நாம் ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை.

<u>சாத்தான் தீய தூதர்கள் பிசாசுகள் மீது நம்முடைய அதிகாரம்</u>

A. சாத்தான் மீதும் அவனுடைய எல்லா தீய சக்திகளின் மீதும் ஏற்கனவே இயேசு வெற்றிபெற்றுவிட்டார் என்று வேதாகமம் தெளிவாய் சொல்லுகிறது. (1யோ.3:8, லூ.10:18, கொலோ.2:15).

B. கிறிஸ்து அவைகளின் மீது எல்லா அதிகாரத்தையும் நமக்கு தந்திருக்கிறார். (லூ.10:19, மத். 28:18-19. எனவே கிறிஸ்துவுடன் உள்ள நம்முடைய உறவு சரியானதாக இருந்தால் நாம் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை.

C. வேதாகமம் நமக்கு அறிவுறுத்துகிறது.
   1). சாத்தானுடைய வல்லமையை எதிர்க்க: (1பேதுரு 5:9, யாக். 4:7)
   2). அவனுக்கு எதிராய் நிற்க (எபே. 6:11, 13-14).

D. நம்முடைய பாதுகாப்பின் ஆயுதம் உண்மை, நீதி, சமாதானத்தின் சுவிசேஷம், விசுவாசம், இரட்சிப்பு, ஜெபம் ஆகியவற்றால் அடங்கியது. (எபே. 6:14:18).

E. நம்முடைய தாக்குதலின் ஆயுதங்கள்:
   1). ஆவியின் பட்டயம்-தேவனுடைய வார்த்தை (எபே.6:17).
   2). ஆட்டுக்குட்டியின் இரத்தம்.
   3). நம்முடைய சாட்சியின் வசனம் (வெளி.12:11)
   4). இயேசுவின் நாமம் (மாற்கு 16:17).

குறிப்பு: ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒருவருடைய வாழ்வில் அல்லது செயலில் பிசாசுடைய பிசாசுகளுடைய தெளிவான செயல்பாட்டை நீங்கள் அறியும்பொழுது, நீங்கள் வல்லமையை எடுத்து பிசாசை பிசாசுகளை துரத்த வேண்டும். அந்த நபருக்காகவோ, அல்லது சூழ்நிலைக்காகவோ ஜெபிக்க அது நேரமல்ல, ஆனால் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமைக்கு அந்தகாரத்தின் சக்திகள் கட்டுப்பட அவைகளை கடிந்து கொள்ளவும் அவைகளுக்கு கட்டளையிடும் நேரம், அப்பொழுது அவன் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் ஓடிப்போவான்!.

நல்ல தூதர்கள்

A. தூதர்கள்

"தூதர்கள்" என்ற வார்த்தை எபிரெயத்திலும் கிரேக்கத்திலும் "தூதுவன்" என்று பொருள்படும். இந்த வார்த்தை மனித அல்லது மனிதனுக்கு அப்பாற்பட்ட தூதுவர்களைக் குறிப்பதாக இருந்தால், அதை சந்தர்ப்பம் மட்டும் தான் தெளிவுபடுத்த முடியும். (எ.கா. லூ.7:24, வெளி. 2ஆம், 3ஆம் அதிகாரங்கள்). அவைகள் சிறகுள்ள வஸ்துக்களாக விவரிக்கப்பட்டுள்ளன. (தானி. 9:21, வெளி. 14:6).

B. கேரூபீன்

1). இந்த வார்த்தையின் பொருள் தெளிவாக இல்லாவிட்டாலும், "மூடுவதற்கு", "காப்பதற்கு" என்று பொருள்படுவதாக எண்ணலாம்.
2). இவைகள் பெரும்பாலும் தேவனுடைய சிங்காசனத்தை காப்பதற்கு அதிகமாக இருக்கின்றன. (சங். 18:9-10, 80:1, வெளி. 4:6 - ff) சாத்தான் விழுவதற்கு முன்பு ஒரு கேரூபாய் இருந்திருக்க வேண்டும். (எசே.28:14-16).

C. சேராபீன்

1). ஏசா-6:2, 6-ல் பெயர்களாக மட்டும் அவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
2). அவைகள் கேரூபை விட வித்தியாசமானவைகள்.
   a). தேவன் கேரூபுக்கு மேலாக அமர்ந்திருக்கிறார். (1சாமு.4:4, சங்.80:1, 99:1) ஆனால் சேராபீன் அவருக்கு மேலாக நிற்கிறது. (ஏசாயா 6:2).
   b). கேரூபீன் தேவனுடைய சிங்காசனத்திற்கு காவலாளிகளாகவும், அவருடைய பிரதிநிதிகளாகவும் அல்லது தூதுவர்களாகவும் சேவை செய்கின்றன. சேராபீம் பரலோகத்தை தேவனுடைய ஆராதனையில் நடத்தவும், ஏற்றுக்கொள்ளகூடிய ஆராதனைக்காக தேவனுடைய ஊழியக்காரர்களை பரிசுத்தப்படுத்துகின்றன.

D. பிராதான தூதர்கள்

1). பிரதான தூதன் வேதாகமத்தில் இரண்டு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. (1தெச.4:16, யூதா 9).
2). மிகாவேல் தனக்கு சொந்த தூதர்களுள்ள பிரதான தூதனாக காண்பிக்கப்பட்டுள்ளான். (வெளி. 12:7).
3). காபிரியேலும் பிரதான தூதனாகவே எண்ணப்பட்டுள்ளான்.

தேவனின் சுகமளிக்கும் வல்லமை

அத்தியாயம் 1 நோய் எங்கேயிருந்து உருவானது?

தேவனின் சுகமளிக்கும் வல்லமையை பயன்படுத்தும் விசுவாசத்தை வளர்ப்பதற்கு, நோயின் ஆரம்பத்தையும், தேவன் அதற்கு விரோதமாய் இருக்கும் காரணங்களையும் முதலில் புரிந்து கொள்வது அவசியம். நாம் மனித இனத்தின் ஆரம்பத்திற்கு சென்று, மனித சிருஷ்டிப்பில் என்ன நடந்தது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதன் பின், வீழ்ச்சியின் விளைவுகளிலிருந்து மனிதனை முழுவதுமாய் மீட்கும் அவருடைய விருப்பத்தையும், நோயின் மீது தேவனுடைய எண்ணத்தையும் புரிந்து கொள்ள ஆரம்பிக்க வேண்டும்.

ஆதாம் ஆவிக்குரிய பூரணனாக சிருஷ்டிக்கப்பட்டான்.

ஆதாமும் ஏவாளும் பாவமற்றவர்களாக, குற்றமற்றவர்களாக, தேவனுடைய சாயலின்படியும், ரூபத்தின்படியும் பூரணராக சிருஷ்டிக்கப்பட்டார்கள். (ஆதி.1:26). அவர்கள் தேவனுடன் நெருங்கிய உறவு கொண்டு அவருடன் கறைபடாத ஐக்கியத்தில் மகிழ்ந்திருந்தார்கள். அவர்கள் களங்கமற்றவர்களாகவும், தீமையின் எந்த உணர்வும் இல்லாதவர்களாகவும் இருந்தார்கள்.அவர்கள் உள்ளான சமாதானத்தையும் இசைவையும் அனுபவித்தார்கள். அவர்கள் பயத்தைக் குறித்து அறிந்திருக்கவில்லை. அவர்கள் தடை உத்தரவுகள் அல்லது உயர்வு தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றால் தொந்தரவுபடுத்தப்படவோ, தீமையான அல்லது அழிவுக்குரிய புலன்களில் சுய உணர்வுள்ளவர்களாகவோ இல்லை. அவர்கள் நிர்வாணிகளாய் இருந்தார்கள். ஆனால் அதை குறித்து குழப்பம் உடையவர்களாகவோ, குற்றம் அல்லது வெட்கம் உடையவர்களாகவோ இல்லை. (ஆதி.2:25). இந்த எல்லா காரியங்களும் அவர்களுடைய பூரணமான ஆரோக்கியத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. சிருஷ்டி கர்த்தாவின் கரங்களில் புதியவர்களாக, ஆவிக்குரிய விதத்தில், இயல்பியல் சார்ந்து, மனநிலை சார்ந்து, உணர்வுகள் சார்ந்துள்ள பூரண வஸ்துக்களாக இருந்தார்கள். அவர்கள் தேவனின் உன்னதமான படைப்பாக அவருடைய சொந்த சாயலின்படியும் ரூபத்தின் படியும் சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்கள். (ஆதி.1:26).

ஆதாம் மனரீதியாகவும் உளரீதியாகவும் பூரணமாய் படைக்கப்பட்டிருந்தான்.

தேவனுடைய ரூபம் மற்றும் சாயலில் உருவாக்கப்பட்டு, ஆதாம் தேவனிடத்திலிருந்து குறிப்பிடத்தக்க திறமை வாய்ந்த மனதையும், அறிவையும் சுதந்தரித்திருந்தான். நல்ல ஆரோக்கியத்திற்கு முழுவதுமாய் உகந்த நேர்மறையான காரியங்களை நினைக்கும் திறமையை குறிப்பிடத்தக்க செயல்திறமையின் பகுதியாக இருந்தது. ஆதாமின் வியத்தகு அறிவுத்திறனை ஏற்றுக் கொள்ளும் விதமாக தேவன் சிருஷ்டிப்பின் எல்லா மிருகங்களுக்கும் பெயரிடும் பொறுப்பை ஆதாமிடம் கொடுத்திருந்தார் (ஆதி.2:19,20). மேலும் அவர் நிர்வகிக்கும் பொறுப்பையும், பூமியையும் எல்லா சிருஷ்டிப்புகளையும் ஆளுகை செய்யும் பொறுப்பையும் அவனுக்கு கொடுத்தார். கூறப்பட்டுள்ள பொதுவான கருத்து என்னவென்றால், உளரீதியாகஆதாம் தேவனுக்கு இணையாக இருந்தான். ஏனெனில், அவனும், தேவனும் இசைந்து மகிழவும்,தமக்குள்ளே மகிழ்ச்சியான உறவும் ஐக்கியமும் கொள்ளவும் அவனுக்கு முடிந்திருந்தது. ஆதாம் ''தேவனுக்கும் சற்று சிறியவனாக'' உருவாக்கப்பட்டிருந்தபடியால், கணிசமான அளவு தேவனோடு ஒத்துஇயங்க அனுமதிக்கப்பட்டிருந்தான். (சங்கீதம் 8:5)

ஆதாம் உணர்வுரீதியாக பூரணமாக படைக்கப்பட்டான்

ஆரம்ப நிலையில் ஆதாம் நேர்மறையான உணர்வுகளை மாத்திரம் அனுபவித்தான் என்று நான் நம்புகிறேன். அவன் ''நல்லதாக'' இருந்ததையே அனுபவித்தான். அன்பு, சமாதானம், சந்தோஷம் ஆகியவைகளை அவனுடைய துக்ககரமான கீழ்ப்படியாமைக்குப் பின்பே, எதிர்மறையான உணர்வுகளான பயம், கவலை, திகில் ஆகியவற்றை அனுபவிக்க ஆரம்பித்தான். தோற்றுவிக்கிறதும், தாங்குகிறதுமான நேர்மறையான உணர்வுகளை போலவே, வல்லமை மிகுந்த எதிர்மறையான உணர்வுகளும், இழப்பையும் துன்பத்தையும் விளைவிப்பவையாகும். **நன்மை தீமை அறியத்தக்க**

மரத்தின் கனியை புசிப்பதின் அபாயத்தை குறித்து தேவன் அவனை எச்சரித்திருந்தார். ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தால், எப்பொழுதும் அவனும் அவன் சந்ததிகளும் நன்மை அனுபவித்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது வீழ்ச்சியின் காரணத்தால் மனுக்குலம் எல்லாவிதமான துக்ககரமான எதிர்மறையான உணர்வுகளையும், நேர்மறையானதும், மகிழக்கூடியதுமான உணர்வுகளின் அற்புதமான எல்லையையும் அறிந்திருக்கிறது.

ஆதாம் உடல்ரீதியாக பூரணமாக படைக்கப்பட்டான்

தேவன் ஆதாமின் சரீரத்தின் ஒவ்வொரு பகுதிகளையும் தனிப்பட்ட முறையில் வடிவமைத்து சிருஷ்டித்தார். அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது, (ஆதி.1:31). மனித உடலமைப்பும், உடல் கூறுகளும் என்றுமே உருவாக்கப்பட்டிராத மிகவும் வியக்கத்தக்க இயந்திரமாக இன்னும் இருக்கிறது. நவீன அறிவியலில் இன்றைய முன்னேற்றங்களும், மனிதன் உருவாக்கிய வியத்தகு காரியங்களும், மனித வஸ்துவின் அற்புதமான விளங்காத புதிரோடு ஒப்பிட முடியாது. தாவீது ராஜா நம் எல்லோரின் சார்பாகவும் ''நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டேன்'' என்று பேசுகிறான். (சங்.139:14). தேவன் விரும்பியபடி எல்லாம் ஒழுங்காக செயல்படும்பொழுது, நாம் எவ்வளவு அற்புதமாக உருவாக்கப்பட்டோம் என்று அறிகிறோம். இருப்பினும், காரியங்கள் தவறாய் நடக்கும்பொழுது, நாம் எவ்வளவு பிரமிப்பாய் உருவாக்கப்பட்டோம் என்பதையும் அறிகிறோம்.

முழு மனிதனின் பூரணத்துவம்

தேவன் முழு மனிதனுக்காகவே எப்பொழுதும் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறார். அவர் நம்மை முழு நிறைவாக உருவாக்கியிருக்கிறார், இயேசு கிறிஸ்துவில் உள்ள அவரது இரட்சிக்கும் வல்லமை, முழு மனிதனுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது. முழு மனிதன் மீதுள்ள தேவனின் கரிசனையில்,தேவனின் குணமாக்கும் வல்லமை இன்னும் அதிகமாக வேரூன்றியுள்ளது.

தவறு எதில் நிகழ்ந்தது?

சரித்திரத்தில், மனிதன் துக்கத்தின் ஓரத்தில் நின்ற கணம் ஒன்று இருந்தது. கீழ்ப்படியாமை என்னும் செயல் மனுக்குலத்தை தேவனுடைய பிரசன்னத்திலிருந்து நீண்ட இருளுக்குள் மூழ்கச் செய்தது. முதல் ஜோடிக்கு தோட்டத்தில் உள்ள எல்லா மரம், செடி, பழங்களை அனுபவிக்க வழி இருந்தது. நன்மை தீமை அறியத்தக்க மரம் மட்டும் அதில் விலக்கமாயிருந்தது. தேவன் அவர்களிடம் நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்''. என்று கூறியிருந்தார். (ஆதி. 2:16,17)

அவர்கள் அவருக்குக் கீழ்ப்படியாதிருந்தால் ஆவிக்குரிய மரணத்தை அடைவார்கள் என்று தேவன் ஆதாமையும் ஏவாளையும் எச்சரித்தார். அந்த ஆவிக்குரிய மரத்தின் நேரடி விளைவாக, சரீரப்பிரகாரமான மரணத்தையும் இறுதியில் அனுபவிப்பார்கள். தேவன் அவர்களிடம் சாகவே சாவீர்கள். என்று சொல்லியிருந்தார். ஏனென்றால் ஆவிக்குரிய மரணத்தை அவர்கள் அடைந்தபடியால், மரணத்தின் பிரமாணம் அவர்களுக்குள் ஆதாமும் ஏவாளும் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து துரத்தப்படுவதற்கு ஏதுவாயிருந்த ஆவிக்குரிய மீறுதலின் நேரடி பிரமாணம், சரீர மரணம். ஏனென்றால், அவர்களின் வாழ்க்கையின் ஆதாரமாகிய தேவனுடைய பிரசன்னத்திலிருந்து துண்டிக்கப்பட்டதன் விளைவாக பாவம், மரணம் ஆகியவற்றின் பிரமாணம் அவர்களுக்குள் செயல்படத் தொடங்கியது. படிப்படியான சீரழிவு ஆரம்பித்தது. தேவனுடன் சரியான உறவில் நிலைத்திருந்திருந்தால், இது மனுக்குலத்திற்கு ஒரு போதும் வந்திருக்காது. சீரழிவின் செயல்முறை, நோய் என்றும் வயதாகுதல் என்றும் அழைக்கப்படுகிறது. ஏதேனின் துக்கரமான நிகழ்விலிருந்து அது மனிதனுக்கு துன்பம் விளைவித்தது.

<u>கீழ்ப்படியாமை என்னும் ஒரு செயல், இன்று மனிதனை ஆவிக்குரிய மனரீதியாக உடல்ரீதியாக சபிக்கும் எல்லா எதிர்மறையான காரியங்களை உலகிற்கு பரிட்சயப்படுத்தியது.</u>
<u>கீழ்க்கண்டவற்றிற்கு அது ஆதாரம்: -</u>

நோய்	DIS - EASE
ஒழுங்கின்மை	DIS - ORDER
இயலாமை	DIS - ABILITY
இன்னல்	DIS - TRESS
நிம்மதியின்மை	DIS - COMFORT
பேராபத்து	DIS - ASTER
உடன்பாடின்மை	DIS - CORD
உற்சாகமின்மை	DIS - COURAGEMENT
இசைவின்மை	DIS - HARMONY
ஒற்றுமையின்மை	DIS - INTEGRATION

நல்ல ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் இந்த எல்லா வித எதிர்மறையான குண்ங்களும் உணர்வுகளும் கீழ்ப்படியாமையிலிருந்து வந்தன. அவைகள் ஆரோக்கியத்தை அழிக்கிறவைகள். கீழ்ப்படியாமையின் மூலம் ஆரம்பித்த நோய், மற்ற எல்லா தீமைகளுக்கும் காரணமாய் அமைந்தது.

வீழ்ச்சியின் ஆவிக்குரிய துக்ககரமான நிகழ்வு

கீழ்ப்படியாமையின் உடனடியானதும் நேரடியானதுமான விளைவு, ஆதாமையும், ஏவாளையும் தேவனுடன் வைத்திருந்த மகிமையான உறவையும், அந்த உறவோடு சம்பந்தப்பட்டிருந்த அனைத்து நன்மைகளையும் பறிகொடுக்கச் செய்தது. அவர்கள் களங்கமின்மையை இழந்து, குற்ற உணர்வையும், ஆக்கினைத் தீர்ப்பையும் சுதந்தரித்தார்கள். அவர்கள் தெய்வீக பிரசன்னத்திலிருந்து வாழ்நாள் முழுவதிற்கும் துரத்தப்பட்டார்கள். மனிதன் அவனுடைய ஆளுகையையும் இழந்தான். இந்த உண்மையான ஆளுகை அவனுக்கிருந்த தேவனுடைய ரூபத்தையும் சாயலையும், தேவனோடுள்ள அவனது சரியான உறவையும் சார்ந்திருந்தது. மனிதன் சிருஷ்டிப்பில் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தான். அப்பொழுதிருந்தே, மனிதன் சிருஷ்டிப்பின் மீதுள்ள தனது ஆளுகையை மீண்டும் பெற்றுக்கொள்ள முயற்சி செய்து வருகிறான். ஆதாமின் எல்லா சந்ததிகளும் தேவனுடைய சாயலை சுதந்தரிக்க வேண்டியதாயிருந்தது. பதிலாக அவர்கள் ஆதாமின் வீழ்ச்சியின் சாயலை சுதந்தரித்துக் கொண்டார்கள்.(ஆதி. 5:3).

வீழ்ச்சியின் மனரீதியானதும் உணர்வுரீதியானதுமான துக்க நிகழ்வு

கீழ்ப்படியாமையின் மூலம், மனிதன் மனரீதியும் உளரீதியுமான பூரணத்தை இழந்தான். இன்று அவன் ஆதிக்கத்தை நிலைநாட்ட தேவையான அறிவை பெற்றுக்கொள்ள எல்லா வழிகளிலும் முயற்சிக்கிறான், ஆனால் சத்தியம், தேவனோடுள்ள சரியான உறவை சார்ந்துள்ளது, ஏனெனில் தேவனே சத்தியத்தின் ஆதாரம், தேவன் கொடுத்த சரியாய் எண்ணும் திறமையான உளரீதியான சுதந்தரத்தை அவன் இழந்ததினிமித்தம் முழுமையான உணர்வுகளையும் இழந்து விட்டான்.

ஆதாம் பிசாசுக்கு தன்னை விற்றுவிட்டதால், பிசாசு இந்த உலகுக்கு அதிபதியாகிவிட்டான். (2கொரி.4:4). தேவனால் கொடுக்கப்பட்ட அந்நேரத்திலிருந்தே மனுக்குலம், பிசாசுக்கும் அவனது சேனைக்கும் இரையாகிவிட்டது. வீழ்ச்சியிலிருந்து மனுக்குலம், துக்கம் உபத்திரவம், கஷ்டம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவே இல்லை. (ஆதி.3:15-19).

வீழ்ச்சியின் உடல்ரீதியான துக்க நிகழ்வு

“பின்பு அவர் ஆதாமை நோக்கி: உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தப்படியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்ததத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் வெளியின் பயிர் வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய், நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். (ஆதி.3:17-19.)

மனுக்குலம், சபிக்கப்பட்டதும், வாழ்வதற்காக நெற்றி வேர்வை சிந்தி கஷ்டப்படவேண்டியதுமான பூமியை சுதந்தரித்தது. மனிதனுடைய உழைப்புக்கு பதிலாக, முள்ளையும் குருக்கையும் முளைப்பித்தது. தேவனுடைய பிரசன்னத்திலிருந்தும் ஜீவ விருட்சத்தினின்றும் அவன் துரத்தப்பட்டான். அவன் மரணத்தால் சூழப்பட்டிந்தான். மண்ணுக்கே திரும்புவாய் ஏவாளோ எல்லா சந்ததிகளின் பெண்களுக்கும் கொடுக்கும்படியான ஒரு குறிப்பிட்ட சாபத்தை பெற்றுக் கொண்டாள். இது துக்கத்தையும், பிள்ளைப் பேற்றில் வேதனையையும், அவளுடைய கணவனின் ஆளுகைக்கு கட்டுப்படுதலையும் உள்ளடக்கியது. (ஆதி.3:16).

மனிதன் சுகத்தை இழந்து நோயை சுதந்தரித்துக் கொண்டான். முழு மனுக்குலத்தையும் துன்பப்படுத்தும் நோயின் இன்றைய கொடுமையின் ஆரம்பம் ஏதேனின் துக்க நிகழ்வில் அரங்கேற்றப்பட்டது. அப்பொழுதே பாவம் உலகத்தில் புகுந்தது. பாவத்துடன் நோயும் வந்தது. மரணம், கட்டுப்படுத்தப்படாத நோயின் கடைசி பரிமாணம் ஆதாம் பாவம் செய்யாதிருந்தால், மனுக்குலம் ஒரு பொழுதும் பாடுகளையும் நோயையும் அறிந்திருக்காது. நன்மைதீமை அறியத்தக்க மரத்தின் கனியை புசிக்க அவன் தெரிந்திருந்தான் அந்த தீமையின் விளைவே வியாதி. எனவே எல்லா நோய்களும் சாத்தானிடமிருந்தே மறைமுகமாக வருகிறது தேவன் நோயின் காரணகர்த்தா அல்ல. அத்தியாயம் 2-ல் நோயின் பல்வேறு காரணங்களை நாம் விவாதிப்போம்.

அத்தியாயம் 2 மக்கள் எவ்விதம் நோய்வாய்படுகிறார்கள்?

நோய் மற்றும் வியாதியின் சில காரணங்கள்.

நோய் மற்றும் வியாதியின் சில காரணங்களை சுருக்கமாக கூறுகிறேன்.

1. **ஆதாம் விழுந்தபோது நோய் உலகத்தில் நுழைந்தது.**

   கீழ்ப்படியாமையின் நேரடி விளைவாக மனுக்குலத்தின் மீது வந்த சாபத்தின் ஒரு பகுதியே நோய் ஆகவே, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எல்லா நோயின் மூல காரணம் பாவமே. இது ''பாவத்தின் சம்பளத்தின்'' ஒரு பகுதியாகும். (ரோமர் 6:23). வியாதி நலம் இன்மையையும், சமாதானம் இன்மையையும் குறிக்கும் ஆதாமின் பாவத்திற்குப் பின்னர் அவனுடைய மனதும் உணர்வுகளும் இந்த நிலையில் தான் இருந்தன. அவன் சுதந்தரித்த குற்ற தீர்ப்பு, குற்ற உணர்வு, ஆக்கினைத் தீர்ப்பு, வெட்கம் ஆகியவற்றின் பாரம், அவனை நோய் தாக்கக்கூடிய அளவுக்கு பலவீனமுள்ளவனாக்கியது.

   வீழ்ச்சிக்கு முன்பு, உலகில் எந்த ஒரு நோய் பரப்பும் உயிர்ப்பொருளோ நுண் உயிரோ,அல்லது கிருமிகளோ இருக்கவில்லை என்பதை நாம் நம்புவதற்கு நல்ல ஆதாரம் உண்டு. தம்முடைய சிருஷ்டிப்பின் வேலையின் முடிவில், தேவன் எல்லாவற்றையும் மிகவும் நன்றாயிருந்தது என்று கண்டார். அங்கு ஏற்கனவே கிருமிகளும், புற்றுநோய் அணுக்களும், வியாதி-பரப்பும் நுண் உயிரின் முழு சேனையும் இருந்திருந்தால், அவர் இவ்வாறு கூறியிருக்க முடியாது. இந்த பயங்கரமான அழிவை உண்டாக்குகிற காரியங்கள் சாபத்துடன் சேர்ந்து வந்தன.

2. **பாவம்-தேவனிடமிருந்து பிரிவு, இன்னும் நோய்க்கு காரணமாகிறது.**

   பாவம் அடிப்படையில் தேவனுடைய ஆளுகையை மறுப்பதன் மூலம், தேவனுடைய வாழ்விலிருந்து நம்மை பிரிப்பதாகையால், இப்பொழுதும் இந்த பிரிவே நோய்க்கான முக்கிய காரணமாக இருப்பதை நாம் காண்கிறோம். இனி வெளிப்பட இருக்கிற தேவனுடைய இராஜ்யத்தில், எல்லா கலகங்களும் அமர்த்தப்படும் பொழுது, இனி எப்போதுமே வருத்தமோ, துக்கமோ, மரணமோ இருக்காது. (வெளி.21:4).

3. தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகிற பெலவீனங்கள் நோய்க்கு காரணமாகலாம்.

நோய்க்கு காரணமான குறிப்பிட்ட சில பெலவீனங்கள், சில நேரங்களில் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு கடந்து செல்கின்றன. அவைகள் வீழ்ச்சியினால் முதலில் உண்டானதும், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்ததற்குப் பரவியதுமான, விழுந்துபோன மனுக்குலத்தின் பெலவீனம் மற்றும் வலிமையின்மையின் ஒரு அம்சமாகும். குறிப்பிட்ட சில நோய்கள் தலைமுறை தலைமுறையாக வரலாம், அவை ஒரு குடும்ப பெலவீனமாக கருதப்படலாம். இருப்பினும், ஆவிக்குரிய அதிகாரத்தைக் கொண்டு இந்த அழிவை ஏற்படுத்தும் சங்கிலி முறிக்கப்படவும், அதன் வல்லமை சூனியமாக்கப்படவும் கூடும். ஒரு கிறிஸ்தவன், சர்வவல்ல தேவனே இப்பொழுது தன்னுடையபரம தகப்பனாயிருக்கிறார் என்பதை புரிந்து கொள்வதும், மனித மரபின் பாதிப்புகள் அல்ல தேவனே இப்பொழுது தன்னுடைய எதிர்காலத்தை (விதியை) நிர்ணயிக்கிறார் என்பதை நம்புவதும் அவசியமாகிறது.

4. அடிக்கடி நோய், நோய்பரப்பும் உயிர்ப்பொருட்களால் ஏற்படுகிறது.

நம்மைச் சூழ்ந்திருக்கும் வாழ்வின் மெய்ம்மை, நாம் ஒரு விழுந்துபோன உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை தொடர்ச்சியாக நினைப்பூட்டுகிறது. சிருஷ்டியின் ஆரம்பத்தில் நோய்பரப்பும் நச்சுக் கிருமியோ, நோய் பரப்பும் உயிர்ப்பொருட்களோ, வாதைகளோ இருக்கவில்லை. தேவன் சிருஷ்டித்த எல்லாமே ‘‘மிகவும் நல்லதாக இருந்தது. மனிதனின் கீழ்ப்படியாமையும், அதன் விளைவாக அவன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டதுமே, இவ்வுலகிற்குள் நோயும், வியாதியும் பிறக்க காரணமாயிருந்தன. அது முதற்கொண்டு மனுக்குலம், சாத்தானின் தந்திரத்தால் நமது சுற்றுச் சூழலுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நோய் மற்றும் வியாதியின் அழிபாடுகளோடு போராட வேண்டியுள்ளது.இது நிச்சயமாக தேவன் திட்டமிட்டிருந்த உலகம் அல்ல, நோய் மற்றும் வியாதியின் காரணர் அவர் அல்ல. மாறாக அவர் துயரும் மனுக்குலத்தைப் பார்த்து மனதுருகுகிறார், நம்முடைய வியாதிகளிலிருந்து நம்மை விடுவித்து, குணமாக்க வாஞ்சிக்கிறார். இயேசு பாடுபட்டு மரித்ததன் ஒரு நோக்கம் நம்முடைய வியாதிகளை சுகப்படுத்தவே- பாவத்திற்கும், நோய்க்கும் மாற்று மருந்தை வழங்கவே (1பேதுரு 2:24).

5. அழிவு மற்றும் மரணத்தின் உருவாக்கத்தின் ஒரு பகுதி நோயாகும்.

அளவுக்கதிகமான அழுத்தம் கொடுக்கப்படும்பொழுது, மிகுந்த பெலவீனமான இடத்தை முறிந்து போகச் செய்யும், வழிவழியாக வந்த மனித பெலவீனமே, விழுந்துபோன மனுக்குலத்தின் குறிகளில் ஒன்றாகும். ஆதாமின் ஒவ்வொரு விழுந்துபோன பிள்ளையும், இந்த பெலவீனத்தை சுதந்தரித்துக் கொள்கிறான், வாழ்வின் அழுத்தங்கள், சரீரப்பிரகாரமான மனரீதியான உணர்வுபூர்வமான பெலவீன பகுதியை தாக்குகின்றன. எனவே, பெரும்பாலான நோய்கள், ஒரு மனிதனின் குறிப்பிட்ட பெலவீனத்தை தாக்கி சோர்வடையச் செய்யும், வாழ்வின் அழுத்தங்களாலேயே விளைவிக்கின்றன.

6. விபத்துக்கள் நோயை உண்டாக்கலாம்.

விபத்துக்கள், உடல் நலக்குறைவின் இன்னொரு காரணமாகும். ஏதோ ஒரு விதமான விபத்தின் விளைவாக, மக்களுக்கு எல்லாவிதமான காயங்களும், குறைபாடுகளும் ஏற்படலாம். பெரும்பாலான விபத்துக்களுக்கு எந்த ஒரு மறைந்திருக்கும் ஆவிக்குரிய காரணமோ, ஆதாரமோ இருப்பதில்லை. அவைகள் எதிர்பாராதவிதமாக நேரிடக்கூடிய சில குறிப்பிட்ட காரணக்கூறுகளால் நிகழ்கின்றன. அவைகள் கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கும் நிகழலாம்.

விபத்துக்கள் மூலமாக ஏற்படும் சடுதியான மிக மோசமான வலுவின்மையின் பின் விளைவுகளில் ஒன்று, உணர்வுப்பூர்வமான வருத்தமும் மன அழுத்தமுமே. இது இன்னும் அதிகமாக மன அமைதியைக் குலைக்கக்கூடும், ஏனெனில், கிறிஸ்தவர்கள் அடிக்கடி எல்லவற்றையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரணத்தோடு இணைத்துப் பார்த்து, இதினிமித்தம், விபத்திற்கும் அதன் விளைவிற்கும் தேவனையோ அல்லது பிசாசையோ பழிக்கின்றனர்.இது, தேவன் ஏன் இதை அனுமதித்தார்

அல்லது இந்த பிரச்சனையை உண்டாக்கினார் போன்ற கடுமையான ஆய்வுக்கு நேராய் நடத்தக்கூடும். ''ஏன் எனக்கு இது நிகழ்ந்தது?.'' நான் என்ன தவறு செய்தேன்?'' ''நான் தேவனை எப்படி திருப்திபடுத்தாமற்போனேன்? ''இது தேவனின் தண்டனையா?'' போன்ற பல கேள்விகள் எழும்பலாம். இத்தகைய கடுமையான ஆய்வு, அந்த நபரில் குழப்பத்தை இன்னும் அதிகரித்து, அவரை தேவையில்லாத ஆவிக்குரிய அந்தகாரத்திலும், தாங்க முடியாத வேதனையிலும் ஆழ்த்திவிடும். பெரும்பாலான விபத்துகளுக்கு எந்த ஒரு மறைந்திருக்கும் காரணங்கள் இருப்பதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். சில இயற்கையான சூழ்நிலைகளின் விளைவுகளே, அவைகள் எப்போதும், நம் வாழ்க்கையை நாம் வாழும் விதத்தோடு நேரடியான தொடர்புடையவை அல்ல.

7. உடல்நலத்தை புறக்கணிப்பது நோயை விளைவிக்கிறது

உடல்நலம், உயிர்வீரியத்தின் பல அடிப்படை உண்மைகளைப் புறக்கணித்தால், நம் உடல்நலம் பாதிக்கப்படகூடும் என்ற உண்மையை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். உடல்நலத்தைப் பாதுகாக்க, சரியான உணவுமுறை கையாளப்பட வேண்டும். நம்முடைய வழக்கமான திட்ட உணவில், நாம் சேர்த்துக் கொள்ள வேண்டிய சில சத்துணவும், ஊட்டச்சத்தும் உள்ளன. திட்ட உணவில் உள்ள பற்றாக்குறைகளும், குறைபாடுகளும் இறுதியாக உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும். போதிய அளவு இளைப்பாறுதலும், உறக்கமும் இல்லாமையும் உடல்நலத்திற்கு கேடு உண்டாக்கும். அதிக வேலையும், மிகவும் குறைந்த அளவு ஓய்வும், இளைப்பாறுதலும் ஒருவருடைய ஆரோக்கியத்தை கெடுத்துவிடும். எப்பாப்பிரோதீத்து இதற்கு உதாரணம். (பிலி. 2:25-30). அவன் மரணத்திற்கு மிக சமீபமாய் இருந்தான். தேவன், அவருடைய மக்களுடைய சேவையில் அதிகமாய் வேலை செய்தது, அவனது இந்நிலைக்கு காரணமாய் அமைந்தது.

8. இயல்பான வயதாகுதல் சரீர பெலத்தை குறைக்கிறது.

ஒருவன் இளமையாய் இருக்கும்பொழுது, நல்ல ஆரோக்கியத்திற்குத் தேவையான வாலிப உயிரோட்டம் அவனுக்குள் இருக்கிறது. வேதாகமம் ''பனிக்கு சமானமான இளமையைப் பற்றி கூறுகிறது. (சங்.110:3). தாவீது மேலும், கழுகுக்குச் சமானமாய் ஒருவரது இளமை புதுப்பிக்கப்படுகிறது. (சங்.103:5) என்று கூறுகிறான். ஏசாயா இதை நம்முடைய இளமையின் பெலம் புதுப்பிக்கப்படுகிறது என்று தெளிவுபடுத்துகிறார். (ஏசாயா 40:31).

ஏரேமியா ''தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுசனுக்கு நல்லது'' (புலம்.3:27) என்று கூறுகிறார். வாழ்க்கையின் முந்தைய பகுதி, கடின உழைப்பிற்கான காலமாயிருக்கிறது. அது வாழ்வில் முக்கியமானதும், சரீர பெலத்தின் உச்சியாகவும் இருக்கிறது. சாலொமோன் பிந்தைய காலங்களின் வரையறைகளை வரைபடமாக விவரிக்கிறான். அவன் ''வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை'' (பிரசங்கி 12:1) என்று வற்புறுத்தினான். உனக்கு பெலம் இருக்கும்பொழுதும், அதை தீவிரமாய் செய்வதற்கு உயிர்வளம் இருக்கும்பொழுதும் தேவனை நேசித்து அவருக்கு சேவை செய்.

மோசே வயது முதிர்ந்தபொழுது, அவனுக்கு இன்னும் கண்பார்வையும் சரீர பெலமும் இருந்தது, அவனுடைய வாழ்வில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். (உபா.34:7). வாழ்க்கையின் முக்கிய பாகம் கடந்த பின்பு, பெலம் குறைவதும், கண் பார்வை மங்குவதும் வழக்கமான ஒன்று. முதிர்வயதாகும் பொழுது, நாம் ஆரோக்கியத்தையும், பெலத்தையும் எதிர்பார்க்கமுடியாது என்று பொருளாகுமா? நிச்சயமாக இல்லை. தேவன் ''உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலனும் இருக்கும்'' என்று வாக்களித்திருக்கிறார். (உபா.33:25).

அந்த குறிப்பிட்ட நேரத்தில் இருக்கும் நமது வயதுக்கு இணையாக நமது வாழ்க்கை முழுவதும் நல்ல ஆரோக்கியத்தை எதிர்பார்க்க முடியும் என்று இது போதிப்பதாக நான் நம்புகிறேன். சரீரரீதியாக படிப்படியாய் பலம் குறைந்து போவதின் அடையாளங்கள், தேவன் அவர்களிடம் விருப்பம் காட்டவில்லை என்பதைக் குறிப்பதாக நினைத்திருக்கிற அநேக வயது முதிர்ந்த கிறிஸ்தவர்களை நான் சந்தித்திருக்கிறேன். ஒரு வேளை அவர்கள் பாவம் செய்ததினால் அவர்களது

சரீர பெலவீனம், தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்று நினைத்து சில வேளைகளில் கவலைப்படுகிறார்கள். அவர்கள் சில மோசமான, மன்னிக்கமுடியாத பாவங்களை செய்துவிட்டதாக நினைத்து, அனேக உண்மையான கிறிஸ்தவர்கள் இவ்விதமான கண்டனத்துக்குள்ளாகிறார்கள். இது கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவரல்லாதவர்களையும் பாதிக்கும் முதிர்வயதின் சரீர பெலவீனம் ஒரு இயற்கையான விளைவு என்பதை அதிகமாய் அறிந்து கொள்ள அவர்களுக்கு உதவுகிறது. ஒருவருடைய வாழ்வின் பிந்தைய காலங்களுக்குஇழப்பீடு உண்டு எனவே அவைகள் வெறுக்கப்படுவதற்கல்ல.

9. தீய ஆவிகள் நோயை விளைவிக்கலாம்.

நோய்கள் மற்றும் பாதிப்புகளின் நேரடி காரணம், சில வேளைகளில் தீய ஆவிகளாய் இருக்கலாம். மத்.9:32,33-ல் ''பிசாசு பிடித்த ஊமையான ஆவியை துரத்திய மாத்திரத்திலேயே அவனால் பேச முடிந்தது. அவனுடைய குரல் நாடிகள் வெளிப்படையாகவே ஊமையான ஆவியின் அடிமைத்தனத்தில் வைக்கப்பட்டிருந்தது. மாற்கு 9:17-27-ல் ஊமைத்தனத்தையும் செவிட்டுத்தனத்தையும் விளைவித்த, ஊமையான ஆவியால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு வாலிபனை இயேசுவிடத்தில் கொண்டு வந்த ஒரு நிகழ்ச்சியை நாம் வாசிக்கிறோம். இயேசு அந்த செவிட்டு ஆவியை துரத்துகிறார். அந்த வாலிபன் விடுதலையாக்கப்பட்டான். லூக்கா 12:11-16-ல் ''பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியால் பிடிக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணைக் குறித்த காரியங்களை நாம் வாசிக்கிறோம். அவளுடைய முதுகெலும்பு வளைந்து, அவளுடைய முகம் தரைக்கு நேராய் குனிந்திருந்தது. நவீன மருத்துவம் அவளுக்கு நாள்பட்ட முதுகெலும்பு வளைவு என்று சொல்லலாம். இயேசு அவளுடைய பெலவீனத்திலிருந்து அவளை விடுவித்தார். உடனே, அவளுடைய முதுகெலும்பு நேராக்கப்பட்டது, அவளுடைய விடுதலைக்காக அவள் தேவனை மகிமைப்படுத்தினான்.

பெலவீனப்படுத்தும் ஆவியால் பாதிக்கப்பட்ட நபர்களைக் குறித்த அநேக நிகழ்ச்சிகள் வேதாகமத்தில் உண்டு. அவர்கள் குணமாக்கப்படுவதற்கு ஒரே வழி,விசுவாசம், வல்லமையின் வார்த்தையால் அந்த ஆவிகள் மேற்கொள்ளப்படுவதே. ஆவி துரத்தப்பட்ட மாத்திரத்திலே அறிகுறிகள் மறைந்து விடுகின்றன. இப்படிப்பட்ட நபர்கள் விடுதலையாக்கும் ஊழித்தைத் தவிர வேறு எந்த வழிகளின் மூலமும் ஒருபொழுதும் குணமாக்கப்பட முடியாது. எல்லா நாமத்திற்கும் மேலான இயேசுவின் நாமத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தால் இந்த பிசாசுகள் மேற்கொள்ளப்பட்டு துரத்தப்படவேண்டும். இது நடந்த மாத்திரத்திலே பாதிக்கப்பட்டவன் பலவிதமான அறிகுறிகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டு முழு சுகம் பெறுகிறான். இப்படிப்பட்ட மக்கள் தங்களை முழுவதுமாய் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய வார்த்தையால் ஒழுங்காக போஷிக்கப்பட்டு, அவரைப் பின்தொடர்ந்து, அவர்களுடைய வாழ்வின் எல்லா பகுதிகளிலும் தேவனை பிரியப்படுத்துவது மிகவும் அவசியம். இதை உண்மையாய் செய்வதற்கு தவறுவது, அசுத்த ஆவிகளை திரும்ப வரவழைக்கலாம். அதன் பின் அவர்களுடைய நிலைமை, முந்தைய நிலையைக் காட்டிலும் மிக மோசமானதாக இருக்கும். (மத். 12:45, லூக்கா 11:26).

10. வியாதி தேவனுடைய விருப்பத்திலிருந்து நிலைமாறிய ஒன்று.

நிலைமாறுதல், இயல்பானதிலிருந்து வழி விலகுவது ஆகும். வியாதி தேவன் வடிவமைத்த முதல் சிருஷ்டிப்பின் பகுதி அல்ல, அல்லது இன்றைய மனுக்குலத்திற்காக தேவனுடைய திட்டம் அல்லது விருப்பத்தின் பகுதியும் அல்ல. தேவன் வியாதியின் காரணகர்த்தா அல்ல. தேவன் வியாதிகள், நோய்கள், அதனால் ஏற்படும் பாடுகள் ஆகியவற்றிற்கு எதிராகவே இருக்கிறார். பாதிக்கப்பட்டிருக்கிற அல்லது எந்த விதத்திலும் வியாதியாய் இருக்கிற மனிதர்கள் மீது மனதுருக்கம் உள்ளவராய் இருக்கிறார். அவருடைய உண்மையான விருப்பம், வேதாகமத்தில் பல இடங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தெளிவான இடங்களில் ஒன்று 2யோவான் 2ஆகும். ''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.

அத்தியாயம் 3 சுகம்பெற தேவனின் ஏற்பாடு

தேவனின் மீட்பு சார்ந்த பெயர்கள்.

நாம் யெகோவாவின் மீட்பு சார்ந்த பெயர்களையும் அல்லது பட்டப் பெயர்களையும் கவனிக்கும்பொழுது, ஆவி ஆத்துமா சரீரமாகிய முழு மனிதனுக்கான தேவனுடைய கரிசனையைக் குறித்து புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம். யெகோவா என்பதற்கு தன்னைத்தான் வெளிப்படுத்துகிற தாமே இருக்கிற ஒருவர் என்று பொருள். இது தேவனுடைய மீட்பின் வேலையுடன் விசேஷித்த விதத்தில் தொடர்புபடுத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

வேதாகமத்தில் யெகோவா என்ற பெயருடன் இணைத்து கூறப்பட்டுள்ள ஏழு கூட்டுப்பெயர்கள் உண்டு. ஒவ்வொரு பெயரும் அவர் ஏற்படுத்தியுள்ள மீட்பின் ஒரு குறிப்பிட்ட பகுதியை வெளிப்படுத்துகிறது.

1. **யெகோவா யீரே (ஆதி. 22:14) "தேவன் பார்த்துக் கொள்வார்."**

   மோரியா மலையில் ஆபிரகாமுக்கு தேவன் தம்மைப் பற்றி இவ்வாறு அறிவித்தார். தனது ஒரே மிகவும்பிரியமான புத்திரனை பலியிட வேண்டிய மோசமான சூழ்நிலையை எதிர்கொண்டபோது, "பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே" என்று உரைத்த கர்த்தரின் சத்தத்தை ஆபிரகாம் கேட்டான். "ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்" நமக்கு ஒரு மீட்பரை அருளுவதற்கு தேவன் தம்மையே அர்ப்பணித்துள்ளார் என்பதை அறிவது எவ்வளவு அற்புதமானது.

2. **யெகோவா ரப்பா (யாத். 15:26) "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்"**

   தேவன் தம்முடைய ஜனங்களை எகிப்பதிலிருந்து கொண்டு வந்த பின்பு, தம்மை அவர்களுக்கு சுகமளிக்கும் தேவனாக வெளிப்படுத்தினார். ஏற்கனவே, அவர்களுக்கு தம்மை இரட்சகராகவும், விடுவிப்பவராகவும் நிரூப்பித்திருந்தார். இப்பொழுது, மேலும் தன்னை அவர்களுக்கு சுகம் கொடுப்பவராக வெளிப்படுகிறார்.

   பழைய ஏற்பாடு சுகமாக்குதலை மீட்பின் மையப்பகுதியாக தெளிவாக காண்பிக்கிறது. பவுல், புதிய உடன்படிக்கையை எல்லா விதத்திலும் மேலான சிறந்த உடன்படிக்கையாக நமக்கு கூறுகிறார். பழைய உடன்படிக்கை முழு மனிதனுக்கும் நன்மை பயப்பதாக இருந்தால், புதிய உடன்படிக்கை அதற்கு குறைந்ததல்ல.

3. **யெகோவா நிதி (யாத்.17:15) "தேவன் நமது ஜெயக்கொடி அல்லது ஜெயவீரர்**

   இஸ்ரவேலருக்கு அமலேக்கியரிடமிருந்து தேவன் ஒரு பெரிய வெற்றியைக் கொடுத்தவுடனேயே இந்த வெளிப்பாடு வந்தது. மோசே, நின்று தன் கரங்களை தேவனுக்கு நேராக உயர்த்திக் கொண்டிருக்கும்போது, தேவன் அவர்களுக்கு முன்பாக அவர்களுடைய எதிரிகளை அழித்தார். ஒரு பெரிய வெற்றி கிடைத்தது. மோசே தேவனுக்கு ஒரு பலிபீடத்தை கட்டி, அதை யொகோவா நிசி என்று அழைத்தார். "தேவன் தம்முடைய வெற்றியின் ஜெயக்கொடியை நமக்கு மேலாக விரித்தார்." என்பதே அதன் பொருள்.

4. **யெகோவா ஷாலோம் (நியா. 6:23) "தேவன் நம்முடைய சமாதானம்"**

   இந்த மீட்பின் பட்டப்பெயர் நமக்கு வெளிப்படுத்துவது என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் நம்முடைய மீட்பின் மூலம் தேவனுடைய சமாதானத்தை பெற்றுக் கொள்ளுவதும், அதை அறிந்து கொள்ளுவதுமான மகிமையான சிலாக்கியம் என்பதாகும். அது பூரணமான சமாதானம். அதன் பொருள் என்னவென்றால், ஒருவருடைய சமாதானத்திற்கு தேவையான எல்லா காரியங்களையும் பெற்றுக்கொள்வது என்பதாகும். வேதாகமம் இயேசுவைக் குறித்து "அவர் நம்முடைய சமாதானம்" என்று கூறுகிறது. (எபேசி. 2:14). சமாதானம் என்ற வார்த்தை (எபிரெயத்தில் ஷாலோம்) நலம், முழுமை, முழு நலத்திற்கு தேவையான எல்லாம் என்று பொருள்படும்.

5. யெகோவா ரா (சங். 23:1) "தேவன் என்னுடைய மேய்ப்பர்"

தேவனாகிய மேய்ப்பரின் கீழ் இருக்கும் ஒருவருடைய மகிமையையும் பாதுகாப்பையும் தாவீதின் இந்த சங்கீதம் விவரிக்கிறது. தேவன் மேய்ப்பராக தம்முடைய விசாரிக்கும் கரிசனையை வலியுறுத்துகிறார். நாம் தேவனுடைய மேய்ச்சலின் ஆடுகளாயிருக்கிறபடியால், நமக்குபாதுகாப்பை கொடுத்த கிறிஸ்துவின் மீட்பை அறிவது மிகவும் அற்புதமாய் இருக்கிறது.

6. யெகோவா ஷிட்கேனு (எரே.23:6) "தேவன் நம்முடைய நீதி

கிறிஸ்துவுக்குள் நாம் தேவனுடைய நீதியாவதற்கு இயேசு கிறிஸ்து நமக்கு உதவினார். (2கொரி. 5:21) அவர் நமக்காக பாவமாகி, நமக்குப் பதிலாக தேவனுடைய நியாயத் தீர்ப்பின் அபராதத்தைச் சுமந்து இதை செய்து முடித்தார். கிறிஸ்துவின் மீட்பு நமக்கு இரட்சிப்பை மாத்திரம் கொடுக்கவில்லை. பிதாவுக்கு முன்பாக நம்முடைய நீதியையும் விவரிக்கிறது. "கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1கொரி.1:30).

7. யெகோவா ஷம்மா (எசே.48:35) "தேவன் இருக்கிறார்"

தேவனுடைய பிரசன்னம் இயேசுவின் மூலமாக மீண்டும் நம்முடைய வாழ்வுக்கு தரப்பட்டது. ஆதாம் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டான், ஆனால் கிறிஸ்து மூலமாக அவருடைய பிரசன்னத்திற்கு திரும்பவும் கொண்டுவரப்பட்டிருக்கிறோம். அவருடைய மீட்கப்பட்ட ஜனங்களாகதேவனுடைய பிரசன்னத்தின் ஆசீர்வாதம் தொடர்ச்சியாக நமக்கு உண்டு.

இந்த ஒவ்வொரு மீட்பின் நாமங்களும், கிறிஸ்து மூலமாக தேவன் நமக்கு கொடுத்திருக்கிற அநேக ஆசீர்வாதங்களை வெளிப்படுத்துகிறது. சுகமாக்கப்படுதல் ஒரு குறிப்பிட்ட சாராருக்குரிய விசேஷித்த பாக்கியம் அல்ல, உடன்படிக்கையின் தேவைகளை பூர்த்தி செய்கிற எல்லாருடைய மீட்பின் உரிமையாய் இருக்கிறது.தேவன் இஸ்ரவேலின் யெயோவா ரப்பா வாக இருந்தார், மேலும் அவர் சொல்லுகிறார், நான் கர்த்தர், நான் மாறாதவர் (மல்கியா 3:6).

கிறிஸ்துவின் பிராயசித்தத்தின் மூலம் சுகமாக்கப்படுத்தல்

தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆசீர்வாதமும் கல்வாரியில் கிறிஸ்து பெற்ற வெற்றியின் மூலம் நமக்கு வருகிறது. இது சுகத்தையும் உள்ளடக்கியுள்ளது. பிராயசித்தம் என்ற வார்த்தைக்கு தேவனோடு ஒன்றிணைவது என்று பொருள் தேவனோடு நாம் மறுபடியும் ஒன்றித்திருக்கச் செய்வதும், வீழ்ச்சியின் விளைவாக மனிதன் இழந்த எல்லாவற்றையும் மீண்டும் கிடைக்கச் செய்வதும் இதன்நோக்கமாகும். அவன் இழந்த காரியங்களில் ஒன்று ஆரோக்கியமும் பெலமும் எனவே ஆரோக்கியம் பிராயசித்ததின் மூலம் மீண்டும் கிடைக்கிறது. பாவமும் நோயும் மனுக்குலத்திற்கு வந்த இரட்டை சாபங்கள் ஆகும். இயேசு இரட்டை சாபத்திற்கு இரட்டை சுகத்தை கொடுத்தார். ஏசாயா இதை தெளிவாக விளக்குகிறார். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். (ஏசாயா 53:4).

அநேக வேதவல்லுநர்கள், பாடுகள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கோலீ என்ற வார்த்தை பெரும்பாலும் வியாதி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இது பெலவீனம், நோய் அல்லது பாதிப்புஎன்று பொருள்படும். சாலா என்ற வார்த்தையிலிருந்து வந்தது மேலும் துக்கம் (மகோப்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை பொதுவாக வேதனையை குறிக்கிறதாக இருக்கிறது. இதை மனதில் வைத்து ஏசாயா 53:4க்கு மத்தேயு கொடுக்கும் விளக்கத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்" (மத். 8:17) மத்தேயுவின் மொழிபெயர்ப்பு மிகவும் சரியானதாகவும், கிறிஸ்துவின் பிராயசித்தத்தின் மூலம் கிடைக்கும் சரீர சுகத்தை உறுதிப்படுத்தும் உண்மையாகவும் இருக்கிறது.

ஏசாயா 53:4-ல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு வினைச் சொற்கள் உள்ளன. முதலாவது "சுமந்தார்" என்ற இந்த வினைச்சொல் ஏசாயா 53:12-க்கும் கொடுக்கப்பட்டுள்ளது. "அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்தார்" இந்த இரண்டு வசனங்களிலும் ஒரே வினைச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறபடியால், கிறிஸ்து நம்முடைய பாவத்தை சுமந்ததைப் போலவே, அவர்

நம்முடையநோய்களையும் சுமந்தார் என்று நாம் புரிந்து கொள்கிறோம். நமக்கு பதிலாக அவர்பாடுபட்டு, நம்முடைய பாவங்களை சுமந்தார் என்று நாம் அறிவோம். இது நம்முடைய நோய்களுக்கும் பொருந்தும்.கிறிஸ்து நமக்காக அப்படி பாடுபட்டார். எனக்கு பதிலாக கிறிஸ்து என்னுடைய பாவத்தை சுமந்திருக்கிறபடியால், நான் அவைகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறேன். கிறிஸ்து என்னுடைய நோய்களையும் சுமந்தபடியால் நான்அவைகளிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறேன். கிறிஸ்து நம்முடைய பாவங்களையம், நோய்களையும் தாமே சுமந்திருக்கிறபடியால், விசுவாசத்தில் அவரை ஏற்றுக்கொள்ளுகிற அனைவருக்கும் மன்னிப்பும் சுகமும் உண்டு.

இரண்டாவது வினைச்சொல், ஏற்றிசெல் (எபிரெயத்தில் காபால்) ஏதாவது ஒன்றை அபராதமாக சுமந்து செல்வது என்று பொருள்படும். இது ஏசாயா 53:11-ல் பயன்படுத்தப்படுள்ளது. ''அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்.'' என்று வாசிக்கிறோம். இரண்டு நிகழ்ச்சிகளிலும், ஒரே எபிரெய வார்த்தை, நமது பாவங்களையும், நமது வியாதிகளையும் குறித்து பயன்படுத்தப்படுகிறது. மகிமையான முடிவு என்னவெனில், கிறிஸ்து என் பாவங்களின் அபராதத்தை சுமந்து விட்டார் என்றால், நான் அதைசுமக்க வேண்டிய அவசியமில்லை. கிறிஸ்து என் வியாதிகளை சுமந்தாரென்றால், நான் சுமக்க வேண்டியதில்லை.

சுகமாக்கப்படுதல் கல்வாரியில் விலைக்கு வாங்கப்பட்டது

சிலுவையின் மீதான கிறிஸ்துவின் பிராயசித்தம், ஆவி, ஆத்துமா, சரீரம்-ஆகிய முழு மனிதனுக்கும் ஒரு பூரண பரிகாரத்தை அளிக்கிறது என்பதை நம்புவதற்கு தெளிவான ஆதாரங்கள் உள்ளன. அவரின் மரணத்தின் மூலம் மனுக்குலத்திற்கு முழுமையை கிறிஸ்து வாங்கினார்.

கிறிஸ்துவின் மீட்பு நமது சுகத்தையும் மன்னிப்பையும் உள்ளடக்கியிருக்கிறது என்பதை கிரேக்க புதிய ஏற்பாடுஉறுதியாய் கூறுகிறது. பொதுவான வினைச்சொல்லாகிய இரட்சிப்பது என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை சோசோ, முழுமை, பூரண நலம் ஆகிய கருத்துகளை நமக்குச் சொல்லுகிறது. ரோமர் 10:9-ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இரட்சிக்கப்படுவாய் என்ற வார்த்தை மாற்கு 6:56-ல் சொஸ்தமானார்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் சோசோ என்ற வார்த்தை இந்த இரு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பாடுகள் இன்றைய நம்முடைய பாவங்களுக்கும் உரிய பிராயசித்தம் என்பதை இன்று எந்த கிறிஸ்தவனாலும் மறுக்க முடியாது. அப்படியானால் நாம் இன்னும் ஏன் இன்று சுகமளித்தல் இல்லை என்று நினைக்க வேண்டும்?

பழைய ஏற்பாட்டில் தேவன் சுகமளிக்கும் தேவனாக இருந்தது போலவே, இன்னமும் சுகமளிக்கும் தேவனாக இன்றும் இருக்கிறார். அவர்இன்னும் யெகோவா ரப்பாவாக பரம வைத்தியராக இருக்கிறார். அவர் மாறுவதில்லை. அவருடைய குணம், தன்மை, இயற்கை பண்புகள் மாறாதவைகள் எனவே அவருடைய சித்தமும் மாறாதது.

கிறிஸ்துவின் சுகமளிக்கும் ஊழியம்

இயேசு தாமே நம்முடைய சுகமளிக்கும் ஊழியத்தின் நல்ல வழிகாட்டி, தேவனின் உண்மையான இருதயமும் தன்மையும் இயேசு கிறிஸ்துவிடம் தெளிவாக தெரிகிறது. பிலிப்பு ''ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும் என்று கேட்டான். அதற்கு இயேசு: பிலிப்புவே, ...நீ என்னை அறியவில்லையா என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்... நான் பிதாவிலும். பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள், அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' என்றார் (யோவான் 14:8-12). தேவனுடைய மாறாத தன்மையை இயேசு தமது வாழ்வு மற்றும் ஊழியத்தின் மூலம் நமக்குக் காண்பிக்க வந்தார் என்று இந்த பகுதி நமக்குப் போதிக்கிறது. முழு மனிதனிலும் அவர் அக்கரை காட்டுகிறார் என்பதை இயேசு தெளிவாக காண்பிக்கிறார். சுகமாக்குதல் தேவையாயிருக்கும்போது சுகமளித்தார். உணவு தேவைப்பட்ட பொழுது திரள்கூட்டத்தைப் போஷித்தார்.

ஆவி, ஆத்துமா சரீரமாக தேவன் மனிதனை படைத்திருந்தபடியால் இயேசு பிதாவின் அன்பை அவனிடம் காண்பித்தார்.

இயேசு தம்முடைய அற்புதங்களை எப்படி மதிப்பிட்டார் என்பதைப் பற்றியும் சில காரியங்களை நாம் கற்றுக்கொள்கிறோம். அவருக்கு, அற்புதங்கள் அவருடைய வார்த்தையின உண்மையை உறுதிப்படுத்தியது. நம்முடைய ஊழியத்திலும் கிறிஸ்துவின் சுகமாக்கும் வல்லமையை நம்பும்படி நாமும் உற்சாகப்படுத்தப்படுகிறோம், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்.

கிறிஸ்து ஏன் சுகமாக்கினார்?

1. **அவருடைய தீர்க்க தரிசன ஊழியத்தை நிறைவேற்ற கிறிஸ்து சுகமாக்கினார்.**
   பேதுருவின் மாமி சுகப்படுத்தப்பட்ட பின்பு அநேகர் கூடிவந்த போது, ''அவர்...பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது. நிறைவேறும்படி இப்படி நடந்தது. என்று மத்தேயு நமக்குக் கூறுகிறார். (மத். 8:16-19).

2. **அவருடைய மனதுருக்கத்தை வெளிப்படுத்த**
   கிறிஸ்துவின் மனதுருக்கம் ஜனங்களின் தேவையை சந்திக்க அவரை உந்தித் தள்ளியது என்று அநேக வேத பகுதிகள் குறிப்பிடுகின்றன. அவர்கள் மேல் மனதுருகி, அவர்களின் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார். (மத்.14:14, 20:34, மாற்கு 1: 40:41, 5:19, 9:22).

3. **தேவனுடைய இரக்கத்தை காட்ட**
   எப்பாப்பிரோதீத்துவைக் குறித்து பவுல், ஆகிலும் தேவன் அவனுக்கு இரங்கினார். எனக்கும் இரங்கினார்..என்று கூறுகிறார். (பிலி. 2:27).

4. **தேவன் மெய்யாகவே அவரை அனுப்பினார் என்பதை நிரூபிக்க.**
   இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் நடந்த அற்புதங்களும் சகமளித்தல்களும் தேவன் அவரோடு இருந்தார் என்பதை நிரூபிக்கும் அடையாளங்கள் அல்லது ஆதாரங்களாய் இருந்தது. பேதுரு நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரைப் பற்றி கூறுகிறார்.

5. **பிசாசின் கிரியைகளை அழிக்க.**
   ''பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்''. (1யோ.3:8) ''நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார், தேவன் அவருனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராகவும் சுற்றித்திரிந்தார். (அப்.10:38). ''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் (எபி. 2:14). வியாதி, பிசாசின் கிரியையாகும், அதனை அழிக்கவே இயேசு வெளிப்பட்டார்.

6. **தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்த**
   ஒரு நாள் இயேசுவும் அவரது சீஷர்களும் பிறந்ததிலிருந்தே குருடனாயிருந்த ஒரு மனிதனைப் பார்த்தார்கள். அவனுடைய குருட்டுத்தனத்தின் காரணத்தை அறிய சீஷர்கள் ஆவலாய் இருந்தார்கள். அவனுடைய பாவத்தினாலா, அல்லது அவனுடைய பெற்றோருடைய பாவத்தினாலா ஆனால் இயேசுவோ, பிறிதொரு காரியத்தில் ஆவலாய் இருந்தார். அவர் தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும். என்றார். (யோ. 9:1-4) அதன் பின்னர், அவர் அந்த மனிதனை சுகப்படுத்தி, இவ்வாறு பிணியாளிகளை சுகப்படுத்துவதின் காரணங்களில் ஒன்று தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவதே என்றுதெளிவாக காண்பித்தார்.

7. தேவனுடைய மகிமையை வெளிப்படுத்த

அவருடைய பிதாவானவரை மகிமைப்படுத்தும்படி தேவனுடைய மகத்தான கிரியைகளை இயேசு செய்தார். லாசருவின் கல்லறைக்கு முன்னால் நின்று, இயேசு மார்த்தானிடம் நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா? என்றார். (யோவான் 11:40.).

பதினெட்டு வருடங்களாக பெலவீனப்படுத்தும் ஆவியினால் கட்டப்பட்டிருந்த ஒரு பெண்மணியைக் குறித்தும், இயேசு அவளுடைய பெலவீனத்தின் கட்டுகளிலிருந்து அவனை எப்படி விடுவித்தார் என்றும், லூக்கா 13:10-17 வசனங்களில் வாசிக்கிறோம். வசனம் 13 அவள்மேல் தமது கைகளை வைத்தார், உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினார் என்பதை கவனியுங்கள்.

சுகமாக்க இயேசு பயன்படுத்திய சில வழிமுறைகள்

இயேசு ஜனங்களை சுகமாக்க ஒரே ஒரு வழியை மட்டும் பயன்படுத்தவில்லை, பலதரப்பட்ட வழிகளில் அவர் செயல்பட்டார். அந்த வழிகளில் சிலவற்றை சுருக்கமாக நாம் பார்ப்போம்.

1. இயேசு அதிகாரமுடைய வார்த்தைகளை பேசினார்.

தன்னுடைய வேலைக்காரனுக்காக இயேசுவை அணுகிய ரோம அதிகாரி, கிறிஸ்துவின் அதிகாரமுள்ள வார்த்தையை அறிந்திருந்தான். (மத். 8:5-13). ஒரு சேனை அதிகாரியாக கட்டளைகளை இடுவதும், பெற்றுக்கொள்வதும் அவனுக்கு வழக்கமாக இருந்தது. உண்மையான, அதிகாரமுள்ள வார்த்தை உடனடி பதிலை தரும் என்பதை அவன் அறிந்திருந்தான். இயேசுவின் வல்லமையால் கவரப்பட்ட அவன் அவரிடம் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று வேண்டினான். பின்னர்அவன், இயேசு அந்த வார்த்தையை சொன்ன அதே நேரத்திலேயே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான் என்பதை கண்டு கொண்டான்.

இயேசுவின் நாமத்தில் நமக்கும் அதிகாரம் உண்டு. இயேசு தாமே எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து, சமுத்திரலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும். என்று கூறினார். (மாற்கு 11:23).

2. அவர் வியாதியஸ்தர்கள்மேல் கைகளை வைத்தார்.

வியாதியஸ்தவர்களை சுகமாக்க அவர்கள் மீது அடிக்கடி இயேசு தன் கரங்களை வைத்தார். அவர்களுடைய கலாச்சாரம் பின்னணியால் கைகளை வைப்பதில் அவர்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. மரணத் தருவாயிலிருந்த தன்னுடைய மகளின் மீது இயேசு வந்து தம்முடைய கைகளை வைக்கும்படி யவீரு இயேசுவை வேண்டிக்கொண்டான். (மாற்கு 5:21-23). அவருடைய சொந்த ஊராகிய நாசரேத்துக்கு இயேசு வந்தபொழுது, அவர் அவர்கள் ஒவ்வொருவர் மீதும் தன்னுடைய கைகளை வைத்து அவர்களை சுகப்படுத்தினார்.

3. அவர் வியாதிகளை கடிந்து கொண்டார்.

இயேசு உண்மையில் சில வேளைகளில், வியாதிகளை சுகப்படுத்தும்பொழுது, அவர் அவைகளை கடிந்து கொண்டு வியாதியஸ்தர்களை விட்டுச் செல்லும்படி கட்டளையிட்டார். லூக்கா,இரண்டு ரூசிகரமான நிகழ்ச்சிகளை தன்னுடைய நாலாம் சுவிசேஷத்தின் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். முதலாவது தேவாலயத்தில் இருந்த அசுத்த ஆவியுள்ள மனிதனைப் பற்றியது. இயேசு அந்த ஆவியைக் கடிந்து கொண்டு நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று கட்டளையிட்டார். அந்த ஆவி அவருக்கு கீழ்ப்படிந்து உடனே அந்த மனிதனை விட்டு புறப்பட்டது. (லூக்கா 4:33-37).

இயேசுவும் சில சீஷர்களும் தேவாயலத்திலிருந்து நேராக, பேதுருவின் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கே பேதுருவின் மாமி ஜீரமாய் கிடந்தாள். இயேசு ஜீரத்தை கடிந்து கொண்டார். அது அவளை விட்டது. உடனே அவள் எழுந்து அவர்களுக்கு பணிவிடை செய்தாள் என்று லூக்கா

கூறுகிறார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் கடிந்து கொள்ளுதலுக்கான வார்த்தை ஒன்றே என்பது கவனிக்கப்படவேண்டியது. இயேசு அசுத்த ஆவியை துரத்தியதுபோலவே ஜீரத்தையும் துரத்தினார். அவர் அவைகள் இரண்டையுமே வார்த்தையினால் கடிந்துகொண்டு புறப்பட்டுச் செல்லும்படி கட்டளையிட்டார். அவைகள் அப்படியே செய்தன.

4. **அவர் ஜனங்களைத் தொட்டார்.**
"இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்." (மத். 8:3). "அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கூடாது என்றார்" (மத். 9:29). பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை பேதுரு தாக்கி, அவன் காதை வெட்டியபோது, அவனுடைய காதைத் தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார்." என்று வாசிக்கிறோம். இயேசு ஜனங்களைத் தொட்டு சுகப்படுத்திய இன்னும் அநேக சம்பவங்கள் உண்டு.

5. **ஜனங்கள் கிறிஸ்துவை தொட்டார்கள்.**
"அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று. அவரை வேண்டிக்கொண்டார்கள், தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள். (மத்.14:35-36) "அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி,.. நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டார் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்கும் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்று போயிற்று, அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். (மாற்கு 5:25-29).

அத்தியாயம் 4 சுகம்பெற வழிமுறைகள்

தேவனுடைய சில சுகமாக்கும் வழிகள்

தேவன் தம்முடைய சுகமாக்கும் வல்லமையை நமக்கு இன்று கிடைக்கச் செய்ய அநேக வழிகள் உள்ளன. அவர் தெரிந்தெடுக்கிற எந்த வழியிலும் அவர் கிரியை செய்ய முடியும். அவர் எந்த வழியில் சுகப்படுத்த வேண்டும் என்று நீங்கள் அவருக்கு சொல்ல முயற்சிக்கும் தவறை செய்யாதிருங்கள். சிறந்த வழியை அவர் அறிவார். அவருடைய வழியில் அவர் செய்யட்டும். அவர் கிரியை செய்ய தெரிந்திருக்கும் சில வழிகளை நாம் பார்ப்போம்.

இயற்கையான சுகம்

தேவன் சுகமாக்கும் தேவன் என்று நான் தனிப்பட்ட முறையில் நம்புவதற்கான காரணங்களில் ஒன்று, அவர் இயற்கையாய் சுகம் பெறும் விதிகளையும், நோயிலிருந்து சுகம்பெறும் தன்மைகளையும் மனித சரீரத்திற்குள் வைத்திருக்கிறார் என்பதே சரீரத்தில் வியக்கத்தக்க அளவில் நோயெதிர்ப்பு சக்தியும், மீண்டும் சுகம்பெறும் சக்தியும் உண்டு. தகுந்த சமயம் கொடுக்கப்படுமானால் பெரும்பாலும் தானாகவே உடல்நலம் தேறிவிடும். இரத்தத்தில் தேவன் வைத்துள்ள இந்த அற்புதமான பொருளை ஒரு கணம் யோசித்து பாருங்கள். பைப்ரின் என்பது இரத்த ஓட்டத்திலுள்ள ஒரு புரத சத்து. அது கரையக்கூடியதாகவும், தொடர்ச்சியாக எந்த பிரச்சனையுமின்றி சரீர முழுவதுமுள்ள இரத்த ஓட்டத்தில் பயணம் செய்கிறதுமாயிருக்கிறது இருப்பினும், ஒரு மனிதன் காயப்பட்டு, அந்த காயத்திலிருந்து இரத்தம் வர ஆரம்பிக்கும்பொழுது, இந்த பைப்ரின் உரைய ஆரம்பித்து கட்டியாகிவிடுகிறது. வெள்ளை நூலைப் போன்ற இந்த பைப்ரின் வெளிப்புறத்திலுள்ள சூழ்நிலையோடு தொடர்புகொண்டு, வெள்ளை நார்களினாலான ஒரு வலையைப் போல மாறி கட்டியாக உருவெடுக்கிறது. இது காயத்திலிருந்து வரும் இரத்தத்தை தடுக்கிறது.

வெள்ளை இரத்த அணுக்களும் சரீரத்திலுள்ள அற்புதமான தற்காப்பு இயந்திரத்தின் ஒரு பகுதி அவைகள் சரீரத்தின் தற்காப்பு சக்திகள் நோய் உண்டாக்கும் வஸ்துக்கள் சரீரத்திற்குள் செல்லும்பொழுது, உடனே முளை இரத்தத்திலுள்ள மிக சிறிய உயிர் அணுக்களுக்கு செய்தி அனுப்புகிறது. அவை வேகமாக பாக்டீரியா நுழைந்த இடத்திற்கு நேராகச் சென்று அவைகளைத் தாக்கி வெளியிலிருந்து வந்த உயிர்பொருட்களை விழுங்கி விடுகின்றன. உள் நுழைந்த சேனையை இவை மேற்கொள்ளும்பொழுது எதிரியின் இறந்துபோன உடல்கள் குவிய ஆரம்பிக்கின்றன. வெள்ளை இரத்த அணுக்கள் தோற்கடித்த இந்த பாக்டீரியாக்களின் குவியல் கொப்பளம் என்று அழைக்கப்படுகிறது. இறுதியில் இந்த கொப்பளங்கள் வெடித்து சரீரத்தை பாதிக்க முயற்சித்து தோல்வியடைந்த இந்த எதிரியின் மீதமுள்ளவைகளை வெளியே தள்ளுகிறது.

நோயை எதிர்க்கும் இந்த அற்புதமான செயல்களைப் போன்ற எத்தனையோ அதிசயங்கள் மனித சரீரத்திற்குள் உள்ளன. அவைகள் எல்லா நேரங்களிலும் எதிரியிடமிருந்து உடலை பாதுகாக்கவும் தேவன் அருளிய ஆரோக்கியத்தின் நிலையை காத்துக்கொள்கின்றன. நோய் இயற்கைக்கு விரோதமானது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நல்ல ஆரோக்கியமே தேவனுடைய அற்புதமான சிருஷ்டிப்பின் இயல்பான நிலைமையாய் இருக்கிறது.

சரீரத்தினுடைய உணவு திட்டங்களும் பொதுவான கவனிப்பும்

போதுமான கவனமின்மை சரீரத்தை ஆரோக்கியமற்ற நிலைக்கு தள்ளிவிடும். அப்பொழுது சரீரத்திற்கு இயல்பான சுகம் மாத்திரமல்ல, எதிர்காலத்தில் போதுமான கவனிப்பும், கவனமும் கொடுக்கக்கூடிய முன்னுரிமைகளையும் கொடுக்க வேணடடியது அவசியமாயிருக்கும்.

புறஜாதிகளாகிய நாம் யூத விதிகளை கடைபிடிக்கவேண்டுமென்று நான் கருத்து கூறவில்லை. மாறாக உணவு மற்றும் உடல்நிலை போன்ற விஷயங்களில் போதுமான கவனம் கொடுக்க வேண்டியதின் அவசியத்தை அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். ஒருவன் போஷாக்கின்மையால் கஷ்டபடும்பொழுது உண்மையில் இருக்கிற ஒரே ஒரு நிவாரணம் அவனுடைய உணவில் குறிப்பிட்ட அளவு முன்னேற்றமே. நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பதற்கு சரீரத்திற்கு தேவையான உணவு சமநிலையிலும், சத்துள்ளதாகவும், புரத சத்துக்களும், வைட்டமின்களும் நிறைந்ததாகவும் இருக்கிறதா என்பதை முடிந்த வரையில் ஒருவர் உறுதி செய்ய வேண்டும். சில நாடுகளில் இது எளிதானதல்ல தீவிரமான உணவு பற்றாக்குறைகள் இதை கடினமானதாகவும், சில வேளைகளில் இயலாததாகவும் ஆக்கிவிடுகிறது. இருப்பினும், இப்படிப்பட்ட சூழ்நிலை இல்லாத நாடுகளில் அநேக ஜனங்கள் பெரும்பாலும் சத்தான உணவுகளின் முக்கியத்தை புரிந்து கொள்ளவில்லை. இன்னும் சிலர் சரியாக சாப்பிடுவதற்கு அவர்களால் முடியாது என்று நினைத்து இறுதியில் மருத்துவத்திற்கு பணத்தை செலவழிக்கிறார்கள். மருத்துவ செலவுகளுக்கு பணத்தை செலவழிப்பதைவிட, உணவில் செலவழிப்பது மிகவும் நல்லது.

இதற்கு நேர்மாறாக, அதிகமாக சாப்பிடுவதின் மூலமும், தவறான உணவுகளை பெருமளவு உட்கொள்வதின் மூலமாகவும், தங்கள் சரீரங்களை கெடுக்கும் மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் அதிகம் கொழுப்புள்ள உணவுப் பொருள்களையும், மாச்சத்து உள்ளவைகளையும் அதிகமாக உண்கிறார்கள். அப்படிப்பட்ட மக்கள் அதிக இடையுள்ளவர்களாக மாறுகின்றனர். அதன் விளைவாக அவர்களுடைய உடல்நிலை பாதிக்கப்படுகிறது. இன்றைக்கு அநேக மக்கள் ''தங்கள் சவக்குழிகளை தங்கள் பற்களாலே தோண்டுகின்றனர்'' என்று சொல்லப்படுகிறது. அவர்களுடைய உண்ணும் பழக்கங்கள் ஆரோக்கியமற்ற தன்மையை உருவாக்கி, காலத்திற்கு முன்னான மரணத்தையும் விளைவிக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களில் ஒரு ஒழுங்குமுறை தேவைப்படுகிறது. நம்முடைய சரீரங்கள் நம்முடையவைகள் அல்ல. அவைகள் விலைக்கு வாங்கப்பட்டுள்ளன. இப்பொழுது அவைகள் தேவனுக்கு சொந்தமானவைகள். எனவே நாம் அவைகளை சரியான முறையில் கவனிப்பதன் மூலம் தேவனுக்கு மகிமையை செலுத்த வேண்டும். (1கொரி.6:20).

மருத்துவ கவனிப்பும் கவனமும்

ஆரோக்கியத்தைக் குறித்த இயற்கை விதிகளுக்கு மாறாக போதுமான அளவு கவனம் செலுத்தாதன் மூலம் படிப்படியாக பாதிக்கப்பட்ட சரீரநிலையுள்ள சூழ்நிலைகளில் மருத்துவ ஆலோசனையும்

கவனமும் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம் எந்த மருத்துவராலும் குணப்படுத்த முடியாது. தேவனால் மாத்திரமே குணப்படுத்த முடியும். மருத்துவ அறிவியல் தேவனுடைய பிரமாணங்களுடன் இணைந்து நோயாளி சுகம்பெற உதவுகின்றது. ஒரு புகழ் வாய்ந்த மருத்துவர் ஒருமுறை நான் கவனிக்கிறேன், ஆனால் தேவன் சுகம் கொடுக்கிறார்'' என்று கூறினார். இது ஒரு உண்மையான கூற்று வியாதிகளுக்கும் நோய்களுக்கும் தேவன் எதிராக இருப்பதினால் மருத்துவர்கள் தேவனோடு இணைந்து செயலாற்றி அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறார்கள். மருத்துவமனைகள், ''பாவத்தினால் இந்த உலகத்தில் இருக்கிற பெரிய பாதையை எதிர்த்துப் போராட உதவும் கருணை இல்லங்கள்'' ஆகும்.

உளரீதியான, உணர்வுரீதியான சுகம்

1. சரியான எண்ணங்களும் நினைவுகளும்

சமீபத்தில், மருத்துவ அறிவியலில் முக்கியமான முன்னேற்றங்களுள் ஒன்று, ''பயம், கவலை ஆகிய மனநிலைகளினால் ஏற்படுகிற வியாதிகளை'' கண்டுபிடித்து அவைகளுக்கு சிகிச்சை அளிப்பதாகும். இதன்மூலம், நோயாளியின் மனதில் உடல் ரீதியான வியாதிகள் ஆரம்பிக்கின்றன என்று நாம் கருதுகிறோம். இவைகள் கற்பனை சார்ந்த வியாதிகள் அல்ல. உண்மையானவே அந்த நபர் சரீரப்பிரகாரமாக பாதிக்கப்பட்டிருக்கிறார். இருப்பினும், இந்த சுகவீனம் நோயாளியின் மனதால் உருவாக்கப்படுகிறது. சாலமோன் இந்த தத்துவத்தைக் குறித்து ''அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்'' என்று கூறுகிறான். (நீதி. 23:7). ஒரு மனிதன் தன்னுடைய மனதில் எவற்றிற்கெல்லாம் இடங்கொடுக்கிறானோ, அவன் அப்படியே ஆகிவிடுகிறான். ஒருவனுக்கு நோயைக் குறித்து பயம் இருந்தால், எப்பொழுதும் நோய்வாய்ப்படுவதை நினைத்து சிந்தனை செய்துகொண்டிருந்தால், அந்த எண்ணங்களே அவன் பயந்து கொண்டிருந்த அந்த பெலவீனத்தை அவனுக்குள் உருவாக்கும்.

யோபுவும் இந்த தத்துவத்தை அதிகமாய் அறிந்திருந்தான். அவன் ஆரோக்கியமாகவும், அதிக சம்பத்துள்ளவனாகவும் இருந்த போதிலும், ஒரு நாள் அவன் எல்லாவற்றையும் இழந்துவிடுவான் என்ற எதிர்மறையான எண்ணத்திற்கு இடம் கொடுத்ததுபோல தெரிகிறது. ஒரு வேளை அவன் தனக்குள், ''இது நிலைத்து நிற்பதற்கு மிகவும் நல்லது, எல்லாம் நன்றாகவே போய்கொண்டிருக்கிறது. இது என்றும் நிலைத்திருப்பதை நான் எதிர்ப்பார்க்க முடியாது என்று நினைத்திருக்கலாம். அவனுடைய எண்ணங்கள் எப்படியிருந்தாலும், அவைகள் வெளிப்படையாகவே எதிர்மறையாகவும், அவநோக்கு சார்ந்ததாகவும் இருந்தது துக்ககரமான சம்பவம் அவனை மேற்கொண்டபொழுது, அவன் பெலவீனமடைந்து, தான் பிறக்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொன்னான் மேலும் அவன் ''நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது, நான் அஞ்சினது எனக்கு வந்தது'' என்று கூறினான் (யோபு 3:25) தனது எண்ணங்களை நிரப்பச்செய்த பயங்களே, தான் பயந்த காரியங்களை தனது வாழ்விற்குள் கொண்டுவந்தது என்று யோபு உணர்ந்தான். பயமானது வேதனையுள்ளது என்று வேதாகமம் கூறுகிறது. (1யோவான் 4:18). பயமானது அழிவை உண்டாக்குவது அது மனரீதியான, உடல்ரீதியான ஆரோக்கியத்தை கெடுக்கும். இந்த காரணத்திற்காகத் தான் இயேசு ''பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு'' என்று கூறினார். (லூக்கா 8:50). நாம் பயத்தினாலல்ல, விசுவாசத்தினால் உண்டாயிருக்கிறோம். விசுவாசம், நம்மை பலப்படுத்தி, வலுப்படுத்தும். பயம், நம்பிக்கையை குலைத்து, அழிக்கும்.

2. கட்டுப்படாத உணர்வுகள்

கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத எதிர்மறையான உணர்வுகளும் உடல்நலத்தை பாதிக்கும். அநேக கிறிஸ்தவர்கள், தங்களது உணர்வுகளை அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதை விட்டுவிட்டு, தங்களது உணர்வுகளால் அவர்களே கட்டுப்படுத்தப்பட இடங்கொடுக்கிறார்கள். ''அவர்கள் எப்படி உணர்கிறார்கள்'' என்பதையே அதிகமாக சார்ந்திருக்கிறார்கள். அவர்கள் சிறிது சோர்வடைந்தால், அந்த சோர்வு அவர்களை ஆண்டு கொள்ள அவர்கள் இடங்கொடுக்கிறார்கள். எந்த ஒரு சிறிய ஏமாற்றமோ, கவலையோ, மாற்றமோ அவர்களை இன்னும் அதிகமாக சோர்வுக்குள் அமிழ்த்திவிடுகிறது. இத்தகைய உணர்வு

கட்டுப்பாடின்மை, இறுதியாக உடல்நலத்தை வலுவிழக்கச் செய்யும். மேலும் அது மிகமோசமான வியாதியை விளைவிக்கக்கூடும். கிறிஸ்தவர்கள் தங்களது உணர்வுகளால் ஆளப்படுவதற்கு என்றுமே நிர்ணயிக்கப்படவில்லை! மாறாக, அவர்கள் தேவனுடைய வார்த்தையிலுள்ள விசுவாசத்தின் மூலம் தங்கள் உணர்வுகள், கற்பனைகள், மனநிலைகள், உணர்ச்சிகள் ஆகியவற்றை ஆளும்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறார்கள் (2 கொரி. 10:4-5). தேவனுடைய வார்த்தை நம்பத்தக்கது, நம்முடைய உணர்வுகள் நம்பத்தக்கவை அல்ல. நாம் ஒழுங்காக தேவனுடைய வார்த்தையை உட்கொண்டால், அது நம்முடைய உணர்வுகளை நிலைப்படுத்தும். வார்த்தையால் நிரப்பப்பட்ட விசுவாசி, இனி முன்னும் பின்னுமாக அசைக்கப்படுவதில்லை. அவன் வார்த்தையைப் போலவே தானும் உறுதியானவனாக மாறிவிடுகிறான்.

வார்த்தையானது, மனதிற்கும் இருதயத்திற்கும் பெலன், நோக்கம், மனவலிமை ஆகிய குணங்களை கூட்டித் தருகிறது. 30 சதவிகிதத்திற்கும் மேலான சரீர நோய்கள் மனம் அல்லது உணர்வுகளிலிருந்தே உருவாகின்றன என்று சில நம்பத்தக்க மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர். கவலை, பயம், வருத்தம், பாதுகாப்பின்மை, நோய் சார்ந்த ஆய்வு, நரம்பு சார்ந்த பதற்றம், பொறாமை, எரிச்சல், கோபம் அவதூறு போன்ற மனம் மற்றும் உணர்வு சார்ந்த மனப்பான்மைகள், வலிமை வாய்ந்த, அழிவு ஏற்படுத்துகிற சக்திகளாய் இருக்கின்றன. அவைகள் தடுக்கப்படாவிட்டால், ஒருவருடைய உடல்நல அமைப்பையே கிழித்துவிடும். மிகவும் மோசமான சரீர வியாதிகளுக்கு இவைகளே முக்கிய காரணங்கள். உயர்ந்த இரத்த அழுத்தம், இருதய கோளாறுகள், இரத்த ஓட்டவியாதிகள், ஆஸ்துமா, வயிற்றுப் புண்கள், நாட்பட்ட தலைவலிகள் ஆகியவை மனம் மற்றும் உணர்வு சார்ந்த தவறான மனப்பான்மைகளால் விளையும் அநேக வியாதிகளுள் சில ஆகும்.

ஒருவருடைய நோய், அச்சம், கவலை ஆகிய மனநிலைகளினால் ஏற்படும்பொழுது, அவனுக்கு சரீர சுகம் தேவைப்படுவது மட்டுமல்ல, தனது மனம் மற்றும் உணர்வு சார்ந்த செயல்முறைகளின் உள்ளான சுகமும் தேவைப்படுகிறது. சரீரப் பிரகாரமான நோயின் அறிகுறிகளை சுகப்படுத்துவது தேவனுக்கு எளிதான காரியம். ஆனால் மனதின் மனப்பான்மை மாற்றப்படாவிட்டால், அந்த நபர் விரைவில் அதே அல்லது அதைப் போன்ற நோயினால் மறுபடியும் சுகவீனமடைவார். உதாரணமாக, ஒரு வயிற்றுப் புண்ணை சுகமாக்குவது தேவனுக்கு எளிதான காரியம். அதைவிட அதிக கடினமானது என்னவெனில், அந்த புண் உருவாக காரணமாயிருந்த மனதின் மனப்பான்மைகளின் உள்ளான சுகமேயாகும். மனபாரம், வருத்தம், கவலை ஆகியவற்றின் பெரிய சுமைகளை சுமக்க அந்த நபர் வற்புறுத்தினால், அந்த மனப்பான்மைகள் இன்னொரு புண்ணை உருவாக்கும். இத்தகைய நீடிக்கும் பிரச்சனைகளை சுகமாக்க தாவீது ஒரு பயன்மிக்க கொள்கையை தந்துள்ளார்.

A. கர்த்தர் மேல் உங்கள் பாரத்தை வைத்து விடுங்கள்

"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்" என்று தாவீது உற்சாகப்படுத்துகிறார் (சங். 55:22). இது எந்த ஒரு கவலை, வருத்தம், பயம் அல்லது எதிர்மறையான மனப்பான்மையை கர்த்தர் மேல் வைத்துவிடுவதையும் குறிக்கும். இதை நாம் செய்வதற்கு முன்பு, நம்முடைய வாழ்க்கையை முழுவதுமாக கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை பூரணமாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை பூரணமாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படும்பொழுது, அது அவருயை சொந்த உடைமையாகிவிடுகிறது. அப்படியானால் அதை பராமரிப்பது அவருடைய பொறுப்பு நல்ல உடல்நலத்திலும், பெலத்திலும் அவர் அதை பராமரிப்பாராக. நாம் நம்முடைய பாரங்களை கர்த்தர் மேல் வைத்து, அவற்றை விட்டொழிவதற்கு ஆர்வமாக இருந்தால் மட்டுமே இது கூடும்: அப்பொழுது அவர் நம்மை ஆதரிக்க முடியும். அந்த பெரும் பளுவான பாரங்களை நாமே சுமக்க முற்பட்டால், தேவன்கூட உடல்நலத்தில் நம்மை ஆதரிக்க முடியாது.

B. தேவனுடைய வார்த்தையை தியானியுங்கள்.

தேவனுடைய வார்த்தையை இரவும் பகலும் தியானிக்கிற மனிதன் பெறும் ஆசீர்வாதங்களையும் தாவீது விவரிக்கிறான். "அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன்

கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்'' (சங்.1:3) தேவனுடைய வார்த்தையை தியானித்தால், நோய்களை குணப்படுத்தும் இயல்புடைய மிக்க மதிப்பு வாய்ந்ததாகும். தாவீதின் குமாரனாகிய சாலொமோன், தேவனுடைய வார்த்தையானது'' அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமாம்'' என்று மேலும் குறிப்பிடுகிறார். (நீதி.4:22).

C. உங்கள் எண்ணங்களை சிறைப்படுத்துங்கள்.

எந்த ஒரு எண்ணமும் கிறிஸ்துவுக்குள் சிறைப்படுத்தப்பட முடியும். சிலவேளைகளில் நம்மை விடாமல் தொந்தரவு செய்கிற எண்ணங்கள் உண்டு. அவை நம் மனதில் சாத்தானின் அரண்கள் போல காணப்படுகின்றன. (2கொரி. 10:3-5). இத்தகைய எண்ணங்களால் நாம் தொடர்ந்து ஆளப்பட தேவையில்லை. தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தால் அவைகளை எதிர்த்துப் போராடுங்கள். தேவ ஈவான தீர்வாகிய வேதபகுதிகளைக் கொண்டு, பயத்திற்கு எதிராக போரிடுங்கள். ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.'' (2தீமோ. 1:7) இதை ஒரு முறை மாத்திரம் சொல்லாதிருங்கள். இதிலேயே தங்கியிருங்கள். தேவன் உங்களை வல்லமையும் வெற்றியும் உடையவர்களாக்கட்டும் இதை சத்தமாக அறிக்கை செய்யுங்கள். இதில் உங்கள் இருதயத்தை திடப்படுத்துங்கள். எதிராளியின் அரண்கள் நொறுங்கி கீழே விழும்.

D. உங்கள் மனதை தேவன் மீது பதிய வையுங்கள்

''உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை.'' (சங். 119:165). தேவனுடைய வார்த்தையை இடைவிடாது நேசிக்கிற ஒருவனுக்கு வரும் சமாதானம், குணமாக்கும் சமாதானமாகும் ''உம்மை உறுதியாய் பற்றி கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்'' (ஏசாயா 26:3) தம்முடைய ஜனங்கள் எல்லா மனரீதியான, உடல்ரீதியான பிரச்சனைகளிலிருந்தும், தவறான மனப்பான்மைகளை தக்கவைப்பதால் இறுதியாக விளையும் பற்பல வியாதிகளிலிருந்தும் முழுவதுமாக விடுவிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

3. மனித ஆவியை விடுவித்தல்

ஆவிக்குரிய பிறப்பில், மனித ஆவிக்கு நித்திய ஜீவன் திரும்பவும் கொடுக்கப்படுகிறது. இந்த வாழ்க்கை ஆளைக் குறிக்காத வெறும் சக்தியல்ல, பரிசுத்த ஆவியானவர் தாமே நமக்குள் வாசம் செய்ய வருகிறார். (1கொரி.6:17). அவர், நாம் பெற்றுக்கொள்ளும் தேவனுடைய ஜீவன் கவலைக்கிடமாக, அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய காரியங்களில் போதிக்கபடாமலோ, வருந்தத்தக்க விதமாக, தவறாக போதிக்கப்பட்டோ இருக்கின்றனர். அற்புதங்களின் காலம் கடந்துவிட்டது என்று அநேகர் போதிக்கப்பட்டுள்ளனர். ஆவியின் வரங்கள் அப்போஸ்தல காலத்திற்கு மட்டுமே உரியது என்று அநேகர் போதிக்கப்பட்டுள்ளனர். தேவனுடைய வார்த்தையிலுள்ளள வல்லமையைக் குறித்து அநேகர் அறியாதிருக்கிறார்கள். இந்த அறியாமையின் நிமித்தம், அவர்கள் ஆவி, சிறையிலுள்ள குற்றமற்ற மனிதனைப் போல காணப்படுகிறது. அந்த மனிதனின் மனித ஆவியில் எந்த தவறும் இல்லை, ஆனால் அறியாமையும், தவறான கருத்தும் அவனை குருடாக்கி, ஆவிக்குரிய வளர்ச்சியை மட்டுப்படுத்தியுள்ளன.

தேவனுடைய வார்த்தையினாலே உங்கள் மனம் புதிதாக்கப்படும்போது (எபே. 4:22:24, கொலோ.3:10,16 வெளிப்பாடு மனித ஆவியை விடுவிக்கிறது. வளர்ச்சி இடம்பெறுகிறது. ஆவியின் வல்லமையில் வார்த்தையை அறிவிக்கிறவர்களே, இந்த ஆவிக்குரிய விடுவித்தலை கொண்டுவரும் தேவனுடைய கருவிகளாய் இருக்கிறார்கள். இயேசு, ''நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள், சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.... ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்'' என்றார். (யோவான் 8:31-32,36). ''சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.'' (யோவான் 16:13). ''கர்த்தரே ஆவியானவர்

கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு.'' (2கொரி. 3:17). பரிசுத்த ஆவியானவர், தனக்கு ஒப்புக் கொடுக்கும் மக்களை, ஆவிக்குரிய விடுதலையையும், நலத்தையும் கொண்டுவரத்தக்கதான தம்முடைய கருவிகளாக உபயோகப்படுத்துகிறார். இந்த விடுதலை இடம்பெறும்போது, நாம் மெய்யான ஆவிக்குரிய நலத்திற்குள்ளாக கடந்து செல்கிறோம். இதுவே முழு மனித நலத்தின் ஆதாரம்.

சரியான போதனை, வியாதியையும், தொல்லையையும் விளைவிக்கிற இடறுகுழிகளையும், பொறிகளையும் தவிர்க்க மக்களுக்கு உதவுகிறது. தேவனை தெரிந்து கொள்ள மறுபடியும் பிறந்த ஆவியின் செல்வாக்கை வலுபடுத்துவதே. வார்த்தையை போதிப்பதின் முதன்மையான நோக்கமாகும். அல்லது வேறு வார்த்தைகளில், விசுவாசிகளின் ஆவிக்குரிய புலன்களை அல்லது கூர்ந்து அறியும் திறனை வளர்ப்பதே. அநேக கிறிஸ்தவர்கள், தங்கள் இருதயங்களில் எழும் இயல்பான தீர்ப்புகளையும், தேவனுடைய ஆலோசனையையும் வித்தியாசப்படுத்தி பார்க்க முடியாதிருக்கிறார்கள்.இது ஆவிக்குரிய சத்துக் குறைவாக காணப்படுகிறது. தேவனுடைய வார்த்தையினால் அவர்களை போஷிப்பதன் மூலம், தேவனுடைய சத்தம், தங்களது வார்த்தையின் அறிவோடு இசைந்திருப்பதை அவர்கள் கண்டு கொள்வதால், தேவனுடைய சத்தத்தை அடையாளம் காண அவர்கள் கற்றுக்கொள்வார்கள். இது ஆவிக்குரிய விடுதலையையும் அதன் விளைவாக முழு மனிதனுக்கு ஆரோக்கியத்தையும் கொண்டு வரும்.

மனிதனின் முழு ஆரோக்கியத்திலும், நலத்திலும் தேவன் கரிசனையுள்ளவராயிருக்கிறார். சரீர சுகமே, இத்தகைய ஆரோக்கியத்தை கொண்டு வரும் மிக முக்கியமான வழியாகும். தேவனால் தூண்டப்படும் போதனை, தெய்வீக சுகத்தை கொண்டு வரும் மற்றொறு வழியாகும்.

சுவிசேஷ சுகமாக்குதல்

இது சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்போது தொடரும் என்று இயேசு கூறியிருந்த சுகமாக்கும் ஊழியம். இது மெய்யான சுவிசேஷத்தின் பறைசாற்றலை எப்பொழுதும் தொடரும் என்று அவர் வாக்குபண்ணின ஐந்து சாட்சியங்களில் ஒன்றாகும். (மாற்கு 16:18). இந்த விதமான சுகமாக்குதலின் வெளிப்பாட்டை பார்ப்பதற்கு அநேக காரியங்கள் அவசியமாகின்றன.

1. ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' (மாற்கு 16:15) என்பதே வாக்குத்தத்திற்கு முன்வந்த கட்டளையாகும். இது ஒரு சுவிசேஷ ஊழியம், புதிய எல்லைகளுக்குள் சென்று, இரட்சிக்கப்படாதவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பது. பவுல் இந்த விதியை பின்பற்றினார். அவர் வேறு ஒருவர் ஏற்கனவே போட்ட அஸ்திபாரத்தின் மேல் கட்டாமல், கிறிஸ்து அறியப்படாத இடங்களில் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முற்பட்டான். அதன் விளைவாக அவனுடைய ஊழியம் ''அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும்'' தேவனால் உறுதியளிக்கப்பட்டது. (ரோமர் 15:18-20). புறஜாதிகள் ''வார்த்தையினாலும் செய்கையினாலும்'' சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியபண்ணப்பட்டதே இதன் பரிமாணமாகும்.

2. புதிய ஏற்பாட்டு காலத்தில் சுவிசேஷத்தை அறிவித்தல், சரீர சுகம் மற்றும் நித்திய இரட்சிப்பின் நம்பிக்கை ஆகியவற்றின் மீதுள்ள அழுத்தத்தை உட்கொண்டிருந்தது. இயேசுவின் ஊழியத்தின் பெரும்பகுதி நோய்வாய்ப்பட்டவர்களிடத்திலும், வியாதியஸ்தர்களிடத்திலும் செலவிடப்பட்டது. அவர்கள் இயேசுவினிடத்தில் வந்தபோது, அநேக வேளைகளில் ''பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்'' என்று கூறப்படுகிறது. (மத். 8:16). அதைப்போலவே அப்போஸ்தலரிடமும் திரளான வியாதியஸ்தர்கள் வந்தார்கள். ஒரு முறையாவது, பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழல் பட்டபோது சுகமும் விடுதலையும் உண்டானது. (அப். 5:15-10). அப்போஸ்தலருடையகைகளினாலே அநேக ஆச்சரியமான காரியங்களும், அடையாளங்களும், அற்புதங்களும் செய்யப்பட்டன. (அப். 5:12). பெரும்பாலும் அத்தகைய அடையாளங்களின் பலனாகவே திரளான ஜனங்கள் திருச்சபையில் அதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். (அப். 5:14).

3. கைகளை வைத்தலும், இந்த சுகமாக்குதலின் குறிப்பிட்ட அம்சத்தின் ஒரு விசேஷித்த தனிச்சிறப்பாகும். இச்செயலின் உட்கருத்தின் சில அம்சங்களை கவனிப்போம். அந்த மக்களின்

கலாச்சாரத்தில், ஒருவருக்கு ஏதேனும் ஒன்றை அளிப்பதற்காக அடிக்கடி கைகள் மேலே வைக்கப்பட்டது. பொதுவாக அது ஒரு மதிப்புரிமை, ஓர் ஆசீர்வாதம், ஒரு தனிச்சிறப்புரிமை போன்றவற்றை அளிப்பதைக் குறிக்கும். எனவே கைகள் யார் மீது வைக்கப்பட்டதோ, அவர்கள் தங்கள் சம்பிரதாயப்படி, ஏதேனும் ஒன்றைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்திருப்பார்கள். இயேசு இதைப் பற்றி என்ன கூறினார் என்பதை கவனியுங்கள். ''விசுவாசிக்கிறவர்களே'' வியாதியஸ்தர் மேல் கைகளை வைக்க வேண்டும் அது இயேசுவின் நாமத்தில் செய்யப்பட வேண்டும். விசுவாசியின் கைகள் நீட்டப்பட்டு, வியாதியஸ்தர்மேல் வைக்கப்படவேண்டும். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்'' என்று இயேசு அறிவித்தார். (மாற்கு 16:17).

துன்பப்படுகிறவர்களுக்கு நேராக நம்முடைய கைகளை நீட்டுவதன்மூலம், அவர்களுடன் நம்மையே ஒன்றுபடுத்துகிறோம். இயேசுவின் நாமத்தில் நாம் அவ்வாறு செய்கிறோம். நாம் இதை விசுவாசத்தில் செய்யும்போது, தேவனுடைய கரங்களின் விரிவாக்கமாக நாம் மாறிவிடுகிறோம். தேவனுக்கு, இந்த தேவை மிகுந்த உலகத்தை சந்திக்க நம்முடைய கரங்களே அல்லாமல் வேறு கரங்கள் இல்லை. சுவிசேஷத்தை பிரசங்கிப்பதும், வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பதும், இயேசுவின் கட்டளையாகும். அவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். நாம் அதை விசுவாசத்தில் செய்ய வேண்டும். நீங்கள் நோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தொடும்போது, அவ்வேளையில் தானே, அவர்கள் சொஸ்தமானார்கள் என்ற வாக்குத்தத்தை உரிமை கோருங்கள் சொஸ்தமாகுதல் என்பது, உடனடியான கணத்தில் நிகழ்கிற சுகமாகுதல் என்று அவசியமல்ல. அது ஒரு செயல்முறையாக விளங்கலாம். சந்திப்பின் நேரத்தில் அது துவங்கினாலும், அது முழுவதுமாக நிறைவேறுவதற்கு சில காலம் எடுக்கலாம். நம்பிக்கை இழந்துவிடாதிருங்கள். சந்தேகப்பட ஆரம்பித்துவிடாதேயுங்கள். தேவனுடைய கூற்றில் நேர்மறையான விசுவாசம் வைக்கும் மனப்பான்மையை காத்துக்கொள்ளுங்கள். அவருடைய வார்த்தை உண்மையானது. தவறாது.

ஒவ்வொரு சுவிசேஷகனும் இந்த சுகமாக்கும் ஊழியமும் இணைந்திருக்க வேண்டும். அது இப்பொறுப்பில் உள்ளடங்கிய வாக்குத்தத்தமாகும். ஒவ்வொரு விசுவாசியுடனும் அது இணைந்திருக்க வேண்டும். இவை விசுவாக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்.

சபை சார்ந்த சுகமாக்குதல்

சுவிசேஷ சுகமாக்குதல், அடிப்படையில் இரட்சிக்கப்படாதவர்களிடையே சுவிசேஷத்தின் மெய்ம்மையையும் சத்தியத்தையும் ஏற்றுக்கொள்ளச்செய்வதற்காக நடைபெறும் ஊழியமாக இருக்கையில், சபைசார்ந்த சுகமாக்குதல் திருச்சபைக்குள்ளான நடைபெறும் ஊழியமாக இருக்கிறது. இந்த வகையாக சுகமாக்குதலை கவனிப்பதற்கு அடிப்படையான வேதபகுதி யாக். 5:14-16 ஆகும் உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர்அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. இந்த வேதபகுதியில் உள்ள அறிவுரைகள் குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளன. உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் என்பது யாக்கோபு சபைக்குள் இருப்பவர்களையே நோக்கி பேசுகிறார் என்று தெளிவாக குறிக்கிறது. அதைத் தொடர்ந்து வரும் அறிவுரைகள், மாற்கு 16:15-20-ல் வருபவற்றைக் காட்டிலும் வேறுபட்டவைகள்.

1. **வியாதிப்பட்டவன் சபையின் மூப்பர்களை வரவழைக்க வேண்டும்.**
   வியாதிப்பட்டவன் தான் முதல்படி எடுக்க வேண்டும். அவன் தனக்கு ஊழியம் செய்ய மூப்பர்களை வரவழைப்பதற்கு வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

2. **குற்றங்களை அறிக்கையிடுதல் இருக்க வேண்டும்.**
   ஏதாவது பாவங்கள் செய்யப்பட்டிருந்தால், அவைகள் அறிக்கையும் செய்யப்படவேண்டும். பெரும்பாலான வியாதிகள் உள்ளே இருந்து தான் ஆரம்பமாகின்றன என்று நாம் ஏற்கனவே

கவனித்தோம். உள்ளே பாவம் இருக்கலாம். தவறான மனப்பான்மைகள் ஒருவேளை இருக்கலாம். அதிகமான வேளைகளில், கெடுதி உண்டாக்கக்கூடிய எண்ணங்களும், தீங்கு விளைவிக்கக்கூடிய உணர்வுகளும் காணப்படுகின்றன. இவைகள் சரீரபிரகாரமான நோயை விளைவிக்கும் ஆவிக்குரிய வியாதிகள். இந்த பாவங்களை ஒப்புக்கொண்டு அறிக்கை செய்ய வேண்டும். அறிக்கையிடுதல், மறைந்திருக்கும் அழிவு ஏற்படுத்துபவைகளை வெளியே கொண்டு வரும் இத்தகைய உள்ளான பிரச்சனைகள் அறிக்கை செய்யப்பட்டு அவைகளுக்காக மனஸ்தாபப்படாவிட்டால், அவைகளுக்கு எப்பொழுதுமே சுகம் கிடைக்காது.

தங்களிடத்தில் ஏதேனும் குறைகள் உண்டு என்பதை ஒப்புகொள்வது மக்களுக்கு கடினமாக இருக்கிறது. விளைவாக அவைகளுக்கான சுகத்தை அவர்கள் எப்பொழுதுமே பெற்றுக்கொள்வதில்லை. தேவன் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்துபார்த்து, தமக்குப் பிரியமில்லாத எந்த ஒரு மனப்பான்மை அல்லது எண்ணத்தின் மீது தமது விரலை வைப்பதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக திறந்த மனமும் உண்மையுமாக இருங்கள். அவர் உங்களை தண்டிக்க விரும்பும் ஒரு பயங்கரமான அரக்கன் அல்ல, உங்களை சுகப்படுத்த விரும்பும் அன்பான தகப்பன் அவர் உங்களை குழப்பமூட்டவோ, வெட்கப்படுத்துவதற்கோ இந்த பிரச்சனையான பகுதிகளை வெளிப்படுத்த விரும்பவில்லை. அவைகள் உங்களை நஞ்சூட்டுவதாலும், அழிப்பதாலும், அவைகளை உங்கள் இருதயத்திலும் மனதிலும் இருந்துவெளியே எடுக்க விரும்புகிறார். தேவனுடைய சித்தத்துடன் இசைந்து காணப்படாத ஏதேனும் பாவத்தையோ, மனக்கசப்பையோ அவர் உங்களுக்கு வெளிப்படுத்தினால், அதை மூப்பர்களிடம் (தலைவர்கள்) அறிக்கை செய்யுங்கள். இதனை பொது கூட்டத்திற்கு முன்பாக செய்வதைக் காட்டிலும் தனிமையில் செய்வது நலமாயிருக்கும். இருப்பினும், முழுசபைக்கும் முன்பாக அறிக்கை செய்வது அவசியமாயிருக்கும் சமயங்களும் உண்டு. இது பொதுவாக,அந்த குழுவுக்கு விரோதமாக பாவம் செய்யும்பொழுது அவசியமாகிறது. அப்படி இல்லாதிருந்தால், மூப்பர்களிடம் தனிமையிலே அறிக்கை செய்யப்பட்டு, விஷயங்கள் மூப்பர்களிடம் இரகசியமாக இருக்க வேண்டும்.

மூப்பர்கள் மத்தியில் அறிக்கை செய்யப்பட்டாலும், உண்மையிலே நாம் தேவனிடத்தில் அறிக்கை செய்கிறோம்.நாம் நம்முடைய சகோதரனுக்கு வருத்தம் உண்டாக்கியிருந்தாலும், நாம் தேவனுக்கே விரோதமாக பாவம் செய்திருக்கிறோம். நாம் அவருடைய மன்னிப்பை ஊக்கமாக நாட வேண்டும். நாம் வருத்தம் உண்டாக்கிய அல்லது விரோதமாய் பாவம் செய்த நபரிடத்திலும் அறிக்கை செய்ய வேண்டும். நாம் தாழ்மை ஆவியோடு அறிக்கை செய்து, அவருடைய மன்னிப்பை உண்மையை நாடவேண்டும். பழைய உடன்படிக்கையின்படி, சகோதரனுக்கு விரோதமாக செய்த தீங்கிற்காக, தேவனுக்கு குற்றநிவாரண பலி செலுத்துவது அவசியமாயிருந்தது. (லேவி. 6:1-7). அந்த பலியின் கோரிக்கைகளில் ஒன்று, முழுவதுமாகவும், 20% அதிகமாக கூட்டியும் திரும்பக் கொடுக்க வேண்டும் என்பது (லேவி. 6:5).

நாம் தீமை விளைவித்தவருக்கு, தாராளமாக திரும்ப கொடுக்க நாட வேண்டும் என்பதே இதன் கொள்கையாகும் நம்முடை செயல்களால் அவருக்கு விளைவித்திருக்கக்கூடிய தீங்கிற்கோ அல்லது வருத்தத்திற்கோ அவரிடம் சரிசெய்து கொள்ள வேண்டும்.

3. அவர்கள் மீது எண்ணெய் பூசப்படவேண்டும்.

<u>எண்ணெய் பரிசுத்த ஆவிக்கு அடையாளம்</u>. நாம் ஒருவரை எண்ணெயால் அபிஷேகிக்கும்போது, நாம் அடையாளமாக ஜெபிக்கப்போகிற நபர் மீது பரிசுத்த ஆவியானவர் வரும்படி அவரை அழைக்கிறோம்.

சீஷர்கள் அடிக்கடி இந்த முறையை வெளிப்படையாக கையாண்டார்கள். மாற்கு 6:13-ல் ''அநேகம் பிசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள்'' என்று நாம் வாசிக்கிறோம்.

<u>எண்ணெய் வெளிச்சத்திற்கு அடையாளம்.</u> பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த குத்து விளக்கு, உண்மையில் ஒரு எண்ணெய் விளக்கு, எனவே அந்த பரிசுத்த ஸ்தலத்தில் எண்ணெயே

வெளிச்சம் தந்தது. இப்படியாக, நாம் ஒருவரை எண்ணெயால் அபிஷேகிக்கும்போது, பிதாவே, உம்முடைய பிரசன்னத்தின் வெளிச்சத்தில்இந்த செயலை நடப்பிக்கிறோம் என்று அறிவோம். உம்மிடத்திலிருந்து ஒன்றுமே மறைந்திருக்கக்கூடாது. உமக்கு எல்லாம் தெரியும். ஆகவே, இந்த சூழ்நிலையில் முழுவதும் உண்மையாய் இருக்க எங்களுக்கு உதவி செய்யும். ஏனெனில், நேர்மையற்ற உண்மையில்லாத ஒன்றுமே உம்முடைய கவனத்திலிருந்து தப்ப முடியாது இப்பொழுது உம்மைத் தேடும் இந்த வியாதியஸ்தரிடம் உண்மையாகவே அவர்கள் அறியாத குற்றங்கள் ஏதேனும் இருக்குமானால், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கத்தக்கதாக, அவற்றை உமது பிரசன்னத்தின் வெளிச்சம் வெளிப்படுத்தட்டும் என்றும் கூறுகிறோம்.

மேலும், எண்ணெய், சுகமாக்குதலின் அடையாளம். அது சுகமாக்கும் குணங்களுடையது. ஒரு வேளை இதுவே மனிதன் அறிந்த மிகப் பழமையான மருந்தாகும். இதற்கு ஆறுதலான, சுகமளிக்கும் பண்பு உண்டு. நல்ல சமாரியனால் காப்பாற்றப்பட்ட மனிதனுக்கு, அவனுடைய காயங்களில், எண்ணெயும், திராட்சரசமும் வார்க்கப்பட்டது. திராட்சரசம் காயங்களைக் கழுவுவதற்காகவும், எண்ணெய் சுகமாக்கவும் வார்க்கப்பட்டது. நாம் எண்ணெயால் அபிஷேகிக்கும்பொழுது, நாம் மருந்தாக அதைத் தடவாமல், வியாதியஸ்தனுக்கு சுகமளிக்கும்படி பரிசுத்த ஆவியானவரை நோக்கிப் பார்த்து, சுகமாக்குதலின் அடையாளமாக தடவுகிறோம். எண்ணெய் பூசப்பட்ட பின் இப்பொழுது, மூப்பர்கள் விசுவாசத்தின் ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். ‘‘விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார் என்று யாக்கோபு கூறுகிறார். (யாக்.5:15).

பரிசுத்த திருவிருந்தின்மூலம் சுகமாக்குதல்

1கொரி. 11:23-32ல், பரிசுத்த திருவிருந்தில் பாத்திரமாய் பங்கு கொள்வது சுகத்தையும், ஆரோக்கியத்தையும் உண்டாக்கும் என்று தெளிவாக காண்கிறோம். அபாத்திரமாய் பங்குகொள்வது, கொரிந்தியர்களில் அநேகர் வியாதியுள்ளவர்களாகவும், காலத்திற்கு முன்பே சிலர் மரிக்கவும் செய்திருக்கிறது என்று பவுல் கூறுகிறார். ‘‘இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள், அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்’’ (1 கொரி. 11:30). ஆகவே பாத்திரமாய் பங்கு கொள்வது நல்ல உடல் நலத்தை உண்டாக்கும் என்று தெளிவாகிறது. இந்த முக்கியமான காரியத்தை நாம் இணைந்து பார்ப்போம்.

பரிசுத்தத்திலிருந்து, பஸ்காவிருந்தின் மாதிரியாகும்

இயேசு பரிசுத்த திருவிருந்தை முதன்முதலில் ஏற்படுத்தியபோது, அது பஸ்கா பண்டிகையின் நேரமாயிருந்தது (மத். 26:19). அன்று இரவு அவரைச் சூழ கூடியிருந்த சீஷர்கள், இந்த விருந்து எதைக் குறிக்கிறது என்பதை நன்றாக அறிந்திருந்தார்கள். இது, 1500 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த முதல் பஸ்காவின் அடையாளம் என்பது அவர்கள் நினைவிலிருந்தது. தங்கள் முற்பிதாக்களோடு தேவன் செய்த உடன்படிக்கையை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். முதல் பஸ்காவின்போது, அவர் அவர்களுடைய மூதாதையரை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார், அவர்கள் எகிப்திலிருந்தும் அதன் எல்லா அடிமைத்தனத்தினின்றும் ஒரு மகிமையான விடுதலையை அனுபவித்தார்கள். தேவனுடைய வல்லமையான நீட்டப்பட்ட கரத்தால், அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டார்கள்.

முதல் பஸ்காவிலிருந்து, சுட்ட ஆட்டுக்குட்டியையும், புளிப்பில்லாத அப்பத்தையும் கொண்டிருந்தது. அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் அவர்கள் வீடுகளின் வாசல் நிலைக்கால்களிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட்டது. அந்த இரத்தம் தேவனுக்கு ஒரு அடையாளக் குறிப்பாக இருந்தது. ‘‘அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்து போவேன்’’ என்று அவர்களுக்கு அவர் கூறினார் (யாத். 12:13). அவர்கள் அந்த இரத்தக் கறைபட்ட வாசல் நிலைகள் வழியாக, இரட்சிப்பின் விடுதலைக்குள் கடந்து சென்றார்கள். இரத்தம் அவர்களுடைய மீட்புக்கானது. அவர்கள் விடுதலையின் பிரயாணத்தைத் துலக்குவதற்கு முன்பு, ஆட்டுக்குட்டியைச் சுட்டு கசப்பான கீரையோடு புசிக்கும்படியும், அதின் எல்லா பாகங்களையும் ஏகமாய் புசிக்கும்படியாகவும் தேவன் கூறினார். இந்த சத்தான விருந்து, கடினமான சபையனைத்திற்கும் ஆயத்தமாக அவர்கள் சரீரங்களை பெலப்படுத்துவதற்காகவே. இது அவர்களுக்கு சரீர பெலத்தை கொடுப்பதற்கு. இப்படியாக, இரட்சிப்புக்காகவும், உடல்நலத்திற்காகவும் பஸ்கா விருந்து ஏற்படுத்தப்பட்டது.

இயேசு அன்று இரவில் அவர்களுடன் அப்பமும், திராட்சை ரசமும் பகிர்ந்து கொண்டபொழுது, அவர் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். திராட்சை ரசம் அவர்கள் இரட்சிப்புக்காக விரைவில் சிந்தப்பட இருந்த இரத்தத்தின் அடையாளம். அப்பம் ஆரோக்கியத்திற்காகவும், பெலத்திற்காகவும் புசிக்கப்படும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் அடையாளம் பரிசுத்த திருவிருந்தில் பங்கு கொள்வது சம்பந்தப்பட்ட சில அர்த்தமுள்ள கொள்கைகளை பவுல் கூறுகிறார்.

A. இயேசுவை நினைவுகூறுதல்

"என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள்" என்று இயேசு கூறினார். (லூக்கா 22:19, 1கொரி. 11:24). அன்றிரவு இயேசு அவர்களுடன் பந்தியில் அமர்ந்திருக்கையில், மனித பூரணத்துவத்தின் பண்புருவமாக இருந்தார். இயேசுவின் வாழ்க்கை முழுவதும் சாத்தான் அவரை எல்லா வழியிலும் தாக்கி, அவரை அழிக்க முற்பட்டான். அவன் அவரைக் குற்றம் செய்யத் தூண்டினான் (மத். 4:1-11). அவர் மீது பல பயங்கரமான வியாதிகளை வருவிக்க அவன் முயற்சித்திருப்பான் என்று நான் நம்புகிறேன். தம்முடைய ஊழியத்தின் காலத்தில், இயேசு அநேக வியாதியஸ்தர் மற்றும் வியாதியுள்ள மக்கள் மத்தியில் நடமாடினார், அவர்களில் அநேகருக்கு பரவக்கூடிய வியாதிகள் இருந்திருக்கக்கூடும். அவைகளால் சாத்தான் இயேசுவை மாசுபடுத்த முயற்சித்திருப்பான் என்று நான் நம்புகிறேன். ஆனால் சாத்தானின் எல்லா முயற்சியும் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டது. இப்பூமியில் தம்முடைய ஊழியத்தின் முடிவில், "இந்த உலகத்தின் அதிபதி (சாத்தான்) வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்று இயேசு கூற முடிந்தது. (யோ. 14:30). பிசாசு எவ்வளவோ முயற்சித்தும் கூட, இயேசு திடமான ஆரோக்கியத்துடன், இங்கே அவர்கள் மத்தியில் அமர்ந்திருந்தார்.

மனிதத்தன்மையின் பூரணமான மாதிரியாக இயேசு, "நீங்கள் இந்த சம்பவத்தை வருங்காலத்தில் கொண்டாடும்போது, என்னைப்பற்றி நினையுங்கள். இந்த இரவில் நான் எப்படி இருக்கிறேனோ, அப்படியே உங்கள் மனதில் என்னை கற்பனை செய்யுங்கள். ஆரோக்கியத்துடனும், பெலத்துடனும் தேவனுடைய வல்லமையால் காக்கப்பட்டு, பிதாவின் பாதுகாப்பாலும், பராமரிப்பாலும் எல்லா தீங்கிலிருந்தும், வியாதியிலிருந்தும் பேணிக் காக்கப்பட்டிருக்கிறேன். நீங்களும் இதைப் போலவே இருக்க பிதா விரும்புகிறார்" என்பதாக கூறுகிறார்.

B. அவருடைய மரணத்தை கொண்டாடுதல்

அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் சுற்றியுள்ளவர்களுக்கு கொடுக்கையில், இயேசு, "இது உங்களுக்காகப் மீட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது... இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" என்றார். "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று பவுல் கூறுகிறார். (1 கொரி. 11:26). ஆழமான கருத்து என்னவெனில், திருவிருந்து ஒரு கொண்டாட்டமாகும். நம்முடைய பாவங்களே இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு காரணமாக இருந்தன என்பதை நாம் நினைவுகூறும்போது, நிச்சயமாக சற்று துக்கமாக இருக்கிறது. இருப்பினும், நாம் கிறிஸ்துவின் மரணத்தை தியானிக்கும்போது அதிக நேரம் துக்கமாகவே இருக்க முடியாது. கல்வாரி ஒரு தோல்வி அல்ல, அது கிறிஸ்துவின் மிகச்சிறந்த வெற்றியாகும். அவர், "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்தார்" (எபி. 2:14) அந்த வெற்றியை நாம் கொண்டாடும்போது, பாவத்திலிருந்தும் அதன் எல்லா தீய விளைவுகளிலிருந்தும் நமக்கு பூரண விடுதலையை இயேசு பெற்றுத் தந்திருக்கிறார் என்று நாம் நினைவுகூறுகையில் மகிழ்கிறோம். ஆதாம் இழந்த அனைத்தையும் இயேசு நமக்கு திரும்ப கொடுத்திருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்களாய் இருக்கிறோம் (கொலோ. 2:10). தமது களிப்புடைய வெற்றியின் மூலம் அவர் நம்மை மறுபடியும் முழுமையாக்கியிருக்கிறார்.

C. அவருடைய சரீரத்தை நிதானித்து அறிதல்

முழு காரியத்தின் முக்கியக் கூறு இதில் தான் இருக்கிறது. பரிசுத்த திருவிருந்தை நாம் கொண்டாடும்போது கிறிஸ்துவின் சரீரத்தை நிதானித்து அறியத் தவறுவதே அடிக்கடி நம்முடைய

பிரச்சனையாயிருக்கிறது. இது கிறிஸ்தவர்களுக்குள்ளே அதிகமாக வியாதியை விளைவித்துள்ளது (1 கொரி. 11:27-32). எனவே, ''கர்த்தரின் சரீரத்தை நிதானித்து அறிவது'' என்றால் என்ன?

முதலாவதாக, இயேசுவின் சரீரம் ஆரோக்கியமானதாகவும், பெலனுள்ளதாகவும் இருக்கிறது என்றும், நாம் ஆரோக்கியத்தையும், பெலத்தையும் அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்றும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நாம் அப்பத்தை புசிக்கும்போது, விசுவாசத்தினால் அது இயேசுவின் சரீரமே என்று புரிந்து கொள்ள வேண்டும் (1 கொரி. 11:24). இயேசுவின் ஜீவன், ஆரோக்கியம் மற்றும் பெலத்தை அது உள்ளடக்கியுள்ளது. ஆகவே, நாம் கிறிஸ்துவிலுள்ள ஆரோக்கியத்தை விசுவாசத்தால் நமக்குரியதாக்கிக் கொண்டு புசிக்க வேண்டும்.

மூன்றாவதாக, கிறிஸ்துவின் மெய்ம்மை சார்ந்த சரீரத்தை நாம் நிதானித்து அறிய வேண்டும். இதுவே மிக ஆழமானதும் முக்கியமானதுமான அம்சம் என நான் கருதுகிறேன். அநேக கிறிஸ்தவர்கள் இந்த கருத்தில்தான் தவறுகிறார்கள். பவுல் முழு திருச்சபையையும், கிறிஸ்துவின் சரீரம் என்று அழைக்கிறார் (எபே. 1:22-23) மறுபிறப்படைந்த ஒவ்வொருவரும் அந்த சரீரத்தின் அங்கத்தினர் ஆவர். கிறிஸ்துவுடனான நம்முடைய உறவை நிதானித்து அறிவது போல, பிற தேவனுடைய பிள்ளைகளோடும் நமக்குள்ள உறவை புரிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதில் தவறுவது ''அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறதாகிவிடும்'' அந்த பரிசுத்த போஜனத்தில் பங்கெடுக்கையில், உலகளாவிய கிறிஸ்துவின் மெய்ம்மை சார்ந்த சபையின் ஒருமைத்தனத்தை புரிந்து கொள்ளத் தவறுவது அபாத்திரமாய் பங்கெடுப்பதாகும். ''அபாத்திரம்'' என்ற சொல் துணைவினைச் சொல்லாய் இருப்பதை தயவு செய்து கவனியுங்கள் நாம் ஒன்றை செய்கிறோம். அது நபர்களின் பாத்திர தன்மையையோ, அபாத்திரதன்மையையோ குறிக்கவில்லை. திருவிருந்து எடுக்கும் இந்த செய்கையானது, பாத்திரமான அல்லது அபாத்திரமான முறையில் செய்யப்படுகிறதோ அல்லவோ என்பதையே குறிக்கிறது.

D. தற்பரிசோதனைக்கு ஒரு நேரம்

''எந்த மனுஷனும் (நபரும்) தன்னைத்தானே, சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்'' (1 கொரி. 11:28). அப்போஸ்தலனாகிய பவுல், கர்த்தருடைய இராப்போஜனத்தின் மீதான வல்லமைமிக்க இந்த விளக்கவுரையில், தற்பரிசோதனைக்கான நேரமும் அவசியம் என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறார். இது போஜனத்தின் மிக முக்கியமான ஒரு பகுதியாகும். யூதர்கள் பஸ்காவை ஆசரிப்பதற்கு முன்பு, தங்கள் இல்லங்களிலிருந்து புளிப்பான எல்லாவற்றையும் நீக்குவது போன்றதாகும் (யாத். 12:15,19). எனவே நாம் கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் பங்கெடுப்பதற்கு முன்பு நம்மை நாமே சோதித்து அறிவதற்கு கட்டளையிடப்பட்டுள்ளோம். அப்படி நம்முடைய இருதயத்தை சோதித்தறியும்போது, நாம் நம்முடைய பாவம் அல்லது மீறுதல் ஆகியவற்றை அறிக்கை செய்து அவருடைய மன்னிப்பை கருத்தாய் தேடவும் பெற்றுக் கொள்ளவும் வேண்டும். அறிக்கை செய்து மனம் திரும்பும் பொழுது, நம்முடைய எல்லா அநீதியிலிருந்து சுத்திகரிப்பதற்கும் மன்னிப்பதற்கும் அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்று தேவன் வாக்குப் பண்ணியிருக்கிறார் (1 யோ. 1:9).

இவ்வாறு கிறிஸ்துவின் மரணத்தை ஒழுங்காக ஆசரிப்பது, ஆவிக்குரிய, மனரீதியான, சரீரரீதியான ஆரோக்கியத்திற்கும், பெலத்திற்கும் உண்மையான ஆதாரமாக முடியும். ஆனால், இது சிறந்ததாகவும் நன்மை பயப்பதாகவும் இருப்பதற்கு நாம், உண்மையாகவும், கண்டிப்பாகவும் நமக்குத் தெரிந்திருக்கிற எந்த பாவத்தையும் அறிக்கை செய்து கிறிஸ்துவின் மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த விதத்தில் நாம் பாத்திரமாகவும், நன்மை பயக்கும் விதமாகவும் புசிக்கவும் குடிக்கவும் முடியும். மேலும் பவுல், ''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்'' என்று நினைவுபடுத்துகிறார் (1கொரி. 11:31-32).

தேவனுடைய போஜனத்தில் சுத்திகரித்தலும், சுகப்படுத்தலும் உண்டு. தேவனுடைய சரீரத்தை சரியாய் புரிந்து கொண்டு, இந்தப் போஜனத்தை ஒழுங்காகவும், தகுதியாகவும் ஆசரிக்க வேண்டும். அப்படிச் செய்வதால், ஆவி, ஆத்துமா, சரீரத்தில் மகிமையான ஆசீர்வாதமான தெய்வீக சுகத்தை அனுபவிக்கலாம்.

விசுவாசமுள்ள ஜெபத்தை ஜெபித்தல்

A. விசுவாசம் தேவனுடைய வார்த்தை விவரிப்பதை மாத்திரம் அடிப்படையாய் கொண்டுள்ளது
விசுவாசம் ஜெபத்தின் ஆதாரம் தேவனுடைய வார்த்தையின் உண்மையில் மாத்திரம் இருக்கிறது. அதை உறுதி செய்வதற்கு வேறு எந்த ஆதாரமும் இல்லை. மெய்யான சத்தியத்தின் ஒரே ஆதாரம் தேவனுடைய வார்த்தையே என்பதை அது பூரணமாய் விசுவாசிக்கிறது. ''தேவனே, சத்தியபரர்..., எந்த மனுஷனும் பொய்யன்...'' (ரோமர் 3:4). வேதாகம விசுவாசத்தின் ஆரம்பம் தேவனுடைய வார்த்தையில் உள்ளது. ''விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17). நாம் விசுவாசமுள்ள ஜெபத்தை ஜெபிக்க வேண்டுமென்றால், சுகத்தைப் பற்றி அவருடைய சித்தம் தொடர்பான எல்லா தேவனுடைய வார்த்தைகளையும் நாம் முழுவதுமாக பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். சுகப்படுத்துதல் அவருடைய சித்தம் என்று, அவருடைய வார்த்தையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும். கடவுளுடைய வார்த்தையால் மட்டுமே நமக்குள்ளே ஆளமான விசுவாசத்தின் ஆதாரம் கட்டப்பட வேண்டும்.

B. விசுவாசம் தேவனுடைய சித்தத்தை அறிகிறது
ஒருமுறை ஒரு குஷ்டரோகி இயேசுவிடம், ''உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்'' என்று கூறினான் (மத். 8:3). இந்த குஷ்டரோகிக்கு அவனுடைய நிலையிலிருந்து சுகப்படுத்த இயேசுவால் முடியும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அவனுடைய சந்தேகமெல்லாம், அப்படிச் செய்வது அவருடைய சித்தமா இல்லையா என்பதிலேயே இருந்தது. இயேசு அதை உடனே தீர்த்து வைத்தார். அவர் மறுஉரையாக ''எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானன்'' சுகப்படுத்துவது தேவனுடைய சித்தம் என்பதை நம்முடைய உள்ளத்தில் உறுதியாக தக்கவைத்துக் கொள்ள வேண்டும். நிச்சயமின்மையோ அல்லது சந்தேகமோ தமக்குள் இருந்து, ''உமக்குச் சித்தமானால்'' என்று நம்முடைய ஜெபத்தை முடிக்கச் செய்யுமானால், நாம் விசுவாசமுள்ள ஜெபத்தை ஜெபிக்கவில்லை!

வியாதியஸ்தர்களை சுகப்படுத்துவது தேவனுடைய சித்தம் என்பதை வேதத்திலிருந்து அறிந்து கொள்வதுடன், நாம் ஜெபிக்க வேண்டிய நபரைக் குறித்து தேவனுடைய சித்தம் என்ன என்பதையும் வாஞ்சையுடன் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, சுகப்படுத்துவது எப்பொழுதும் தேவனுடைய சித்தமாய் இருக்கும்பொழுது, சிலவேலைகளில், சில காரணங்களுக்காக அவருடைய சுகப்படுத்துதல் தாமதமாகலாம். எனவே, அந்த நபரை உடனடியாக சுகப்படுத்துவது மெய்யாகவே தேவனுடைய சித்தமா என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சில வேளைகளில், இந்தக் குறிப்பிட்ட அறிவை நாம் தேடும்பொழுது, தேவன் தம்முடைய சுகமாக்கும் வல்லமையின் வெளிப்படுத்துதலை தடுக்கிற சில தடைகளை வெளிப்படுத்துகிறார். அதன்பின் அந்தப் பிரச்சனைகளை நாம் சரி செய்து, சுகமாக்குதல் நடைபெறுவதற்கு வழியை ஆயத்தம் பண்ணலாம். யாக்கோபு, இப்படிப்பட்ட சந்தேகமுள்ளவன் தேவனிடத்திலிருந்து எதையும் பெற்றுக் கொள்ளமாட்டான் என்று தெளிவாக கூறுகிறார் (யாக். 1:7). எனவே, விசுவாசமுள்ள ஜெபம், தேவன் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, வியாதியஸ்தர்களை சுகமாக்குகிறார் என்ற உறுதிக்கு முழுவதும் அர்ப்பணிப்பதாகும். சந்தேகத்திற்காகவோ, நிச்சயமின்மை அல்லது தயக்கத்திற்கோ இடமில்லை. இந்த ஜெபம் மேலான அர்ப்பணிப்புள்ள உறுதியான ஒன்று.

C. விசுவாசத்திற்கு உறுதியான குறிக்கோள் உண்டு
''நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாய்?'' என்று இயேசு அடிக்கடி கேட்டார். நவீன காலத்திற்குரிய சொற்களில் ''உன்னுடைய குறிப்பிட்ட வாஞ்சை என்ன?'' என்று அவர் கேட்டார். உங்களுடைய வேண்டுதல்களின் குறிப்பிட்ட இயல்பு என்ன? கிறிஸ்தவர்கள் அநேக வேளைகளில், தங்கள் ஜெபங்களை குறிக்கோளற்றதாக செய்வதனால், பின்னர் தேவன் தங்கள்

ஜெபங்களுக்கு பதில் அளித்துவிட்டாரா இல்லையா என்பதை அறியக்கூடாதிருக்கிறார்கள். நாம் தெளிவில்லாமல் ஜெபித்தால், நாம் எதையும் பெற்றுக் கொள்ளமாட்டோம். நாம் எதை தேவன் செய்யும்படி விசுவாசித்து எதிர்பார்க்கிறோம் என்று உறுதியாக குறிப்பிட்டு, அந்த வேண்டுதலை ஸ்தோத்திரத்தோடே ஜெபத்தில் அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு கேள்வியை இயேசு குருடனிடத்தில் கேட்டதற்கு, "ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்" என்று உடனடியாக பதிலளித்தான். (மாற்கு 10:51) அவன் தன்னுடைய விருப்பத்தை உறுதியாக, குறிப்பாக, சுருக்கமாகக் கூறினான். இயேசு உடனே அவனுடைய வேண்டுதலைக் கேட்டார். அந்த மனிதன் தன் பார்வையைப் பெற்றுக் கொண்டான்.

D. விசுவாசம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறது

விசுவாச ஜெபமானது கேட்பதும், பெற்றுக் கொள்வதும் என்று அநேக உண்மையான கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ளவில்லை. கேட்டபின்னர், முடிவின்றி கேட்டுக் கொண்டே இருப்பது சில வேளைகளில் நமது அவிசுவாசத்தைக் குறிப்பதாக இருக்கலாம். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்று இயேசு கூறினார் (மத். 7:7). எனவே, அவரிடம் நாம் கேட்ட பின்னர், நாம் வேண்டிக் கொண்டதை அவருடையகரத்திலிருந்து நன்றியுடன் பெற்றுக் கொள்ள வேண்டும்.

E. விசுவாசம் சரியான நோக்கமுடையது

நாம் நம்முடைய ஜெபங்களுக்கான பதிலை சில வேளைகளில் பெற்றுக் கொள்ளாததற்கான இரண்டு காரணங்களை யாக்கோபு விவரிக்கிறார் (யாக். 4:2-3). முதலாவது, நாம் ஜெபிப்பது இல்லை! இரண்டாவது காரணம், நாம் ஜெபிக்கிறோம். ஆனால் தவறான நோக்கங்களுடன், சுயநலத்திற்காக "தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறோம்" என்று யாக்கோபு கூறுகிறார். எனவே, நம்முடைய நோக்கம் சுத்தமானதாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சரியான காரணத்திற்காக இந்த வேண்டுதலை கேட்கிறோமா? தேவன் மகிமைப்படவும், அவருடைய நாமம் உயர்த்தப்படவும் வேண்டும் என்பதே சரியான காரணமாகும். இதற்குக் குறைவானது எதுவுமே, அதின் நோக்கத்தில் அடிக்கடி சந்தேகப்படக்கூடியதாயிருக்கும்.

அநேகர் மிகவும் அதிகமான சுயநலங்களுக்காக வாஞ்சிக்கிறார்கள். சுயத்தை மையமாகக் கொண்ட ஜெபங்களுக்குப் பொதுவாக தேவன் பதிலளிப்பதில்லை. ஒருவருடைய நோக்கங்களை தெளிவுபடுத்துவதும், அவைகள் பாத்திரமானவைகள் தான் என்று உறுதிப்படுத்திக் கொள்வதும் நல்லது. சுகத்தை வழங்குவதற்கு தேவன் பயன்படுத்தும் ஊழியரும், தனது நோக்கங்கள் பாத்திரமானவைகள் என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வீணான, மேலோட்டமான நோக்கங்களுக்காக சிலர் வியாதியஸ்தர்களுக்காய் ஜெபிக்கிறார்கள். மிக அதிகமான ஊழியர்கள், தங்கள் மூலமாக வல்லமை வெளிப்படுகிறது என்று எண்ணாமல், தங்களிலிருந்து வெளிப்படுகிறது என்று எண்ணுகிறார்கள். தேவன் தங்களை பயன்படுத்துகிறார் என்பதினால் அநேகர் பெருமையாக இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட மாம்ச சிந்தையினால் அடிக்கடி இன்னும் அதிகமாய் பயன்படுத்தப்படுவதற்கு தங்களையே தகுதியற்றவர்களாக்கிக் கொள்கிறார்கள். இன்னும் பிறர் சுய லாபத்திற்காக தேவனுடைய வரத்தை பயன்படுத்த நாடுகிறார்கள். அப்படிச் செய்வதினால் அந்த வரத்தை அவர்கள் தவறான வழியில் பயன்படுத்துகிறார்கள். கொள்கை எப்பொழுதுமே இதுதான் இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். (மத். 10:8).

F. விசுவாசம் தைரியமாய் அறிக்கைசெய்கிறது.

விசுவாசம் செயல்படுவதற்கு நேர்மறையான அறிக்கை அவசியம் "விசுவாசித்தேன் ஆகையால் பேசினேன்" (2கொரி. 4:13). "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" (ரோமர் 10:10) "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. (எபி. 10:23).

நம்முடைய அறிக்கைக்கும், தேவனிடத்தில் நாம் கேட்டதைப் பெற்றுக்கொள்வதற்கும் இடையில் உள்ள தொடர்பை இயேசு விவரிக்கிறார். "எவனாகிலும், இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து,

சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மாற்கு 11:23).

உங்கள் அறிக்கை தேவனுடைய வார்த்தையோடு ஒத்திராவிட்டால், அது விசுவாசத்தால் பேசுவதல்ல விசுவாசம் எப்பொழுதும் தேவனுடைய வார்த்தையோடு ஒத்திருக்கும். அறிக்கை செய்தல் என்ற வினைச்சொல்லின் அர்த்தம், புதிய ஏற்பாட்டு கிரேக்கத்தில் ஒத்திருத்தல், அதையே கூறுதல் என்பதாகும். நாம் சந்தேகப்படாமல், விசுவாசமுள்ள ஜெபத்தை ஜெபிக்கவேண்டுமாயின், நம்முடைய உரையாடல், பேச்சு மற்றும் அறிக்கை நம்முடைய ஜெபத்தோடு இசைந்திருக்க வேண்டும்.

G. விசுவாசம் நம்முடைய அறிக்கையோடு இணைந்து செயல்படுகிறது.

நம்முடைய விசுவாச அறிக்கை, இந்த வியாதியஸ்தனை சுகப்படுத்துவதைக் குறித்த நம்முடைய விசுவாச எண்ணத்துடன் ஒத்துப்போகிறது. சுகப்படுத்துவதைக் குறித்த நம்முடைய விசுவாச எண்ணத்துடன் ஒத்துப்போகிறது விசுவாச வார்த்தைகளை பேசுவதைக் காட்டிலும் இன்னும் சற்று தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. விசுவாச கிரியைகளை நாம் எடுக்க வேண்டும். இந்த கிரியைகள், நாம் எடுத்துள்ள விசுவாச அறிக்கையுடன் இணைந்துள்ளது. தேவனுடைய வார்த்தையின் மீது அப்படியே செயல்படுவதாகும். யாக்கோபு, ''கிரியையில்லாத விசுவாசம் செத்தது'' என்று கூறுகிறார். (யாக்.2:20). நாம் சிலவற்றை நம்புவதற்கு முற்படும்பொழுது, அதின்படி செய்யாவிட்டால், நம்முடைய நம்பிக்கை செயலற்றாதாகிவிடுகிறது. இயேசு பெரும்பாலும் தாம் சுகப்படுத்தியவர்களிடமிருந்து விசுவாச செயல்பாட்டை எதிர்பார்த்தார். ''நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட'', என்று சப்பாணிக்கு கட்டளையிட்டார். (மாற்கு 2:9). வழக்கமாக, இந்த குறுகிய நேரத்தில் ஒருவன் விசுவாசத்தில் செயல்படும்பொழுது அற்புதம் நடக்கிறது அதற்கு மாறாக, விசுவாசத்தோடு செயல்பட வேண்டிய நேரத்தில், செயல்படாததால் அநேகர் சுகத்தை பெற்றுக்கொள்வதில்லை.

H. விசுவாசம் நிலையாகத் தொடர்கிறது.

எபிரெயர் 10:23, ''நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே'' என்று சொல்லுகிறது அடிக்கடி நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படுகிறது. ஏனெனில், நாம் நம்பியிருக்கிற விளைவுகள் உடனடியாக வெளிப்படுவதில்லை. இது விசுவாசத்தை செயல்படுத்துவதிலுள்ள இக்கட்டானதும் முக்கியமானதுமான உண்மையாகும். உண்மையான விசுவாசம், விளைவுகள் உடனடியாக ஏற்படாவிட்டாலும், நிலையாக தொடர்ந்து நம்புவதாகும். உண்மை விசுவாசம், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாது. (எபி. 10:35).

வேதாகம விசுவாசம் தேவனுடைய வார்த்தை சொல்லுவதில் மாத்திரம் தொடர்பு கொண்டுள்ளது. அது இயற்கை உணர்வுகளால் ஏற்படும் உணர்வுகள், அறிகுறிகள் அல்லது அத்தாட்சிகள் ஆகியவற்றை சார்ந்ததல்ல. அது தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, அறிக்கை செய்து, செயல்படுகிறது. எனவே வெளிப்படையான மாற்றமோ, முன்னேற்றமோ இல்லாவிட்டாலும், தேவனுடைய வார்த்தைகள் சத்தியம் என்று தொடர்ந்து நம்புகிறது. விசுவாசம் எப்பொழுதுமே தேவனுடைய வார்த்தை உண்மை என அறிக்கை செய்து அதின் அடிப்படையில் செயல்படுகிறது.

I. விசுவாசம் தேவனுக்கு மகிமையை செலுத்துகிறது.

ஆபிரகாம், மிகுந்த விசுவாசமுள்ள மனிதனாக பரவலாக அறியப்படுகிறான். இந்த விஷயத்தில் அவனுடைய உதாரணம், ஊக்கமூட்டுவதாகவும், அறிவுறுத்துவதாகவும் உள்ளது. ரோமர் 4:17-21, அவனுடைய விசுவாசத்தின் செயல்பாட்டைக் குறித்த சில பயனுள்ள கொள்கைகளை தருகிறது. இவைகளுள், ஆபிரகாம் தேவனுக்கு மகிமையைச் செலுத்த கவனமாக இருந்தான் என்பதும் உள்ளடங்கும். அநேககிறிஸ்தவர்களிடம் உள்ள பிரச்சனை என்னவன்றால், தங்களுக்கே மகிமையை அவர்கள் எடுத்துக்கொள்வதால் தேவன் விசுவாசத்தின் மிகுதியான கொள்ளைப் பொருட்களால் தேவன் அவர்களை நம்ப முடியாது. அவர்கள் தங்களையே

பெரியவர்களாக காண்பித்துக் கொள்வார்கள். தேவன் தம்முடைய மகிமையைக் குறித்து மிகவும் எரிச்சலுள்ளவராயிருக்கிறார். அவர் தம்முடைய மகிமையை வேறொருவருக்கும் கொடார். நாம் இந்த உண்மையை மனதில் கொள்ள வேண்டும். தேவன் செய்யும் மகத்தான காரியங்களுக்காக எப்பொழுதும் அவருக்கு கனத்தையும் மகிமையையும் செலுத்த கவனமாயிருங்கள். அற்புதத்தை நிகழ்த்தியது உங்கள் விசுவாசமல்ல, தேவனுடைய வல்லமையே. உங்கள் விசுவாசம் கூடுமானவரையில் தேவனுடைய வல்லமை பாய்ந்து செல்லக்கூடிய வாய்க்காலாக மட்டும் அமைந்துள்ளது.

அத்தியாயம் 5 புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ பணியும் சுகமளித்தலும்

தேவன், சுகமளிக்கும் தேவன் என்று முந்தைய அதிகாரங்களில் தெளிவாக பார்த்தோம். ''நானே உன் பரிகாரியாகிய காத்தர்'' (யாத். 15:26) கிறிஸ்து, சுகமளிக்கும் கிறிஸ்து அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்'' (1பேதுரு 2:24) வார்த்தை, சுகமளிக்கும் வார்த்தை: ''அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி'' (சங்.107:20). புதிய ஏற்பாட்டு திருச்சபை, ஒரு சுகமளிக்கும் சமுதாயமாக இருந்தது'' அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. (அப்.5:12).

புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ பணி சுகமளித்தலையும் உள்ளடக்கியது.

புதிய ஏற்பாட்டின் சுவிசேஷபணியைக் குறித்து பேசும்போது, பரிசுத்த ஆவியால் அருளப்பட்டதும், அபிஷேகம் பண்ணப்பட்டதும், பலப்படுத்தப்பட்டதும்,ஆதிதிருச்சபையின் ஊழியத்தைத் தொடர்ந்த அதே அடையாளங்களாலும், அற்புதங்களாலும் உறுதிப்படுத்தப்பட்டதுமான சுவிசேஷப்பணியையே குறிக்கிறோம். துரதிஷ்டவசமாக, அநேக ஊழியர்கள் இன்று தாலந்து, பயிற்சி, ஆள்தத்துவம், ஸ்தாபனத்தின் செயல்திறன், விளம்பரம் போன்றவற்றை சார்ந்தும், பரிசுத்த ஆவியின் மீது மிகவும் சிறிய அளவிலேயே சார்ந்தும் இருக்கிறார்கள். எனவே தான் அவர்களது ஊழியத்தில் அற்புத அடையாளங்களின் குறைவு காணப்படுகிறது.

ஆதி திருச்சபையில் இன்று அநேகர் விசுவாசம் வைக்கிற காரியங்களில் மிகக் குறைவானவையே காணப்பட்டன. அவர்கள் சமுதாயத்தில் எந்த புகழையோ அல்லது உயர்ந்த நிலையையோ பெற்றிருக்கவில்லை. அவர்களிடம் பிரமாண்டமான கட்டிடங்களும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் இருந்ததில்லை. கல்வி, கலாச்சாரம், சமூக நிலை ஆகியவற்றின் மூலம் வரும் சமூக பண்பாடுகளில் மிகக் குறைவானதே அவர்களிடம் இருந்தது. மாறாக, அவர்கள் தங்களுடைய சமுதாயத்தினின்று தள்ளி வைக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். இத்தகைய வெளிப்படையான தீமைகளின் மத்தியிலும், அவர்கள் கிறிஸ்துவுக்காக உலகத்தை தலைகீழாய் மாற்றுவதில் வெற்றிபெற்றார்கள். அவர்களது ஊழியத்தில் காணப்பட்ட கொள்கைகளை நாமும் பயன்படுத்தினால், இன்று அதே விளைவுகளை நாமும் காணமுடியும்.

அடையாளங்கள், அற்புதங்கள், மற்றும் சுகமளித்தல், ஆதி திருச்சபையின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவையாக இருந்தன. அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம், அந்த ஆதி விசுவாசிகள் மூலம் கிறிஸ்து செய்த மகத்தான அற்புதங்களால் நிரம்பியுள்ளது. அப்போஸ்தலர் நடபடிகள், அந்த காலத்தின் ஒரு சரித்திர நிகழ்வுகள் மட்டுமல்ல, எல்லா காலத்து சபைக்குமான தெய்வீக திட்டமாகும். அப்போஸ்தலரின் மரணத்திற்குப் பின்னர் அற்புதங்கள் அப்போஸ்தலரின் காலத்திற்கு மாத்திரமல்ல, அவைகள் நம்முடைய காலத்திற்கும் உரியவைகள்.

ஆதி திருச்சபையின் நிகழ்ச்சிகளிலுள்ள அற்புதங்களின் ஆற்றல் மிக்க விளைவுகளை நாம் பார்ப்போம்.

1. **அற்புதங்கள் திரளான ஜனங்களை கவர்ந்தது.**
இது இயேசுவின் ஊழியத்தில் உண்மையாயிருந்தது. ''அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்.'' (யோ.2:23) ''அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்.'' (யோ.6:2). ஆதி அப்போஸ்தலரின் ஊழியத்திலும் இது உண்மையாயிருந்தது. அலங்கார வாசலில் நிகழ்ந்த அற்புதத்தின் (அப்.3:1-16), விளைவாக 5000பேர் கிறிஸ்துவிடம் திரும்பினர். (அப்.4:4). ''அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. திரளான புருஷர்களும் ஸ்தீரிகளும் விசுவாசமுள்ளவர்களாகிய கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள். (அப்.5:12,14). ''சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள், அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள். (அப்.5:16).

2. **அற்புதங்கள் செய்தியை உறுதிப்படுத்தியது.**
மெய்யான சுவிசேஷம் அறிவிக்கப்படுகையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களும் தொடரும் என்று இயேசு முன்னுரைத்தார். ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன...'' (மாற்கு 16:17-18). அந்த ஐந்து அடையாளங்களுள் ஒன்று, ''வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்''. என்பதாகும். (மாற்கு 16:18). ''பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.'' (அப். 8:6). இதன் ஊகம் தெளிவாக உள்ளது. பிலிப்பின் ஊழியத்தைத் தொடர்ந்த அற்புதங்களை ஜனங்கள் கண்டபோது, அவனுடைய அதிகாரத்தால் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். இதன் பலனாக அவன் கூறியதை கூர்ந்து கவனித்தார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாகும் அளவுக்கு, அதன் விளைவு பெரிதாயிருந்தது. (அப். 8:8).

3. **அற்புதங்கள் சமுதாயத்தின் அத்தியாவசிய தேவைகளை சந்தித்தது.**
அநேக வியதியஸ்தர்கள் சுகம்பெற விரும்புவதால், அப்போஸ்தலரைச் சுற்றி எப்பொழுதும் திரள் கூட்டமான ஜனங்கள் காணப்பட்டனர். அவர்கள் சுகம்பெற வந்தனர். அதிகமான மக்கள் இதனிலும் சிறந்ததை-தேவனுடைய ராஜ்யத்தைப் பெற்றுச் சென்றார்கள். சுகமளித்தலும் அற்புதங்களும் எப்பொழுதும் திரளான ஜனங்களை கவரும். இது வேதாகம காலங்களில் இருந்ததைப் போலவே இப்பொழுதும் உண்மையாக இருக்கிறது. தாங்கள் பாவிகள் என்றும், அவர்களுக்கு ஓர் இரட்சகர் தேவை என்றும் ஒப்புக்கொள்வது மக்களுக்கு அநேக வேளைகளில் கடினமாக இருக்கிறது, ஆனால் தனக்கு சுகம் தேவை என்று எந்த வியாதியஸ்தனையும் உணரச் செய்வது கடினமல்ல. அவன் இந்த தேவையைக் குறித்து நன்றாக அறிந்திருக்கிறான். உண்மையான புதிய ஏற்பாட்டின் சுவிசேஷப்பணி மனிதனின் சரீரப்பிரகாரமான தேவைகளை சந்திப்பதோடு ஆவிக்குரியவைகளையும் சந்திக்கிறது.

4. **அற்புதங்கள் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததை நிருபித்தது.**
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மைகளை அநேகர் விவாதித்தனர். இயேசுவின் நாமத்தில் தேவன் செய்யத் துவங்கிய அற்புதங்கள், உயிர்த்தெழுதலின் உண்மையை ஜனங்கள் நம்பும்படி செய்தன. கிறிஸ்து இன்னும் மரித்தவராயிருப்பாரானால், அப்பொழுது அவருடைய நாமத்திற்கு எந்த வல்லமையும் இராது. அலங்கார வாசலில் சுகப்படுத்திய மனிதனைக் குறித்து மூப்பர்களிடம் பேதுரு பேசுகையில், அவன் ''உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது என்றான். (அப்-4:10). பேதுரு, கிறிஸ்து மெய்யாகவே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை அவர்களுக்கு நிரூபிக்க, அந்த அற்புதத்தை எடுத்துக் காட்டினார் என்பது தெளிவாகிறது.

5. **அற்புதங்கள் தேவனுக்கு மகிமையை கொண்டுவந்தது.**
சுகமாக்கப்பட்ட குருடனைக் குறித்து நாம், ''உடனே அவன் பார்வையடைந்து, தேவனை மகிமைப்படுத்திக் கொண்டே, அவருக்கும் பின் சென்றான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்'' (லூக்கா 18:43). என்று வாசிக்கிறோம். வேறொரு சமயம் இயேசு ஒரு திமிர்வாதக் காரனை சுகப்படுத்தினார். ''உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருகாலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். (மாற்கு 2:12) வாசலருகே சப்பாணி சுகம்பெற்றதைக் குறித்து, நாம் ''நடந்த சங்கதிகளைக் குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.'' (அப். 4:21) என்று வாசிக்கிறோம்.

6. **அற்புதங்கள் புதிய விசுவாசிகளை தேவனுடைய வல்லமையில் ஸ்திரப்படுத்தியது**
பவுல், கொரிந்தியர்களிடம், ''உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும், மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல். ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது'' என்று கூறினார். (1கொரி. 2:4-5). சுவிசேஷம், தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையிலிருந்து வரும்பொழுது, புதிய விசுவாசிகள் அந்த வல்லமையால், வல்லமைக்குள் ஸ்திரப்படுத்தப்படுகிறார்கள். மனிதருடைய ஞானம் (தத்துவம், தர்க்கசாஸ்திரம், பகுத்தறிவு) புருஷர்களையும் ஸ்திரீகளையும் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஒருபொழுதும் ஸ்திரப்படுத்த முடியாது.

சுகமாக்குதலை நிகழச் செய்த ஆதித் திருச்சபையின் கொள்கைளும் செயல்முறைகளும்

1. **அவர்கள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார்கள்.**
பெந்தேகோஸ்தே நாளன்று பேதுரு செய்த பிரசங்கம்.(அப்.2:14-36), ஸ்தேவானின் பேச்சு(அப்.7) ஆகியவைகள் ஆதி திருசபையின் வேதாகமத்தை உள்ளடக்கிய பிரசங்கத்திற்கு அருமையான எடுத்துக்காட்டுகளாம். தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தல் தெய்வீக அதிகாரத்தின் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. தேவன் எப்பொழுதும் தன்னுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்தினார். ''என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன்'' (எரே. 1:12). தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பது, கேட்டவர்களுக்குள் வேறு எந்த காரியத்தாலும் உருவாக்க முடியாத விசுவாசத்தை உருவாக்கியது. ''விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17). அவர்களுடைய பிரசங்கம் இயேசு கிறிஸ்துவை உயர்த்திக் காட்டியது. அவரே அவர்களுடைய செய்தியின் முக்கிய கருப்பொருளாக இருந்தார். அவரோடு தொடர்புடைய எல்லா தீர்க்கதரிசனங்களையும் எப்படி நிறைவேற்றினார் என்பதையும், அவர் எல்லா தீர்க்கதரிசனங்களையும் எப்படி நிறைவேற்றினார் என்பதையும் அவர்கள் காண்பித்தார்கள். அவர்களுடைய பிரசங்கம், இயேசுவின் மீது வைக்கப்பட்டிருந்த தெய்வத்துவத்தையும் அதிகாரத்தையும் தெளிவாக அறிவித்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற புனைப்பெயர் அவர்களுடைய போதனையிலும் உபதேசத்திலும் வலிமையாக காணப்பட்டது. எல்லாவற்றின் மீதும் இயேசுவை அதிகாரமுடையவராக தேவன் வைத்தார் என்பதை அவர்கள் போதித்தார்கள். இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்பது அவர்களுடைய எல்லா போதனைகளிலும் காணப்பட்ட கருப்பொருளாகும்.

அவர் எல்லாவற்றிற்கும் ஆண்டவர்
சிருஷ்டிப்பின் தேவன்
மீட்பின் தேவன்
அவருடைய சிலுவை மரணத்தின் மூலம் துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் கெடுத்து, சாத்தான் மேலும் ஆண்டவராய் இருக்கிறார்.

கிறிஸ்துவின் ஆளுகை ஜனங்களின் வாழ்வில் ஸ்தாபிக்கப்பட்டபொழுது அவர்களுடைய சூழ்நிலைகளின் மீதும் ஸ்தாபிக்கப்பட்டது என்பதை ஜனங்கள் பார்க்க உதவியாக இருந்தது.

2. அவர்கள் ஆவிக்குரிய அதிகாரத்தை செயல்படுத்தினார்கள்

ஆதி சபையின் இந்த தலைவர்கள், இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவன் அவர்கள் மீது வைத்த அதிகாரத்தைக் குறித்து ஆழமாக அறிந்திருந்தார்கள். ''நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்'' (யோ. 16:25), என்று அவர்களுக்கு அவர் தெளிவாக கூறியிருந்தார். அவர் தம்முடைய நாமத்தில் செயல்படுவதற்கு சட்டபூர்வமாக கொடுக்கப்பட்ட அதிகாரமான, ''வழக்குரைஞரின் அதிகாரத்தை'' அவர்கள் மீது வைத்திருந்தார். அவர் சார்பில் செயல்படுதல் என்பது அதன் அர்த்தம். பிறவியிலேயே முடவனான, பரிதாபமான சப்பாணியை சந்தித்தபோது, அவர்கள் தங்களுக்குப் புதிதாக அருளப்பட்டிருந்த அதிகாரத்தை பயன்படுத்துவதற்கான முதல் வாய்ப்பைப் பெற்றார்கள். ''வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை, என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன், நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட'' (அப். 3:6). நாமத்திலுள்ள அதிகாரத்தின் மூலமும், அந்த நாமத்தில் வைத்த விசுவாசத்தினாலும், சப்பாணி இப்பொழுது சொஸ்தமாய் அவர்களுக்கு முன்பாக நிற்கிறானென்று கூறி தெளிவுபடுத்தினான். (அப். 3:16, 4:10).

தம்முடைய நாமத்திலே போய், தம்முடைய நாமத்தில் அதிகாரத்தை பயன்படுத்தும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார் (மாற்கு 16:17-18, யோ. 14:12-15, 15:16). இந்த அதிகாரம் இன்னமும் திருச்சபைக்கு கொடுக்கப்படுகிறது. தாங்கள் யார் என்றும், தங்களுடைய இயல்பான திறன்கள் மீதோ அல்லது ஆதாரங்களின் மீதோ நம்பிக்கை வைக்கவில்லை. அவர்கள் இயேசுவின் நாமத்திலுள்ள அதிகாரத்தின் மீது மேலான நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த நாமத்தின் பின்னாக தேவனுடைய சிங்காசனத்தின் அதிகாரம் இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். இயேசுவின் நாமத்தில், தேவன் தம்முடைய எல்லா வல்லமையையும், அதிகாரத்தையும் மனுக்குலத்திற்கும் கிடைக்கும்படி செய்தார். இயேசுவின் நாமத்தில் சுகமாக்குதலும், பூரணமாகுதலும் உண்டு. அந்த நாமத்தில் நாம் பேசும்போது, பிசாசுகள் நமக்குக் கீழ்ப்படியும். அந்நாமத்தின் வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் முன்பு வியாதிகள் விட்டுச் செல்ல வேண்டும். இயேசு தம்முடைய நாமத்தின் அதிகாரத்தை உங்களுக்குக் கொடுத்துள்ளார். நீங்கள் போய் அதிகாரத்தை செயல்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவருடைய நாமத்தில் பேசுங்கள். அந்த நாமத்தில் வியாதிகள் நீங்கும்படி கட்டளை கொடுங்கள்.

3. அவர்கள் மக்கள் சுகமடையும்படி உற்சாகப்படுத்தினார்கள்

பேதுரு கீழே குனிந்து, சப்பாணியைத் தன் கரத்தால் பிடித்து, தன் கால்களில் நிற்கும்படி அவனை தூக்க ஆரம்பித்தான். சரியாக அந்த கணப்பொழுதில் தானே விசுவாசத்தினால் அந்த மனிதன் எழும்ப ஆரம்பித்த போது, தேவனுடைய வல்லமை அவன் சரீரத்தில் பாய்ந்து அவனை முழுவதும் சுகப்படுத்தியது (அப். 3:7). பேதுருவுடைய செயல்திறமுள்ள உற்சாகமூட்டுதல் இல்லாதிருந்தால், அற்புதம் நடைபெறாமலே இருந்திருக்கக் கூடும். சுகமளிக்கும் ஊழியம், வியாதியஸ்தருக்கு அறிவுரை கூறுவது, வார்த்தைகளால் உற்சாகமூட்டுவதை விட இன்னும் அதிகமானவற்றை உள்ளடக்கியுள்ளது. இயேசுவின் நாமத்தில் ஆவிக்குரிய அதிகாரத்தோடு அவனுடன் பேசிய பின்பு, பேதுரு அவன் முன்பு ஒருக்காலும் செய்திராத காரியத்தை செய்வதற்கு இப்பொழுது அவனுக்கு ஊக்கத்துடன் உதவினான். இந்த விசுவாச செய்கையே தேவ வல்லமையை சப்பாணிக்குள் பாயச் செய்தது. ''அவன் குதித்தெழுத்து கூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்'' (அப். 3:8).

4. அவர்கள் ஆவியின் வல்லமையால் பேசினார்கள்.

மேலறையில், சீஷர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள். அது ஒரு வாழ்க்கையையே மாற்றிய அனுபவம். அவர்கள் அந்த அறையை விட்டு வெளியே வந்த போது வித்தியாசமான மனிதர்களாய் இருந்தார்கள். அங்கு நிகழ்ந்த சிறந்த மாற்றங்களுள் ஒன்று, அவர்கள் வெளிப்படுத்திய புதிய தைரியமாகும். பேதுரு ஒரு சிறந்த உதாரணம் பெந்தேகோஸ்தேக்கு முன்னர் அவன் பயம் நிறைந்தவனாக, தைரியமின்றி செயல்பட்டான், இயேசுவை அறிந்திருந்ததை அறிக்கையிட கூட பயந்தான், தான் இயேசுவை பின்பற்றுபவன் என்று ஒரு வேலைக்காரியிடம் ஒத்துக் கொள்ளவும் பயந்தான். இப்பொழுதோ அவன் புதிய நம்பிக்கையாலும், பரிசுத்தமான

தைரியத்தாலும் நிறைந்தவனாய் வெளியே வந்தான். உடனே அவன் ஜனங்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கிக்கையில் அந்த தைரியத்தை வெளியிட்டான். இயேசுவை சிலுவையில் அறைந்ததும், தான் கண்டு பயந்ததுமான அதே மனிதர்கள் தான் இவர்கள். இப்பொழுது அவன் கிறிஸ்துவின் ஆளுகையைக் குறித்து மிகுந்த அதிகாரத்துடனும் தைரியத்துடனும் அறிவித்தான். பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட தைரியமான பேச்சுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, அப். 4:8-ல் உள்ளது. அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து, அவர்களை நோக்கி..''

இன்றைய பிரசங்கங்ககள் அதிகமானவை இத்தகைய தைரியத்தை இழந்துள்ளன. மாறாக, அவை வருத்தம் தெரிவிப்பதாகவும், பெலவீனமானதாகவும் காணப்படுகின்றன. ஒரு காரணம் என்னவெனில், பிரசங்கியார்கள் தேவனுடைய வார்த்தையையும், அவரது ஆலோசனைகளையும் உண்மையாக அறிவியாமல், தங்களுடைய சொந்த கருத்துக்களையும் எண்ணங்களையுமே அதிகமாக வெளிப்படுத்துகிறார்கள். மற்றுமொரு காரணம் என்னவெனில், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை சாராமல், தங்களுடைய பேச்சுத் திறனை சார்ந்துவிடுகிறார்கள். அவர்கள் ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தாமல், மனுஷ ஞானத்திற்குரிய நயவசனத்தால் பிரசங்கிக்கிறார்கள். பவுல் இதை செய்ய மறுத்தான். எல்லாரைக் காட்டிலும் அதிகமாய், அப்படிச் செய்யும் திறன் அவனுக்கிருந்தது. அவனுடைய கல்வியும், மதம் சார்ந்த பயிற்சியும், அவன் மனுஷ ஞானத்தால் பேசுவதற்குரிய திறனை அவனுக்கு அளித்திருந்தது, ஆனால் அவன் ஆவியின் உந்துதலையும், அபிஷேகத்தையுமே முழுவதுமாய் சார்ந்திருக்கத் தெரிந்துகொண்டான். (1கொரி. 3:1-5).

5. அவர்கள் தைரியத்துடன் செயல்பட்டனர்.

பேதுரு யோவானுடைய தைரியத்தை ஜனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடன் செலவழித்த நேரத்தின் பலனாகவே இத்தகைய தைரியம் வந்தது என்று அறிந்துகொண்டார்கள். (அப்.4:13). இது இயேசுவின் தைரியத்திலிருந்து அதே அச்சடையாளங்களைக் கொண்டிருந்தது. இது தன்னம்பிக்கையின் கர்வம் (அகந்தை) அல்ல, ஆனால் தங்கள் வாயிலும் செயலிலும் அவருடைய வார்த்தையை உறுதிப்படுத்தி, உறுதியளிப்பதற்கு தேவன் அவர்களுடன் இருக்கிறார் என்று அறிந்தவர்களின் அமைதலான அதிகாரம்.

அங்கிருந்து அதிகாரிகள், அவர்கள் இயேசுவின் நாமத்தில் பேசவும் போதிக்கவும் கூடாதென்று கண்டிப்பாக கட்டளையிட்டபோது, அவர்கள் செய்தது என்னவெனில், இன்னும் அதிகமான தைரியத்திற்காக ஜெபத்தில் தேவனை ஊக்கமாக வேண்டினார்கள். (அப்.4:29).

தனக்கு அருளப்பட்டிருக்கிற தெய்வீக அதிகாரத்தை அறிந்து, அதனால் தீர்மானிக்கப்பட்டுள்ள எல்லைகளில் கிரியை செய்கிற ஒருவனுக்குள் தைரியமான செயல் பிறக்கிறது. சுகமளிக்கும் ஊழியத்தில், அத்தகைய செயல்பாடு கீழ்கண்டவற்றின் விளைவாகும்.

A. தேவன் சுகமாகும் உடன்படிக்கை செய்துள்ளார் என்று அறிதல்.
B. சுகமளித்தல் சம்பந்தபட்ட தேவனுடைய வார்த்தையை முழுவதுமாக புரிந்து கொள்ளுதல்.
C. சுகமாக்குதலில் தேவனுடைய சித்தத்தை அறிதல்.
D. தேவன் இந்த நபரை சுகமாக்குவார் என்ற விசுவாசத்தின் நிச்சயத்தைப் பெற்றிருத்தல்.
E. தேவன் தம்முடைய வார்த்தையை தொடர்ந்து வரும் அடையாளங்களால் உறுதிப்படுத்துவார் என்று விசுவாசித்தல்.

6. அவர்கள் ஜனங்கள் மத்தியில் அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தினார்கள்.

ஆதி திருச்சபையானது, தேவன் அவர்களுக்கு அருளிய மகத்தான அற்புதங்களின் ஊழியத்தின் மூலமாக அன்றைய சமுதாயத்திற்குள் பகிரங்கமாக நுழைந்தது. (அப். 5:12).

அற்புதங்கள் சுவிசேஷ அறிவிப்பை காட்சியாக அமைத்தது.
அற்புதங்கள் செய்தியின் உண்மையை உறுதிப்படுத்தியது.

அற்புதங்கள் திரளான ஜனங்களை கவர்ந்தது. (அப். 5:41).
அற்புதங்கள் இந்த செய்கை உண்மையாகவே தேவனால் வந்தது என்று இரட்சிக்கப்படாத மக்களை நம்பவைக்கிறது.

அற்புதங்கள், அடையாளங்கள் மீதான அழுத்தமே, தேவனை அறியாதோர் உலகிற்குள் செல்லும் கதவுகள் திறக்க திருச்சபை பயன்படுத்திய முக்கியமான சாவிகளுள் ஒன்றாகும். அந்த காலங்களின், அற்புதங்களால் உறுதிப்படுத்தப்பட்ட ஊழியத்தில் வெளிப்பட்ட அதிகாரத்தினால் சுவிசேஷம் அதிவேகமாக பரவியது.

அத்தகைய அற்புதங்கள் இன்னமும் சுவிசேஷத்தின் ஒரு அத்தியாவசியமான பகுதியாக உள்ளது. மக்கள் மிகவும் சிக்கலான விஷயங்களையும் புரிந்து கொள்ளும் அறிவுடையவர்களாக மாறிவிட்டதால், அற்புதங்கள் கவர்வதோ, நம்பவைப்பதோ முடியாத காரியம் என்ற சிலரது விவாதம், உண்மை என நிரூபிக்கக்கூடியதல்ல. இன்று, திருச்சபையில், அற்புதங்களின் ஊழியத்தை நிறைவேற்றுகிற குழுக்களே, பெருமளவில் அதிகமான விளைவுகளை ஏற்படுத்தி, விரைவான வளர்ச்சியை காணுகின்றன.

7. அவர்கள் தினமும் தொடர்ச்சியாக இயேசு கிறிஸ்துவைக் குறித்து போதித்தனர்.
ஆதி திருச்சபையின் செய்தி எளிமையானதாக இருந்தது. அவர்கள் இயேசு கிறிஸ்துவையே பிரசங்கித்து போதித்தனர். (அப்.5:42). சபை பாகுபாடுகளின் அழுத்தத்தினால் அவர்கள் செய்தி குழப்பமானதாக மாறவில்லை. நவீன தத்துவங்களால் அது முனைப்பு குறைந்ததாகவோ, சமரசம் செய்யப்பட்டதாகவோ மாறவில்லை. அவர்களுடைய போதனை இறையியல் கோட்பாடுகளால் ஆனதல்ல. அவர்கள் ஒரு தத்துவத்தை போதியாமல்,ஒரு நபரை அறிமுகப்படுத்தினார்கள். அவர்கள் சொல்லுகிற ''நியாயப்பிரமாணத்தின் எழுத்தைப்'' போதிக்கவில்லை. அவர்கள் உயிர்ப்பிக்கிற ஆவியின் வார்த்தையையே வழங்கினார்கள். (2கொரி. 3:66). அவர்கள் தங்கள் போதனைகளை தேவாலயத்தின் எல்லை பகுதியோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் தினமும் போதித்தார்கள். அவர்களுடைய அனுதின வாழ்வின் மெய்யான அனுபவங்களுக்குள் இயேசு அறிமுகப்படுத்தப்பட்டார். ''ஞாயிறு மட்டும் திறக்கப்படும்'' என்று குறிக்கப்பட்டுள்ள சிறிய வழிபாட்டு அறைக்குள்ளாக அவர் அடைக்கப்படவில்லை.

அவர்கள் இயேசு கிறிஸ்துவை போதிக்கும்பொழுது, அவரை மேலான ஆண்டவராக உயர்த்தினார்கள். (அப்.2:36).
அவர்கள் அவரை ஒரே இரட்சகராக அறிமுகப்படுத்தினார்கள். (அப். 2:38, 4:12).
அவர்கள் அவரை வல்லமையுள்ள சுகமளிப்பவராகக் காட்டினார்கள். (அப்.3:6-8, 16).
அவர்கள் அவரை பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பவராக வழங்கினார்கள். (அப்.:38).
அவர்கள் அவரை தங்கள் பிரசங்கங்களிலும் போதனைகளிலும் இடைவிடாமலும் சீராகவும் உயர்த்தினார்கள்.
அவர்களுடைய ஊழியம் ஊக்கமூட்டுவதாகவும், அறிவுறுத்துவதாகவும் இருந்தது. அது விசுவாசத்தை தூண்டுவதாக இருந்தது.

விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17). என்று வேதாகமம் கூறுகிறது. துரதிஷ்டவசமாக, இக்காலத்து பிரசங்கங்களில் அதிகமானவற்றினால் விசுவாசம் ''போய் விடுகிறது'' இன்று அநேக பிரசங்கியார்கள் விசுவாசத்தை குறைவாக கணித்து, அதை அழிக்க முற்படுகிறார்கள். அதை உருவாக்கி ஸ்திரப்படுத்த முற்படுவதில்லை. ஆதி திருச்சபையின் ஊழியத்தில் அற்புதங்களுக்கு இடைவிடாமல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் மற்றவர்களை கவரக்கூடிய தலைமைத்துவம் வெளிவர அது உதவியது. ஸ்தேவானும் பிலிப்பும்,நிர்வாகத்தில் உதவக்கூடிய உதவிக்காரராகத்தான் முதலில் நியமிக்கப்பட்டிருந்தனர். (அப்.6:2-7). ஸ்தேவானைக் குறித்து அடுத்து வாசிக்கும்போது, அவன் திரளான மக்களுக்கு ஒரு பகிரங்கமான செய்தியை பிரசங்கிப்பதைப் பார்க்கிறோம். (அப்.7). பிலிப்புவைக் குறித்து

அடுத்து காணப்படுகிற வசனம், சமாரியாவில் அவனுடைய அற்புதங்களின் ஊழியத்தை விவரிக்கிறது. ''அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்'' (அப்.8:5). அவனுடைய செய்தியின் நோக்கமும், அவன் கிறிஸ்துவை பிரசங்கிக்கும்போது குறிப்பிட்ட காரியங்களின் அறிகுறியும், அவனைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் நிகழ்ந்த காரியங்களின் மூலம் வெளிப்பட்டது.

தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுவின் நாமத்திற்கும் (அந்த நாமத்தின் அதிகாரம் அவர்களுக்கு அருளக்கூடிய எல்லாவற்றிற்கும்) ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்தான் என்று லூக்கா கூறுகிறார். எத்தனை மகிமையான கருத்துக்கள் இந்த மகத்தான கருப்பொருட்களை பிரசங்கித்தால், கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் முழுமையை அறிவிப்பதற்கு அவனுக்கு எத்தனை அரிய வாய்ப்பு.

பரிசுத்த ஆவியினாலும் தேவனுடைய வார்த்தையினாலும் உருவாக்கப்பட்ட விசுவாசத்தின் சூழ்நிலையில், அற்புதங்கள் நிகழ ஆரம்பித்தன. ''அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேக திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று'' (அப்.8:7-8). புதிய ஏற்பாட்டில் சுவிசேஷகன் என்று குறிப்பாக நியமனம் செய்யப்பட்டிருந்த ஒரே மனிதன் பிலிப்பு மட்டுமே எனவே, சமாரியாவில் அவனுடைய ஊழியம், ஒரே சுவிசேஷகனுடைய ஊழியத்தின் மாதிரியாக கருதப்படவேண்டும். அது கிறிஸ்துவை பிரசங்கிப்பதை மட்டுமல்ல சுகமளிக்கும் மற்றும் பிசாசுகளைத் துரத்தும் ஊழியத்தையும் உள்ளடக்கியுள்ளது. அவனுடைய ஊழியத்தில் காணப்பட்ட அற்புதமான அம்சங்கள் இல்லாதிருந்தால், சமாரியாவில் ஏற்பட்ட விளைபயன் இவ்வளவு அதிகமாக இருந்திருக்க முடியாது.

தேவன் தம்முடைய சபை இன்று சுகமளிக்கும் கருவியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

நம் காலத்து திருச்சபையும் தேவனை அறியாதோரின் உலகத்தில் மிகச் சிறந்த விளைபயனை ஏற்படுத்த வேண்டும் என்பதே அதைக் குறித்த தேவனுடைய நோக்கமும், விருப்பமும் ஆகும். தேவனுடைய அற்புதமான வல்லமை திரும்பவும் சபைமீது அதிகமாக ஊற்றப்பட, அவரை நம்புவதன் மூலமே இது நடைபெறும். இதனை நிறைவேற்ற, இப்பூமியெங்கிலும் பரிசுத்த ஆவியானவர் செயல்பட்டு வருகிறார். ஆவியானவர் நம்முடைய நோக்கத்தை நம்மில் நிறைவேற்ற, நம்முடைய இருதயங்களும், மனதும் அவருக்குத் திறந்திருப்பதாக!.